[illegible]

உ

கணபதி துணை.

மகேதிகாசமாகிய

# சிவரகசியம்.

## (மூன்றாம் அம்சம்.)

இஃது

வடமொழியினின்றும்

ஸ்ரீமத், மருதூர் - கணேச சாஸ்திரியாரவர்களால்

வசனரூபமாக மொழிபெயர்க்கப்பட்டு

[illegible] { 1909வது டிசம்பர்மீ } சஞ்சிகை.

பூர்வகலாப்பிரகடன சபைக்

காரியதரிசி

[illegible]பாக்கம் - சதாசிவசெட்டியாரவர்களால்

சென்னை:

[illegible] அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்படுகின்றது.

Registered Copy Right.

சஞ்சிகை 1-க்கு விலை அணா-4.

[illegible]

1S1. 48G7
304
FEB 1911
MADRAS
304
M11 I

சிவம்.

ஸ்ரீ கணேசாயநம: 

மஹேதிஹாஸமாகிய

# சிவாரஹஸ்யம்.

முதலிரண்டாம் அம்சங்களும்
மூன்றும் அம்சத்தின் பூர்வபாகமும்.

இஃது

பிரம்மஸ்ரீ
மருஹூர்-கணேச சாஸ்திரியார் அவர்களால்
மொழிபெயர்த்து

கயப்பாக்கம் - சதாசிவசெட்டியார் B. A.

அவர்களால்

சென்னை:

கிச்சினர் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

ஸாதாரண ஹு தை மாவி!

*Registered Copy Right.*

N11



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உபோத்காதம்.

மஹேதிஹாஸமாகிய சிவரஹஸ்யம் பூர்வம் பரமசிவனால் உமாதேவியார்க்கு மஹா கைலாஸத்திலும், முருகக்கடவுளால் மஹாதபஸ்வியாகிய ஜைகீஷவ்ய முனிவருக்கு ஸ்கந்தகிரியிலும், அதிரஹஸ்யமாய் உபதேசிக்கப்பட்டது.

பின்னர் அது, முருகக்கடவுளால் நந்திதேவருக்கும், அவர் தம்மை வழிபட்ட நாராயணமூர்த்திக்கும், அவர் தமது புதல்வராகிய பிரம்மதேவருக்கும், அவர் தமது புதல்வர்களாகிய ஸநகாதியர்களுக்கும், அவர் நாரத மஹாமுனிவருக்கும், அவர் வியாஸ மஹாமுனிவருக்கும், அவர் ஸூதபௌராணிகர்க்கும், முறையே உபதேசிப்ப நிலவுலகில் வந்து நிலவியது.

இம் மஹேதிஹாஸம், வேதவாக்கியங்களை அநுகரணஞ் செய்வதாயும், உபநிஷதர்த்த விசாரத்தை மேற்கொண்டதாயும், உபாஸநா காண்ட ஞான காண்ட ரஹஸ்யத்தை விளக்குவதாயும், திரிபுரதாபினி முதலிய உபநிஷத் விஷயங்களின் உண்மையை விளக்கும் பாஷ்யமாயும், முனிவர்களும் மஹரிஷிகளும் பிறரும் சிவோபாஸனையாலேயே மஹிமை பெற்றவர் என்பதையும், அச்சிவோபாஸனையே வைராக்கிய உற்பத்தி ஹேதுவாயுள்ள தென்பதையும், புராதன ஸ்தல தீர்த்த ஆரண்யாதிகளின் மஹிமைகளையும் பிரகாசப்படுத்துவதாயும், சிவபாரதம், யமலோகம், யமதண்டனை முதலியவற்றை விவரணஞ் செய்வதாயும், நந்தியாதி பிரமத மஹா கணங்களின் அற்புத சரித்திரங்களையும், உண்மை நாயன்மார்களாகிய அறுபத்துமூவரது சரித்திரங்களையும் தன்னகத்தே கொண்டதாயும், பாணலிங்கம், பில்வ பத்திரம், விபூதி, ருத்திராக்ஷம் முதலிய சிவஸாதனங்களையும், பிரதோஷ முதலிய சைவ விரதங்களையும், சிவபூஜை, சாம்பவ பூஜை, சிவதர்மம் முதலியவற்றின் பிரபாவங்களையும் விஸ்தரிப்பதாயும், தனக்கு ஒப்புயர்வின்றிப் பிரகாசிக்கும் பெருமையுடையதாம்.

இப்பரமேதிஹாஸம், ஒரிலக்கத்துக்கு மேற்கொண்ட க்ரந்த ஸங்கியையுடையதாயும், ஸஹஸ்ராத்யாயி என்னும் ஆயிரம் அத்தியாயங்களாலான மஹேசம், பவம், ஹாரம், சிவம், பார்க்கம், சங்கரம், உக்ரம், பீமம், ஸதாசிவம், ஈச்வரம், மஹா தேவம், ஈசம் எனப்பெயரிய பன்னிரண்டு அம்சங்களையுடையதாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

இனி யிப்பன்னிரண்டு அம்சங்களும் முறையே திக், லோக, அமர, பிரம்ஹவேத, ருத்ர, திங்நாக, ஷண்முகசேத்ர, சங்கர, ஷண்முக சேத்ர, முநி இவைகளின் ஸம்ஹிதா கிரந்தங்களைக்கொண்டனவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஒன்றிற்கும் பற்றாத சிறியனேன் இப்பெருமுயற்சியை மேற்கொண்டது அவாக்காரணமன்றி மற்றெதனாலுமன்றென்று ஸாதுக்கள் அறிவர். இம்முயற்சியில் இவ்வேழையேன் சிற்றறிவிற் கெட்டாத பல குறைபாடுகள் இப்புத்தகத்துட் காணப்படுவதியல்பேயாமாகையால் "குணநாடிக் குற்றமுநாடி யவற்றுண் மிகைநாடி மிக்க கொளல்" என்னும் பிரமாணப்படி இதனைப் பொருளாகக்கொண்டு இவனை ஆசீர்வதித்தருளுவர் பெரியோரென்று அன்னவர் பொன்னடிக்கமலப் பொடியணிந்தடிமை பூண்டவனாகின்றேன்.

இங்ஙனம்:
கயப்பாக்கம் - சதாசிவன்,
"சிவரஹஸ்ய மந்திரம்"
நெ. 497, தங்கசாலைத்தெரு,
சென்னை.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

வைதிக சைவீர் வைதிக சைவீர்
ஐதிக மிரும்பூ தறைகுவங் கேண்மின்
காமுன் னிழைத்த கயத்த வகிர்தந்
தாமுன் றோன்றிச் சமைந்தவாக் கேண்மதி
குமுத விதர்ப்புக் குலாஅய் கியிரும்
அமுதவம் பரமே யாகா ரமெனத்
தவளச் சாயையின் றமிழ்மண மோச்சிச்
சிவவரு ளுன்னதஞ் சிகரியிற் றெரிக்கும்
இரசதா சலத்தி னிறைவ னருதியிற்
பிரச நுவற்சியாற் பெரிது முவந்து
மெச்சிய மறையின் விளைவைத் தொகுத்துப்
பச்சிளங் கிள்ளைப் பராபரை யார்க்கும்
ஒருதிரு முருக னுபயசம் புக்குந்
திருநந்தி தேவன் றிருநா தனுக்கும்
பதும நாபன் பரமேட் டிக்குஞ்
சதுர்மறை வேதன் சனகா தியர்க்கும்
நகமுறை யத்தவர் நாரத முனிக்குஞ்
சுகயிரு மகதியன் றுவைபா யனற்குஞ்
சுருதி வருத்தோன் சூதன் றனக்குங்
கருதி யிசைத்த கனகப் பொக்கிஷம்
மாதவர் தழூஉ மகேதி காசம்
வேத நூகம் விளங்கு நிலயம்

உபதிட டார்த்த முரைக்கும் பாஷியந்
சுபசிவோ பாசனை துளிர்கற் பகத்தரு
உண்மைநா யன்மா ருயரிய சரிதை
திண்மை மிளிர்தரு சிவசா தனங்கள்
நவநவ மாக நலக்கப் பயக்குந்
தவமா ராற்ற நழுங்கு மிருநிதி
இத்தகு மந்தண மினிது மிழற்றுந்
தத்துவ முறுசிவ ரகசியந் தன்னைக்
கடனிகர் விபுலக் கலைய தான
வடமொழி யாட்சியின் மல்கக் கண்டு
மோன முனிவர் மொய்த்துப் பரசும்
ஞான ராஜ தானியாத் தோன்றும்
ஒருவாக் கலைவிரை யொருங்கு கம்மெனுந்
திருவா வடுதுறைத் தெய்வப் பதியிற்
கடுவா வொடுசெழுங் கடுக்கை யொரீஇ
மடலவிழ் குவளை மலர்த்தார் நிரீஇப்
பால லோசனம் பனிமதிக் கோடும்
நீலக் கறையு நேரா தொழிந்து
வந்த குருமணி வரேந்திர ரத்தினஞ்
சுந்தரப் பெம்மான் சுஞ்ஞான பானு
அருநிதி யிரண்டு மழுக்கா றடைவான்
பெருங்கொடை பொழிந்து பிறங்கும் வள்ளல்
ஆசி றாய வம்பல வாண
தேசிகன் றிருவடி திருவருள் பெற்றுத்
தன்னுள் ளத்தைத் தகவி னியம்ப
அன்னதே செய்கவென் றுரிய னறைந்து
மூலப் பிரதியை முறைமையி னளித்துச்
சால சகாயந் தருவமென் றருளக்
கேட்டா னந்தக் கிளர்ச்சி பொங்க
ஈட்டா நிதிய மேய்ந்த தென்னக்
கருவூர் கருமங் கலக்கியாட் கொளூஉம்
மருவூர் வைப்பு வந்த விப்பிரர்
குலத்திற் கணியாக் குலவிய தினமணி
நலத்திற் சிறந்த நவமணி யென்று
ஆரிய வம்பா வருநீ ருண்டு



பேரிய வையம் பெய்கொண் மூநற்
குணேசன் கஞ்சக் குரவனை நிகர்த்த
கணேசக் கலைஞனுங் காவலற் கொண்டு
கண்டு சீனி தேன் கன்ன லுடன்முப்
பண்டு பாகு பாலினு மினிக்க
அமிழ்தச் சுவையினு மதிக மேய்ந்த
தமிழிற் பெயர்த்துச் சதிருற வச்சில்
ஏற்றிமே தாவிய ரினிதுமீக் கூற
நாற்றிசை முற்று நல்கின னம்ம
இந்திர னுலகிற் கிடரியற் றிடுவான்
பந்தியி னிவர்ந்த பன்மா டத்தில்
அயர்ப்பொன் றில்லா வான்றோர் வதியுங்
கயப்பாக் கத்திற் கனதன வைசியர்
நாடற் குரிய நற்றபோ தனரிற்
கூடற் கிழாநற் கோத்தி ரத்திற்
சிரத்தை யுடனே சிவப்பணி யாற்றிய
இரத்தினக் கோமா னிருந்தவத் தோன்றல்
இலக்கண விலக்கிய மெனும்பயோ ததியில்
நலக்க வாடு நற்றமிழ்க் குஞ்சரஞ்
சைவசித் தாந்தத் தனிப்பெருஞ் சாகரந்
தெய்வத் தொண்டிற் றிளைத்த புனிதன்
பொய்மை மறுத்த புலவர் சிகாமணி
மெய்மை நிறுத்து மேட்டிமை யாளன்
கங்கை வேணிக் கண்ணுதன் மூர்த்தி
மங்கை பாகன் மருவிய மனத்தன்
சிவனடிச் செல்வரைச் சிவமென வுன்னி
அவர்பதம் பரவு மரும்விர தத்தன்
பூதிருத் திராக்கம் பொருளெனக் கொடே
நீதியைந் தெழுத்தை நிகழ்த்து நாவினன்
திருமுறை பாரா யணமே சித்தித்
தருமெனுங் கொள்கைத் தவறாத் திறலோன்
பகர்சுதந் தரமும் பரசிவ முதலெனப்
புகல்பவர் தொடர்பைப் பொருந்தி யுறைவோன்
மரகதக் கொழுமை மகரா யைத்துத்
தாளத் திரளைத் தண்டிகைக் கொழீத்

தத்துஞ் சென்னையிற் சைவ சமய
பக்த ஜனசபை பண்பிரு பித்தோன்
இன்பு வாய்ந்தா னியைபு வாய்ந்தான்
அன்பு வாய்ந்தா னடக்கம் வாய்ந்தான்
புத்தியிற் சிறந்தான் புகழிற் சிறந்தான்
பத்தியிற் சிறந்தான் பண்பிற் சிறந்தான்
உதார வண்மை யொருங்கே நிரம்பிய
சதாசிவ வறிஞன் றக்கநா வலனே.

---

ஓம்

ஸ்ரீ கணேசாயநம:

மஹேதிஹாஸமாகிய

# சிவாரஹஸ்யம்

## விஷய சூசிகை.

### முதலாம் அம்சம்.


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| க | ஸூதாகமனம் | க |
| உ | ஜைகிஷவ்ய தபச்சரியை | ௩ |
| ௩ | சிவோபாஸனைமகிமை | ௮ |
| ௪ | விஷ்ணுவாதிதேவர் வாக்கியம் | கஉ |
| ௫ | இறைவன் ஜைகிஷவ்யருக்குப் பிரசன்னராதல் | க௫ |
| ௬ | ஜைகிஷவ்ய வரப்பிரசாதம் | க௯ |
| ௭ | ஜைகிஷவ்ய ஸ்கந்தஸமாகமம் | உ௪ |
| ௮ | ஸ்கந்த தரிசனம் | உ௬ |
| ௯ | ஸ்கந்த சிவகண சமாகமம் | உ௯ |
| க0 | சிவாஜ்ஞை | ௩உ |
| கக | பன்னிரு அம்சவரலாறு | ௩௪ |
| கஉ | கைலாஸவர்ணனம் | ௩௮ |
| க௩ | கைலாஸேச்வர பிரதோஷ பூஜாவர்ணனம் | ௪௩ |
| க௪ | கைலாஸப்ராகாரவர்ணனம் | ௫0 |
| க௫ | சைலப்பிராகாரவர்ணனம் | ௫உ |
| க௬ | பஞ்சப்ரம்ஹப்ராகாரவர்ணனம் | ௫௫ |
| க௭ | கைலாஸப்ரசாதவர்ணனம் | ௫௮ |
| க௮ | கைலாஸமௌளிவர்ணனம் | ௬உ |
| க௯ | கைலாஸவர்ணனம் | ௬௪ |
| உ0 | க்ஷேத்ரவர்ணனம் | ௬௬ |
| உக | பிராணிகதி நிரூபணம் | ௭0 |
| உஉ | கைலாஸலிங்கவர்ணனம் | ௭௪ |
| உ௩ | கைலாஸவர்ணனம் | ௭௭ |
| உ௪ | கைலாஸவர்ணனம் | ௭௯ |

| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| ௨௫ | கைலாஸவர்ணனம் ... ... | ௮௦ |
| ௨௬ | கைலாஸவர்ணனம் ... ... | ௮௨ |
| ௨௭ | தேவிபூஜா சரிதம் ... ... | ௮௬ |
| ௨௮ | சைலப்பிராஸாதவர்ணனம் ... ... | ௮௭ |
| ௨௯ | அஷ்டசைலேஶவர்ணனம் ... ... | ௮௯ |
| ௩௦ | அஷ்டசைலேஶவர்ணனம் ... ... | ௯௧ |
| ௩௧ | சதுர்த்துவாரவர்ணனம் ... ... | ௯௨ |
| ௩௨ | ஸபாவர்ணனம் ... ... | ௯௩ |
| ௩௩ | சபாநடனவர்ணனம் ... ... | ௯௫ |
| ௩௪ | சதுர்விதபுருஷார்த்த மண்டபவர்ணனம் ... | ௯௭ |
| ௩௫ | கைலாஸ லிங்கவர்ணனம் ... ... | ௯௮ |
| ௩௬ | கைலாஸேஶ்வரலிங்க பூஜா கதனம் ... | ௧௦௦ |
| ௩௭ | கைலாஸவாஸ மஹிமை ... ... | ௧௦௩ |
| ௩௮ | கைலாஸ லிங்க மண்டல பூஜாகதனம் ... | ௧௦௫ |
| ௩௯ | லிங்கவைபவ கதனம் ... ... | ௧௦௬ |
| ௪௦ | கைலாஸ ப்ராக்த்வார லிங்கநாமகதனம் ... | ௧௦௮ |
| ௪௧ | கைலாஸ தக்ஷிணத்வார லிங்க கதனம் ... | ௧௧௦ |
| ௪௨ | பச்சிமத்வார லிங்க கதனம் ... ... | ௧௧௨ |
| ௪௩ | கைலாஸ உத்தரத்வார லிங்க நாமகதனம் ... | ௧௧௫ |
| ௪௪ | கைலாயகிரி தவமியற்றல் ... ... | ௧௧௮ |
| ௪௫ | கைலாஸகிரி வரப்ரதானம் ... ... | ௧௨௦ |
| ௪௬ | கைலாஸ கர்வபங்கம ... ... | ௧௨௨ |
| ௪௭ | வேதாரஹஸ்ய கதனம் ... ... | ௧௨௬ |
| ௪௮ | லிங்கோற்பவ ரகஸ்யகதனம் ... | ௧௨௮ |
| ௪௯ | சிவஸ்வரூப கதனப்ரார்த்தனை ... | ௧௩௧ |
| ௫௦ | விபூதி கதனாரம்பம் ... ... | ௧௩௪ |
| ௫௧ | விபூதி கதனம் ... ... ... | ௧௩௭ |
| ௫௨ | விபூதி கதனம் .. ... ... | ௧௩௯ |
| ௫௩ | தேவி வெளிப்படுதல் ... ... | ௧௪௩ |
| ௫௪ | உபநிஷத்ஸ்துதி ... ... | ௧௪௪ |
| ௫௫ | உபநிஷதப்ரதிபாதநம் ... ... | ௧௪௬ |
| ௫௬ | தேவர்கள் சிவபூஜை செய்தது ... | ௧௪௯ |
| ௫௭ | மகாலிங்க தரிசனம் ... ... | ௧௫௨ |
| ௫௮ | ஆத்மலிங்க கதனம் ... ... | ௧௫௩ |
| ௫௯ | உபநிஷது லிங்க கதனம் ... ... | ௧௫௭ |
| ௬௦ | உபநிஷது லிங்க பூஜாமகிமை ... | ௧௬௨ |


முதலாம் அம்சம் முற்றிற்று.



சிவமயம்.

# இரண்டாம் அம்சம்.


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| ௧ | விநாயகர் வணக்கம் ... ... | ௧-௧௬௭ |
| ௨ | தேவி தவமுரைத்தல் ... ... | ௩-௧௬௯ |
| ௩ | தேவி விப்ரசம்வாதம் ... ... | ௪-௧௭௦ |
| ௪ | அம்பிகேசாலய தரிசனம் ... ... | ௧௭௭ |
| ௫ | அம்பிகேச பூஜாகதனம் ... ... | ௧௮௧ |
| ௬ | ஈஶ்வராகமனம்... ... ... | ௧௮௫ |
| ௭ | இறைவன் தேவியை உபசரித்தல் ... | ௧௮௮ |
| ௮ | மணித்வீப சிருஷ்டி ... ... | ௧௯௦ |
| ௯ | மணித்வீப கமனம் ... ... | ௧௯௨ |
| ௧௦ | மணித்வீப கமனம் ... ... | ௧௯௫ |
| ௧௧ | அமராபய தானம் ... ... | ௧௯௭ |
| ௧௨ | மணித்வீப வர்ணனம் ... ... | ௨௦௧ |
| ௧௩ | மணித்வீபப் பிரவேஸம் ... ... | ௨௦௪ |
| ௧௪ | ஸ்ரீ சக்ராலய தரிசனம் ... ... | ௨௦௫ |
| ௧௫ | இறைவனும் இறைவியும் காமேஶ்வர காமேஶ்வரியாய்க் கிரீடித்தல் ... ... | ௨௦௮ |
| ௧௬ | ஸ்ரீ சக்ராலயஸ்வரூப வர்ணனம் ... | ௨௧௧ |
| ௧௭ | ஸ்ரீ சக்ராலய வாசம் ... ... | ௨௧௨ |
| ௧௮ | ஹிமவான் கைலாயகிரி யடைதல் ... | ௨௧௩ |
| ௧௯ | ஹிமவானது சிவதரிசனம் ... ... | ௨௧௭ |
| ௨௦ | தேவி மேனையோடு கைலாயத்தில் சஞ்சரித்தல் | ௨௨௧ |
| ௨௧ | தேவி விலாசம் ... ... | ௨௨௨ |
| ௨௨ | ஹிமவான் கைலாயப் பிரதேச தரிசனம் ... | ௨௨௪ |
| ௨௩ | ஹிமவான் கைலாயப் பிரதேச தரிசனம் ... | ௨௨௭ |
| ௨௪ | ஹிமவான் சப்தத்வீபங்களையும் பார்த்தல் ... | ௨௨௯ |
| ௨௫ | ஹிமவானது ப்ரார்த்தனை ... ... | ௨௩௩ |
| ௨௬ | இறைவன் இமவானுக்கருளுதல் .. | ௨௩௫ |
| ௨௭ | தூர்வாச தபோவர்ணனம் ... ... | ௨௩௭ |
| ௨௮ | தேவி ஹிமாலயாகமனம் ... ... | ௨௪௧ |
| ௨௯ | தூர்வாசர் செய்த தேவிஸ்துதி .. | ௨௪௪ |
| ௩௦ | தேவஸ்திரீகள் தேவியை யடைந்து துதித்தல் | ௨௪௭ |


இரண்டாம் அம்சம் முற்றிற்று.

உ

சிவமயம்.

# மூன்றும் அம்சம்-பூர்வபாகம்.


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| ௧ | சிவரகசிய வரலாறு ... ... | ௨௫௨ |
| ௨ | காயத்திரீ வரப்ரசாதம் ... ... | ௨௫௮ |
| ௩ | வியாசமுனி சம்வாதம் ... ... | ௨௬௫ |
| ௪ | தேவி கைலாஸஞ் செல்லுதல் ... ... | ௨௭0 |
| ௫ | தேவி கைலாயஞ் செல்லுதல் ... ... | ௨௭௪ |
| ௬ | தேவி கைலாயஞ் செல்லுதல் ... ... | ௨௭௬ |
| ௭ | தேவி கைலாயஞ் செல்லுதல் ... ... | ௨௮௧ |
| ௮ | தேவி நாட்டியங்காணல் ... ... | ௨௮௭ |
| ௯ | நந்தீசகணாதிப சம்வாதம் ... ... | ௨௯௩ |
| ௧0 | கணேச சிவசந்நிதான சமாகமம் ... | ௨௯௭ |
| ௧௧ | கணேச பிரார்த்தனை ... ... | ௨௯௯ |
| ௧௨ | சிவகணேச சம்வாதம் ... ... | ௩0௩ |
| ௧௩ | சிவகணேச சம்வாதம் ... ... | ௩0௮ |
| ௧௪ | ஸ்கந்தர் சிவசந்நிதான மடைதல் ... | ௩௧௧ |
| ௧௫ | ஸ்கந்த கணேசர் தேவியை யடைதல் ... | ௩௧௫ |
| ௧௬ | நந்தீஸ்வர குமார சம்வாதம் ... ... | ௩௨0 |
| ௧௭ | குமாரர் சிவாபராத முரைத்தல் ... | ௩௨௭ |
| ௧௮ | பிருங்கிமுனிவரது வருகை ... ... | ௩௩௪ |
| ௧௯ | தண்டி வருகை ... ... | ௩௩௭ |
| ௨0 | சிவகேளி விலாசம் ... ... | ௩௪0 |
| ௨௧ | இறைவன் குமாரர்களுக் கருளுதல் ... | ௩௪௪ |
| ௨௨ | சிவநிவேதன மகிமை ... ... | ௩௫௨ |
| ௨௩ | சிவநிவேதன மகிமை ... ... | ௩௫௯ |
| ௨௪ | சிவபெருமான் ரேவாநதிக்கரையை யடைந்தது ... ... ... | ௩௬௫ |
| ௨௫ | சாம்பசிவபூஜை ... ... | ௩௭0 |
| ௨௬ | சிவபூஜாமகிமை ... ... | ௩௭௪ |
| ௨௭ | சிவபூஜாமகிமை ... ... | ௩௮௧ |
| ௨௮ | நந்திகேசர் தேவர்களுக்குச் சிவமகிமை யுரைத்தது ... ... | ௩௮௬ |
| ௨௯ | நந்திகேசர் சிவதர்ம முரைத்தது ... | ௩௯௧ |
| ௩0 | சிவபக்தர் மகிமையுரைத்தது ... ... | ௩௯௮ |
| ௩௧ | சிவபக்தர் மகிமையுரைத்தது ... ... | ௪0௨ |
| ௩௨ | சிவபக்தர் மகிமையுரைத்தது ... ... | ௪0௮ |
| ௩௩ | சிவநைவேத்ய போஜனபலன் ... ... | ௪௧௩ |
| ௩௪ | நாரதர் சிவதர்மங் கூறியது ... ... | ௪௧௮ |
| ௩௫ | அகஸ்தியர் ஸ்ரீ சைலநாதனைத் துதித்தது ... | ௪௨௪ |
| ௩௬ | தீர்த்தேச லிங்கமஹிமை யுரைத்தது ... | ௪௨௫ |
| ௩௭ | தக்ஷயாகம் ... ... ... | ௪௨௯ |
| ௩௮ | தக்ஷயாகம் ... ... ... | ௪௩௯ |
| ௩௯ | தக்ஷயாகம் ... ... ... | ௪௪௨ |
| ௪0 | தீர்த்தேஸார்ச்சகர்களுக்கு அனுக்கிரகித்தது | ௪௫௨ |
| ௪௧ | கமலலோசனையின் சிவோபாசனை ... | ௪௬௪ |
| ௪௨ | நந்திதேவர் சாம்பவனை அறிவித்தது ... | ௪௭௧ |
| ௪௩ | யாக்ஞவல்கிய ஜனக சம்வாதம் ... | ௪௭௭ |
| ௪௪ | ஜனகன் முத்திஸாதனம் வினவியது ... | ௪௮௨ |
| ௪௫ | ஜனகன் சிவோபாசனை செய்யாமைக் கிரங்கல் | ௪௮௮ |
| ௪௬ | யாக்ஞவல்கியர் சிவஞான ஹேது கூறியது | ௪௯௭ |
| ௪௭ | குரு சதாநந்த சம்வாதம் ... ... | ௫0௧ |
| ௪௮ | சூரசேன சரித்திரம் ... ... | ௫0௭ |
| ௪௯ | பிரதோஷ பூஜாமஹிமை ... ... | ௫௧௨ |
| ௫0 | தர்மதர்மங் கூறியது ... ... | ௫௧௭ |


மூன்றும் அம்சம் பூர்வபாகம்

முற்றிற்று.

நந்த வகையாயுள. அவைகளெல்லாம் போகமோக்ஷங்களைத் தருவனவேயாயினும் அவ்வெல்லாவற்றினும் நர்மதையிலுள்ள பாணலிங்கமே சிறந்தது. நர்மதையிற்றோன்றிய பாணலிங்கத்தின்பொருட்டுத் தீர்த்தம் மலர் கனி பில்வம் இவைகளைச்சமர்ப்பிப்பது ஆனந்தசித்தியை யளித்தருளும். நர்மதாநதி சம்பந்தமான லிங்கம் கிடைப்பதரிதே. பில்வதளமுமரிது. சாம்பவவித்தையும் துர்லபம். சாம்பவர்களும் துர்லபம். சாம்பவராயிருந்து ரேவாதீர்த்தத்தில் சிவலிங்கபூஜைசெய்வோர் முக்தியடைவதற்குச் சிறிதுமையமில்லை. அன்றியும் இங்கும் ஸ்ரீசைலத்திலுள்ள சிவாலயத்தில் பார்வதியால் பூஜிக்கப்பட்ட திரிபுராந்தகமென்னும் லிங்கமுளது. திரிபுர அசுரரைச் சங்கரித்த முக்கண்ணனாகிய இறைவன் ஸ்ரீசைலத்தில் லிங்காகாரமாய் விளங்குகின்றனன். பூமண்டலங்களிலிருக்கும் புண்ணியதீர்த்தங்களெல்லாம் ஸ்ரீசைலத்தில் வந்து பாவனஞ்செய்யச்சித்தமாயிருக்கின்றன. அவ்விலிங்கத்தைப் பூசிப்பதினால் வரும் புண்ணியம் உடனேபெரியசம்பத்துக்களையு முத்தியையுமளிக்கத்தகும். அவ்விலிங்கத்தை எவன் அருகினாலும் பில்வபத்திரங்களாலும் தீர்த்தங்களாலும் பூசிக்கின்றானோ அவனுக்கு முக்திகிடைப்பது நிச்சயம். அங்கு குடம்நிறைந்த கோக்ஷீரத்தை பக்தியுடன் எவன் சாம்பவருக்குச் சமர்ப்பிக்கின்றானோ அவன் அமிர்தக்கடலுக்கு அதிபதியாவான். ஸ்ரீசைலத்தில் சாம்பவருக்கன்னமிடுவோன் அன்னராசிகளுக்கதிபனாவான். அங்கு ரத்னதானஞ்செய்வோன் ரத்னகோசங்களுக்கதிபதியாவான். ருத்திரனை யுத்தேசித்துச் சுவர்ண தானஞ்செய்வோன் சுவர்ணபதியாயிருந்து முக்தனாகின்றான். அவ்விடத்தில் சிவத்தியானஞ்செய்வோன் தானதிபதியாவான். கண்டாகர்ணேஸ்வரமென்றோர் லிங்கமுளது. அதனைப்பூசிப்பதனால் சகல பாபங்களும் தொலைகின்றன. அங்கு சுதாகுண்டமென்றிருக்கிறது. அதில் ஸ்நானஞ்செய்தவன் உடனே சகல பாபங்களினின்றும் விடுபடுகின்றான். நடுவிலிருக்கும் கண்டாகர்ணேஸ்வரரை நினைத்தால் சகலபாபங்களும் நீங்குகின்றன. அவரை நமஸ்கரித்துப் புஷ்பமுதலியவைகளால் பூசிப்பவன் அளவிறந்த ஐஸ்வர்யமடைகின்றான். புண்ணியகோடிகளுடையோனே சிகரேஸ்வரனைப் பூசிப்பான். அவரைப் புண்ணியகாலங்களில் தூர்வைமுதலியவைகளால் பூசிப்பவனே பாக்கியவான். அங்கு விபூதிகுண்டமென்றொன்றிருக்கின்றது. அத்தீர்த்தத்தில் உலகிலுள்ள சகல தீர்த்தங்களும் தினந்தோறும் வந்து கலந்து போகின்றமையால் ஏனைய தீர்த்தங்கள் புண்யத்துவம்பெற்றன. ஸ்ரீசைலம் கிடைப்ப

தரிது. அதனிலும் அரிது விபூதிகுண்டம். திரிபுராந்தகலிங்கம் இவ்வுலகில் மிக்கவரிது. சிகரேஸ்வரரைப் பூசித்தவன் சகலபாபங்களினின்று விடுபடுகின்றான். எங்கிருந்தாலும் ஸ்ரீசைலேஸ்வரனை நினைக்கிறவன் முக்திக்காளாகின்றான். அங்கு ஹாடகேசனென்று சுவர்ணமயமாய் ஓர் லிங்கமுளது. அங்கு ஹாடகமென்று ஓர் குண்டமுளது. அதன் தீர்த்தம் சகலபாபங்களையுந் தொலைப்பதாகும். அங்கு ஸ்நானஞ்செய்து அந்த லிங்கத்தைப் பக்தியுடன் வில்வபத்திரத்தால் பூசிக்குமனிதன் முக்திக்காளாகின்றான். ஸ்ரீசைலத்தில் பிரமராம்பிகையைத் தரிசிப்பவன் சகல பாபங்களும் நீங்கிச் சம்பத்துக்கு நாதனாவான். பிரமராம்பிகையினது பாதாரவிந்தத்தை அழகிய வில்வதளங்களால் பூசிப்பவன் ராஜ்யாதிபதியாவான். அவ்வம்பிகையைப் பிரதக்ஷிணஞ்செய்து பூசிக்கும் கையில் சகல ஐஸ்வர்யமாகிய மங்கைவசமாயிருக்கின்றாள். அவனுக்குப் புண்ணிய சந்ததிகளுமோங்குகின்றன. பிரமராம்பிகை சரணாரவிந்தத்தைப் பூசிப்பதை எவனது சித்தம் விரும்புகிறதோ அவனுக்கு ஆபத்து என்னும் சொல்லும் நிகழாது. சம்பத்தை யளிக்கவேண்டுமென்றே பிரமராம்பிகை அங்கு விரதங்கொண்டிருக்கின்றனள். அவளது பாதாரவிந்தத்தின் தூளியால் சகலகோடி சம்பத்துக்களும் வளருகின்றன. அவளது பிரபாவத்தை வேதங்களுமறிந்தில. என்ன விரித்துக்கூறுவமிஃதே. இந்த மௌலியின் பிரசாதம்பெற்ற மனிதன் சகல புவனங்களுக்கதிபனாகின்றான் என்று மனதில் திடமாய் நினைத்துப் பார்வதிநாதனைச் சரணமடைவாயாக.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

உ

தாரகாஸுரஸம்ஹாராயநம:

## முப்பத்து மூன்றாம் அத்தியாயம்.

### சிவநைவேத்ய போஜனபலன்.

அரசன்:-ஓ சுவாமி! யான் அஜாக்கிரதையால் சிவபூஜையின்றும் வழுவினேன். அதனை விடுத்ததினால் பாக்கியமெலாந் தொலைந்தது. இப்போது நானென்ன செய்வேன். பூஜாசாமக்கிரியையில்லை. பஞ்சாமிர்தம் நைவேத்யம் முதலிய சாதனம் யாதுமில்லை



தீபம் வைப்பதற்கும் சந்தனம் முதலிய அலங்கரிக்கும் வஸ்துக்களுமில்லை. இத்தகைய நிலைமையிலிருக்கும் யான் ஓ ஸ்வாமி! எப்படி சிவபூஜை செய்வேன். எனது மனம் சிவபூசைக்கு வேண்டிய சாதனங்களின்றிப் பூசிக்கத்துணியுமா. சிவபூஜா சாதனமில்லாமல் சிவபூஜை செய்வதுண்டா? அதனால் பலன் தானுண்டாகுமா? கேவல கோதோகத்தினாலும் ஸான்னாய்யத்தினாலும் அல்லது ததியாமல் மாத்திரமாவது ஆஜ்யமாத்திரத்தாலாவது விரும்பிய யாகம் பயன் படுமா? பத்னியால் தரிசிக்கப்பட்ட ஆஜ்ய முதலியதே யாகத்துக்குச் சாதனமாகும். சிவபூஜை சபலமாகவேண்டுமானால் அதற்கு முக்ய சாதனமாகிய செல்வம் வேண்டியதே. அதற்கோ இப்பொழுது யான் சிறிதுந்தக்கவனல்லன். ஓஸ்வாமி! யானென்ன செய்வேனென்றுகூறினான். அப்போது சாம்பவரும் அவ்வரசனை நோக்கி, ஓ அரசனே! செல்வமிருக்குங்காலத்தில் சிவபூசையை மறந்து விடுத்துச் செல்வந் தொலைந்த காலத்துப் பச்சாதாபத்தாற் றுக்கிக்கின்றனையே! இது தகுமோ? எப்படியாவது சிரமப்பட்டுச் சாமக்கிரியை சம்பாதித்துக்கொண்டு பூசைசெய். ஓ அரசனே! அத்தகைய திவ்யான்னராசிகளும் திவ்ய ரத்னமலைகளும் உன்னிடமிருந்த காலத்தில் சம்பூசையில் பக்தியில்லை. இப்போது எல்லாந்தொலைந்த பிறகு இப்பக்தி வந்து என்ன செய்வேனென்கின்றனையே. மகாதேவார்ச்சனமொன்றே சகல விபத்துக்களையும் தொலைப்பது. ஆபத்துக்காலத்தில் பக்தி எப்படியிருக்கிறதோ அப்படியே சம்பத்துக்காலத்திலுமிருக்க வேண்டும். அவனே சகல பாக்யங்களும் மேன்மேல் வளரப்பெறுவான். உன்னிடமிருந்த ரத்னக் குவியல்களெல்லாந் தொலைந்து விட்டன. இப்போது நீ எவ்விதம் லிங்கத்தை ரத்னங்களால் பூசை செய்யமுடியும்? ஓர் ரத்னத்தினால் மகாதேவனைப் பூசிப்பவன் கற்பாந்த காலத்திலும் சம்பத்துக்க ணீங்கப் பெறாமலிருப்பான். சங்கரனைப் பூசிக்காது உனது ரத்னங்களெல்லாம் சாம்பராய்ப் போய்விட்டன. கோக்ஷீர இருத அருவிகளெல்லாம் வற்றிப்போயின. புஷ்பவனமெல்லாம் எரிந்துபோயின. உனது பாக்கிய விபவமெல்லாம் எங்கேயோ தொலைந்து விட்டனவே. இனி நீ அநுதாபப்படுவதாலென்ன பயன்? மஹா விபவமுடையோர் ஸ்ரீ மஹா தேவனைப் பூசிக்காது, அந்தோ நசிக்கின்றனரே! ஓ அரசனே! உனது பிறவியைச் சுடலாம். உனது ஜீவனத்தையுஞ் சுடலாம். சிவார்ச்சனை செய்யாத பிறவியுடையோர் கேவலம் நரகத்துக்கே ஆளாகின்றனர். இனியாவது எப்படியாயினும் ஜகதீச்வரனைப் பூசிப்பதில் முயலுவா

யாக வென்ன, அரசனும் முனிவரைப்பணிந்து தடாகத்தில் மூழ்கித் தூர்வாங்குரங்களால் மஹா தேவனைப் பூசித்து வந்தான். இப்படிப் பன்னெடுங்காலம் காலகாலனுடைய கிருபையின்றி மனம் வருந்திச்சிவபூசைசெய்யப் பரமேஸ்வரனும் இவன் உன்மத்தன், இவனுக்குப் பாக்கியம் கொடுத்தால் நம்மைப் பூசிப்பதில்லை யென்று உபேக்ஷையாயிருந்தார். ஆயினும் சிவபூஜையை விடாமலிருந்தான். பிறகு அன்ன ஆகாரங்களுக்கும் வழியில்லாமற் செய்து விட்டார். அப்படியாயினும் திரிபுராந்தக ஆலயத்தில் அன்னமின்றிப் பலகாலும் பூசித்து வந்தான். பின்னர் ஆருத்திரா நக்ஷத்திரங் கூடிய சோமவாரப் பிரதோஷகாலத்தில் தூர்வாங்குரங்களாலும் தாமரை மலர்களாலும் சுத்தமான தீர்த்தங்களாலும் சங்கரனைப் பூசித்து நமஸ்காரங்களாலும் நடனங்களாலும் திருப்தி செய்வித்தான். பரமேஸ்வரன் பிரசன்னராய் அவ்வரசனுக்கு வேண்டிய பாக்கியங்களைத் தந்தருளினார். அவ்வரசனும் அப்பாக்கியங்களைப் பெற்றுப் பரமசந்தோஷங்கொண்டு அச்சிவாலயத்துக்குத் தனது செல்வத்தால் ரத்னப் பிராகார மமைத்தனன். திவ்ய புஷ்ப வனங்களை யுண்டாக்கினான். கோடிக்கணக்காய்த் தீபமாலைகளையும் தூபராசிகளையும் சமர்ப்பித்தான். பஞ்சாமிர்தத்தைப் பிரவாகம் பிரவாகமாய்ப் பரமேஸ்வரனுக்கு அபிஷேகஞ் செய்தான். திவ்ய பரிமளங்கலந்து நறுமணமலர்த்தேனுங் கலந்துள்ள சந்தனத்தைச் சமர்ப்பித்தான். நைவேத்யங்களை மலைபோலச் சமர்ப்பித்தனன். நாட்டியங்களாலும் வெண்பட்டாடை யாபரணங்களாலும் கானங்களாலும் பிரதக்ஷிண நமஸ்காரங்களாலும் சிவனைத் திருப்திசெய்வித்துத் தினந்தோறுங்கோடிக்கணக்காய்ச் சைவபுங்கவர்களுக்கு அன்னம் ஆடை சுவர்ன முதலியவைகளை வேண்டு மளவுங்கொடுத்து அத்தேயத்திலுள்ள எல்லோரையும் சாம்பவராக்கினான். சிவார்ச்சனையிலுள்ள பிரியத்தால் போஜனத்தையு மறந்திருந்தான். சாம்பவர்களன்றி ஏனையோர்களுடன் ஓர் கணப்போதாவது சம்பாஷித்தானென்பதில்லை. அவன் நினைத்ததாவது:-இப்பாக்கியம் நஸ்வரம். இதனால் சங்கரனைப் பூசிக்காதிருப்போமானால் இவ்வளவும் வீண். அந்தோ! சிவபூஜையை விட்டதனால் பற்பல துக்கங்களை யநுபவித்தோம். அந்தமில்லாது வருந்தினோம். அப்படிப்பட்ட நாம் இப்போது இப்பாக்கியத்தைப் பெற்றோம். இப்பாக்யத்தை யெல்லாம் சங்கரருக்கே சமர்ப்பித்துக் கொண்டு சிவ நைவேத்ய மாத்திரத்தினால் ஜீவித்து விடுவோமானால் நமக்கின்னும் எவ்வளவோ பாக்யங் கிடைக்கும். ஆத



லால் இனியாவது சிவன் கோபிக்காம லிருக்கும்படி நாம் நடக்க வேண்டும். கோபிப்பாரானால் முன் துக்க மநுபவித்ததுபோல் வாழ்நாள் முழுதும் மகா துக்க மநுபவிக்கவரும். ஆதலால் நமக்கு முக்கியதர்மம் வாழ்நாள் முழுதுஞ் சிவபூஜை செய்வதே. சிவபூசையிலேயே காலங்கழித்து வருவோமானால் நமக்குக் கலியினிடமும் பயமில்லை யென்று தீர்மானித்து மிக்க சிரத்தையோடு சிவபூசை செய்தான். அப்புண்யத்தின் மகிமையால் முன்னையிலு மதிகமாய்ச் சகல சம்பத்துகளும் வளர்ந்தோங்கின. அவனுக்கு எண்ணிறந்த புத்திரர்கள் தோன்றிச்சாம்பவ புங்கவர்களா யிருந்து பரமபக்தியுடன் அவர்களும் சிவபூசை செய்து வந்தனர். அவர்களும் சிவாலயம் சிவநந்தனவனம் இவைகளை எண்ணிறந்தனவாய்ப் பிரதிஷ்டை செய்தார்கள். புஷ்பங்களையும் பில்வபத்திரங்களையும் கொய்துவந்து மலைக்கு நிகராய்ச் சேகரித்துவைத்துக்கொண்டு மகாதேவனைப் பூசித்து வந்தார்கள். தங்களுக்குள்ள மகா பாக்கியங்களைச் சிறிதும் மதியாது சங்கரனைப் பூசிப்பதைப் பெரிய வுற்சவமாய் நினைத்து மகிழ்ந்திருந்தனர். அவர்கள் நாராயணாதிதேவர்களும் போற்றப்பெறும் மகா சாம்பவராயினர். அவர்கள் சிவபூஜாமகிமையால் சகல சித்திகளும்பெற்றுச் சுவர்க்கம் பிரமலோகம் வைகுண்டமுதலிய வுலகங்களில் தம்மிச்சையாய்ச் செல்லு மஹிமையைப் பெற்றனர். அவர்கள் சிறந்த குதிரையிலேறிக்கொண்டு ஓர் சமயம் சுவர்க்கஞ் செல்வார். ஓர் சமயம் சிவலோகம் செல்வார். அவருக்கு யாதுந் தடையில்லை. ஓர் சமயம் அச்சாம்பவர்கள் பிரமலோகஞ் சென்றனர். பிரமனும் அவர்களை எதிர் சென்றழைத்து மிக்க ஆதரவுடன் பூசித்தனன். பிரமதேவனை அங்குள்ளார் இவர்கள் யாவரென்று வினவ அதற்குப் பிரமதேவன் கூறலாயினன். ஓ முனிவர்களே! இவரது மூதாதை பூர்வம் கீகடமென்னு மிடத்திலுள்ள ஓர் வேடன். அவன் அங்குள்ள துஷ்டமிருகங்கள் அவ்விடத்திலேயே யுள்ள ஓர் சிவாலயத்தில் நுழையாம லிருக்க அச்சிவாலயத்தின் வாயிலிலிருந்து காத்துக்கொண்டிருந்தனன். அங்கு யாரோ ஒருவர் அடிக்கடி அச்சிவாலயம் வந்து அவ்வாசற்படியில் அன்னபலி சமர்ப்பித்துக் கொண்டிருந்தார். அவ்வன்னத்தை அவ்வேடன் தனது தாரத்துடன் புசித்துக்கொண்டு காலங்கழித்துவந்தான். அப்படியிருக்கும்போது அவ்வன்னபோஜன பரிபாகவசத்தால் அவன் மனைவி கர்ப்பவதியானாள். அவளிடம் மிக்க அழகுவாய்ந்த புதல்வன்பிறந்தான். அத்தேயத்தரசன் ஓர்காலம் அங்கு வரும்போது அக்குழந்தையைக்

கண்டான். அவனது சௌந்தர்யத்தைக் கண்ணுற்றவரசன் இப்புதல்வன் யாரென்று விசாரிக்க அங்குள்ளவர்கள் இவன் சிவான்னபலியைப் புசித்ததின் பரிபாகத்தாலுண்டாகிய சுக்கிலத்திற்கு ஜனித்தவனாகையால் இத்தகைய வழகும் புத்தி பரிபாகமும் பெற்றிருக்கின்றானென்றனர். அதனைக்கேட்டு அரசன் தனக்குப் புத்திரனில்லாதிருப்பதையும் அப்புதல்வனது பரிபாகத்தையுங்கண்டு அப்புதல்வனுக்கு ராஜ்யத்தை யளித்தான். அப்புதல்வனும் சிவ நைவேத்ய போஜன பரிபாகத்தால் தோன்றியவனாகையால் பரமக்கியான முடையவனானான். அப்புதல்வன் தன்னிலைமையை நினைந்து ஓஹோ நமது பாக்கியமே பாக்யம்! நாமே தன்யர். சிவ நைவேத்திய அன்ன பரிபாகத்தால் தோன்றினவனன்றோ? அதனாலேயே ராஜ்யமும் பெறுவோம். ஆதலால் இனி யாம் சிவபூஜையே செய்தல் வேண்டும். சிவ நைவேத்ய சம்பந்தமிருந்தால் அரசனாவான். ஆதலால் தேவர்களுக்கும் அரிதாகிய சிவ நைவேத்யத்தை ஈஸ்வரானுக்கிரகத்தாலேயே நாம் பெற்றிருக்கின்றோம் என்று அவன் கர்ப்பத்திலேயே தெரிந்துகொண்டவன். பின்னர் ராஜ்யத்தை யடைந்து யௌவனத்தையும் பெற்று அதனால் மதித்து மோகங்கொண்டு மங்கையர்களையே நாடி சிவலிங்கத்தை மறந்து தனது ரத்னமயமான மாளிகைவிட்டிறங்காது எப்போதும் சிருங்கார விலாசத்துடனிருந்தான். அப்படிப்பட்ட உன்மத்தனாயிருந்த சமயத்தில் சிவபூஜையை மறந்தான். ஏதோ ஓர் வியாஜம்போல ராஜ்யமும் சகலபாக்யங்களுந் தொலைந்தன. பிறகு ஸ்ரீ சைலநாதனைப் பூஜித்து அதனால் முன்னினும் அதிகமாகிய ராஜ்ய பாக்யங்களைப்பெற்றான். சிவனைப் பரமபக்தியுடன் பற்பலவித வுபசாரங்களால் பூசித்தான். அவனுக்கு இவர்கள் புத்திரர்களாகையால் பரமசாம்பவர்களாயிருக்கின்றனர். இவர்களும் எண்ணிறந்த சிவாலயப் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர். சிவநந்தனவனமும் தாபித்திருக்கின்றனர். ராஜ்யபாகங்களும் நாளுக்குநாள் செழித்தோங்குகின்றன. அவைகளெல்லாவற்றையும் சிவபூஜையின் பொருட்டுபயோகப்படுத்தி வருகின்றனர். அதனால் இவர்களிடம் மகாதேவர் பூர்ணப்பிரசாதங்கொண்டிருக்கின்றனர். ஓ தேவர்களே! முனிவர்களே! சிவபூசை அனந்தமான ஐஸ்வர்யங்கொடுக்கும் சாமர்த்தியமுடையது. சிவபூசனை செய்வோரது செல்வத்திற்கு அந்தமில்லை. சித்தமானது சிவசிந்தையே நிலமாய்க்கொண்டிருக்குமாயின் குபேரனுக்கும் அதிபதியாவர். இல்லம் இமையவருலகம் வரையிலுயர்ந்திருக்க உன்னதமாகிய



குதிரைகளும் மதயானைகளும் கோ தனதான்யங்களும் நிறைந்திருக்குமிடமெல்லாம் சாம்பவரது ஆலயமல்றோ? அஃதெலாம் சிவநாமத்தைச் சிரவணஞ்செய்ததின் பயனேயாம். பாக்யமென்பது யாதோ அஃதெலாம் சிவபூஜா பாக்யமேயாம். இஃதெலாம் இடையில் வரும் பயனேயன்றி முக்யபயனல்ல. சத்யலோகாதிவாசமும் சிவபூசாபலமே. சிவபூசையின் மஹிமை யெப்படி யறியக்கூடும்? சாக்ஷாத் சிவபெருமானே அதனை யறிவார். சிவபூசையினால் இவ்வுலகுமாத்திரமல்ல, சகலத்துக்கும் மேலாகிய கைலையுமடையலாகுமென்று பிரமதேவன் கூறினார்.

முப்பத்து மூன்றும் அத்தியாயம்

முற்றிற்று.

---

உ

ரக்ஷாபலாயிநம:

## முப்பத்து நான்காம் அத்தியாயம்.

### நாரதர் சிவதருமங் கூறியது.

நந்திதேவர்:-இங்ஙனம் பாக்கிய தேவதையின் மொழியைக் கேட்டு அவளை நமஸ்கரித்து பக்தன் கேட்டதாவது. ஓ பாக்கியதேவதையே! நீ என்னைவிட்டு விலகாதிருக்கவேண்டும். நீ மஹேஸ்வராஞ்ஞையால் வந்தவளன்றோ? பரமேஸ்வராஞ்ஞையை நீ என்னைவிட்டு விலகாதிருக்கவேண்டுமென்பதாய்ப் பிரார்த்திக்கின்றேன். உன்னை இறைவனும் கௌரவப்படுத்துகின்றானன்றோவென்று கூறி மனமகிழ்ந்து பிரதிதினமும் சிவபூஜையே முக்யமாகவும் சிவநாமங்களையே பெரிதாயுங்கருதினவனுமாயிருந்தான். சிறந்த ரத்னாலயம் பிரதிஷ்டைசெய்து அங்குள்ள நர்மதா லிங்கத்திற்கு அவ்வாறு ஆலயஞ் சமைத்து சகலாபரணங்களுஞ் சமர்ப்பணஞ்செய்து ரத்னமயமான பிராகாரமுங்கட்டி பிரதிதினமும் பஞ்சாமிர்தத்தைப் பிரவாகத்திற்கு நிகராய்ப் பரமசிவனுக் கபிஷேகித்துப் பரிமள மிகுந்த சந்தனம் கஸ்தூரி முதலிய பொருள் கலந்த திவ்யமான தீர்த்தப் பிரவாகங்களும் அபிஷேகித்துக் கோகிருத (பசு நெய்) முதலியவைகளால் திவ்ய தீபமாலைகளிட்டும் பில்வம் மந்தாரம் கமல முதலிய மலர்களாலும் சுவர்ண புஷ்ய மாலைகளாலும் முத்துமாலைகளாலும் நீலோற்பல மாலைகளாலும் பில்வ பத்திர மாலைகளாலும் ஈஸ்வரனை

த்திருப்தி செய்வித்துப் பர்பலவித தூப தீபங்களாலும் திவ்ய சர்க்கரை நெய் முதலியவைகளுடன் கூடிய வடக முதலிய பக்ஷணவகைகளாலும் திவ்யான்ன பரமான்ன வகைகளாலும் நாரிகேள நீர்த்தங்களாலும் எலலவுங்கங்கூடிய திவ்ய தாம்பூல தளங்களாலும் திவ்ய சத்ர சாமரங்களாலும் திவ்ய வெண்பட்டாடைகளாலும் கண்ணடி தரிசன முதலியவைகளாலும் பரமேஸ்வரனுக்குத் திருப்தி செய்வித்து நமஸ்காரம் நாட்டியம் செய்தும் திவ்யான்னங்களை நிவேதித்தும் சிவபூஜையைச் செய்து சாம்பவ புத்திரர்களுக்கு அனவிறந்த அன்ன தனதான்ய கோ முதலியவைகளையுமளித்துக்கொண்டிருந்தான். இப்படி அபாரபக்தியுடன் பகல் முழுதும் போஜனமில்லாமல் பூசை செய்து முடித்து இரவில் ஓர் காலமே புசித்துக் கொண்டு நியமத்துடன் வாழ்நாளைக்கழித்து வரும் அச்சாம்பவரைத்தரிசிப்பதற்கு சநகாதி முனிவர்களுடன் நாரதர் வந்து சேர்ந்தனர். அச்சாம்பவரும் தன்னிடம் வரும் மஹா முனிவர்களும் விபூதி ருத்திராக்ஷா பரணங்களால் ஜ்வலிப்பவருமாகிய சநகாதியர்களைத் தூரத்தில் கண்டது மோடி சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அஞ்சலி செய்து அவர்களுக்குச் செய்யவேண்டிய அதிதிபூஜையை முறையே செய்து ரத்ன சிம்ஹாசனத்தில் வீற்றிருக்கச் செய்து விபூதி ருத்ராக்ஷாபரணனுனதான் அம்முனிவர்களை மீண்டு நமஸ்கரித்துச் சிவவைபவத்தைக் கூறவேண்டுமென்று வினவலாயினன். ஓஸ்வாமி! மஹேஸ்வர பூஜையின் கிரமம் யாது அதன் பலன் யாது அதைத் தேவரீர்கள் அடியேனுக் குரைத்தருளவேண்டு மென்று பிரார்த்திக்க நாரதர் பக்தியுடன் சிவபெருமானை ஹ்ருதய கமலத்தில் த்யானித்து நமஸ்கரித்துச் சிவதர்மங் கூறலாயினர். நாரதர்:—ஓ சிவபக்தர்களே! வேதங்களில் சிவதர்மங்கள் கோடிக்கணக்காய்க் கூறப்பட்டுள்ளன. சிவதர்மங்கள் மிக்க சிரமப்பட்டுப் பலன் கொடுப்பனவாயும் சில் அற்ப பலனை யளிப்பனவாயும் சில மகா பயனை யளிப்பனவாயுமுள்ளன. இவைகளெல்லாவற்றிலும் அபாரமாகிய தருமங்களால் ஆயாசத்துடன் பெறக்கூடிய பயனெதுவோ அஃது ஈஸ்வரார்ச்சனையால் சுலபமாகவே பெறக்கூடியதாகு மென்பதில் சிறிது ஐயமில்லை. இதற்கு மிக்க திரவியச்செலவும் சிரமமு மில்லை. சுலபமாகவே கிடைக்கக் கூடியவைகளான கனிகளும் பில்வ தளங்களும் போதுமானவை. பில்வங்களைச் சிவலிங்க சிரசில் சமர்ப்பித்துக் கனிகளை நிவேதிப்பதினு லெப்பயன் கிடைக்குமோ அது கோடிக்கணக்காகிய மகா தர்மங்களாலும் பெறவரிது. லிங்க சிருஷ்டியானது கரு



ணைக்கடலான சூலபாணியாலேயே செய்யப்பட்டதாதலால் அது மகா மகிமைபெற்றது.

பூர்வம் கைலாயத்தில் ஹிரண்யபாஹுவும் சுவர்ண ரத்னாபரணங்களின் காந்தியால் சோதி மயமாய்ச் ஜ்வலிப்போனும் மிக்க சுந்தரமான தேகமுடையோனும் சரத்காலத்துப் பூர்ண சந்திரன் போன்ற வெண்பட்டாடை தரித்தவனும் தனது சடைமுடியில் மின்னற் கொடிபோல் ஜ்வலிக்கும் சந்திர கலையுடையோனும் முக்கண்ணனும் நீலகண்டனும் உமையின் முக நோக்குதலில் ஆனந்தமுடையோனும் பிரமாணங்களுக் கெட்டாதவனும் ஆதியந்த மற்றவனும் சச்சிதானந்த வுருவனும் பரமானந்த மளிப்போனும் பரம சாந்தனும் மங்களங்களுக் கெல்லாம் மங்களனும் பாவனங்களுக் கெல்லாம் பாவனனும் தேவதைகளுக் கெல்லாம் தேவனும் நிருதவானை யுடையோனும் பவனும் பீமனும் ஜராமரண மற்றவனும் மகா ம்ருத்யுஞ்சயனும் மஹா ருத்திரனும் பிநாகமெனும் வில்லுடையோனும் பக்தர்களுக் கானந்தமளிப்போனும் கல்யாண ஸ்வரூபனும் திவ்ய ரூபமுடையோனும் ஸ்மரிப்போர்களுக்குச் சகலாபீஷ்டங்களை யளிப்போனும் புன்னகை கொண்டோனுமாகி விளங்கும் சாக்ஷாத் சாம்பசிவ மூர்த்தியைப்பார்த்து அவரது இடப்பாகத்தில் விளங்குங் கௌரி நமஸ்கரித்து வினவியதாவது:- ஓ ஸ்வாமி! சர்வக்ஞராகிய தேவரீரை யொன்று கேட்கவேண்டியுளது. அதனை அருள்புரிந்து கூறவேண்டும். மனிதர்களுக்கு எதனால் சித்தி கிடைக்கும், பக்தியும் எதனாலுறுதியாகும், அதனைக் கூறல்வேண்டுமென்றுபிரார்த்தித்த அதனைக்கேட்டுப் பரம ஆதரவுடன் சிவன்கூறலாயினர். மனிதர்களுக்குச் சகல இஷ்டங்களையுஞ் சாதித்துக் கொடுப்ப தொன்றுளது. அது யாதெனின் எனது பூசையே. என்னைக் கண்டு பிடித்துப் பூசிப்பதரிது. ஆதலால் எனது சிவலிங்கார்ச்சனையே இரண்டாவதாய் விளங்குகின்றது. அப்படி லிங்க பூசை செய்வதும் மிக்க சுத்தமாகிய விபூதியால் செய்வது நலம். வாழ் நாள் முழுதும் சிவலிங்க பூசை செய்யவேண்டும். "யாவச் ஜீவம்" என்று சுருதி விதித்தது. இனி அக்னி ஹோத்ராதி கருமங்களெல்லாம் இதற்கு நிகரல்ல. ஏனெனின் வாழ் நாள் முழுதும் அக்னி ஹோத்ரம் செய்யவேண்டு மென்று விதிகாணப்பட்டாலும் அங்கு காலை மாலையிலும் என்ற வேறு சுருதி காலத்தை நியமனஞ் செய்கின்றது. ஈண்டு சிவலிங்க பூசையிலோ வெனின் காலத்தை நியமனஞ் செய்யுஞ் சுருதி காணப்படவில்லை. இந்த சிவபூஜை விதிக்கும் வீ

க்யத்திலுள்ள நமல் (பிரத்தியேயம்) விருதிக்கு சங்கோசார்த்த முறைக்குந் தன்மை யில்லை யென்றறிக. மற்று இவ்விருதி கூடிய சொல்லின் பொருள் மாத்திரத்தையே கூற வந்தது. இங்கு ஆதாரம் யாது? எங்கு சிவனைப்பூசிப்பது? அதிகாரி யார்? எனும் சங்கை நிகழ இங்குள்ள வுண்மையை "சிவலிங்கே பில்வபத்ரை: பவித்ரை:ஸ்வார்ஜ் ஜிதைரபி" என்று கூறப்பட்டது. இதன்பொருள் "சிவலிங்கத்தில் சிவனைச் சுத்தமாகியதும் தானே யெடுத்துவந்ததுமாகிய பில்வ பத்திரங்களால்" என்பதாம். தரிச முதலிய கர்மங்களில் சகல காமங்களு முடையவன் என்று காணப்படுவதுபோல் இங்கும் சகல காமங்களையும் என்ற சொல்லுளது. இதனால் பல சாதனமாதலால் சகலா பீஷ்டங்களின் சித்திக்குச் சிவபூசை காரணமா மென்றேற்பட்டது. "சிவார்ச்சனேன லப்யந்தே ஸர்வேகாமா: இதிஸ்ருதே: சிவார்ச்சனையால் சகல காமனைகளும் சித்திக்கின்றன" என்று சுருதியும் கூறுகின்றது. இங்கு சிவார்ச்சனையால் என்ற மூன்றும் வேற்றுமை சிவபூஜை யொன்றே சகலா பீஷ்டங்களையுங் கொடுக்குஞ் சக்தி யுளதென்று விளக்குகின்றது. இதே காரணமு மென்றறிக. "யஜ்ஞ ஹோதி" என்பதாதி சுருதியானது ஆதாரங்குறிக்க வந்ததுபோல ஈண்டும் சிவலிங்கத்தில் என்ற ஆதாரத்தைக் குறிக்கின்றது. மந்தச் சாதனங்களைக்காட்ட வந்த பாவனையே "பில்வபத்ரை:" பில்வ பத்ரங்களால் என்றதாம். இனி தானே எடுத்துவந்த பில்வ பத்ரமென்று கூறியது சம்ஸ்காரத்தைக் கூறியதாம். எப்படி யெனில் பத்னியால் காணப்பட்டதே ஹோமத்துக்குரியது என்று யாகத்தில் கூறியதுபோல் இங்கும் சம்ஸ்காரமாவது யாதெனில் தானே யெடுத்து வந்த என்றதே பில்வ பத்ரங்களின் சம்ஸ்காரமாம். பத்னியால் பார்க்கப்பட்டதை ஹோமஞ்செய்து நடத்தும் யாகமே அதற்குரிய பலனை யடைவிக்கும் ஆற்றலுடையது என்றேற்படுகின்றதுபோல தனது கையால் கொய்து எடுத்து வந்த பில்வ பத்திரங்களால் அருச்சித்துச் செய்யும் சிவபூஜையே சகல காமங்களையுங் கொடுக்கு மாற்றலுடையது என்று ஏற்பட்டதறிக.

ஆதலால் பில்வபத்ரங்களைத் தானே சம்பாதித்து வருதலே சம்ஸ்காரமாகும். இச்சிவபூஜைக்கும் பற்பல அங்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. சமஸம்போல நித்யாங்கமுமுளது. கோதோஹனாதிகள் யாகத்தின் காம்யாங்கமாயிருப்பதுபோல சிவபூஜைக்கும் காம்யாங்கங்களுள. அவைகளும் நித்யாங்கத்தை லோபிக்கவந்தவையல்ல.



யாகத்தின் கோதோஹனாதியில் சமஸம் அங்கமாவதுண்டா? அது போலவே இங்கும் காம்யாங்கங்களுக்கு நித்யாங்கம் அங்கத்வம் பெறுகின்றதில்லை. இச்சிவபூஜைக்கு நித்யாங்கமாயுள்ளது விபூதி த்ரிபுண்டரமணிவதும் ருத்திராக்ஷதாரணமு மென்றறிக. நவநீத (புதியவெண்ணெயால்) அப்யங்கனத்துக்கு பஸ்மதாரணம் நிகராகும். விபூதிதாரணத்துக்குப் பிரதிநிதியானது யாதுமில்லை யாதலால் அது கர்மங்களுக்கு நித்யாங்கமாய்க்கூறப்பட்டது. விபூதி தாரணத்தை விடுத்தானானால் வைதிககர்மாவுக்காவது ஸ்மார்த்தகர்மாவுக்காவது அதிகாரியாக மாட்டான். பஸ்மத்தைத் தரித்தவனே சிவமந்திரம் ஜபிக்கத்தக்கவனன்றி மற்றவன் ஜபிக்கத்தக்கவனல்லன். விபூதி தரித்தவனுக்கே காயத்திரியும் உபதேசிக்கத்தகுந்தது. சகல கர்மங்களுக்கும் முதலாவது அங்கம் விபூதி. அவ்விபூதியைத் தரித்தே சிவமந்திரம் ஜபிக்கத்தக்கதென்று கூறிப்பின்னர் காயத்திரியும் என்றதனால் காயத்திரி சிவமந்த்ரமல்லையோ என்று சந்தேகம் நிகழ்தல் சரியன்று. காயத்திரி சிவமந்த்ரமே. ஆதலாலே அதன் ஜபமும் சிவார்ச்சனையாகின்றது. அப்படியே ருத்திராக்ஷதாரணமுமாம். இங்ஙனங்கூறிய பூர்வாங்கம் உத்தராங்கமென்ற இரண்டங்கங்களும் சிவபூஜையினாலுண்டாகும் பயன்களில் சம்பந்தித்துள்ள ஓர் பலஹா அபூர்வத்தோடுகூடியதாம். ஆதலால் "சர்வேப்ய:ஏவகாமேப்ய:சிவபூஜமித்யபி" சகல காமங்களின் பொருட்டுச் சிவபூஜனம் என்று பிரயோகிக்கப்பட்டது. ஓர் பிரயோகத்தால் பற்பல பயன்கள் கிடைக்குமென்பது அர்த்தவாதமேயாம் என்பதல்ல. பிரயோகங்களை ஆவர்த்திசெய்தால் பலவாகின்றன. ஆதலால் அதன் பயன்களும் பலவாகின்றன. பில்வபத்ரமும் மற்றும் மலர் தனம் முதலியவையும் சிவபூஜாங்கமாகும். சர்வாங்கங்களும் கூடியிருக்கும் பூசை சகல அபிஷ்டங்களைத் தருவதாகும். சுசியாயும் நித்திரை ஆலசியமற்றும் விஸ்வாசத்துடன் கூடியுமிருத்தலும் அங்கமாம். சிவபூஜைக்கு முக்கிய உபகரணம் விபூதியொன்றே. அதற்குப் பின்னரே சகலமாகிய அங்கங்களும் பயன்படுதலாம். பிருகஸ்பதிஸவம் எனும் யாகத்துக்குப் புறம்பேயுள்ள பற்பல அங்கங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டியது போல சிவபூஜையும் வெளிப்பட்டுள்ள (புறம்பேயுள்ள) பற்பல அங்கங்களை அவாவுகின்றது. சிவபூஜையில் சிவலிங்கமானது யாகத்தில் ஆகவனீயம்போன்றது. யாகத்துக்குச் சஷமுதலியவை போல் சிவபூஜைக்குச் சாப்பவனும். சிவலிங்கங்கள் பற்பல வகைப்பட்டுள. ஆயினும் நர்மதை முதலியதிலுள்ள லிங்க பூஜை

உ

ஸிமர்தகாயநம:

## முப்பத்தைந்தாம் அத்தியாயம்.

### அகஸ்தியர் ஸ்ரீசைலநாதனைத்துதித்தது.

நந்திகேஸ்வரர் கூறுகின்றார்:-இவ்வாறு சமகத்தால் பிரதிபாதிக்கப்பட்ட வரங்களை யெல்லாம் கருணைக்கடலாகிய சிவபெருமான் தந்தருளினார். அப்போது அகஸ்தியர் அங்குவந்தனர். அம்முனிபுங்கவர் மகாதேவனைத் தரிசித்துத் துதித்தனர். இதுதான் * வேதபாதஸ்தவம் என்பது.

இத்தோத்திரத்தைக்கேட்டுத் திருப்தியடைந்த பரமேஸ்வரன் ஓ அகஸ்தியரே! நீர் செய்ததோத்திரத்தின் மஹிமையை எவராலும் கூறமுடியாது. இத்துதியானது எவரது கண்டத்தில் புரளுகின்றதோ அவர்களை ஐஸ்வர்யக்கடலாய்ச்செய்வோம். இத்துதியைக் காலையிலும் மத்தியானத்திலும் பிரதோஷகாலத்திலும் எவன் பாராயணஞ்செய்கின்றானோ அவனுடைய சத்துருக்கள் அவனைக்கண்டு நடுங்கியோடுவார்கள். இதைஜபிப்பவர்கள் ஐஸ்வர்யம் கீர்த்தி ஆயுர்விர்த்தி புத்திரபௌத்திரர்கள் தனதான்யமுதலிய சகலபாக்கியங்களுடன் கூடிச்சுகமாய்ப் பலகாலமிருந்து முத்தியடைவர்கள் என்று அவருக்கு வரமளித்துச் சகல கணங்களுடன் அவ்விலிங்கத்திலேயே அந்தர்த்தானமாயினர். அப்படி மகாமகிமையுள்ள லிங்கம் இந்த ஸ்ரீ சைலத்திலுள்ளது. அதற்கு நிகராகிய லிங்கம் மூவுலகிலுமில்லை. அதற்கந்தமுமில்லை. அதனைப் பூசித்தால் அவனுக்குக் கிடைக்காத வரன் மூவுலகிலுமில்லை.

முப்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

உ

மத்தாயநம:

## முப்பத்தாறும் அத்தியாயம்.

### தீர்த்தேசலிங்கமஹிமையுரைத்தது.

சிவபெருமான் கூறுகிறார்:-தீர்த்தேஸ்வரமென்னும் ஓர்லிங்கம் பரமமங்களஸ்வரூபமும் நித்தியமுமாயுளது அந்த லிங்கமகிமை ஓ

* இவைபோன்ற ஸ்துதிகளெல்லாம் அம்சமுடிவிற் சேர்க்கப்படும்.



கௌரி! என்னாலேயே யறியக்கூடியது. அதனை ஸ்மரித்தமாத்திரத்திலும் சகல ஐஸ்வர்கங்கிட்டும். அதன் ஸ்மரணமும் பலகோடி ஜன்மங்களிற் செய்துள்ள புண்ணியவான்களுக்கே கிட்டுவதாகும். அதனை நினைப்பதினால் முத்தியெனும் மங்கை கைப்பற்றுவாள். அவனுக் காபத்து என்னும் சொல்லுக்குமிடமில்லை. இத்தீர்த்தேஸ்வரலிங்கத்தை பில்வமுதலியவைகளாலாராதித்துப் பலர் இணையிலா ஐஸ்வர்யத்தையும் ஸ்வர்க்கத்தையும் பெற்றனர். பூர்வம் சகலமுனீஸ்வரர்களும் ஓர்காலம் சிவத்தியானஞ்செய்ய விருப்பினவர்களாய் விபூதி பூசித் திரிபுண்டரமணிந்து ருத்திராக்ஷமாலை தரித்து லிங்கத்தையர்ச்சிக்க விரும்பி யாத்திரைசெய்துவந்தனர். அப்படிச்செல்லும்போது எண்ணிறந்த சிஷ்யக் கூட்டங்களுடன் வரும் கௌதமரைக்கண்டு அஞ்சலிபந்தஞ்செய்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து விநயத்துடன் கைகட்டி நின்று மோக்ஷதர்மங்களைக் கூறவேண்டுமென்று வினவினார். ஓ பகவானே! சிவபூஜகசீலரே! சகல தத்துவத்தையுமறிந்தவரே! மோக்ஷத்திற்குபாயம் யாது? அதனைத் தேவரீர் யோசித்துக்கூறவேண்டும். சம்சாரசாகரத்தில் மூழ்கி அநேகமனிதர்கள் பலகாலம் சங்கரபூசனையில் விருப்புற்றிருந்தனர். அவர்களைச் சேவித்தாலும் சம்சாரபாசந் தொலையக்கூடியது. அப்படியிருக்கும் சாம்பவர்களான அன்னவர்களுள் ஒருவரும் தத்வத்தை யறிந்திலர். ஓ சுவாமி! தேவரீருக்குச்சமானமாய் மகான்களைக் கண்டிலம். தேவரீரது சரணாரவிந்தத்தைக் கண்டது எந்த புண்ணியத்தாலோ! பிறவியென்னும் பிணிக்குப் பயந்தவர்களான எங்களால் சகல பாபமும் தொலைப்பதாகிய சரணம்தரிசிக்கப்பட்டதனால் சகல கோரிக்கைகளும் நிறைவேறுமென்று நினைக்கின்றோம். ஆதலால் தேவரீர் மோக்ஷோபாயங் கூறவேண்டுமென்று கூறினார். அவ்வாக்யத்தைக் கேட்ட கவுதமர் மகாதேவனை ஹ்ருதயத்தில் நினைத்துக்கொண்டு ஓ முனிவர்களே! சம்சாரமெனும் பாசமானது எதனாலும் தொலையாது. அதனை யறுத்து அக்கட்டினின்றும் விடுவிப்பதற்குச் சிவலிங்கார்ச்சன த்யானமெனும் ஆயுதமொன்று மிக்ககூர்மையாயுளது. அக்கத்தியால் பாசங்களை லகுவாயறுக்கலாம். சம்சாரமெனும் சாகரமானது பார்ப்பதற்குப் பயங்கரமாயுள்ளது. பிரபுவாகிய மகாதேவனைப் பூசித்தால் அதுவற்றி வறண்டு சுலபமாய்த் தாண்டக்கூடியதாகின்றது. எத்தேவன் சகலதேவ சிகாமணியாயுள்ள மகாதேவனோ அவனது நாமத்தை ஸ்மரித்தால் பாவக்குவியல்பறந்துபோகின்றன. ஸ்ரீ மகாதேவநாமங்களை ஸ்மரிக்கவே

ண்டுமென்று எவனது சித்தமுயலுகின்றதோ அவனுக்குப் பாபராசிகளினின்றும் சிறிதும் பயப்படவேண்டுவதில்லை. மஹாதேவார்ச்சனத்தில் லகுளில் புத்தியுதிப்பதில்லை. சகல பாபங்களும் சிவஸ்மரணத்தால் தொலைந்திருக்குமாயின் சிவபூஜையில் விருப்புண்டாகும். சங்கரஸ்மரணமெனும் சூரியனது ஒளிகள் சித்தத்தில் பரவும்போது பாவமெனும் அந்தகாரம் ஓர் கணப்போதில் லயமடையும். ஸ்ரீ மஹாதேவபக்தர்களுக்குச் சம்சாரபந்தத்தினாலுண்டாகும் பயம் ஏது? பவனாகிய ஹரனைத் துதித்தால் பிறவிப்பிணி தொலைகின்றது. பிறவியெனும் மகாந்தகாரமும் அவனது பக்தியெனும் பானுவுக்கெதிரில் இருப்பதுண்டா? மஹாதேவருடைய பிரபாவமானது அறியமுடியாது. அதனையறிந்தால் சம்சாரமெனும் பயமில்லை. மகாதேவனைப் பஸ்மதாரணஞ்செய்து ஸ்மரிப்பானாயின் அவனது பாதத்தைத் தரிசிப்பவனுக்கும் பிறவியெனும் பயமில்லை. மகாதேவார்ச்சனத்தில் பக்தியுதித்தால் காலபயமில்லை. அமிர்ததாரைபோன்ற மகாதேவ நாமங்களை எவன் கேட்கின்றானோ அவனது குலத்துக்கும் பிறவிப்பிணியில்லை. மகாதேவனை ஓர்தடவைத்தியானித்தால் அவன் சிவமந்திரஞ்செல்வான். பாக்கியவான்களே! மகாதேவனைஸ்மரிந்தலென்னு மமுதத்தையும் மஹாதேவ நாமாமுதத்தையும் கர்னபுடங்களாலருந்தி யானந்திக்கின்றனர். மகாதேவத் தியானத்தினால் பரமானந்தசமுர்த்திகள் வளருகின்றன. மகாதேவனை ஒருதடவைத் தியானித்தாலும் புண்ணியகோடிகளின் ராசியானது வந்தடையப் பெறுகின்றான். மஹா சம்சாரசாகரத்திலகப்பட்டவர்களுக்கு ஓர் க்ஷணப்போதில் உத்தாரணஞ்செய்து சந்தோஷிப்பிக்கு முபாயமானது மகாதேவத்தியானமே. மஹாதேவ நாமமெனும் அமுதமானது சம்சாரமெனும் மகாரோகமுடையோர்களை அதனினின்றும் நீங்கிச் சுகிக்கச்செய்வதைக் கருதிச் சிவனால் நிர்மிக்கப்பட்டுளது. இதனினும் உத்தமமாயொன்றுளது. அது தீர்த்தேஸ்வரமெனும் லிங்கத்தைப்பூசிப்பதாம். இந்த லிங்கத்திற்குச்சமானமாய்ப் பூமண்டலத்தில் யாதுமில்லை. அங்குசென்று தீர்த்தேசனைப் பூசிக்கவேண்டும். சோமவாரம் ஆருத்திரா நக்ஷத்திரம் திரயோதசியன்று சிவபூசை செய்தால் மோக்ஷசாதனமாகுமென்று கூறினார். அதனைக்கேட்ட முனிவர் உடனே கௌதமரோடுகூட தீர்த்தேஸ்வரமடைந்து ஸ்நானஞ்செய்து பஸ்மதாரணஞ்செய்து ருத்திராக்ஷமணிந்து பில்வபத்திரங்களையும் நிர்மலமான தீர்த்தத்தையுங்கொண்டு பூசைசெய்தார். பின் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து சிவத்தியான பரர்களாயி



ருந்து பின்னரெழுந்து பில்வபத்திரங்களெடுத்துப்பூசித்துக் கௌதமரைத் தரிசித்து நமஸ்காரஞ்செய்து ஓ சுவாமி! தீர்த்தேஸ்வரமகிமை தங்களால் என்றுமறிந்திருக்கப்பட்டதன்றோ? அதனைக் கூறவேண்டுமென்று பிரார்த்திக்கக் கவுதமரும் மிக்க சந்தோஷமுற்று தீர்த்தேசரை மிக்கபக்தியுடன் நமஸ்கரித்து ஓ முனிவர்களே! இவரது மகிமையானது வேதங்களாலேயே யறியப்பட்டுளது. அதனைச் சிவானுக்ரகத்தினால் ஓர் சிறிது அறிவேன்.

முனிஸ்ரேஷ்டர்களே:- பூர்வம் முனிவர்கள் பலர் சங்கராராதனத்தில் விருப்புற்று இத்தீர்த்தேசரைப் பூசித்துப் பல சுகபோகங்களைப் புசித்து இந்தலிங்கத்தோ டைக்கியமாயினர். இத்தீர்த்தேசலிங்க நிர்மால்யத்தைப் புசித்தாலு முத்திகிட்டும். பூர்வம் ஜயவிஜயரிருவர்களும் க்ஷீரநதிதீரத்தில் கௌரிதீர்த்தேசராக்ஞையால் ரத்னப்ராகாரங் கூடிய கோபுரத்துடன் விளங்கும் திவ்யாலய மமைத்துப் பூசித்துப் பற்பல துதிசெய்தனர். அப்போது பெருமானும் அவர்கள் அந்தகாரத்திலேயே தாங்கள்வசிக்க ஆக்ஞை செய்யவேண்டியதென்று வேண்டியதை அருள் புரிந்தனர். அதனைக்கேட்ட அவ்விருவர்களும் சந்தோஷமடைந்தவர்களாய் அங்கிருந்து சிவபெருமானைப் பூசித்துவந்தனர். அவர்கள் பூசித்த சிவநிர்மால்யத்திலும் சந்தனத்திலும் அருள்கொண்டு விளங்குகின்றனர். அப்படிப்பட்ட தீர்த்தேசனைப் பூசித்தால் அவனைத் தேவர்களும் பூசிக்கின்றனர். ஆதலால் தீர்த்தேசலிங்க நிர்மால்ய பூசையும் மஹாமஹிமைபெற்றுளது. எப்போ தெப்போது அவ்விலிங்கத்தைப் பூசிக்கின்றார்களோ அவர்கள் சகலாபீஷ்டங்களையும் பெற்று மகிழ்கின்றனர். அதனைத் திவ்ய சந்தனமமைந்த நிர்மால்யத்தையெடுத்து எவன் பூசிக்கின்றானோ அவனுக்கு நிர்மலமான ஞானமானது தீர்த்தேசரது பிரபாவத்தாலுதிக்கும். அவனுக்குச் சந்ததியும் விருத்தியடையும். அவனது புத்திரர்களும் பௌத்திரர்களும் பெறுவர். பூர்வம் ஓர் சாம்பவர் அங்குவந்து அச்சந்தனத்தைப் பாவனாலிங்கமாகவமைத்து அதையே தீர்த்தேசராகப்பாவித்துப் பூசித்துவர அவர் செல்வமும் ஞானமும்பெற்றிருப்பதை ஒரு சிவனடியார்பார்த்து அவரில்லஞ்சேர்ந்து அவருடன் சிநேகித்துச் சிவபுராணஸ்ரவணமுஞ்செய்து திரிகாலமும் சிவதரிசனமுஞ்செய்து எண்ணுதற்கரிய இகபரசாதனங்களைப் பெற்றார். சந்தனபாவனாலிங்கத்தைப் பூசிப்பவர் மஹாபக்தியுடன்முப்போதும் பூசித்து வேறொன்றையுஞ் சிந்தியாமல் சிவபாதாரவிந்தத்தில் சென்றமனமுடையோராய்

ஆனந்தபரவசராய்த் தோத்திரஞ்செய்தனர். அவரது *துதி ஓ பவானி! கேட்கத்தக்கது. இவ்வாறு துதி செய்து பரமானந்த முற்றனர். ஓ முனிவர்களே! நீங்களும் துதிசெய்து பாவனலிங்கத்தைப்பூசித்து வாருங்கள். சிலகாலத்துக்குள் சிவபாதம் பெறலாமென்று கூறினர். ஓ பிராமணரே! இவ்வாறு கூறியதைக்கேட்டு அம்முனிவர்களும் பரமானந்த முற்றிருந்தார்.

முப்பத்தாறும் அத்தியாயம்
முற்றிற்று.

---

உ
பிரமத்தாயநம:

## முப்பத்தேழாம் அத்தியாயம்.

### தக்ஷயாகம்.

மீண்டும் நாரதர் கூறுகின்றார். இவ்வாறு கௌதமர் கூறியதைக்கேட்டு முனிவர்கள் பரமானந்தபரவசர்களாயிருந்து மீண்டும் கௌதமரைப் பார்த்து ஓ சுவாமி! தீர்த்தேசரது நிர்மாலிய சந்தனத்தை யாராதிப்பதில் புத்தியானது சபிக்கின்றது. அதனிடம் லிங்கபுத்தி எப்படியுண்டாகும்? அதனைத் தேவரீர் கூறவேண்டுமென்றனர். அதற்குக் கவுதமரும் ஓ ரிஷிகளே! பக்தனுக்கு எங்கு விஸ்வாசமுளதோ எதனிடம் பூஜ்யமென்ற புத்தியுளதோ அஃதே சிறந்த லிங்கமாகும். அதுவே சர்வசித்தியையுங் கொடுப்பதுமாம். சிறந்த சந்தனத்தால் பூசப்பெற்று விளங்கும் லிங்கம் யாதோ அவ்லிங்கமும் அதனிடம் சம்பந்தித்த பில்வபத்திரமும் போகமோக்ஷங்களுக்கேதுவாகும். "அநுலிப்தம் சந்தனேன்யே லிங்கமப்யர்ச்சயேத்" சந்தனாதிகளால் அணியப்பெற்ற லிங்கத்தைப் பூசித்திடுகவென்று சுருதியும் சந்தன சம்பந்தத்தை விலக்க வில்லை. சமர்ப்பிக்கப்பட்ட மலர்களிலேயே மீண்டும் மலர்களைச் சமர்ப்பித்து வழிபடுதல் அம்மலரினும் வேறுமலரைச் சமர்ப்பித்துப் பூசித்தல் பாவலிங்கமென்று கூறப்படுவதாம். அது மிக்க தூய்மை பொருந்தியதா மாகையால் அதனைப் பூசிப்பதால் சகல சித்தியும் பெறலாகும். அதனல் மகா பாக்யங்களுண்டாகும். அத்தகைய பாவலிங்கத்தைத் தரிசிப்பதும் போகமோக்ஷங்களுக் கேதுவாகும். இத்தீர்த்தேசர் பாவலிங்கத்திற் செய்யும் பூசையையே சந்தோஷத்துடன் ஏற்றுக்

* அம்சமுடிவில் அச்சிடப்படும்.



கொள்ளுகின்றனர். தீர்த்தேச லிங்கத்தின் நிர்மாலியமாகிய சந்தனமும் பூசிக்கப்படுமாயின் அது சகல சித்தியைத்தரும். தீர்த்தேசரது அபிமானமானது அந்நிர்மாலியத்திலு முளது. தீர்த்தேசரது சமீபத்திலுள்ள பாபவிநாசன மென்னும் தீர்த்தத்தைத் தரிசிப்பதினலேயே சகல பாபங்களுந்தொலைந்து பற்பல சித்திகளையும் பெறலாம். அதன் கரையில் எவன் மரிக்கின்றனோ அவன் மஹா பாபஞ் செய்தவனாயினும் அவைகள் நீங்கிப்பரிசுத்தனாய்த் தீர்த்தேசரோடு ஐக்கியமாகின்றான். இஃது மஹா பாசுபதர்களால் சேவிக்கப்படும் சிறந்த இடமாதலால் அங்கு சைவர்கள் வசிப்பதற்கதிகார மன்றி ஏனையோருக்கில்லை. அங்கு பாசுபதர்களில் பலர் பூர்வம் முக்தியடைந் திருக்கின்றனர். சமீபத்திலும் சில பெரியோர்கள் பிரதி தினமும் மிக்க நியமானுஷ்டானங்களுடனிருந்து முக்தி பெற்றனரென்றார். இங்ஙனங்கூறிய கவுதமரது வசனத்தைக் கேட்ட முனிவர்கள் அவரை நோக்கி ஓ சுவாமி! தினந்தோறும் அந்தணர்கள் நியமத்துடன் செய்யவேண்டிய கருமங்கள் யாவை? அதனையுரைத்தருளுங்களென்று வேண்ட கவுதமரும் ஓ முனிவர்களே! அருணோதய காலத்திலெழுந்து சிவனைச்சிந்தித்திருந்து தோத்திரங்கள் செய்து பிறகு நகர்ப்புறம்பேபோய்ச் சவுசாதி கருமங்கண்முடித்துப்பாவநாசதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராக்கமணிந்து வேதத்திற் கூறும் பவாதி மந்திரங்களைப் பகர்ந்து மும்முறை ஆசமன முதலியவை செய்துபின்னர்ச் சலத்தைத்தொட்டுச் சிரசு கண்கள் மூக்கு காதுகள் மார்பு முதலியவைகளைத் தொட்டுப் புரோக்ஷித்துக்கொண்டு பஞ்சாக்ஷரத்தை ஜபித்து ஆபோதிஷ்டான முதலிய மந்திரங்களை ஜபித்துச் சுத்தி செய்து தீர்த்தத்தை யெடுத்து சுவாஹா: என்று மந்திர மிறுதியாக ஜபித்து அத்தீர்த்தத்தை யுட்கொண்டு சுத்தி செய்து கொல்லல் வேண்டும். பிறகு காயத்திரி ஜபத்துடன் அர்க்கியப்பிரதானஞ் செய்து அதன் பின்னர் ஜபஞ் செய்து காயத்திரியை ஆவர்த்தி செய்யவேண்டும். இங்கு கூறியவைகளே நித்திய கருமங்களுள் முக்கியமானவை. பின்னர் பில்வபத்ரங்களாலும் நிர்மலமான தீர்த்தங்களாலும் கந்தபுஷ்பாதிகளாலும் தூபங்களாலும் தீர்த்தேசனை யர்ச்சிக்கவேண்டும். அவ்வாறு பரமபக்தியுடன் பூசித்துப் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து சங்கரனைத் தியானித்துக்கொண்டே பஞ்சாக்ஷரத்தை ஜபிக்கவேண்டும். பின்னர் ஹோமவைஸ்வதேவம் செய்யவேண்டும். அவ்வைஸ்வதேவமெனும் கர்மத்தில் சுவாஹா:என்பதை யிறுதியிற் சேர்த்துப் பவாதி மந்திரங்களைக்

கூறவேண்டும். பவாதிகளாவன சகல வேதங்களாலும் போற்றப்படும் எட்டு நாமங்களாம். அம்மந்திரங்களை யுச்சரித்துப் பலிதானத்தை அக்னியிற் கொடுத்துப் பின்னர் அவ்வக்னியில் "பிதுர்ப்யோ அதிஸ்வதா அஸ்து" என்று கூறி ஆகுதி செய்யவேண்டும். ஓ முனிவர்களே! ஆஸ்திகர்கள் தினந்தோறும் காலையில் செய்யவேண்டிய கருமங்கள் இவையே. பிறகு மத்யான்னத்தில் ஸ்நானஞ் செய்து முற்கூறியபடி சிவபூசை செய்யவேண்டும். அப்படியே மாலைப்பொழுதும் பூசைசெய்யவேண்டும். காலை முதல் மாலை யீறாகத் தினந்தோறும் முப்பொழுதும் சிறிதும் நியமம் வழுவாது சிவபூஜை செய்ய வேண்டும். அதற்குச் சாதனங்களாவன பில்வபத்ரம், தூய்மையுள்ள தீர்த்தம், கனி, மலர், அன்ன முதலியவைகளாம். இப்படிப்பட்ட சாதனங்களைக்கொண்டு பெரியோர்கள் சிவபூஜை செய்வதினாலேயே காலத்தைக் கழிக்கின்றனர். நித்ய சூதகமுடையவன் தவிர மற்றவர்களெல்லோரும் சிவபூசையி லதிகாரிகளே என்றார். அதனைக்கேட்ட முனிவர்கள் ஓ சுவாமி! நித்ய சூதகமுடையோரென்று கூறினீர்களே, அவர்கள் யாவரென்பதை யறியக்கூறவேண்டுமென்று கேட்க அவர் மீண்டுங்கூறலாயினர். ஓமுனிவர்களே! திரிபுண்டர தாரணஞ்செய்யாமல் சிரௌத கர்மங்களைச் செய்பவரே நித்ய சூதகமுடையோராவர். அவர்கள் மகா துராசாரர்கள். நித்ய சூதகரது இல்லத்திற் சென்று தீர்த்த மருந்த விரும்புவோன் எவனோ அவனும் அவர்களுக்குச் சமானமான பாபியாவன். சுருதிகூறிய கருமத்தில் ஆசூசமென்பது கவனிக்கவேண்டியதன்று. சூதக காலத்திலும் சுருதி கூறிய கர்மாவைச் செய்யவேண்டியவனாதலால் அக்காலத்தில் ஸ்நானஞ் செய்து விட்டு அக்கர்மத்தைச் செய்வானாயின் அவன் மிக்க பாவனனாகின்றானாதலால் பயனுடையதேயாம். சிவார்ச்சனையானது சுருதி கூறிய கர்மமாதலால் ஓர் காலத்திலும் வழுவக்கூடாது. "யாவச்ஜீவம்" என்னும் எப்பொழுதும் பூசிக்கவேண்டுமென்னும் சுருதி வசனமானது சூதகத்திலும் வலிமையுடைய வசனமாகும். ஆதலால் இதற்குச் சூதகமென்று விலக்குதல் கூடாது. சுருதிகூறிய கருமங்களில் சிவார்ச்சனைக்கு நிகராய் கருமம் யாதுமில்லை. அக்னி ஹோத்ரத்தையும் தரிசபூர்ண மாசத்தையும் சிவார்ச்சனையையும் சூதக காலமென்று அநுட்டிக்காது விடுவோன் நரகத்தையடைவான். பிராணயத்து முதலிய சக்தி யற்ற காலத்தில் புத்திரன் முதலியவர்களைக் கொண்டாவது சிவபூசையை நிறைவேற்ற வேண்டும். இவ்வளவு மகாமகிமை பொருந்திய சிவபூசையில் கலி



யுகத்தில் பாவிகளுக்கே புத்தி யுதிப்பதில்லை. ஓ முனிவர்களே! கலியில் அந்தணருக்குச் சிவபூசை செய்வதில் விருப்பம் வராமைக்குக் காரணம் பூர்வம் சாம்பவர்களாகிய பெரியோர்களால் சபிக்கப்பட்டிருத்தலேயாம். இங்ஙனங் கூறியதைக் கேட்டு முனிவோர் ஓ சுவாமி! சாபங் காரணமெனக் கூறுகின்றீர்களே எவரை யார் எதற்காகச் சபித்தனர்? எங்களுக்கதனை யுரைத்தருளல் வேண்டுமெனக் கேட்கக் கௌதமர் ஓ முனிவர்களே! பூர்வம் தக்ஷனென்னும் பிரஜாபதி ஓர் வேள்வி செய்ய ஆரம்பிக்க அவ்வேள்விக்குச் சனகாதி சகல முனிவர்களும் தேவசித்த கந்தர்வ சாரணர்களும் கபிலர் முதலிய மகா முனிவர்களும் வந்து சேர்ந்தனர். தக்ஷனும் மிக்க சந்தோஷமெய்தித் தீக்ஷை செய்து கொண்டனன். அஃதங்ஙனமிருக்க அத்தருணம் கைலையில் விளங்கும் சகல ஜகதீஸ்வரனும் சகல சராசரங்களாலும் மீறாத ஆணையுடையோனுமாகிய சிவனை நோக்கிப் பார்வதியம்மையார், ஓ பகவனே! என் தந்தையாகிய தக்ஷன் யாகஞ் செய்ய வெண்ணி சகலரையும் வரவழைத்துத் தீக்ஷை செய்துகொண்டனன். அந்த யாகத்தைப் பார்க்க விருப்ப மிருக்கின்றது. ஆதலால் அதனைப்பார்க்க வுத்தரவளியுங்களென்று பிரார்த்திக்க மஹேஸ்வரர் ஓ பார்வதி! தக்ஷன் நிர்மூலமாய் நசிக்க யாகமாரம்பித்திருக்கிறான். அதனைப்பார்ப்பதிலும் நீ விருப்பங்கொள்வது தகுதியோ? ஆதலால் அவ்விருப்பம் வேண்டாம், விட்டுவிடு. விதிப்படிச் செய்யாமல் முறைவழுவி யாகஞ்செய்வோன் அடையும் பயன் நாசமேயன்றோ? அவனால் சேகரிக்கப்பட்டு ஜ்வலிக்கும் சபைக்கூட்டமுழுதும் இப்போது நாசமாகும். இது ஓர் கல்பாந்த காலமாகும். துரான்மாக்களுக்கு இப்பொழுது நாசம் வருங்காலம். நாராயணாதி தேவர்கள் நசிக்குங்காலம். அன்றியும் என்னிடம் த்வேஷமுண்டாயிருக்கும் துரான்மாவாகிய தக்ஷனது நாசத்தைப்பார்க்க விரும்பவேண்டாம். ஓ கௌரி! நீ இப்பொழுது அங்கு செல்வாயானால் உன்னால் தக்ஷநாசங்காணப்படுமேயன்றி யாகங்காணப்படாது. அவனையும் ஓர் பொருட்டாவெண்ணி இவ்வாறு விரும்புவது தகுதியன்று. இவனைப்போல் தீக்ஷிதர்கள் உலகில் எத்தனை பேர்களில்லை? இதனையும் பார்க்க உனக்கேன் விருப்பம் வந்தது? அவனது நாசத்தைக்காண விரும்புவாயானால் உன்னைப்போன்றவளாகிய ஓர் மங்கையைச் சிருஷ்டித்துச் செல்லவிடு. நீ போவது தகுதியல்லவென்று கூறியருளினார். அதனைக்கேட்டுக் கௌரி தன்னினும் சிறிதும் பேதங்காணப்படாது தானே என்று நினைக்கும் படியான

ஓர் அழகிய மங்கையைச் சிருட்டித்துவிட்டனள். கௌரி அம்மங்கையை நோக்கி ஓ பெண்ணே! நீ தக்ஷன் யாகஞ் செய்யுமிடஞ்சென்று அங்குள்ள புதுமையைப் பார்த்து வாவென்றேவினள். உடனே அப்பெண்ணும் எண்ணிறந்த பூதகணங்களால் குடைபிடிக்கவும் கோஷிக்கவும் கோலாகலத்துடன் அற்புதமாகிய ஓர் விமானமேறிப் புறப்படவும் அவ்வேள்விச் சாலையில் பற்பல வுற்பாதங்கள் நேரிட்டன. ஓர் பக்கம் நெருப்பு மழை பொழிவதையும் மற்றோர் பக்கத்தில் சர்ப்ப மழை பொழிவதையும் நரிகள் ஊளையிடுவதையும் பருந்துகள் வட்டமிடுவதையும் ரத்த மழை பொழிவதையும் முள் மாரி பொழிவதையுங் கிருமிகளுடன் கூடிய அமேத்ய மாரி பொழிவதையும் மூத்திர மாரி பொழிவதையும் அங்குள்ளவர்கள் கண்ணுற்றுப் பயங்கொண்டு நடுங்கி அந்தோ யாமென்ன செய்வோம்! மிக்க கொடிய உற்பாதங்களுண்டாகின்றனவே! இனியாம் செய்யக்கூடியது யாதுளது என்று பதறினர். அப்படி உற்பாதங்களால் பயங்கரமான யாகசாலையைக் கௌரியால் சிருஷ்டிக்கப்பட்ட பவானி சென்று அடைந்தனள். அவளைக்கண்டதும் அங்குள்ள தேவர்களெல்லோரும் பவானியென நினைத்து எழுந்து சடேலென வோடிவந்து அவளை நமஸ்கரித்துத் தக்ஷனிடஞ் சென்று பவானி வந்திருக்கின்றாள், அவளைப் பூசிக்கவேண்டுமென்று கூற தக்ஷன் லச்சையால் தலைகுனிந்து கொண்டவனாய் இவளோன் வந்தனளென்று சிந்தித்துக் கொண்டிருந்தனனே யன்றி எதிர் சென்றழைத்தல் முதலிய மரியாதை செய்யவில்லை. அதனைக்கண்ட முநிவர்கள் அந்தோ! தேவர்கள் தெரிவித்துங்கொண்டும் தக்ஷன் யாது காரணத்தால் மரியாதை செய்திலன்? நாம் சும்மாயிருப்போமானால் இப்போதே நமக்கு பெரும்விபத்து நேரிடுமென்றெண்ணி அவளைச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அஞ்சலி செய்துகொண்டு ஓஹோ ஆச்சரியம்! சர்வ ஜகத் கல்யாணி இவளே யன்றோ? இவளே பாவித்தியாஸ்வரூபிணி! பரமானந்தமளிப்பவள். சௌபாக்கியஜனனி இவள். சகல சௌபாக்கியங்களையு மளிப்பா ளிவளன்றோ? எவளது பிரசாதத்தால் பலகோடிகாலம் ஜீவிக்கின்றனமோ அப்படிப்பட்ட ஜகதீஸ்வரியைத் தரிசிக்கின்றனம். நாராயணாதிகளாகிய தேவர்களெல்லோரும் எவளது பாதாரவிந்த தூளிகளால் சிருஷ்டிக்கப்பட்டுளரோ அப்படிப்பட்ட சரணாகத வத்ஸலையைத் தரிசிக்கின்றனம். கௌரியே! நமஸ்காரம். மஹாகௌரி! உன்னை வணங்குகின்றோம். உற்பாதங்களால் நடுக்குற்று உனது பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்



மாய் வீழ்ந்து நமஸ்கரிப்பவர்களுமாகிய எங்களைச் சாப்பாற்றுவாயாக. எவளது கிருபையாகிய கடலின் ஓர் சிறுதுளியும் சகலபாபங்களையும் சகல துக்கங்களையுந் தொலைப்பதோ அப்படிப்பட்ட துர்க்கையாகிய வுன்னை நமஸ்கரிக்கின்றனம். ஓ ஜகதீஸ்வரி! கமலானனே! பிரேமே! உனக்கு நமஸ்காரம். துக்கக்கடலினின்றுங் கரையேற்றும் எங்கள்தாயே! உன்னை வணங்குவாம்.

" ஸ்ரீரத்னதந்திகே கௌரீ நமஸ்துப்யம் நமோநம:
மஹாமாயே மஹாதுர்க்கே மதுநாசனகாரணே
நமஸ்துப்யம் நமஸ்துப்யம் பயம் ஸம்ஹார ஸம்ஹர
கைடபப்ராணஹரணே ப்ரவீணே சிவவல்லபே
நமஸ்துப்யம் நமஸ்துப்யம் பீடாம் சம்ஹர சம்ஹர
சாகம்பரி ஜகத்வந்த்யே சசாங்கலலிதாலிகே
நமஸ்துப்யம் நமஸ்துப்யம் சங்காதங்கானி சம்ஹர
உன்மத்தமஹிஷாராதி சர்வ ஸம்ஹார காரிணி
நமஸ்துப்யம் நமஸ்துப்யம் ஆபர்ணர்த்தி ஹரோத்யமே.
ஸேதுபூபாலஸம்ஹார ப்ரவீணேச்சந்தலாம்பிகே
நமஸ்துப்யம் மஹாதேவி சர்வரோக விநாசினி
ப்ரமராம்ப நமஸ்துப்யம் சம்பாரி விநாசினி
நமஸ்துப்யம் சிவேசாங்கே த்வை பக்திம் ப்ரயச்சன:
நமஸ்தே ஜகதாதாரே பவபார விநாசினி
நமஸ்துப்யம் நமஸ்துப்யம் பரமானந்த ரூபிணி.

என்று இவ்வாறு துதிக்கக்கேட்டு அம் முனிவர்களைத் தக்ஷன் பார்த்து மிக்ககோபங்கொண்டு ஓ முனிவர்களே! துதிபோதும். இனி இத்துதிவேண்டாம். இதனால் உற்பாதங்களின் பயன்தொலையுமா? இனி இம்மட்டோடு நிறுத்தி உற்பாதங்களின் பயனை வாவொட்டாமல் தடுப்பதற்குரிய வழியைத்தேடுங்கள் என்றான். அதனைக்கேட்டதும் ருஷிகள் ஓ தக்ஷனே! சற்றுகூறுகின்றோம், கேட்பாயாக. தீக்ஷை பெறுவோர்களுக்கெல்லாம் பரகதியாயுள்ளவரும் சகல ஜகதீசனுமாகிய விரூபாக்ஷனைத்துதிக்காமல் செய்யுந் தருமமொன்றுளதோ? பக்தர்கள் வேண்டும்பொருளைக் கொடுப்போராகிய பரமசிவனாகிய மஹாதேவனை யாராதிக்காது தீக்ஷை செய்துகொண்டனையாதலால் உனக்கிவ் வுற்பாத பரம்பரைக ளுண்டாயின. மகாதேவனைப் பூசிக்காமல் யாதானுமொரு கர்மஞ் செய்வோனெவனோ அவனது குலத்துக்கும் அவனுக்கும் உடனே நாசம் வருமென்பதற்குச் சிறிது மையமில்லை. வேள்வியின் பயனை யளிக்குந்தாதா சிவனொரு

வனே! உலகில் அவனைப் பூசிக்காமல் யாகஞ்செய்து சுகம்பெற்றவன் யாவன்? துர்ப்பகர்களுக்கே மஹாதேவபூஜையில் மதியுதிப்பதில்லை. உலகில் மகத்தாகிய கர்மங்களைச்செய்தும் அவலமாகியல்லற்படுகின்றவர் மஹாதேவனைப் பூசிக்காதவர்களே யாம். கௌரிரமணனாகிய ஈசனைப் பூசிப்பவர் கிடைக்கரியபலன்களை யெல்லாம் பெற்றுமகிழ்கின்றனர். எவ்வெக்கருமங்களுக்கு எவ்வெப்பயனுள்ளவோ அவ்வப்பயன்களெல்லாம் சங்கரபூஜை யொன்றினாலேயே சுலபமாய்ப்பெறலாம். சங்கரார்ச்சனமன்றி நற்பயனைப் பெறவிரும்புவோன் மழையின்றித் தான்யத்தையடைய விரும்புவோனுக்கு நிகராவன். சிவங்கரனாகிய சிவனை ஆராதிக்காமல் சிவத்தைப்பெற விரும்புவோன் அறிவிலியாகிய வன்னைத்தவிர யாவரும் இப்பிரமாண்ட மண்டலத்திலில்லை. ஓ தக்ஷனே! மங்களாகாந்தனும் கிருதாந்தகனுக்கு அந்தகனுமாகிய சிவனைப்பூசியாது சுகம்பெற்றிருப்பவன் யாவன்? அவர்களில் ஒருவனையாவது கூறுவாயாக. எவன் சர்வமங்களையின் காந்தனும் சாந்தனும் தீரனும் ஆராதிக்கப்படுவோர்களாலும் ஆராதிக்கப்படுவோனுமாகிய உமாகாந்தனைப் பூசித்து மஹிமைபெறாதவன்? பற்பலகோடி ஜன்மங்களிற் செய்த புண்ணியப்பரிபாகமன்றோ அவனிடம் பக்தியுதிப்பது? அது மிக்கதுர்லபமே. அது வாக்கு மனங்களுக்கெட்டாத மஹிமையுளது. அவனுக்கே சம்சாரமெனும் மகாசமுத்திரத்தினின்றுங் கரையேறுதல் சுலபமாகும். சங்கரனைப்பூசிக்காமல் இதரர்களைப் பூசிப்பதனால் சிறிதும் நற்பயன் பெறுதற் கில்லையென்பது நிச்சயம். ஈஶ்வரனது பிரஸாதத்தினால் சத்கர்மங்களைச் செய்வதற்குரிய சக்தியுதிப்பதாம். அவ்விறைவனது அருளிலாவிடில் ஒன்றிற்குஞ் சக்தியில்லாமற்போய்விடும். ஓ தக்ஷனே! நீ சிவார்ச்சனம் செய்யாமையால் சகல சக்தியும் குன்றினவனாகிறாய். மகாவிபத்துகளைத் தொலைப்பவன் மஹாதேவனன்றி யாவருளர்? அடா! அவ்விறைவனைப் பூசியாது அகங்காரங்கொண்டு மதித்திருக்கின்றனை யாதலால் உனக்கு இப்பொழுது பெரும் விபத்துவந்துவிட்டது. இனி நீ நன்மையடைவதெங்ஙனம்? அடா! தாகங்கொண்டவன் கானல்நீரால் தாகவிடாய் தீர்த்துக்கொள்வதுண்டா? சர்வசராசரங்களுக்கும் ஈசனாகிய மகாதேவன் விஷயத்திலும் அகங்காரங்கொண்டு பிறகு ஜீவிப்பதை விரும்புவதுண்டா? அப்படிவிரும்புவோனை நெருப்பில் வீழ்ந்தவனென்றே யெண்ணுகின்றேம். பூர்வம் மகாதேவனிடம் துராத்மாக்களாகிய சிலர் கர்வித்து அவரை அநாதரவுசெய்து மீளாத கும்பிபாகமுதலிய நரகில் வீழ்ந்திருக்கின்



றனர். எவனிடம் சூர்ய சந்திர அக்னி வாயு முதலியவர் நடுங்கிப் பயந்து தத்தம் தொழிலைச் சிறிதும் வழுவாது நடத்திக்கொண்டிருக்கின்றனர்களோ அவனைத் துவேஷித்து மீளுவதுமுண்டா? சம்சாரத்தில் பயமடைந்தவர்கள் அவ்விறைவனைப் பஜிப்பார்களாயின் துக்கம் நீங்கிச் சுகிக்கின்றனர். எவனுக்குச் சங்கரனிடம் ஓர் க்ஷணப்பொழுதாவது அரைக்கணப்பொழுதாவது பக்தியுளதோ அவனது ஜீவனமே தன்யமாகும். கிரிஜாகாந்தர் அந்தகனுக்கும் அந்தகனாதலால் அவரைப்பூசிப்போர்க்கு அந்தகபயமில்லை. அடா தக்ஷனே! இவ்வளவு கூறியும் உனக்கு இப்பொழுதாவது பக்தி சிறிதுமுதிக்கவில்லையே! இதனாலேயே உனக்குப் பெரிதாகிய துர்ப்பாக்கியம் வந்திருக்கின்றது. துர்ப்பாக்கியமுடையோர்களும் கெட்ட காரியத்தைச் செய்வோர்களுமாகிய மனிதர்கள் கலியில் எண்ணிறந்தவர்களிருப்பார்கள். அந்தோ! அவர்கள் பிரேதம்போன்றவர்களேயாம். எவரது அந்தக்கரணமானது ஓர் க்ஷணம் விஶ்வேஶ்வரரது பாதாரவிந்தத்தில் பக்தியுடனிலைபெற்றதாகின்றதோ அவரது ஜன்மமே தன்யமாகின்றது. அஃதேபயனுடைத்து. அப்படியல்லாதவர்களது ஜன்மமானது அவலம்! அவலம்! அவலம்! என்று எண்ணிறந்த சுருதிகள் எப்போதும் முறையிடுகின்றன.

முப்பத்தேழாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

உ

உன்மத்தாயநம:

## முப்பத்தெட்டாம் அத்தியாயம்.

### தக்ஷயாகம்.

நாரதர்:-ஓ ரிஷிகளே! இங்ஙனங்கூறிய முனிவரது வார்த்தையைக்கேட்டுத் தக்ஷன் மிக்க கோபங்கொண்டவனாய் நாசமடைதற்கேதுவாகிய பலவாக்கியங்களைக் கூறலாயினான். தக்ஷன்:-ஓ ரிஷிகளே! யான் யாரென்று நினைத்திருக்கிறீர்கள்? எவனோ ஒருவனைப் பார்த்துக் கூறுவதைப்போல் நினைத்து என்னிடங்கூறுகின்றீர்களா! அடா ரிஷிகளே! உங்களுக்கேன் இப்படி அறிவு கலங்கியது? எனக்கும் பூஜிக்கவேண்டியதாய் ஒருவனுண்டா! சகல லோகவியாபாரங்களும் என்னாலேயே நடந்துவருகின்றன. எனக்குக்கூட முக்குல

மேந்திச் சர்ப்பயணிந்துள்ள ருத்திரன் பூஜ்யனென்று இவ்வார்த்தையைக் கூறும்போது முனிவர்கள் செவிகொள்ளச் சிறிதும் மனங்கொள்ளாதவர்களாய் மிக்க கோபங்கொண்டு தக்ஷனை நோக்கி ஓ தக்ஷா! உனது பிறவியைச்சுடுக! சுடுக! சுடுக! சர்வலோகத்துக்குஞ் சுகமளிப்பவராகிய சங்கரரிடத்தில் அபூஜ்யர் என்று மயங்கிப் பிதற்றினையே. அடா! மஹாதேவரிடம் பூஜ்யரல்லவென்று புத்திகொள்ளும் மஹாசண்டாளன் பலகோடிஜன்மம் சண்டாள குலத்திலேயே பிறப்பான். மஹாதேவரை அபூஜ்யரென்று அறியாத தன்மையாலுங்கூடக்கூறுவதும் மகாபாதகமேயாம். அடா! மகாதேவனை அபூஜ்யனென்று கூறும் நாவைச் சமேலெனத்துண்டித்து அவனது முகமுழுதும் மலத்தை நிறைப்பிக்கவேண்டும். எந்த நாவானது நிந்தித்ததோ அந்நாவை மூத்திரதாரையில் புரளச்செய்யவேண்டும். சர்வ சராசரங்கட்கும் பூஜ்யராயிருக்கிற சந்திரசேகரனிடத்தில் அபூஜ்பத்வ புத்திகொண்டவனது குலத்தையும் அவனைப்பெற்ற தாயையும் சுடுக! சுடுக! சுடுக! இதுகாறும் அப்படிப்பட்ட சண்டாளாதமனாகிய சிவநிந்தகனைப் பார்த்ததில்லை. இன்று அப்படிப்பட்டவனாகிய வுன்னொருவனைப்பார்த்தோம். சண்டாளாதமனாகிய வுன்னைப் பார்த்த எங்களது கண்களையுஞ் சுடவேண்டும்! மஹா நீசனாகிய நீ கூறும் சிவநிந்தாவசனங்களைக்கேட்கும்படி நாங்கள் என்னபாபஞ்செய்தனமோ! இன்று காலையில் எந்தப்பாவிமுகம் விழித்தனமோ! சிவநிந்தையென்னும் விஷச்சுவாலைகளால் அவர்களது வம்சம் தகிக்கப்பட்டுவிடும். இப்போது நீ சிவநிந்தை செய்யவும் அதனை உனது பிரியத்தின்பொருட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிற தேவர்கள் யாரோ அவ்வித்தேவர்களெல்லாம் இப்பொழுதே நாசமடைவார்கள். அடா தக்ஷனே! துராத்மாவே! மகாபாபமாகிய சங்கரநிந்தையில் உன் புத்தி ஏன் சென்றது? அடா! உனது பிறவியைச்சுடுக! நாய்க்காவது கழுதைக்காவது பிறந்தவனெவனோ அவனுக்கே சிவநிந்தையில் புத்தி பிரவர்த்திக்கும். அடா! அவனது தாயினது யோனி கழுதையின் ரேதஸால் நிறைந்திருக்குமென்பதுண்மை. அல்லது மத்யபானஞ்செய்த சண்டாளனது ரேதஸால் ஜனித்தவனே சிவநிந்தனை செய்வான். அடா! பூஜ்யருக்கெல்லாம் பூஜ்யனும் பராத்பரருமாகிய சிவனை அபூஜ்யனென்று பிதற்றினையே. அடா மூடா! விஸ்வநாதனாகிய ஜகதீஸ்வரனைப் பூஜ்யனல்லவெனில் உலகில் வேறொருவன் பூஜ்யனாவனோ? அடா! அவனை அபூஜ்யனென நினைத்தது மிக்க கொடும்பாவமன்றோ? கொடும்பா



வங்களுக்குப் பயனுடனே வந்துவிடும். உனக்குவிநாசகாலமாதலால் இப்படி விபரீதபுத்தி வந்தது. சிவனை நிந்தித்துக்கொண்டிருக்கு முன்னைக்காப்பாற்றயாவன் வருவான்? அடா! விரூபாக்ஷரது நெற்றிக்கண்ணின் சுடர்ச்சுவாலையானது உன்றனைப் பற்றி யெரிக்கும்போது அதனின்றும் உன்னைக்காப்பாற்றிச்சுகமளிப்பவன் யாவனிருக்கின்றான்? அடே நீகர்வித்துச் சிவனை நிந்திப்பதை யருகிலிருந்து சிறிதும் அச்சமின்றிக் கேட்டுக்கொண்டு வாய் பேசாதிருந்தும் இத்தேவர்களுக்கெல்லாம் இப்போதே நாசகாலம் வந்துவிட்டது. அதை நீ சீக்கிரம் காண்பாய். சிவனை நிந்தித்துத் துவேஷித்து நீ யாரால் சுகம்பெறலாம்? நாராயணரால் சுகம்பெறக்கூடுமா? அன்றிப் பிரமனால் முடியுமா? அடா! நீ சிவநிந்தனைசெய்ய அதைக் கேட்டுக்கொண்டிருக்கும் இந்தப் பிரமவிஷ்ணுக்களும் உன் கண்ணெதிரிலேயே நாசமுறுவதைக்காண்பாய். வேதங்கள் பிரமாணமாயின் சிவநிந்தனை செய்வோனுக்குப் புத்திரமித்திர களத்திராதிகளுடன் மரணமும் கோரநரகமும் கிடைக்குமென்பதில் சிறிதுமையமில்லை. சிவநிந்தையென்பது விஷத்தினும் பெரிதே. விஷம் புசித்தவனைமாத்திரங்கொல்லும். மஹேச நிந்தாவிஷமானது நிந்தித்தவனையும் அவனது குலத்தையும் கேட்டிருந்தவர்களையுங்கொல்லும். மகேசநிந்தையெனும் மஹாகாளகூட கடாகத்தில் வீழ்ந்தவருக்கு மறுபடியும் ஜீவனமுண்டோ? மகேசநிந்தனையெனும் விஷத்தின் லேசம் சம்பந்தித்தாலும் அது நிந்தித்தவனை ஸ்மசானஞ்சென்ற சவம்போல் செய்துவிடும். அவன் தேவனாயினும் கின்னரனாயினும் மற்றெவனாயினும் சிவநிந்தனை செய்வானாயின் அவனழிதல் திண்ணம். எவனைச் சகல வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுகின்றவனென்றும் சகல தேவதேவசர்களாலும் பூசிக்கப்படும் சரணாரவிந்தமுடையோனென்றும் பகர்கின்றனரோ அப்படிப்பட்ட ஸ்ரீ நீலகண்டமூர்த்தியை நிந்தித்தால் துக்க மகாசமுத்திரத்தில் வீழ்ந்து அல்லற்படுவது நிச்சயமே. நீ இப்படிப்பட்ட கொடிய நிந்தனையைச் செய்தவனாகையால் உனக்கு இப்பொழுதே விநாசகாலம் வந்துவிட்டது. நரகமும் சந்நத்தமாயிருக்கிறதென்றறி. அடே! பதரே! இங்கிருந்து உனது சிவநிந்தாவசனத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும் தேவர்களுள் உன்னைரக்ஷிப்பவன் யாவனடா? உனது சங்கத்தால் இத்தேவர்களுக்கும் நாசகாலம் வந்துவிட்டது. அடா! எவரெவர் மஹாதேவனை நிந்திப்பவர்களோ அவர்களே கற்பகோடி காலம் கொடிய நரகிலகப்பட்டுக் கதறுகின்றனர். அந்த முனிவர்க

ளாயினும் ருஷிகளாயினும் சிவநிந்தனை செய்பவனோடு சங்கஞ்செய்கின்றனரோ அவரது புத்திரமித்திரர்களும் அந்நிந்தகனோடுகூட யமாக்னிச்சுவாலையில் வீழ்வார். யமனும் எப்போதும் சைவநிந்தை செய்வோர்களுக்கெனக் கொடியநரகங்களைச் சித்தஞ்செய்து வைத்துக்கொண்டிருக்கிறான். அடா! இனியாவது மஹேசநிந்தனையை விடுத்து அறியாது செய்தேனென்று அவனைச் சரணடை. அப்படியில்லாவிடில் இதோ உனக்கு நாசகாலம் வந்துவிடுமென்றார். இவ்வாறு அகஸ்தியர் முதலிய முனிவர்கள் கூறியதைக்கேட்டுத் தேவர்களெல்லோரும் நடுக்குற்று அந்தோ! இதென்ன இவ்வாறு விளைந்தது என்று திகைத்திருந்தனர். யாகசாலை வந்தடைந்த கிரிஜையும் அச்சிவநிந்தாவசனத்தைக்கேட்டு மிக்க வியாகுலமாயிருந்தனள். சிவநிந்தாவசனத்தைக்கேட்டு யாவர் மனந்தான் பதைக்காது? அப்படிச் சிவநிந்தனைகேட்டும் மனம் பதையாதிருந்தவன் கோரமாகிய நரகங்களில் வீழ்வான். சிவநிந்தை செய்பவனோடு ஓர் க்ஷணகாலம் சங்கஞ்செய்பவனெவனோ அவன் விபசாரிபுத்திரன். அவன் நரகில் வீழ்வான்.

முன்னொருகாலத்தில் நரகலோகங்கள் முழுதுஞ் சூனியமாயிருக்குங்காலத்தில் யமதூதர்களெல்லாம் கவலையடைந்து ஓ சுவாமி நரகமெலாம் பாழடைந்திருக்கின்றன. ஆதலால் எங்கட்குச் சிறிதும் வேலையில்லை. ஜகதீஸ்வரனைத் தியானித்துக்கொண்டு மனிதர்களிருக்கின்றமையால் பாபசம்பந்தஞ் சிறிதுமில்லை. நரர்களெல்லோரும் சிவலிங்கார்ச்சனபரர்களும் சிவநாமங்களை ஜபிப்போர்களும் சிவாசாரம் பூண்டவர்களும் பஸ்மருத்ராக்ஷந்தரித்தவர்களுமாயிருக்கின்றனர். பில்வமூலங்களில் சிவலிங்கங்களைத் தாபித்துப் பாலர்களும் பிரதக்ஷிண நமஸ்காராதிகளுடன் பூசிக்கின்றனர். சுத்ததீர்த்தம் அறுகு நறுமணமலர் பில்வபத்திரமுதலியவைகளால் மிக்க பக்தியுடன் பூசிக்கின்றனர். பாலர்களும் சிவலிங்கார்ச்சனையின்றித் தீர்த்தமும் அருந்துவதில்லையானால் ஓதனத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? நித்திரையும் செய்கிறதில்லை. பாலர்களெல்லோரும் சிவலிங்கார்ச்சனையையே விளையாட்டாக வைத்துக்கொண்டனர். பாலர்களெல்லோரும் தமது வீட்டில் அங்கணங்களிலும் எப்போதும் சிவலிங்கங்களைத் தாபிப்பதும் அழகிய பில்வபத்திரங்களால் அர்ச்சிப்பதும் காய்கனிவகைகளுடன் அன்னத்தை நிவேதித்துப் பிறகு சந்தோஷமாய் அதனைப் புசிப்பதுமாகிய இவைகளையே விளையாட்டாகக்கொண்டனர். பில்வமூலங்கள் எல்லாம் தூபாதிகளா



லும் தீபமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. விபூதி பூசுவதிலும் சிவநாம ஜபஞ் செய்வதிலும் மகோற்சாகமுடையவர்களாயிருக்கின்றனர். குழந்தைகளது தன்மையை நோக்கித் தந்தைகளும் அவர்களுக்குச் சிவவித்யாப்யாசமே செய்து வைக்கின்றனர். பெண்டிர்களும் கன்னிகைகளுங்கூட எப்போதும் விபூதிருத்திராக்ஷங்களையே பரமாபரணமாய்த் தரித்திருக்கின்றனர்கள். பெண்டிர்கள் திரிபுண்டரமணியாது பாகஞ் செய்வதில்லை. பாகஞ் செய்யுங்காலத்தில் புண்டரமானது வேர்வையால் கலைந்துபோமாயின் மீண்டும் திரிபுண்டரமணிந்தே பாகஞ்செய்கின்றனர். அப்படிச் செய்யும்போதும் சிவநாமங்களையே ஜபித்துக்கொண்டு சதாசிவனுக்குத் திருப்திசெய்விக்கின்றனர். வீட்டில் பாகஞ்செய்தவகைகளில் ஒன்றையாவது மிச்சம் விடாமல் எல்லாவற்றையும் பக்தியுடன் சிவனுக்கு நிவேதனஞ் செய்கின்றனர். பிறகு நிவேதித்த அன்னவகைகளைப் புசிக்கும்போது கவளந்தோறும் கவளந்தோறும் மகாதேவ என்கின்றார். இல்லமுழுவதும் மகாதேவனெனுநாமமே எதிரொலியில் புலப்படுகின்றது. சந்தனமாவது புஷ்பமாவது தரிக்கவிரும்புவார்களாயின் பக்தியுடன் சிவநிவேதனஞ்செய்த பின்னரே தரிக்கின்றனர். இரவில் தத்தம் கணவனுடன் கூடுங்காலத்திலும் சிவநாமங்களை யுச்சரிக்கின்றனர். கணவன் ஆலிங்கனஞ் செய்யுங்காலத்திலும் சிவலிங்கத்தை மறப்பதில்லை. அவ்வாலிங்கனத்தினாலுண்டாகுஞ் சுகத்தையும் சங்கரருக்கே நிவேதனஞ் செய்வர். "ஹரஸ்மரஹர அபாரகருண சாகரசங்கர" என்னும் பாஹி என்றும் சொல்லிக்கொண்டே சுரதசுகத்தையநுபவிக்கின்றனர். அவர்கள் விபூதிபூசிய கணவனது தேகத்தை வெண்பட்டாடைபோல் நினைக்கின்றனர். கிரீடைக்கு யோக்யமாகிய எப்பொருளையும் மஹேஸ்வரனுக்கு நிவேதனஞ்செய்து அவரது பிரஸாதமென்ற புத்தியுடன் அதனை அங்கீகரிக்கின்றனர். பெண்டிர்கள் பிரசவவேதனைக்காலத்திலும் உபத்திரவத்தால் கத்தும்பொழுதும் சிவநாமத்தையே கூறுவர். பிறந்தபுத்திரனுக்குச் சிவசங்கர என்கிற பெயரிட்டு விபூதிருத்திராக்ஷங்களையே அணிவித்தும் அலங்கரித்தும் வருகின்றனர். நடக்கத்தெரிந்ததும் அச்சிசுவின் கையில் வில்வபத்திரத்தைக் கொடுத்துச் சிவலிங்க சிரசில் வைக்கும்படிக் கற்பிக்கின்றனர். குழந்தைக்கு ஸ்தன்யபானம் செய்துவைப்பதற்கு முன் அந்தஸ்தன்யப்பாலைச் சிவநிவேதனஞ்செய்தபின்னரே குழந்தைகளை யூட்டுவிக்கின்றனர். அப்படி யூட்டிவைக்கும்போதும் சிவநா

மோக்ஷசாரணமே செய்கின்றனர். பிரசவத்தில் மருந்துக்குப் பதிலாகச் சிவநிவேதனஞ்செய்த தீர்த்தத்தையே புசித்துச்சிறிதும்வேதனையின்றிச் சுகமாயிருக்கின்றனர். சிவபஸ்ம சம்பந்தத்தாலும் சிவநிவேதனபோஜனத்தாலும் அபாரசந்தோஷ மடைகின்றனர். இல்லந்தோறும் பில்வவிருக்ஷம் வைத்துப்பயிர்செய்து அதனிழலிலேயே தாம்வசிக்க விரும்புகின்றனர். எங்கேயாவது வெளிப்புறப்படுவார்களானால் அது சிவஸ்தலயாத்திரையினிமித்தமாகவேயிருக்கும். ஆச்சரியம்! தத்தம் தாரங்களுடனும் குழந்தைகளுடனும் சகலரும் சிவமயமாகவே விளங்குகின்றனர். அடிக்கடி ஸ்ரீசைலமுதலிய மகாக்ஷேத்திரங்களைத் தரிசித்துச் சந்திரமௌளீஸ்வரரூபராய்க் காணப்படுகின்றனர். ஆச்சரியம். அவர்களது குணங்களைக்கூற ஆதிசேடனாலுமுடியாது. ஓ ஸ்வாமி! அதிகங்கூறுவதேன். பூலோகத்தில் எங்களது சஞ்சாரமே நிகழாதிருக்கும்படிச்செய்து விட்டனர். ஓ தர்மராஜாவே! யமலோகம் யமகிங்கரர் யமன் என்னும் வார்த்தைக்கும் இடமில்லை. அவர்கள் சத்துரு என்னும் மொழியையுங்கேட்டதில்லை. இப்படி யிருக்கின்றமையால் நரகங்களெல்லாம் சூன்யமாயின. ஆதலால் எங்களுக்கு யாதும்வேலையில்லை, நாங்கள் யாதுசெய்யக்கடவது என்று கூற அவ்வாக்கியத்தைக்கேட்ட யமன் மிக்க சந்தோஷமடைந்தவனாய்த் தூதர்களைப்பார்த்துக் கூறலாயினன். ஓ கிங்கரர்களே! கவலைவேண்டாம். தக்ஷப்பிரஜாபதி சிவத்துவேஷியாயிருந்து சகல தேவர்கள் முன்னிலையில் சிவனைப்புறம்பே நீக்கி யாகத்துக்குத் தீக்ஷைசெய்துகொள்வான். அப்போது விநாசகாலமாதலால் சிவனை நிந்திப்பான். அவனுக்குச் சகாயமாயிருக்குந் தேவர்களும் தடுக்காது ஆமோதனஞ் செய்வார்கள். முனிவர்களும் அங்ஙனமே செய்வர். உடனே அவர்களெல்லோருக்கும் விநாசகாலமாகிய ஓர் பேராபத்துவரும். அதில் நாசமடைந்து நரகினில் வீழ்வார். அப்போது நம்நரகங்கள் சம்பூர்ணமாயிருக்கும். அது சிறிது தினங்களுக்குள் நடக்கும். அவர்கள் வீழ்ந்து மீண்டுங்கரையேறார். அந்நரகிலிருந்து கரையேற்றுவதற்கு யாவருக்கும் வல்லமையில்லை. மகேஸ்வர நிந்தையின் பலத்தை யநுபவியாது தள்ளுவதற்கு யாவர் வல்லவர்? ஆ மஹேஸ்வரனை நிந்தித்ததன் பலனை யநுபவியாது விடுமா என்று புலம்பிக்கொண்டே நரகயாதனை யநுபவிப்பார்கள். சிவநிந்தையைப் பிரமத்தினாலாவது செய்கின்றவனாயினும் கும்பிபாகத்திற் றள்ளிவருத்துங்கள். இந்திரனாயினும் மகேந்திரனாயினும் விஷ்ணுவாயினும் பிரமனாயினும் விடாதீர். சிவநிந்தை செய்வார்களாயின் அவர்களை யாவரென்றும்விசாரியாமல் உடனே யிழுத்துக்கொண்டு ரௌரவத்தில் தள்ளி எக்காலத்தும் கரையேற விடாது வருத்துங்கள். சிவநிந்தாபராயணனை மகாரௌரவமென்னும் நரகில் தள்ளுங்கள். நீங்கள் கூத்தாடிக்கொண்டு ஆனந்த பரவசர்களாய் அவர்களை வருத்தலாம். அப்படிப்பட்ட காலம் உங்களுக்கு விரைவில் கிடைக்கும். கவலைப்படவேண்டாம். அத்தக்ஷனையொட்டிப்பின்னும் எண்ணிறந்தவர்கள் நரகில் வீழ்வார்கள். ஓ தூதர்களே! இவர்கள் போன்ற சிவநிந்தகர்களுக்கேயன்றோ நரகங்களேற்படுத்தப்பட்டிருக்கின்றன? இப்படிப்பட்ட நிந்தகர்களை நரகில் வாட்டி வதைத்துக்கொண்டு சிவத்தியான பரர்களாயிருங்கள். கிரிஜாகாந்தரது பாதாரவிந்தத்தைத் தியானஞ்செய்து பரமானந்த வசர்களாயிருக்கும் நமக்கு ஓர் காலத்தும் பயமில்லை. கல்பாந்தத்திலும் துக்கமில்லை. ஆனந்தம் மேன்மேலும் பெருகுமாதலால் சிவத்தியானானந்த மெனும் நிலைபெற்றிருங்கள்.



முப்பத்தெட்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

உ

ஸாம்பஸோம ரக்ஷதுமாம் :

## முப்பத்தொன்பதாம் அத்தியாயம்.

### தக்ஷயாகம்.

கௌதமர்:-இவ்வாறு யமதூதரது கதையை அகத்திய முனிவர்கூற யாகசாலைக்கு வந்திருந்த கௌரியும் கேட்டு அகஸ்தியரைப் பார்த்து ஓ முனிவரே! சிவநிந்தை செய்வோனுக்குள்ள ஆபத்தை நீவிர் கூறினீர். எதிர்ச்சையாய் (தற்செயலாய்) நின்று கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கும் மஹா பாபமாதலின் அப்பாபம் நீங்குவதற்கு யாதாயினும் பிராயச்சித்தமுண்டோ? சர்வதர்மமு மறிந்த நீங்கள் இத்தருமமு மறிந்திருப்பீர்களல்லவா? யாதாயினும் பிரதிகாரம் சுருதியிற் கூறப்பட்டுளதா? அங்ஙனமிராவிடினும் அப்பாதகத்துக்குத் தக்கபடி யாமே ஓர் பிராயச்சித்தம் கற்பித்துக்கொள்ளவேண்டுமன்றோ? எப்படியெனின் ராத்ரிசத்திர நியாயமாய்க் கற்பித்துக் கொள்ளலின்றியமையாததன்றோ! சாம்பசிவனை இத்தக்ஷன் நிந்தித்த வாச்யம் எனது காதில் அம்புபோல் குத்தியது. சிவநிந்தாவசனத்

தைச் செவியேற்கப் பெறின் அதற்குப் பிராயச்சித்தம் அந்தச்சரீரத்தை மாய்த்துக்கொள்வதொன்றே. சுராபானம் கோமாம்ச பக்ஷணம் இவைகளும் கொடிதன்று. சிவநிந்தையைக்கேட்டல் மகா கொடும்பாவமாகும். கட்குடியனோடு பழக்கமும் சுவர்ன சோரமும் குருமனைவியோடு புணர்தலுமாகிய இம்மகா பாவங்களினும் சிவநிந்தாசிரவண பாவமானது மிக்க கொடியதாம். மஹாப்பிராமண சமூகத்தைச் சிரச்சேதஞ் செய்வதும் ராஜகுலத்தை வதஞ்செய்வதும் ஆகிய பாவம் கொடிதாயினும் சிவநிந்தா சிரவணப்போற் கொடிதன்று. ராஜ ஸ்திரீயைச் சேவித்தல் மிலேச்சரோடு பழகுதல் மிலேச்ச ஸ்திரீயைச்சேவித்தல் சண்டாளர்களோடு சகவாசஞ் செய்தல் சண்டாளியைச் சேவித்தல் இவைகளும் சிவநிந்தா சிரவணபாபத்தினுங் குறைந்தவையாம். கழுதையாய்ப் பிறத்தலும் சிவநிந்தா சிரவணத்திலும் நல்லதாகும். குதிரைக் கூட்டங்களைக் கொல்வதும் கோமங்கைகளைக் கொல்வதும் பிராமணனது திரவியத்தை அபகரித்தலுமாகிய இவைகளைப் புண்யமென்றாலுந்தகும். சிவநிந்தா சிரவணத்தின் பாபத்தை யின்னதென்று கூறமுடியாது. சண்டாளனாய்ப்பிறத்தலும் சேவித்தலும் பன்றியாய்ப்பிறத்தலும் பன்றியோடு சேர்தலும் நாயாய்ப்பிறத்தலும் அதனோடு கூடிச்சுகித்தலும் மலசலங்களில் வசித்தலும் ரேதஸைக்குடித்தலும் தன்சிரசைத் தானே துணித்துக்கொள்வதும் ஆகிய இப்பாவங்களினும் சிவநிந்தா சிரவண பாபம் பலகோடியங்கு மிகுதியானது எனக்கூறி அங்கு வந்த கௌரி எனும் லோகமாயை யானவள் மஹா தேவனை ஸ்மரித்து அவ்விடத்திலேயே சரீரத்தை விட்டனள். உடனே மஹா ருத்திரரும் அதனைக்கண்டு மிக்க கோபங்கொண்டு வீரபத்திரனென்னும் ஓர் மகா பலவானைச் சிருட்டித்தேவினார். அவ்வீரபத்திரரும் கோடி சூரியோதயமானதுபோல் ஜ்வலித்துக்கொண்டு எண்ணிறந்த கைகால் சிரமுடையோராய் அக்கரங்களில் மிக்க கோரமான ஆயுதங்களையேந்தி அநேக யோசனை பரிமாணமுடைய தேகத்தினராய் ஓர் கொடிப்போதில் சகல ஜகத்திலுள்ள சனங்களையும் சங்கரிக்குந் திறமுடையோராய் எதிர் வந்து அஞ்சலி செய்து நிற்க மஹா ருத்திரரும் அவரை நோக்கிக் கோபத்தால் சம்பிரமாய் ஓ வீரபத்ரா! தக்ஷனைச் சங்கரித்து விட்டுவாக்கடவை. சீக்கிரமாய்ச் சென்று அவனை மாத்திரமின்றி அவனோடு கூடியிருக்கும் நாராயணாதிகளையுமடித்துச் சீக்கிரம்வருக வென்று கூறியருளலும் அதனைக்கேட்டு வீரபத்திரர் அவரடி வீழ்ந்து வணங்கி அஞ்சலி செய்து ஓ சுவாமி!



உத்தரவு, இதோ சென்று தேவரீரது ஆணையின்படி முடித்துவருகிறேனென்று கூறி ஜகதீஸ்வரியாகிய பவானியை நமஸ்கரித்துப் புறப்பட்டு ஓர் க்ஷணப்போதில் யாகசாலைக்குச் சற்றுதூரத்தில் வரவே தக்ஷன் முதலிய தேவர்கள் அங்ஙனம் வரும் வீரபத்திரரைக் கண்ணுற்றுப் பயங்கொண்டு நடுக்குற்று ஒருவரை யொருவர் நோக்கி அந்தோ! ஈதென்ன பிரளயகாலாக்னி மண்டலம் போல் ஜ்வலித்துக்கொண்டு ஓர் ஜோதி நம்மை நோக்கி வருகின்றது. இப்போதே இச்சகமெலாம் நாசமெய்துமென்று தோன்றுகின்றது. இதுபோல் இதற்கு முன்னும் இனியும் காணக்கூடியதன்று. இச்சோதி மண்டலமானது அருகில் வர வர ஓர் திவ்ய தேகமாய்த்தோன்றுகின்றது. அத்தேகத்தின் காந்தியால் இத்தகைய வொளிமண்டலம் காணப்படுகின்றது. அனேக கால கூடாக்னி மண்டலங்கள் போல் தோன்றும் இச்சோதி மண்டலத்தால் நக்ஷத்திரங்கள் சந்திராக்னி சூரியர்கள் முதலிய சோதிகளும் ஒளிமழுங்கி மின்மினிப் பூச்சிப்போல் புவியில் வீழ்ந்து விடுமென்பது திண்ணம். அத்தேகத்தின் காலடி வைப்பால் புவி வெடித்துப் போகின்றது. சமுத்திரங்களெல்லாம் வற்றுகின்றன. அந்தோ! இது மகாப் பிரளயகால மென்பதிற் சந்தேகமில்லை. அடா! பூர்வம் ரிஷிகள் சபித்த சாபமெலாம் இவ்வுருக்கொண்டு வருகின்றது. சங்கா நிந்தனையின் பலன் கிட்டி விட்டது என்று சிலர் கோலாகலஞ் செய்யச் சிலர் அடா தக்ஷா! துராசாரா! மஹா பாபி! நீ செய்த பாதகமன்றோ இவ்வாறு பயனளிக்க வருகின்றது? மஹா தேவ நிந்தை குலநாசஞ் செய்யுமென்பது இப்போதாவது விளங்குகின்றதா? அடா! தக்ஷப்பதரே! மகா அசனி மண்டலமும் (பிரளயகால இடிக்கூட்டம்) பிரவேசிக்கக்கூடாத இடமிருக்கலாம். சிவநிந்தையெனும் பேரிடியானது எங்கு சென்றாலும் விடாது. அடா! பாதாளலோகஞ் சென்றாலும் சிவநிந்தகனைச் சிவநிந்தாக்னி எரிக்குமென்பதிற் சிறிதுமையமில்லை என்று தக்ஷனை நோக்கிக் கோபத்தோடும் பச்சாதாபத்துடனுந் தூற்ற இதற்கிடையில் முன்போல் மீண்டும் மஹோற்பாதங்களுண்டாயின. அதனைப்பார்த்து முன்னினும் பதின் மடங்கு பயத்தால் கோலாகலமாயிருக்க அதற்கிடையில் வீரபத்திரரும் யாகசாலைக்குள் புகுந்தனர். புகும்போதே அக்னிக்கண்ணால் கோபத்துடன் பார்க்க அந்நேத்ரச்சுவாலையால் யாகசாலைமுழுது மெரிந்துவிட்டது. அவரது மூச்சுக்காற்றுக்களினின்றும் அநேககோடி ருத்ரகணங்கள் தோன்றித் தேவர்களையும் மற்றவர்களையும் கொல்லத்தலைப்பட்டனர். அப்போது தேவர்களுஞ்

சிறிது கோபங்கொண்டு அவர்களோடு மிக்க கோபமாய் யுத்தஞ்செய்ய அது பிரமாண்டமண்டலங்கள் வெடிப்பதுபோலிருந்தது. அந்தயுத்தத்தில் தேவர்கள் பிரயோகித்த பிரமாஸ்திரக் கூட்டங்களின் சுவாலாமாலைகள் கணங்கள் பிரயோகித்த ஆயுதங்களாலணைந்து சாரமற்றவாய் மின்மினிப்பூச்சியைப்போல் கீழ்விழுந்தன. பிறகு தேவர்கள் எண்ணிறந்த நாராயணாஸ்திரத்தைப் பிரயோகிக்க அவைகளும் கணங்களின் ஆயுதங்களால் அவலமாயின. உடனே விஷ்ணுவானவர் கௌமோதகி என்னும் கதாயுதத்தைக் கையிலெடுத்து ஓங்கிக்கொண்டு மிக்க வேகமாயோடிவரக் கணங்களும் அங்ஙனம் கருடன்மீதேறிச் சாரங்கமென்னும் வில்லையுமெடுத்துச் சக்கராயுதமுஞ் ஜ்வலிக்கக் கதையையுமெடுத்து யுத்தத்துக்கு வந்திருக்கும் விஷ்ணுவைப் பார்த்து ஆச்சரியமுற்றனர். விஷ்ணுவும் வீரபத்திரரைப்பார்த்தனர். கருடனது வேகத்தாலும் அதனிறகு அசைதலாலும் பூமி நடுங்கியது. அப்படிக் கோலாகலமாய்வரும் விஷ்ணுவைப்பார்த்து வீரபத்திரர் கோபங்கொண்டு ஓ துர்ப்புத்தியே! துச்சீலனே! உனக்கு விநாசகாலம் வந்துவிட்டது. என்னிடத்திலும் சிறிதும் அச்சமின்றிச் சௌரியம் காட்டுகின்றனையா? காளகூடத்தினிடம் சென்றதனால் செய்யுங்காரியம் யாது? அடா! பூர்வம் உன்னைப்போல் சிவநிந்தனைசெய்த கோடிக்கணக்கான நாராயணர்களைக்கொன்றிருக்கின்றோம். அடா! விளக்கு விட்டிற் பூச்சிபோல் தனது சிறகை விரித்துக்கொண்டு சஞ்சரிக்கும் உனது கருடனால் யாது செய்ய முடியும்? ஓர் திரணம்போலுள்ள சாரங்கமென்னும் வில்லைவைத்துக்கொண்டு யாதுசெய்ய நினைக்கின்றனை யென்றனர். அதனைக்கேட்டதும் நாராயணரும் கோபங்கொண்டவராய் வீரபத்திரரோடு யுத்தம்புரியத் தலைப்பட்டனர். உடனே வீரபத்திரர் விஷ்ணுவை ஓர் பாசத்தாற்கட்டிப் பூமியிற்றள்ளினர். விஷ்ணுவு முடனே அப்பாசத்தைச் சேதித்துக்கொண்டு ஆகாயத்திற்கிளம்பி அங்கிருந்து சங்கநாதஞ்செய்து அதனால் பூதலமெலாம் கிடுகிடுக்கச்செய்தனர். அதனைக்கண்டு வீரபத்திரர் சிறிதுகோபங்கொண்டு ஓர் கிளம்பு கிளம்பி விஷ்ணுவையும் கருடனையும் தமது கைநகத்தால் கிள்ளிக் கீழே தள்ளினர். உடனே விஷ்ணு அவ்வுருவை விட்டு ஓர் வராஹரூபத்தை யெடுத்துக்கொண்டு கணங்கள் எல்லாம் சிதற அடித்துத் தனது மகாபர்வதம்போன்ற தேகத்துக்குஇணங்க விடும் மூச்சுக்காற்றானது ஊழிக்காலக்காற்றுப்போல ரணக்களத்தைக் கலக்குதலும் அதனாலெண்ணிறந்த கணங்கள் வீழ்ந்தனர். வராகம் தன் மூக்கினாலெண்ணிறந்த



மகாபர்வதங்களைப் பிடுங்கிக் கணங்களின்மீதெறிந்தும் வால்முனையால் சப்த சமுத்திரங்களையும் கலக்கி நொடியில் வற்றச்செய்தும் அதிலிருக்கும் நீரையெல்லாம் ஓர் கணப்போதில் வாலால் பூமியில் வாரியெறிந்தும் தன்னைப்போல எண்ணிறந்த வராஹங்களைத் தனது தமோகுணத்தால் சிருட்டித்தும் அட்டகாசஞ்செய்திருக்க அவ்வராகங்களும் குலபர்வதங்கள்போன்ற தேகமுடையவாய்க் கிளம்பி எங்கும் இடைவெளியில்லாமல் ஆகாயமுழுதும் மறைத்துக்கொண்டன. அப்படி வராகக்கூட்டங்களால் உலகமெல்லாம் சிறிது மிடைவெளியின்றி வியாபித்திருப்பதைக்கணங்கள் கண்டு சிறிதுகலங்கி அந்தோ இதென்ன இப்படியாயினது! உலகமெலாம் வராகங்களின் ஹிம்சைக்குள்ளடங்கின தாயின. சிறிது நிற்க இடந்தேடுவோமானால் புதிது புதிதாய் அங்குஞ் சிலவராஹங்கள் தோன்றி வியாபித்துக்கொள்ளுகின்றன. பாணங்களைப் பிரயோகிப்பதற்கும் அவை செல்வதற்கும் சிறிது மிடமில்லையே. கால்வைத்து நிற்பதற்குக் கூட இடங்கண்டோமில்லை. இவ்வராகங்களும் தமது ரோமங்களாகிய ஈட்டிகளால் மேகமண்டலங்களைத் தொளைத்து எங்கும் சின்னபின்னஞ்செய்கின்றனவென்று கணங்களெல்லாம் இவ்வாறு ஒருவரோடொருவர் கூறிக்கொண்டு யாதுசெய்வோமென்று மிக்க சிந்தாகுலமாயிருந்தனர். அப்போது விஷ்ணுவும் அக்கொரமான வராஹரூபத்தோடு கணங்களைப்பார்த்து ஓ கணங்களே! வந்து விட்டேன், யான் ராவணனைக்கொன்றவனன்றோ? என்னெதிரில் நின்று யுத்தஞ்செய்யும் ரணவீரனுமுண்டோ? ஓ கணங்களே! நீங்கள் நின்று யுத்தஞ் செய்வதற்கு இடமெங்கே? ஓர் கணப்போதில் எனது சக்கரத்தால் இப்பூதகண ரணமண்டலத்தைச் சின்னபின்னமாக்குகின்றேன், பாருங்கள். யக்ஞசாலையைக் கொளுத்திவிட்டதால் சிறிது கர்வம் வந்துவிட்டதோ? ஓர் நிமிஷத்தில் பல்லாயிரம் யக்ஞ சாலையை ஸ்தாபித்துச் சகாயமாய் நிற்கின்றேன். சக்தியுண்டானால் என்னைக்கொளுத்தட்டும். இப் பலகணங்களாகிய உங்களால் இனிச்செய்யுங்காரியம் யாது என்று அட்டகாசஞ் செய்துகொண்டு அக்கணங்களை ஓர் கணப்போதில் கலக்கிவிட்டு வீரபத்திரருக்கெதிரில் போயினர். நாராயணன் அவ்வாறு வீரபத்திரரெதிரிலும் அட்டகாசஞ் செய்யத்தலைப்பட்டனர். அங்ஙனங் கர்வித்து மகா மோகத்தால் கர்ச்சித்துக்கொண்டிருக்கும் நாராயணரைப்பார்த்து வீரபத்ரரும் அடா! துஷ்டா! துராசாரா! உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதோ, என்ன இடந்தெரியாது பிதற்றுகின்றனை? பிரளயகாலாக்னி

மண்டலங்களோடு புழு யுத்தஞ்செய்ய வருவதுண்டா ? என்னோடு கூட நீ யுத்தஞ்செய்தல் தகுதியா ? கர்வத்தை விட்டு ஸ்வரூபத்தை நினைத்து எம்மையும் யாரென்று நினைத்துப்பார். வீரபத்திர நிருக்கின்றாரென்பதையு மறந்து விட்டனையோவென்று கூற அவரைப்பார்த்துக் கோபங்கொண்டு ஹரியானவர் அடா ! என்ன கூறினாய் ! எனதுருவங்கள் அபாரங்களன்றோ? அவைகளைச்சங்கரிக்கப்பலம் யாருக்குளது ? இதோ ஓர் கணப்போதில் நீயுமிருப்பதற்கில்லாமல் எனதுருவால் வியாபித்துக்கொள்ளுகின்றேனென்று கூறி யுத்தஞ் செய்தனர். உடனே வீரபத்திரர் சிறிது கோபங்கொண்டவராய் ஓர் அறை அறைந்தனர். அதனால் நாராயணர் கலங்கி மூர்ச்சித்து மிக்க பயங்கரமான நரசிம்ஹரூபமெடுத்துத் தன்னைப்போல் எண்ணிறந்த நரசிம்ஹங்களையு முண்டாக்கி முன்போல் பூதகணங்களை வாட்டிவருத்தத் தலைப்பட்டனர். அக்கணங்களும் மகா பர்வதங்கள் போல் எங்கும் வளர்ந்து கர்ச்சிக்கும் நரசிம்ஹங்களைப் பார்த்துப் பயந்து வீரபத்திரரிடஞ் சென்று ஓ சுவாமி ! வராஹங்களின் உபத்திரவந் தொலைய இப்போது எண்ணிறந்த நரசிம்ஹங்கள் எங்கும்வியாபித்துத் தொந்தரை செய்கின்றன. காட்டுத்தீ மலையை வளைந்துகொண்டெரிப்பதுபோல் எங்களை வருத்துகின்றன. நாங்களென்னசெய்வோம். அத்தகைய நரசிம்ஹங்களோடு எங்களால் போர் செய்யக்கூடவில்லை. ஒவ்வொன்றின் நகங்களும் வச்சிராயுதங்களுக்கு நிகராயிருக்கின்றன. நாங்களென்னசெய்வோம். எங்களுக்கு மனம் நடுங்குகின்றது. ஓ சுவாமி! தாங்க ளினிச் சிறிதும் அசட்டை செய்வது தகுதியல்ல வென்று கூறிக்கொண்டிருக்கிற பொழுது நரசிம்ஹம் ஓடிவந்து யுத்தஞ்செய்யத் தலைப்பட்டது. உடனேஅது வீரபத்திரரைப்பார்த்து ஓ வீரா ! என் தாமதிக்கின்றனை? நான் யுத்தத்துக்குத் தயாராயிருக்கின்றேனே? எனக்கெதிரில் உன்வலியைச் சற்று காட்டுவாயாக. பூமண்டலம் நாராயணருடன் கூடியதானாலும் அற்றதானாலுமாகட்டும், சற்று யுத்தஞ்செய்வோம். உன்கர்வத்தைச் சிதடக்குகின்றேனென்றது. உடனே வீரபத்திரரும் அப்படிக் கூறியதைக்கேட்டுக்கோபத்தால்.புன்னகைகொண்டவராய் ஓ நரசிங்கமே! நன்குகூறினாய்! நாராயணனுடையதானாலும் நாராயணனற்றதானாலுமென்று இரண்டுகூறினாய். அதனில் பிற்கூறியதைச் சத்தியமாய்ச்செய்கின்றேன். சத்தியம்பிறழ்வது உசிதமல்லவன்றோவென்று கூறினார். அங்ஙனம் வீரர்கூறியதும் நரசிங்கம் உடனே இறந்து வீழ்ந்தது; மற்றவைகளு மறைந்தன. உடனே நாராயணர் (பரசு



ராம) ஜாமதக்னி ரூபமாய் எதிரில் வந்து நின்று முன்போல் மீண்டும் தன்னைப்போன்ற எண்ணிறந்த ஜாமதக்னிகளைப் பர்வதம்போல் திரட்டித்து எங்கும் வியாபிக்க, அவர்களைக்கண்ட கணங்கள் மீண்டும் பயந்து ஓட்டம்பிடிக்கத்தலைப்பட்டன. அப்பரசுராம வுருவங்களும் கடோரமாகிய கோடரிகளைக் கையிலேந்தி எங்கும் பிளக்கத் தலைப்பட்டன. அவர்களது காலடிவைப்பால் முன்போல் பூமி பிளந்தது. அவர்களது கோடரித்தாரையினால் வெட்டுப்பட்டு ஓட்டம்பிடிக்கும் கணங்களை வீரபத்திரர் கண்ணுற்று ஓகணங்களே! திரியம்பகரிடம் உங்களுக்குப் பக்தியிருக்குமானால் உங்களுக்குயாதும் கெடுதிநேராது. அது தொலையின் கெடுதிவரும். இவ்விஷ்ணுவும் சைவபலத்தாலேயே இவ்வாறு வாட்டுகின்றான். அஃதில்லாவிடில் இவனால் ஓர் கணப்போதுகூட எதிரில் நிற்கமுடியாதெனக்கூறி ஹரியைப்பார்த்துக் கம்பீரமாய் ஓ ஹரியே! உனது திரிபுண்டரமும் ருத்திராக்ஷமும் சங்கரபூஜையுமன்றோ இவ்வுருத்திரகணங்களை எதிர்நிற்கச்செய்யவில்லை? நீசிவசின்னந்தரித்திருக்கின்றமையால்உன்னோடு யுத்தஞ்செய்வது தகுதியன்று. என்னோடு யுத்தம் புரியவிரும்பினால் திரிபுண்டரம் ருத்திராக்ஷம் சிவபூஜை இவைகளை விடுத்துவா. ஓ ஹரியே ! லிங்கார்ச்சனையின் பலனால் இப்போது இவ்வளவு பலம் வந்திருக்கின்றது. அல்லாவிடில் உனக்கு இவ்விடத்திலாவது எவ்விடத்திலாவது இவ்வளவு பலத்துக்கிடமில்லை. இப்போது நீ சிவசின்னந் தரிக்காதிருந்தால் ஓர் கணப்போதில் நாசமடைவாய். சிவசின்னத்தைப்பார்த்து எனது சத்தி குன்றிவிட்டது. பூர்வம் எத்தனையோ நாராயணாதிகள் என்னால் வதைக்கப்பட்டனர். அப்படிப் பட்டயானும் உனது சிவசின்னபலத்தால் சக்தி குன்றினேன். உனக்குப் பலமுண்டானால் இச்சிவபலத்தைவிட்டு இயற்கைப்பலத்தோடு வருவாயாக. உனது செயற்கைப் பலமாகிய மஹாதேவலிங்கார்ச்சனபலம் மிக்க மஹிமையுடையதன்றோ? அதற்கன்னியமாய்ப் பலமென்றொன்றுலகில் கண்டதுங்கேட்டதுமுண்டா? அற்பபலமுடையோனாயினும் லிங்கார்ச்சனை செய்யின் மகாபலமுடையனாவன். ஆதலால் உன்னுடன் யுத்தம்புரிய விரும்பவில்லை. நீ யுத்தஞ்செய்ய விரும்பின் சைவபலத்தைவிட்டு இயற்கைப்பலத்துடன் வந்து சேருவாயென்று கூறினார். இதைக்கேட்ட ஹரிகர்வித்து ஈதென்ன சைவபலந்தானா இயற்கைப்பலமில்லையா வெனக்கூறி விபூதிருத்ராக்ஷ சிவலிங்கார்ச்சனங்களைவிட்டு எதிர்வந்து நிற்க வீரபத்திரர் உடனே பரசுராமனைப் பஸ்மஞ்செய்துவிட்டனர். உடனே ஜமதக்னி முனி

வர் அவரிடம்வந்து நமஸ்கரித்து ஓ ஸ்வாமி! இத்துராத்மா சிவலிங்
கத்தை விடுத்து வந்தமையால் பலங்குன்றி விட்டது. உலகில் உரு
வமும் பலமும் பாக்யமும் சிவபூஜையினாலேயே கிடைக்கின்றன.
அதனைவிட்டால் சகல பாக்யங்களுந்தொலைந்து பலங்குன்றுவான்.
லிங்கார்ச்சன பலத்தினாலேயே சகல சித்திகளும் பெறப்படுகின்றன.
அஃதில்லையாயின் பலமேது? எவரெவர் லிங்கார்ச்சனத்தை விடுத்து
வியர்த்தமாய் கர்விக்கின்றனரோ அவர்கள் வீரபத்தி ராஸ்திர
முனையால் நாசமடைவர். அப்படி யிருக்கும்போது வீரபத்திர
ரோடு யுத்தஞ்செய்யவேண்டு மென்று யாரால் நினைக்கமுடியும்.
இச்சூரர்களெல்லாம் அசாம்பவராயிருக்கின்றனராதலால் சிறிதும்
யோசிக்காமல் வதஞ் செய்யுங்கள். இவர் வதமாகும் விஷயத்தில்
தேவரீர் சிறிதும் பிரயத்தனஞ் செய்யவேண்டாம். இவர்கள் செ
ய்த சிவநிந்தையே இவர்களைக்கொல்கின்றதாதலால் ஓ வீரபத்ரஸ்
வாமியே! நீர் இவ்விஷயத்தில் கேவலம் நிமித்த மாத்திரமாயிருங்க
ளென்று கூறினர். இதற்குள் விஷ்ணு வாமனரூபத்துடனெதிர்
வந்து நின்றுசகல அண்டபிண்ட சராசரங்களையும் நெருக்கிக்கொண்
டுவளரத்தலைப்பட்டனர். வீரபத்திரரும் அவ்வாமனரது சிரத்தை
விளையாட்டாகக் கொய்தெறிந்தனர். நாராயணர் ராமவுருவத்து
டன் யுத்தத்திற்கு வந்தனர். அவரை நோக்கி வீரபத்ரர் ஓ நாராய
ணா! எனது சூலம் தாகத்தால் மிக்க வருந்துகின்றது; உனது ரத்த
தாரையால் திருப்தி யடையுமென்று கூற அதைக்கேட்டதும் ராமர்
வீரபத்ரர் பலத்தைச் சிறிதும் அறியாமல் ஓ வீர! நான் தூஷ
ணன் தாடகை சூர்ப்பணகை மாரீசன் சப்ததாளவனம் இவர்களை
ஓர் கணப்போதில் கொன்றிருக்கின்றேன். அடா! பூர்வம் பர்வதம்
போன்ற துந்துபி என்னும் அசுரனைக் கட்டைவிரலால் முடித்திரு
க்கின்றேன். வாலியும் என்னம்பினால் ஓர் நொடிப்போதில் வதமடை
ந்தான். சமுத்திரத்தையும் பந்தித்து விட்டேன். அடா! ஒருவ
ராலும் பிரவேசிக்கக்கூடாத லங்கையை என் தூதனால் ஓர் க்ஷணப்
போதிலெரித்து விட்டேன். ராவண புத்ரனான அக்ஷயனையுங் கொ
ன்று இந்திரசித்தையும் ஜயித்து ஓர் கணத்தில் திரும்பிவந்தவன்
எனது தூதனேயன்றோ? சர்வவுலகங்களையும் வருத்தின ராவணனை
யும் கும்பகர்ணன் முதலியோரையும் கொன்று விட்டேன். யுத்தத்
தில் யமனுக்கும் என்னிடம் நடுக்கமன்றோ? சக்தியிருக்குமானால் நீ
யுத்தஞ்செய்யலா மென்றிவ்வாறு அட்டகாசஞ் செய்யும் ராமனைக்க
ண்டு வீரபத்ரர் புன்னகைசெய்ய அதனாதியால் சகல அங்கங்களு



மெரிந்து ராமன் கீழ்வீழ்ந்தான். உடனே பிரமன், ராமன் பூமியில்
வீழ்ந்து நாராயண வுருவத்துடனிருப்பதைப் பார்த்து ஓ நாராயணா!
ஏனிப்படியாயினீர்? உமது சௌரியம் எங்கு சென்றது? சிவநிந்தனை
யின் பயனன்றோ இவ்வாறு முடிந்தது? அன்றியும் மிக்க கர்வித்து
க்கூறினீரே, இப்பொழுது அம்மொழியெங்கே? அம்மொழிகளே
அக்னி ஸ்வரூபமா யும்மைத் தகிக்கின்றது. வீரபத்திரர் ருத்திரக
ணேஸ்வரர் சர்வலோகநாதர். அவரிடம் கர்வித்து மொழிந்தால் அப்
பயனை யனுபவிக்கவேண்டியதவசியமன்றோ? அடா தக்ஷா! துரா
சாரனே! யாகத்தில் தீக்ஷித்துக்கொண்டவனே! உனக்குச் சகாய
ஞ்செய்து நாராயணனடைந்த பலனைப்பார்த்தனையோ? உன்னுடைய
கர்வத்தின் பரிபாகம் உனது நாசத்தின் பொருட்டுத் தலைப்பட்டது.
உனது யாகத்துக்கு வந்தமையால் ஓர் கணப்போதில் வதமடைந்த
னர். ஓ துர்ப்புத்தியே! சிவநிந்தனை செய்ததின் பயன் கண்கூடா
ய்க் கிடைத்தது. அடா! நாராயணனே இறந்தபிறகு உன் கதியுங்
கூறவும் வேண்டுமா? உன் யாகத்தில் வந்த யாவருக்கும் மரணங்
கிட்டி விட்டது. இதுபற்றியே ஆன்றோர்கள் துர்ச்சன சகவாசம்
கூடாதென்கின்றனர். கஷ்டமெனுங்கடலில் மூழ்கி மரிப்பதற்கே
துர்ச்சனருடைய கூட்டுறவாம். அந்தோ! அசாம்பவக் கூட்டமா
னது பெரிய கஷ்டத்தை விளைவிப்பதேயாம். அசாங்கருடன் கூடி
ச்சுகம் பெறுவது சிறிதுமில்லை. அப்படிக் கூடுவோரே நீசராகின்
றனர், அவர் விருச்சிகம் நாய் கழுதை முதலிய பிறப்புகளுக்கு
ட்படவேண்டும். தன்யர்கள் எப்போதும் பிரார்த்திப்பது அசா
ம்பவமுகப்பார்வையில்லாமலிருக்கவேண்டுமே என்பதேயாம். அப்
படிப் பிரார்த்திக்கும் புண்ணியவான் தன்ய சிரேஷ்டன். அந்தோ!
நாராயணர் மகா மேருபோல் கீழ்வீழ்ந்து கிடக்கின்றனர். முரன்கம்
சன்முதலிய அசுர வீரர்கள் எவரது சௌரியத்தைக் கேட்டமாத்திர
த்தில் நடுங்கி யோட்டம்பிடித்தனரோ அப்படிப்பட்ட நாராயணர்
மரித்து விட்டார். எவரது சங்க நாதத்தைக் கேட்டதும் அசுரர்கள்
திக்குதிக்கா யோடிப்பதுங்கினரோ அப்படிப்பட்ட நாராயணர் வீர
பத்திரரா லிவ்வாறாயினர். கோவர்த்தன கிரியானது எவரது
விரல் முனையால் விளையாட்டாய்த் தூக்கப்பட்டதோ சர்வலோகங்க
ளையும் கதற அடித்த இராவணனும் இரணியனும் இரணிய கசிபும்
கணப்போதில் எவரால் வதமடைந்தனரோ அப்படிப்பட்ட நாராய
ணரே இக்கதியாயினர். இனி நாம் யாது செய்வோமென்றுபுலம்பு
தலும் அவனை வீரபத்திரர் பாசத்தாற்கட்டிச் சிறிது புன்னகைகொ

ண்டு அடே! துர்ப்புத்தே! தக்ஷனோடு கூடியிருந்து சிவநிந்தா விஷயத்தை யருந்தியபதரே! ஏதுஷ்டாத்மா! சிபிவிஷ்டனையு மறந்தனையே! அஷ்டமூர்த்தியாகிய அவ்விறைவனே கஷ்டத்தைத் தொலைப்பவன். சிவநிந்தா சிரவணத்தின் பயனாகிய சிக்ஷையை உனக்கு விதிக்கவேண்டியதவசியமன்றோ? அப்படியே யுன்னைச் சிக்ஷிக்கின்றேன். தக்ஷனைக்கொண்டு விடுவித்துக்கொள்ளையா? அல்லது இவ்வாபத்தினின்றும் காப்பாற்றுவதற்கு வேறு யாரையாவது உதவியாய் வைத்திருக்கின்றனையோ? அடா! தக்ஷனுக்கு மோகம் வந்தது நியாயந்தான். உனக்கும் யாது காரணமாய் மோஹமும் வந்தது? உனது மோகத்தின் பயன் உனக்கு எப்போதும் நினைவிலிருக்க வேண்டுமன்றோ? என்றிங்ஙனங்கூறிப் பிரமன் சிரசை நகத்தாற் சேதித்தெறிந்தனர். உடனே தேவசைனிய முழுதும் எங்கும் ஆஹாகாரம் பிறந்து அடிபட்டு மாய்ந்தது. தக்ஷனும் அவனைச்சேர்ந்தவர்களும் வதமடைந்தனர். அசாம்பவர்களாகிய முனிவர்களும் சிவநிந்தாக்னியால் மாய்ந்தனர். உற்பாதங்களும் நிக் கழுத்தொழியு மோய்ந்தன. திக்குகளெல்லாம் தெளிந்தன. தேவதுந்துபி முழங்கவும் கந்தர்வர்கள் பாடவும் புஷ்பமாரி பொழியவும் வீரபத்திரர் ஜயகோஷத்துடன் மகாதேவரையடைந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அஞ்சலி செய்து நடந்த செய்தியை அவ்விறைவனுக்கும் அகில லோகமாதாவாகிய பவானிக்கும் விக்ஞாபனஞ்செய்து கொண்டனர். சதாசிவனும் வீரபத்திரரை ஆசீர்வதித்துச் சந்தோஷத்துடனனுமதி கொடுத்தனர். உலகில் சங்கா நிந்தகருக்கே கெட்ட பிறப்பும் கொடும் யாதனையும் சகல ரோகமும் ஆகிய சகல துர்ப்பாக்கியமும் வருகின்றன. பாவ பரம்பரைகளு மேன்மேலும் அவர்களிடமே வளருகின்றன. சத்துக்களாகிய ஆன்றோர்களே சிவார்ச்சனையையே பெரிதாக எண்ணியவராய்ச் சகலசுகபோகங்களையும் புசித்து இறுதியில் மோக்ஷானந்தத்துக்காளாகின்றனர். ஓ சரீரமே! நீஜன்ம சாபல்யமடையவேண்டுமாயின் பார்வதி பரமேச்வரர்களுக்கு வணக்கஞ்செய்வாயாக. அச்சன்னிதானமுனைக்கரிது. ஓ மனமே! ஸ்மரஹராகிய இறைவனை ஸ்மரிப்பதையே சீலமாய்க்கொள்ளுக.

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

முற்றிற்று.

---



உ

தேவஸேநாபதயே நம:

## நாற்பதாம் அத்தியாயம்.

---

### சிர்த்தேஷார்ச்சகர்களுக்கு அநுக்கிரகித்தது.

நாரதர்:- இவ்வாறு தக்ஷயக்ஞத்தில் நாராயணாதிகளும் வதமடைந்தனரென்பதைக்கேட்டுச் சகல முனிவர்களும் ஆச்சரியமடைந்தனர். அப்போது சனற்குமாரர் சனகர் சனந்தனர் வாலகில்யர் முதலிய முனிவர்களோடு கூட சகல முனிவர்களும் கௌதமரைப் பார்த்து முனிவரரே! நாராயணர் முதலிய தேவர்களெல்லோரும் அதிகார புருஷர்களன்றோ? அவர்களுக்கும் மரணமென்றால் ஆச்சரியமாயிருக்கின்றது. அவர்களை ரக்ஷித்தாலன்றோ அதிகாரம் நிலைபெறும்? சூலபாணி கருணையின்றி அவர்கள் மரித்தனரென்பதுண்மையே. அவர்கள் மீண்டுமெப்படி உயிர் பெற்றனர். அவர்களெல்லோரும் சிவநிந்தா அக்னியினால் தஹிக்கப்பட்டனரென்றீர்களே. அப்படியானால் வீரபத்திரர் ஏன் தோன்றினார்? அவர் யாது செய்தனர்? பூர்வம் அதிகாரத்தில் (முந்திய அதிகார முறையில்) இருந்தவர் எங்ஙனமாயினர்? இவையெல்லாவற்றையும் எங்களுக்கு விரித்துரைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கக் கவுதமர் கூறலாயினார். ஓ முனிவர்களே! கூறுகின்றேன். சிவநிந்தாக்கினிச் சுவாலையால் சகலதேவர்கள் தஹிக்கப்பட்டன ரென்ப துண்மையே. அப்படியாயினும் வீரபத்திரர் அவ்விஷயத்தில் நிமித்தமாத்திரமாயினர். சகல உற்பத்திசங்காரங்களையுஞ் செய்கின்றவர் பரமேஸ்வரானாலும் ஏதோ ஒவ்வொன்றை ஒவ்வொன்றில் நிமித்தமாத்திரமாயும் வைத்துக்கொள்ளுகின்றனர். பிரம்மாண்ட மண்டலங்களில் அகாலத்தில் பிரளயம் வருவதில் சிவநிந்தை முதலிய சிற்சில நிமித்தமேயென் றெண்ணுகின்றேன். அத்திப்பழத் துள்ளிருக்கும் புழுவின்கதிபோல் லக்ஷ்மியோடுகூட நாராயணன் லயமடைகின்றான். சிவநிந்தையால் ஜராமரண ஜன்ம நாசங்களை யடிக்கடி அடைந்து எண்ணிறந்த துக்கங்களையனுபவிக்க வேண்டியது அவசியமே. அத்திமரமானது அடிக்கடிக் காய்த்துப் பழுத்துப் பழங்கள் நிறைந்திருக்கவும் அடிக்கடி காட்டுத்தீ பற்றிக்கொள்ளும்போதெல்லாம் அக்கனிகளும் அதனுள்ளிருக்கும் கொசுகு முதலிய பூச்சுகளும் எப்படி மரணமடைகின்றனவோ அப்படியே தேவர் முதலியவர்களும் சிவநிந்தையினாலேயே அடிக்கடி மரிக்கின்ற

னர். சங்கரத்வேஷமெனும் விஷாக்னியானது பானம்பண்ணப்பட்டால் அது பானம்பண்ணினவர்களை ஏன் ம்ருத்தியுவினிடம்சேர்க்காது? விவேகஹீனனாகிய நீசன் மஹாதேவனது பிரபாவத்தைஒருக்காலுமறியான். அவன் இதர தேவர்களுக்குச் சமானனென்றே மஹாதேவனை மகா மோகத்தால் மயங்கி நினைத்து விட்டிற்பூச்சு தீயில் வீழ்ந்து நசிப்பதுபோல் நசிக்கின்றான். ஆகலால் மஹேச நிந்தையெனும் நெருப்பில் நாராயணாதி சகலரும் வீழ்ந்து மரித்தனர். அதன்பின்னர் வைகுண்டம் சத்தியலோகம் சுவர்க்கம் முதலிய வுலகங்களில் அவரவர் அதிகாரத்தினின்று உலகங்களை ரக்ஷிப்பதற்காகத் தம்மால் சிருட்டிக்கப்பட்டகணங்களை யிருக்கச்செய்தார். அக்கணங்களும் சிலகாலமங்கிருந்து தத்தமதிகார முறைமையைச் செய்து அதனிடம் வெறுப்பு வந்து எல்லோருமா யொருங்கு கூடிச் சிவத்தியான பாராயணர்களாய்க் கயிலை வந்து நந்திதேவரை வணங்கித் துதித்தனர். அவர்களை நந்திதேவரும் நோக்கி ஓ கணங்களே! ஏன் இங்கு வந்து விட்டீர்கள். உங்களுக்கு இறைவனாலருளப்பட்ட அதிகார முறைமையை விடுவதுசிதமாகுமோ? மஹேஶ்வர ராக்ஞையாகையால் அவ்வவ்வதிகாரம் பிறழாது அவ்வப்பதத்தைப்பரிபாலித்து வருவதே உசிதமாகுமென்றுகூறக் கணங்கள் ஓ சுவாமி! பூர்வம் நாங்கள்செய்த பெரும் புண்ணியமாகிய சிவபூஜையால் காணாபத்யம் பெற்றனம். அதனைவிடுத்து வைகுண்டாதிகளில் சிவபூஜைசெய்துகொண்டு கைலாயவாச சுகானுபவத்தை விடுத்து மூடனைப்போல் வசிப்பதுந் தகுதியோ? நாங்கள் வைகுண்டவாசம் வேண்டுமென்று தவஞ்செய்யவில்லையே. கைக்கெட்டிய க்ஷீரத்தைவிடுத்து கரவற்றபசுவை விரும்புவாருமுண்டோ? பூர்வம் பலகாலும் வைகுண்டாதி பதத்தையே பெற்று அதனை விடுத்துப் பலகோடி தவத்தால் பின்னர் சிவபதங்கிடைத்தது. அதனையும்விடுத்து மீண்டும் வைகுண்டாதிபதத்தை விரும்புவது எப்படி? புத்திமான் சுவச்சமாகிய பதத்தை விடுத்து துச்சமாகிய பதத்தில் மனதைச்செலுத்துவானோ? வைகுண்டம் சுவர்க்கமுதலிய பதங்களெல்லாம் சிறிதுமெங்களால் விரும்பப்படுவதில்லை. உன்னதமாகிய ரத்னபீடத்திலிருந்து சாமான்னியமாகிய மற்றோரிடத்தும் வாவிம்வகி விரும்புவானோ? ஊஷர் பூமியில் வசிப்பவனாயினும் தன் தேசத்தில் வசிப்பதையே விரும்புவானன்றோ? ஓ சுவாமி! போதும் போதும்! சத்தியலோக வாசம் போதும்போதும்! சத்தியலோக வாசத்தில் பொருட்டா சந்திர மௌளியைப் பூசித்தோம்? ஓ சுவா



மி! அப்பதங்களில் வசிப்போமாயின் எங்களது ஜீவனம் வீணே! பால் கலந்த அன்னத்தையே கிடைக்கப்பெற்றுப் பரமசுகமாய்ப் புசிப்பவன் அதனை விடுத்துக் கோக்ஷூர (நெரிஞ்சில்) த்தைப் புசிக்க விரும்புவதுண்டோ? நாங்கள் எப்போதும் கைலாயகிரி வாசத்தையே விரும்புகின்றோம். அதற்கு விக்னமாகவா இவ்வைகுண்டவாசம் வந்தது! அதிகோரமாகிய தவத்தைச் செய்தது கைலாய வாசத்தை விரும்பியே. அதற்கிடையூறாய் எனிப்படி விபரீதம் விளைந்தது? வைகுண்டத்தில் வசிப்பதால் பிரளயத்தால் நாசமும் இடையிடையே அநேகதுக்கமும் அநுபவிக்கவேண்டிவருமாதலால் அது துச்சமென்றே நினைத்து வாந்திசெய்த அன்னத்தைப்போற்றள்ளி எக்காலத்திலும் அழியாதபதமன்றோ எம்போன்றவர் விருப்பத்தக்கது என்று கூறினர். இங்ஙனம் அவர்களது வார்த்தையைக் கேட்டு நந்திகேஶ்வரர் மிக்க சந்தோஷத்துடன் மீண்டும் அவர்களைப்பார்த்து ஓ கணங்களே! இன்னுஞ் சிறிதுகாலஞ் சென்றபின்னர் உங்களது கோரிக்கை நிறைவேறும். அதுவரையிலும் இறைவனாக்ஞையின்படியிருங்கள். இப்பொழுது மத்தியானகாலம் சமீபிக்கின்றது. உமை சிவாராதனஞ் செய்துகொண்டிருக்கின்றாள். சிவனும் அதையாதரவுடன் கிரகித்துக்கொண்டிருக்கின்றனர். இப்போது நைவேத்தியஞ் செய்யுஞ் சமயமாதலால் உங்களோடு காலதாமதஞ் செய்வது தகுதியல்ல. யான் இப்போதேசென்று உமாசகாயனது பாதாரவிந்தத்தைப் பூசிக்கவேண்டும். சிவலிங்கபூசை செய்யவேண்டிய விசேஷகாலம் சூரியன் மத்தியானத்தை யடையும்போதே யாதலால் அதனைவிடுத்து இப்போது இங்கு தாமதிப்பது தகுதியல்ல. நீங்களும் இச்சமயத்தில் சிவபூசைசெய்யாமலிருக்கலாமா? சிவார்ச்சன பாராயணர்களாயிருப்பவர்களே சிவனையடைகின்றனர். அங்ஙனம் செய்யும் சிவலிங்க பூசையானது பன்னெடுங்காலம் சுகசம்பத்துக்களை யநுபவிப்பதற்கேதுவன்றோ? ஆச்சரியம்! சந்திர மௌளியின் பாதாரவிந்தத்தைப் பூஜிக்கும் பெரியோர்களே சகல சுகபோகத்துடன் சிரஞ்சீவிகளாயிருக்கின்றனர். சிவபூஜை செய்வதினிமித்தமே வேண்டும் திரவியத்துடன் கூடி பரமசாந்தரான யோகிகளாகின்றனர்.

இப்போது காலதாமதஞ்செய்தால் சாம்பாபராதம் நேரிடும். அச்சாம்பசிவனோ காலதாமதத்தைச் சஹிக்காதவர். அம்பிகையையும் பூசிக்குங்காலமிஃதே யாதலால் அவர்களுக்கு அப்பிரீதியுண்டாகாமல் பிரீதிவரும்படிக்குள்ள காரியங்களையே செய்யவேண்டு

மென்று கூறினர். அதனைக்கேட்ட கணங்கள் நந்திதேவரை வணங்
கிச் சென்று தத்தம் ஸ்தானங்களிலிருந்து அதிகாரம் நடத்திவந்
தனர். இது இங்ஙனமிருக்க மஹாதேவன் தீர்த்தேசத்தை யாஸ்
ரயித்து அங்கு மிக்க சிரத்தாபக்தியுடன் தவஞ்செய்துகொண்டிருக்
கும் சாம்பவபுங்கவர்களை யநுக்கிரகித்து வரவேண்டுமென் றவ்
விடம் வந்தனர். அங்கு எண்ணிறந்த பல்லாயிர முனிவர்கள் தவஞ்
செய்திருந்தனர். அக்கூட்டத்தில் தருமமூர்த்தி என்னும் பெரியவர்
பரமசாந்தராய்ச் சடைமுடி தரித்தவராய் ஏராளமான விபூதிருத்தி
ராக்ஷங்களை யாபரணமாக வணிந்தவராய்ச் சிவாசாரம்பூண்டு ஏகாக்
ரப்பட்ட மனத்துடன் பதினாயிரங்கல்பம் தவஞ்செய்தார். அப்படி
யே மற்றும் பன்முனிவர் அத்தீர்த்தத்திலேயே சிவபூஜாபராயணர்க
ளாய் மேனிமுழுவதும் விபூதிபூசித் திரிபுண்டரமணிந்து ருத்திராக்ஷ
மாலைகளால் தேகத்தை மறைத்துச் சிலர் ஆகாரமின்றியும் சிலர்
ஜலத்தைப் புசிப்பவரும் சிலர் சருகைப் புசிப்பவரும் சிலர் திர
ணங்களைப் புசிப்பவருமாயிருந்து சிவபெருமானைப்பூசித்து மகாதே
வனைத் தியானஞ்செய்துகொண்டு ஆனந்தக்கண்ணீர்ப்பெருக்குடன்
பரவசமாய்ச் சிலர் கூத்தாடிக்கொண்டும் சிலர் புலம்பிக்கொண்டும்
சிலர் சிரித்துக்கொண்டும் சிவத்யானானந்த பரவசர்களாயிருந்தனர்.
சிலருக்கு மரவுரியேவஸ்திரங்கள். சிலருக்கு இலைகளே வஸ்திரம். சில
ருக்கு இடையில் மாத்திரம் வஸ்திரமும் சிலருக்குக் கையில் மாத்தி
ரம் வஸ்திரமும் சிலருக்குத்தொடையில் மாத்திரம் வஸ்திரமுமிருந்
தன. சிலர் விபூதியையே வஸ்திரமாயும் சிலர் ருத்திராக்ஷங்களையே
வஸ்திரமாயும் தரித்திருந்தனர். அவர்களெல்லோரும் சிவநாமஜபத்
திலும் சிவகதையிலும் பேராவலுடையவர்களாயிருந்து உமையொரு
பாகனாகிய மஹேஸ்வரனை ஹ்ருதயகமலத்திற் றியானித்து மானத
பூசைசெய்து சிவநாமங்களையும் கானஞ்செய்துகொண்டிருந்தனர்.
மஹேஸ்வரன் அவர்களைப்பார்த்து நந்திதேவரைக்கூப்பிட்டு ஓ நந்தீ
சா! இச் சிவார்ச்சகர்களைப் பார். இவர்களெல்லோரும் சிவபூஜை
யொன்றையே விரதமாகக்கொண்டிருக்கின்றனர். இது தவிர மற்றெ
தனால் சிவப்பிரீதியுண்டாக்க வியலும்? தவத்தினாலாவது தானத்தினா
லாவது எமக்குப்பிரீதியுண்டாவதில்லை. சிவலிங்கார்ச்சனத்துடன்
கூட இவைகளுமிருந்தாலொழியப் பயன்படாது. உன்னதமாகிய சிவ
லிங்கத்தையர்ச்சிப்பதில் எமக்குண்டாகும் பிரீதியானது வேதபா
ராயணஞ்செய்வதாலும் அநேககோடி தானங்களாலுமில்லை. யோகத்தை
விரும்பியாவது எவன் சிவபூஜைசெய்கின்றானோ அவனிடத்திலுமெ



மக்கு மிக்கபிரீதியுளது. பூர்வம் யாருமனுபவிக்காத அபாரபோகங்
கள் எப்போதும் அவனுக்கே விளங்குவன. லிங்காராதன மஹிமை
யை நன்கறிந்தவர் யாருமில்லை. இவர்களெல்லாரும் இப்படிப்பட்ட
பூஜைசெய்திருப்பதினால் இவர்களுள் ஒருவர் விஷ்ணுவாயும் ஒருவர்
பிரமனாயும் ஒருவர் மகேந்திரனாயும் மற்றவர் ஒவ்வொருவரும்
ஒவ்வோர் திசைத்தலைவராயும் ஆகட்டும். மற்றுமுள்ளவர்கள் ஏனைய
தேவர்களாக ஆகுக. அன்றியும் இலக்ஷ்மி சரஸ்வதி நக்ஷத்திரங்கள்
இந்திராணி முதலியவர்களாகவும் ஆகுக. அவ்வவர் பதத்தில் அவ்
வவரிருந்து தேவசம்பத்தைப்புசிக்கட்டுமென்று கூற அவருடனே
அம்முனிவர்கூட்டம் வந்தடைந்தனர். அவர்களும் நந்திதேவரைத்
தரிசித்ததும் சரேலென வீழ்ந்தெழுந்து நமஸ்கரித்துப் பூசித
தஸ்தோத்திரஞ்செய்தனர். அக்கூட்டத்தில் தர்மரதரென்று பெயரிய
ஒருமுனிபுங்கவரைப்பார்த்து நந்தீசர் ஓமுனிவரே! உமக்கு விஷ்ணுத்
வங்கொடுக்கப்பட்டது என்று கூறி அப்படியே ஏனையமுனிவர்களை
யுங் கூப்பிட்டு நான்முகத்துவம் இந்திரத்துவம் திக்பதித்வம் முதலி
யவற்றையுங் கொடுத்து அவ்வவ்வுலகிற்கு அதிகாரமுறை நடத்தும்
படி யனுப்பினார். அம்முனிவர்களும் நந்திதேவர் ஆக்ஞையால் வை
குண்ட முதலிய வுலகங்களை யடைந்து தத்தம் அதிகாரமுறை வழு
வாது வசித்துவந்தனர். ஓ அந்தணர்களே! இத்தகைய மஹா பா
க்கியத்திற்குக் காரணம் சிவலிங்கபூஜையே. நாரதர்:-ஓ அந்தணர்
களே! இப்புண்யகதையைக் கேட்டு அகமகிழ்ந்து அக்னி கேசர்
முதலிய சகல முனிவர்களு மீண்டும் கவுதமரை நோக்கி ஓ சுவாமி!
பிராம்மணர்களுக்கு முக்தி எதனால் கிடைக்கும்? அதனைக்கூறியருள
வேண்டுமென்று பிரார்த்திக்க கவுதமர் கூறுவது. ஓ முனிவர்களே!
சாம்பவர்களுக்கு முக்தி கையிலுள்ள நெல்லிக்கனி போல என்பது
வேதங்களாலும் நிர்ணயிக்கப்பட்டுளது. மகாதேவனிடத்தில் பக்தி
திடமாயிருக்குமானால் அத்துடன் முக்தியெனும் மங்கையும் கூடவி
ருக்கின்றாள். அத்தகைய பக்தி சிறிது குறைந்திருக்குமாயின் முக்
திமங்கைபிரிவாள். அப்படிப்பட்ட மகாதேவ பக்தியும் அநேககோடி
ஜன்மங்களில் செய்யப்பட்ட நற்புண்ணியங்களாலேயே கிடைப்பதா
கும். கோரமாகிய தவத்தாலும் எண்ணிறந்த பற்பல தானங்களா
லும் மகாதேவனிடம் பக்தியுண்டாகும். விபூதியை வாழ்நாள்களில்
சிறிதும் வழுவாது உத்தூளனஞ் செய்துவருவதினாலும் அங்ஙனமே
ருத்திராக்ஷ தாரணத்தாலும் ஓர் தினமூர்க்கவறாது சாம்பவருக்கு
அன்னதானஞ் செய்வதாலும் சாம்பவர்களின் பொருட்டுக் கோடி

கோதானஞ் செய்வதாலும் கோடிகன்னிகாதானஞ் செய்வதாலும் எப்போதும் மஹா சாம்பவர்களைச் சேவிப்பதாலும் சிவாலயத்தில் பில்வ விருக்ஷம் பயிர் செய்வதாலும் சிவலிங்கத்தில் மலர்க்குவியல்களைப்பக்தியுடன் சமர்ப்பிப்பதனாலும் சிவாலயத்திற்குத் தடாகமுண்டாக்குவதாலும் வாபீகூபாதிகளைப் பிரதிஷ்டை செய்வதினாலும் தீபமாலை சமர்ப்பிப்பதினாலும் சிவாலயத்தில் மண்டபவரிசைகளையேற்படுத்துவதாலும் மகாதேவனிடம் உறுதியாகிய பக்தியுதிப்பது.

பூர்வம் குருதேசத்துக் கதிபதியாகிய ஓரரசன் அரண்யத்தில் ஓர் பில்வ மூலத்திலுட்கார்ந்து தியானஞ்செய்துகொண்டிருக்கும் வசிட்டமாமுனிவரைக்கண்டு நமஸ்கரித்துப்பிரதக்ஷிணஞ்செய்துபில்வபத்திர முதலியவைகளால் பூசித்து அஞ்சலிசெய்து மிக்க விநயத்துடன் சாம்பவசிரேஷ்டராகிய முனிபுங்கவரே! சுவாமி! வேட்டையினிமித்தம் இம்மாகானம் வந்து புகுந்தேன். இப்போது குருவாகிய தேவரீரது தரிசனமகிமையால் தர்ப்புத்தி தொலைந்துவிட்டது. பில்வவிருக்ஷங்களடர்ந்த இவ்வனத்தில் எத்தனையோ முனிவர்கள் விளங்குகின்றனர். அவர்களையெல்லாம் தரிசித்தேன். சிரௌதாக்னியினின்றுமுண்டாகிய விபூதிராசிகளையும் சகல பாபங்களையும் நிவாரணஞ்செய்யும் ருத்திராக்ஷ விருக்ஷங்களையும் அதனடியில் விளங்கும் எண்ணிறந்த நர்மதாலிங்கங்களையுந் தரிசித்தேன். இன்னமும் பில்வவிருக்ஷத்தினடியில் பில்வபத்திரங்களால் பூசிக்கப்பட்ட எண்ணிறந்த லிங்கங்களையும் தரிசித்துப் பரமானந்தமடைகின்றேன். சிவபூசைக்குபயோகமாகும் விருக்ஷவ்ளோ தன்யங்களாவன. அன்றியும் முனிவர்களும் அங்குள்ள கோக்களும் விபூதி ருத்திராக்ஷமணிந்து விளங்கும் நெற்றியுடன் சிவலிங்கத்தைப் பூசிக்கின்றனர். காற்றைப்புசித்தும் நீரைப் புசித்தும் எவ்வுணவுமின்றியும் பக்தியுடன் சிவலிங்கத்தைப் பூசித்து அம்முனிவர்களெல்லோரும் ஆனந்தக்கண்ணீர்ததும்ப விளங்குகின்றனர். சுத்தமாய் நிர்மலமான தீர்த்தத்தில் அலம்பியதாகிய பில்வபத்திரங்களைச் சிவலிங்கங்களில் மலைமலையாய் அருச்சித்துச் சமர்ப்பிக்கின்றனர். சிவலிங்கங்களில் சென்ற திருஷ்டியானது மற்றெவ்விடத்திலும் செல்லாமையால் அப்புண்ணியவான்கள் சிறிதும் சலிக்கப்பெற்றிலர். காமுகர்களுக்குக் காதலியிடம் எவ்வளவு தீவிரமாய்ச்சென்று மற்றையதில் சிறிதும் சலிக்காதிருக்குமோ அதுபோலவே அவர்களது திருஷ்டியும் மகாலிங்கத்தை விட்டுச் சிறிதும் சலியாது தாரரூபமாயிருக்கின்றது.





இது மகாபாக்கியமன்றோ? இப்புண்ணியத்தை யானும் பாக்கியவசத்தாலேயே தரிசித்தேன். யானும் இங்குவந்து வெகுகாலமாகியது. இதுகாறும் பார்க்காத புண்ணியத்தை இன்று பார்க்கப்பெற்றேன். இனிச் சம்சாரபந்தத்தில் சிறிதும் மனஞ்செல்லாது. சம்சாரபந்தங்களுள்கட்டுப்பட்டவர்களுக்கு மோக்ஷ சாதனங்களில் முக்கியமாயுள்ளது யாது? அதனையுரைத்தருளுங்களென்று பிரார்த்தித்தான். இங்ஙனம் பிரார்த்திக்கும் அரசனைநோக்கி வசிட்டர் ஓ அரசனே! சம்சாரபாசம் நசிக்கவேண்டுமானால் பசுபாசங்களை விமோசனஞ்செய்விப்போரும் காலகாலரும் மஹாருத்திரருமாகிய பசுபதியையே தினந்தோறும் வழிபடுவீராக. ஆதலால் இங்கு சிவலிங்கார்ச்சனஞ்செய்வீராக. அதனால் அப்பாசமொழியும். அஃதொழிந்த வேனையவற்றால் அல்ல. ராஜ்யபோகத்தைவிடுத்து இங்கு சிவபூசனைசெய்யும். செய்தால் முத்திகிட்டும். அநித்தியமாகிய ராஜபோகத்தில் சிறிதும் இச்சைகொள்ளற்க. பாக்கியமிருக்குமானால் சிவார்ச்சனை செய்வீர். பாக்கியங்களின் பயனெல்லாம் இஃதே. சிவலிங்கார்ச்சனத்தினாலேயே எப்போதும் பொழுதுபோக்குவதால் காலபயமும் அற்றுவிடும். இதுமுதல் உன்னால் ஆர்ச்சிக்கப்பட்ட சகல பொருளையும் சிவார்ச்சனத்தின்பொருட்டுபயோகப்படுத்துவீராயின் உமது சன்மம் சபலமாகும். அல்லாவிடில் இத்தனையெல்லாம் துக்கத்தின்பொருட்டுச் சம்பாதித்ததாகும். மணிகளால் சங்கரின்பொருட்டு அற்புதமாகிய கட்டடங்களை அமைத்திடும். திவ்விய ரத்னங்களிழைத்த ரதத்தைச்செய்வித்து அதனையுபயோகித்து உற்சவஞ் செய்விப்பீராக. மலைமலையாய் திவ்யான்னங்களைச் சிவநிவேதனஞ் செய்வீராக. இதெல்லாம் சிவகிருபைக்கு ஹேது. இன்னும்யாதுரைக்கவேண்டும்? உமக்கிருக்கும் தனங்களையெலாம் சிவனுக்குபயோகப் படுத்துவீராயின் உமது சன்மம் சபலமே. திவ்யோபசாரத்தோடு கிரீசனையர்ச்சித்தால் சம்சார பயம் நீங்கப்பெறலாம். தன் வாழ்நாளிலேயே சகல தர்மங்களையும் செய்யவேண்டும். அப்படிச் செய்யுந்தருமமே தருமமாகும். சிவபூசைக்காகிய தருமமே சர்வ தருமங்களினும் உத்தமமாயுளது. மற்ற தர்மங்களையெலாம் தர்மா பாசமென்றே யறியவேண்டும். இதே உமக்குபதேசம். இதனால் சம்சாரபாசம் நீங்கினவராவீர். தேகம் களத்திரம் புத்திரன் மித்திரன் இவைகளில் சிறிதும் ஆசைகொள்ளாதீர். பத்தினியின் முகத்தாம்பூல ரசமுமிழ்ந்துள்ள கிருகத்தில் சிறிதும் ஆசைகொள்ளாதிரும். நீர் மிக்க வயது சென்றவராயிருக்கின்றீர். இனிச்சிறி

தும் அவ்வாசை கொள்ளக்கூடாது. மாம்சபிண்டமாகிய மங்கையின் தனங்களில் சிறிதும் மனஞ் செலுத்தக்கூடாது. மங்கையின் சரீரத்தில் அவயவமொவ்வொன்றிலும் மாம்ச கிரந்தி பாவனையுடன் வெறுப்படைந்திரும். யௌவனத்தினால் உன்மாதங்கொண்டு காமச்சுரத்தாற் செய்தகாரியங்களெல்லாம் அகிர்த்தியமென்று நன்கறிந்து அவைகளை வெறுத்துப் பச்சாத்தாபமடைந்திரும். மூத்திரபாத்திரங்களாகிய காந்தையின் காத்திரங்களில நேத்ரசம்பந்தம் சிறிதும் வேண்டாம். தருணியை விஷமென்றறிந்திடுக. ஓ அரசனே! உமக்கு விஷபானஞ் செய்வதிற் பிரியமுளதோ? அது சிறிதுமிருக்கக்கூடாது. அந்தோ! எந்த மங்கையின் சரீரம் அமுதமாகவும் சந்திரனாகவும் கொண்டாடப்பட்டுளதோ, எந்தமங்கையின் சரீரமானது பரமசுகசாதனமென்றும் சிருங்காரப் பிராணமென்றும் எண்ணப்படுகின்றதோ, எந்தமங்கை சரீரம் சிறிது நேரம் தன் கண்ணுக்குப் புலப்படாதிருந்தால் யான் மகா துர்ப்பாக்கியவான், என்னிலும் துக்கியாருமில்லை, யான் மஹாபாபி, என்காதலியின் மேனியைக்காணாது எங்ஙனஞ் சகிப்பேன், எனது பிராணன் இனியிராது, யான் யாது செய்வேன் என்று பலவாறாய்ப் பிதற்றித்திரியும்படியாகின்றதோ அம்மங்கையே மரித்து விட்டாளானால் அந்நாயகனே யேனையோர்களை நோக்கி அந்தோ! பிணம் நாறுகின்றதே! பார்ப்பதற்குக்கூட வெறுப்பாயிருக்கின்றது, சீக்கிரமெய்த் தூக்கிச்சென்று தகனஞ்செய்துவிடவேண்டும், அதிக நேரம் வீட்டில் சவமிருக்கக் கூடாதன்றோ என்று கூறக்கண்டிலையோ? ஆதலால் நீர்க்குமிழி போலும் வான்மேகமிருகம்போலும் கணந்தோறும் மாறிக்கொண்டிருக்கும் இச்சம்சார துக்கமயமாகிய பொருள்களைச் சுகமென்று நினைந்து கலங்கவேண்டாம். ஆதலால் சிறிதும் அப்பொருள்களில் அவாக்கொள்ளாமல் சிவபூஜையே பரமென்று கருதியிரும். இன்னுமும் உமக்கு விஷயவிருப்பமிருப்பது உசிதமோ? கிழத்தன்மையால் வருந்தும் நும்போன்றவரும் விஷய சுகத்தை விரும்புவது தகுதியோ? ஆதலால் விஷய சுகவிருப்பத்தை விட்டிரும். ம்ருத்யுஞ்சய அர்ச்சனையே ஞானத்தின் பரிபாகமாயுளது. யௌவன முடையோன் தருணமங்கையை விரும்புவதே தகும். நீர் மிகவுங் கிழத்தன்மை யடைந்தும் அவ்விஷய இச்சையை விடாமலிருப்பது தகுதியல்ல. என்வாக்கியத்தை உறுதியாய் நம்பி சங்கரபூசையைச்செய்யும். அவரது கருணையின் பொருட்டே சகல முனிவர்களும் யௌவன பருவங்கடந்தவுடன் மங்கையாதி விஷயங்களில் அற்பமேனும்



விருப்ப மில்லாமல் இவ்விடம் வந்து பில்வவிருக்ஷத்தடியில் பூசை செய்துகொண்டிருக்கின்றனர். பரமவைராக்ய சம்பந்நர்களாயுமிருக்கின்றனர். மூடர்களுக்கே மங்கையர்களிடம் விசேஷ விருப்பமுண்டாகும். அவ்விருப்பு மகா ரோகத்துக்கு ஹேதுவாகும். மங்கையினங்கம் ரோக காரணத்திற்கும் ஹேது என்றுலகில் பிரசித்தமன்றோ? அங்கசங்கமமானது ஜ்வலிக்கும் அங்காரதாங்கத்தில் சிங்காரமென நினைத்து வீழ்ந்து அல்லற்படுவதேயாகும். ஆதலால் மங்கையின் சங்கம் கூடவேகூடாது. புத்திரகாமமிருக்குமாயின் (சந்ததி காமம்) ருதுகாலத்தில் மங்கையுடன் கூடுக. ஆயினும் அதன்பயன் சந்ததியொன்றே ஆதலால் இன்பத்தின்பொருட்டு மங்கையின் சம்பந்தமெனும் மோகத்தை விட்டுவிடும். உமக்கிப்போது சாமபவீதி க்ஷைசெய்து வைக்கின்றேன். நீர்விருபாக்ஷனை யர்ச்சித்துக்கொண்டு முத்தியென்னும் மங்கையைக்கூடிப் பேரின்ப மடைவீராக. அம்முத்தியென்பதே மஹாநந்தமெனப்படும். அப்போனந்தத்தை யளிப்பவனும் பரமானந்தனாகிய பரமசிவனேயாதலால் போகமோக்ஷங்களுக்கேதுவாயிருக்கின்ற சிவபூசையைச்செய்யும். புக்திவைராக்யமில்லாதவர்களுக்குக் கிடைக்காது. வைராக்யமும் இச் சம்சாரத்தில் சிவனுக்கு அந்நியமான தேவர்களை ஆராதிப்பதை விடுதலேயாம். அப்படியே சிவலிங்கார்ச்சனையில் விருப்பமுமிருக்கவேண்டும். சிவலிங்க விருப்பமே மங்கள மளிப்பதாகும். சர்வமங்களா காந்தனாகிய இறைவனும் அச்சிவலிங்கத்திலிருந்து செய்யும் பூசையையேற்றுக் கொள்ளுகிறான். சிவபூசைசெய்வோனும் ஏதோதற்செயலாய் ஸ்திரி சங்கம் விரும்புவானாயின் சிவலிங்க பக்தி நாளுக்குநாள் குறைந்துவரும். சிவார்ச்சனையெனும் அமிர்த சாகரத்தால் திருப்தியடைபவன் உப்புத்தின்பதினால் திருப்தியடைவதுண்டோ? க்ஷீரத்தினால் திருப்தியடைந்தவன் உப்புநீரைச் சிறிதும் விரும்பாது எப்படித்தள்ளுவானோ அதுபோலவே லிங்கார்ச்சனையில் பக்தியுள்ளவர் அதற்கு விரோதமாயுள்ளவைகளை யெல்லாம் தள்ளிவிடுவார். அபாஷதாகமுடையோன் சீதளமும் சுத்தமுமாகிய தீர்த்தத்தை விரும்புவதுபோல சம்சாரதாபத்தால் வாடுவோன் சிவபூஜாமிர்தத்தையே விரும்புவது நலம். சிவபூஜாவிரதத்தை விடுத்து மூடமதியானவன் சம்சார மகாபாசக் கட்டுகளினின்றும் விடுபடுவதெங்ஙனம்? சிவபூஜாவிரதத்தையே நித்யமாய்க் கருதினவன் மரணகாலத்தில் அற்பமும் பயப்படமாட்டான்.

பூர்வம் கீகடமென்னும் தேயத்தில் விசித்திரரதனென்று ஓர் அரசனிருந்தான். அவன் புத்திரபௌத்திராதி சகல பாக்கியங்க

ளூமுடையோனை ஓர் பெரியராஜ்யத்திற்கு அரசனாயிருந்தான். அவனது ராஜ்யத்தில் கோடிக்கணக்காய்ச் சிவாலயமிருந்தன. எண்ணிறந்த கோடிக்கணக்காய்ச் சிவலிங்கங்களு மிருந்தன. சிவலிங்கப்பிரதிஷ்டையுள்ள விடமெல்லாம் ரத்னமயப் பிராகாரங்களும் ரத்னங்களால் நிர்மாணஞ்செய்யப்பட்ட தீபஸ்தம்பங்களும் அழகிய மண்டபங்களும் ரத்னத்தால் நிர்மாணஞ்செய்யப்பட்ட நந்திகேசர்களும் ஆலயமொவ்வொன்றிற்கும் அருகில் எண்ணிறந்த பில்வவிருக்ஷங்களும் பின்னும் பற்பல பரிமள மலர்ச்செடிகளும் ஆலயந்தோறும் ஆயிரக்கணக்காகிய தீபமாலைகளும் நாட்டியம் கீதவாத்தியம் இவைகளும் எங்குங்காணாத பரம அற்புதமா யேற்படுத்தப் பட்டிருந்தன. அவ்வரசனும் அவ்வத் தேவாலயங்கட்குச் சென்று பூசித்து மகிழ்ந்திருந்தான். பஞ்சாமிர்தமுதலிய வபிஷேகங்களாலும் திவ்வியமலர்களாலும் திவ்வியாபரணங்களாலும் திவ்விய தூபதீபங்களாலும் திவ்யான்னபர்வதங்களாலும் கதலி மா முதலிய கனிவர்க்கங்களாலும் இளநீர் க்ஷீரம்முதலிய அமுதவர்க்கங்களாலும் ஏலம் லவங்கமுதலியவைகளுடன்கூடிய தாம்பூலவர்க்கங்களாலும் நீராஞ்சனங்களாலும் தர்ப்பணங்களாலும் ரத்ன சத்திர சாமரங்களாலும் தினந்தோறும் மகேஸ்வரனைப் பூசித்து இரவில் புசித்துவருவான். அவனுக்குச் சிவபக்த சிரோமணிகளும் மஹா வீரர்களுமாகிய புதல்வர்களிருந்தனர். அவர்களெல்லோரும் எப்போதும் சிவார்ச்சனை பாராயணர்களாகவே யிருந்தனர். அவருக்குக் கமலலோசனை யென்னுமோர் கன்னிகையு மிருந்தனள். அவளுக்குச் சமமான அழகுடையபெண் மூவுலகிலுமில்லை. அக்கன்னிகை கர்ப்பத்தில் வசிக்கும்போதே மகா பக்தியுடன் மஹாதேவரை மானதபூஜையாலே வழிபட்டும் சிவநாமங்களைக் கானஞ்செய்து மிருந்தனள். அதனால் சங்கரனும் மிக்க திருப்தியடைந்தனர். பின்னர்ப் பிரசவக்காற்று அச்சிசுவை யோனி வாய்வழி வெளிக்கொண்டு வரும்போதும் கண்களிரண்டையு மூடிக்கொண்டு உமையோர் பாகனைத் தியானித்துக்கொண்டே யிருந்தனள். உடனே வழக்கம்போல அந்தப்புரத்தி லிருக்கும் மருத்துவமார்கள் கண்களைத்துடைத்து ஸ்தன்யபானஞ் செய்துவைக்க அக்குழந்தை கண்களையுந் திறக்காமல் ஸ்தன்யபானமுஞ் செய்யாமல் யோகிபோ லிருந்தது. எவ்வளவுமுயன்றும் அக்குழந்தை கணமேனும் கண்திறவாதிருப்பதைக்கண்டு அங்குள்ள மங்கையர் அச்செய்தியை அரசனிடம் வந்து தெரிவித்தனர். அரசனும் அதனைக்கேட்டு மிக்கவிசாரமுற்றுத் தேவவுலகவைத்தியரைச் சிவத்யானபூர்வகமாய்



நினைந்தனன். உடனே தன்வந்திரியும் அமுதநும் இந்திரனிடம் வந்து அச்செய்தியைத்தெரிவிக்க இந்திரனும் அவ்விருவர்களையும் நோக்கி ஓ தேவவைத்தியர்களே! இப்போதுங்களால் செய்யமுடியாதது யாதுளது? எனிங்ஙனம் கலங்குகின்றீர்கள்? என்று வினவ அதற்குத்தன்வந்திரி ஓ தேவராஜனே! பூவுலகில் மகததேசத்தில் சித்திராதனென்னும் ஓரரசனிருக்கின்றான். அவனுக்கோர் கன்னிகை பிறந்தனள். அச்சிசு கர்ப்பத்திலேயே மகாதேவத்யானஞ்செய்துகொண்டிருந்தனள். அப்படியே பிரசவகாலத்திலும் அதன் பின்னரும் கண்ணைமூடிக்கொண்டு சிவத்யானபரையா யிருக்கின்றனள். அவளை ஸ்தன்யபானஞ் செய்விக்க வைத்தியஞ் செய்வதின் நிமித்தம் அவ்வரசன் எங்களை நினைத்தனர். யாங்கள் அங்குபோகாமலிருந்தால் சிவாபராதமாகும். சிவோபாசக சிரேஷ்டராகிய அம்மகா பாக்யவான் நினைத்தும் நாங்கள் போகாமலிருக்கலாமோ? அப்படிப்போனாலும் பயன் யாதுமில்லை. சிவத்தியான பராயணியா யிருக்கும் அக்குழந்தை அவுஷதத்தை எங்ஙனம் கிரகிப்பாள்? இதனை நினைத்தால் எங்ஙனம் போவதெனத் தோன்றுகின்றதென்று கூறினர். அதனைக்கேட்ட இந்திரன் ஆச்சரியமுற்று ஓ தன்வந்தரி! அக்குழந்தையைப் பார்க்க எனக்கும் பேராவலிருக்கின்றது. ஆதலால் இப்போதே அங்குபோய்ப் பார்க்கவேண்டும் என்று கூறி அவர்களுடன் சித்திராதனிடம் வந்து சேர்ந்தனன். அங்ஙனம் வந்ததும் மிக்க பக்தியுடன் அரசன் அம்மூவர்களையும் பூசித்துக் கைகட்டி வாய்பொத்தி நிற்க, இந்திரனும் அவ்வரசனைப்பார்த்து ஓ அரசரே! உம்மைப் பார்க்கப் பார்க்க எங்களுக்குத் திருப்தி யுண்டாகவில்லை. கணங்களாலும் பூசிக்கப்படத்தக்க பாக்யவானன்றோ நீர்? விபூதி ருத்திராக்ஷங்களால் தேகமுழுது மலங்கரிக்கப்பெற்று மகா பக்தசிரோமணியாய்ச் சகல போகங்களையும் துச்சமெனத்தள்ளிச் சிவபூஜா பராயணராயிருக்கும் உம்மைத் தரிசிப்பதினாலும் சிவபக்தி யோங்குகின்றது. உமது சபையிலுள்ளோரெவரும் விபூதி ருத்திராக்ஷந்தரித்து மஹா சாம்பவர்களாய்ச் சந்திரசேகரன்போல் விளங்குகின்றனர். சாம்பவர்களது பிரதிபிம்பம் எவரது இல்லச்சுவர்களில் காணப்படுகின்றதோ அவரது இல்லமே தன்யமாயுள்ளது. மகா பாக்யவசத்தினாலேயே உமது மனையைத்தரிசித்தோம். சிவவிலாசம் பொருந்திய இடம் ஈதே. இப்பூமண்டலமுழுதும் இம்மனையாலேயே தன்யமாயுளது. வெகுபுண்ணியப் பிரபாவத்தால் உம்மைஇவ்வுலகு அரசனாகப் பெற்றுளது. உமதில்லத்தினில் பில்வ விருக்ஷங்களும் லிங்க

கோடிகளுமே எங்குங் காணப்படுகின்றன. வளைந்த பில்வ சாகைக
ளால் அவ்விலிங்கங்கள் ஆலிங்கனஞ் செய்யப்பட்டிருக்கின்றன. கா
முகர்கள் காமினிகளால் தழுவப்படுவதுபோல் காணப்படுகின்றது.
இவைகளைத் தரிசிப்பதினாலேயே ஜன்மம் சபலமாகும். ஓ அரச
ரே! ரத்னமயமாய்ப் பூமியைச்செய்து அழகிய லிங்கங்களையும் ஸ்தா
பித்து எங்கும் ரத்னமயமாய் ஜ்வலிக்கின்றதே. இதனைப் பார்க்கப்
பார்க்க மங்கள பரம்பரை வளர்ந்தோங்குகின்றது. இதுகாறும்
யான் ஓரிடத்திலும் இம்மஹிமையைக் கண்டிலேன். இது என்ன
புண்ணியத்தால் கிடைத்ததோ! ஓ அரசனே! உமது பாக்கிய
மே மூவுலகிலும் இணையற்றபாக்யம். இஃதெல்லாம் சம்பு பூஜையின்
பயனன்றோ? பல்லாயிரம் கற்பகோடிகளில் செய்யப்பட்டுள்ள புண்
யவசத்தினாலேயே இப்பாக்யம் உமக்குக்கிடைத்திருக்கின்றது என்
று இங்ஙனம் அரசனைத் தோத்திரஞ்செய் திருக்குந் தருணத்தில்
வாசுகி என்னும் நாகராஜனும் இவ்வரசனைத் தரிசிக்கவேண்டு
மென்ற எண்ணத்துடன் ஓர் விருத்தவேதிய வுருவந்தாங்கி அரச
வைக்கு வந்தனன். அவன் அவ்வரசனைப் பார்த்து மிக்க மகிழ்ந்து
ஓ அரசசிரேஷ்டரே! ஓசிவபூஜகரே! ஓசாம்பவ சிரேஷ்டரே! சந்திர
சூடருக்கு நிகராய் விளங்கும் சர்வோத்தமரே! உமது சிவபூஜாப்
பிரபாவத்தை என்னென்று கூறுவேன். உமக்குச் சகலபாக்யங்
களும் நிறைந்திருக்கின்றன. மானுடப் பிறவியரிது. அதனைப்பெற்றும்
சிவபக்தி வருதலரிது. அத்துடன் சிவபூசை செய்தல் மிக்க அரிது.
ஓ அரசனே! இன்று சுதினம். எனது ஜீவனமே தன்யம். எனது தே
கமே உம்மைத்தரிசித்ததினால் தன்னியமாயிருக்கின்றது. உம்மைத்
தரிசிப்பது சாக்ஷாத் சம்புவைத் தரிசிப்பதே. புண்ணியங்களின்
பரிபாகமன்றோ மஹா சாம்பவராகிய வும்மைத் தரிசிக்கப் பெற்
றது? சாம்பவசிரேஷ்டர்களது சரணாரவிந்தத்தைத் தரிசிப்பதே
அழிவிலாத புண்யம். சாம்பவசிரேஷ்டர்களது சரணாரவிந்தது
ளியே மூவுலகையும் பாவனஞ் செய்கின்றது. உலகில் பாவனங்கள்
பல விருக்கினும் சாம்பவ பாதாரவிந்த தூளிக்கிணையாய் யாதுமில்
லை. சாம்பவர்களது பாதாரவிந்தங்களில் ஆதரவற்ற மனிதர்களின்
ஜன்மம் வீணே. அவர்கள் பசுக்களேயன்றோ? சாம்பவ சிரோ
மணிகளது பாதாரவிந்ததூளியின் சம்பர்க்கம் சிறிதுண்டானால்
அது அநேககோடி ஜன்மங்களிற் செய்த மகாபாதகங்களையும் நீக்கி
விடும். சங்கரபக்தரது பாதபத்மத்தை பஜனை செய்து கொண்டிரு
ப்பவனே தன்யன். அப்படிப்பட்ட சாம்பவசிரோமணி ஒருவரிரு



ந்தால் அவரது தரிசனத்தினாலேயே சகல பாபகுலமும் பஸ்மமா
கின்றது. சங்கர பாதாரவிந்த பூஜையைத் தன்யர்களே பிராணனா
யெண்ணுகின்றனர். கற்பகோடி காலம் செய்த சுகிர்தங்களாலே
யே அவரைக்காணப் பெறலாகும் என்றனன்.

நாற்பதாம் அத்தியாயம்

முற்றிற்று

---

உ

ப்ராக்ஞாயநம:

## நாற்பத்தோராம் அத்தியாயம்.

### கமலலோசனையின் சிவோபாசனை

அதன்பின் அவ்வரசன் தேவ வைத்தியர் முதலியவர்களுடன்
குமாரியிருக்கும் அந்தப்புரஞ்சென்றனன். அவனது அந்தப்புரத்தின்
ஓரிடத்தில் சிவா, சங்கரா, ருத்திரா, என்பதாதிநாமத் தொனி
களும் ஓர் பக்கத்தில் நாட்டியமாதர் ருத்திரப்பிரீதியின் பொருட்
டுச் செய்யும் நாட்டியமும் ஓர் பக்கத்தில் சிவலிங்கார்ச்சனமும்
மற்றோர்பக்கத்தில் சிவகதாமிர்த சிரவணமும் ஆகிய இவை முதலிய
பற்பல பாக்யங்களுடன் விளங்குவதையும் பலம் புஷ்பம் ஜலகும்
பம் பக்குவான்னம் கந்தம் இவைகள் விளங்குவதையும் ருத்திரவீ
ணாத்துவனிகளின் எதிரொலிகளால் விளங்குவதையும் அவ்வரச
னது பாக்கியத்தையுங்கண்டு தேவர்கள் அவ்வரசனைத் துதித்தனர்.
பின்னர் அவன் குமாரியிருக்குமிடஞ்சென்று பார்க்கவே பரமாச்
சரிய மடைந்தனர். அவ்வரசனும் சிறிது மச்சமில்லாமல் அவளை
யெடுத்துச் சிவாபிஷேகதீர்த்தங்களால் ஸ்நானஞ் செய்வித்து மேனி
முழுதும் விபூதிபூசி ருத்திராக்ஷ மாலையைக் காது முதலிய விடங்க
ளில் தாரணஞ் செய்வித்தனன்.

பின்னர் அவன் அக்குழந்தையின்மேல் தனது கண்ணீர்ததும்
பச் சிவபெருமானை நினைந்து ஆனந்தபரவசனாய் அக்குழந்தையைத்
தூக்கிக்கொண்டு மெல்லச் சிவலிங்கத்திற் கெதிரே கொண்டுபோக
அக்குழந்தை சிறிது மெல்லக்கண்களை விழித்துச்சிவலிங்கத்தைத் தரி
சித்துப்பக்தியுடன் வணங்கியது. பிறகு சிவலிங்கத்தைத் தொட்டு
அழகிய பில்வ பத்திரங்களால் பூசித்துப் பரமானந்த மடைந்தது. ஓ
அந்தணர்களே! அவ்வற்புதத்தைப் பார்த்துத்தேவர்களும் அரசனும்

மிக்க சந்தோஷங்கொண்டு திகைத்தனர். தேவர் மலர்மாரி பொழிந்தனர். தேவதுந்துபி முழங்கியது. அவ்வார்த்தையைக் கேட்டதும் அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளெல்லாம் மிகவும் பயந்தனர். பின்னர் அரசனும் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டுப் பரமானந்தமடைந்தனன். அக்குழந்தை சிவ என்னுமிரண்டக்ஷரத்தைக் கூறியது. பிறகு மஹாதேவ மஹாதேவ என்று ஆதரவுடன் கூறும் அக்குழந்தையினது வார்த்தையைக்கேட்டு அரசன் ஒப்பிலா வானந்த முடையோனானன். இதற்குள் பிரமன் முதலிய தேவரும் சநகாதி முனிவர்களும் அக்குழந்தையைப் பார்க்க வந்தனர். அத்தேவர்களெல்லோரையும் பார்த்து அரசனும்மிக்க சந்தோஷங்கொண்டு பஸ்ம ருத்திராக்ஷந்தரித்துச் சிவநாமஞ் ஜபித்துக்கொண்டு அத்தேவர் முனிவர் கூட்டத்தை நமஸ்கரித்தனன். அத்தேவ முனிவரும் அவ்வரசன் அந்தப்புரத்தைப்பார்த்துப் பரமானந்தமுற்று இஃதோர் மிக்க ஆச்சரியம். இதற்கிணையாக எங்கும் யாம் கண்டதில்லை. எங்குபார்த்தாலுஞ் சிவலிங்கங்களும் ரத்நதீபவரிசைகளும் சிவநிர்மாலியக்குவியல்களும் அழகிய பில்வபத்திரங்களும் பரமசாம்பவர்களும் சிவத்யான பாவனையுடன் நடனமாடும் மங்கையர்களும் உருத்திர வீணாவாத்தியங்களை மீட்டிப் பரமானந்தமுறும் ருத்திரகன்னிகைகளும் ஆகிய இவைகளேயுள்ளன. சிலர் பில்வ பத்ராதிகளால் சதாசிவனை ஆனந்தங்கொண்டு பூசிப்பதும் சிலர் த்யானத்துடன் நடனஞ்செய்வதும் சிலர் சிவநைவேத்ய மாகிய பக்குவான்ன வாசனைகளால் அரண்மனை முழுவதும் வியாபிக்கச்செய்வதும் தூபங்களின் கந்தம் வீசுவதும் தீபமாலைகளால் பிரகாசிப்பதும் பின்னும் என்னென்ன சைவவிலாசங்களுள்ளனவோ அவ்வளவு விலாசங்களும் பொருந்தியிருக்கின்றன. இஃதென்ன கைலாயமோ எனப்பிரமித்துப் பிறகு ஒருவாறு தெளிந்து சாஷ்டாங்கமாய் வீழ்ந்து நமஸ்கரித்துப்பில்வபத்திர முதலிய சாதனங்களால் அச்சிவலிங்கங்களைப் பூசித்தனர். பின்னர் அரசனும் அவர்களுக்கு ரத்ந சிம்ஹாசனமளித்து அவைகளில் வீற்றிருக்கச்செய்து பில்வ பத்திர முதலியவைகளா லவர்களையர்ச்சித்து ஓ ஸ்வாமிகளே! நாராயணன் முதலிய தேவர்களெல்லோரும் சிவார்ச்சன பராயணர்களாகவே யிருக்கின்றனர். ஸ்ரீ மஹாதேவனது உபாசகர்களும் சிவப்பிரசாதம் பெற்றவர்களும் இறைவனுக்கு மிகக் கிட்டியவர்களுமாகிய வுங்களை யான் காணப்பெற்றது யான் செய்த புண்ணியமே. நீங்கள் எவ்விடம் போகவிரும்புகின்றீர்கள். இவ்விடமே யிருக்கவேண்டும். ஸ்ரீ



மஹாதேவ கிங்கரர்களாகிய உங்களை விடுத்து யான் தனியே யிருப்பதுமுண்டோ வென்றிவ்வாறு கூறியதைக்கேட்டுத் தேவர்களெல்லோரும் மஹாசந்தோஷமடைந்து அரசனைப்பார்த்து ஓ அரசரே! நீரே தன்யராகின்றீர் என்று கூறிப் பிறகு விபூதி ருத்திராக்ஷமணிந்து சிவத்யான முதப்பெருக்கை அருந்திப் பரமானந்த முற்றிருக்கும் அக்கன்னிகையையும் பார்த்து நமஸ்கரித்தனர். அதனைப்பார்த்து அரசன் ஆச்சரியமுற்று மகான்களாகிய தேவர்களும் நமது குழந்தையை நமஸ்கரிக்கின்றனரே. இது என்ன பாக்யம். இவள் முன்னைப்பிறவியில் என்ன பாக்யஞ் செய்திருக்கின்றனள். அதனைக் கேட்கவேண்டுமென்று தேவர்களைப் பார்த்துப் பிரார்த்திக்க அதற்குத்தேவர்கள் ஓ அரசரே! இக்குழந்தை ஸ்ரீ சைலநாதர் ஆலயத்தில் ஓர் பிராம்மண கன்னிகை. இவள் தந்தை ஸ்ரீ சைலநாதனைக்காலையிலும் மாலையிலும் மிக்க பக்தியுடன் பூசித்து வந்த சிவார்ச்சகர். அவர் மத்யான்னத்திலும் மிக்க பக்தியுடன் பற்பல பூஜாத்திரவியங்களால் பூசித்து வந்தனர். அப்படி அவர் பூசனைசெய்யும்போது இவள் பக்கத்திலிருந்து பக்தியுடன் தீபமாலை யேற்றுவதும் அத்தீபங்கட்குக் கபிலைப் பசுவின் நெய்யைச் சுத்தமாயிருப்பதைச் சம்பாதித்து வந்து அவ்விளக்கிலிடுவதும் தூபதீப கைங்கரியஞ் செய்வதும் பக்குவமாயும் அறுவகையுண்டியுடன் கூடியதுமாகிய அன்னாதிகளைச் சிவநிவேதனத்துக்குச் சித்தஞ் செய்து வைப்பதும் பக்தியுடன் நடனஞ்செய்வது மாகிய கைங்கரியஞ் செய்து வந்தனள். பிறகு தெய்வகதியாய்த் தாராதீர்த்தக்கரையில் விபூதி தரித்த தேகத்துடன் பிராணனைத் துறந்தனள். அவள் அப்புண்ணியப் பிரபாவத்தால் உமக்குப் புத்திரியாகப் பிறந்தனள். இவளது புண்யமானது இவ்வளவென்றுரைக்க முடியாது. சகல தேவர்களும் இவளை வணங்க வேண்டுமென்பதிலைய முளதோ? இவளுக்கு ஆகாரத்திலுங் கூட விருப்பமில்லை. ஆபரண முதலியவைகளிலும் விருப்பமில்லை. இவள் எப்போதும் சிவநிவேதனத்திலும் சிவலிங்கார்ச்சனத்திலும் சிவநாம ஜபத்திலுமே மிக்க ப்ரீதியுடையவள். இவள் எப்போதும் யௌவனத்துடன் கூடியிருப்பவளேயன்றி ஜராரோகம் மரணமுதலியவற்றை யடையாள். சிவகானத்திலும் சிவமந்திரஜபத்திலும் சிவாலய வாசத்திலுமே பேராவலுடையவளாவாள். இவளுக்கு விவாகத்திலாவது புருஷர்களிடத்திலாவது விருப்பமுண்டாகாது. பிரமசரியத்துடன் கௌரீசனைப் பூசிப்பதிலேயே விருப்புறுவாள். இவளுக்கு அங்க சவுந்தரியம் நாளு

க்கு நாள் வளர்ந்தோங்கும். இவள் எப்பொருளை விரும்பினாலும் அதுவுடனே கிடைக்கும். அப்படி ஸ்மரண மாத்திரத்தினாலேயே ஏராளமான சாதனங்களைச் சம்பாதித்துக்கொண்டு மஹாதேவனைப் பூசிப்பாள். பிரீதியுடன் மஹாதேவ சந்நிதியில் நாட்டியஞ் செய்வாள். மத்யான்னத்திலும் சிவபூஜையைக் கைவிடாள். சிவபூஜையையே ஜீவனமா யெண்ணுவாள். அதற்கிடையூறு யாதும்வாராது. இரவிலும் நித்திரை செய்யாள். எப்போதும் ஜாக்ராவஸ்தையுடனிருந்து சிவத்யான பரையாகவே காலங்கழிப்பாள். சிவாலயங்களில் திருவலகிடுதல் முதலிய சிவகைங்கரியஞ்செய்து இச்சரீரத்தோடு கைலாயமடைவாள். ருத்திர கன்னிகைகளுடன் கூடிப் பார்வதியைச் சேவித்துப் பரமானந்த மெய்துவாள். இவள் கைலாய யாத்திரை செய்யும்போது தேவதுந்துபி முழங்கச் சகலகணங்களும் எதிர்வந்து விமானத்திலேற்றி கைலாயங் கூட்டிக்கொண் போவார்கள். இவள் விஷயத்தில் மகேஸ்வரன் மிக்க ப்ரீதியுடன் அபாரகருணைசெய்வார். ஓ அரசரே! கலியில் சிவார்ச்சனை செய்வோர் மிக்க அரிது. உமது பாக்யத்தால் இவள் இங்ஙனம் வந்தனள். இவளைச் சேவித்து அப்புண்ணியம் சம்பாதிப்பதிலேயே காலங்கழிக்கவேண்டு மென்று நாங்கள் விரும்புகின்றனம். இவள் நாட்டியஞ்செய்வதைப் பார்ப்பதற்கு விரும்பி மகாதேவன் அம்பிகையோடு சகல கணங்களும் புடைசூழ இம்மண்டபம் வந்து சேருவர். சிவபெருமான் வருவதின் பொருட்டு இப்போது மகோற்சவம் நடத்தி வைக்கவேண்டும். அதற்கு இஃதே சமயமென்று கூறினர். அவ்வரசனும் அதனைக்கேட்டுக்கன்னிகையைப்பார்த்துப் பரமானந்த முற்றுச் சிவதற்பரனாய் நின்று உடனே சிவமந்திரத்தை அலங்கரிக்கும்படி ஆக்ஞாபித்தனன். வருணன் நேரில் வந்து மண்டபங்களைக் கழுவினான். குபேரன் கோலமிட்டனன். எங்கு பார்த்தாலும் ரத்ன தோரணம் புஷ்பமாலை ரத்னசத்ரம் ரத்னதுவஜம் ஆகிய இவைகளால் அம்மந்திரம் ஜ்வலித்தது. பிரதோஷகாலம் சமீபிக்கவே தேவர்களும் முனிவர்களும் விபூதி ருத்திராக்ஷங்களால் தேகத்தை மறைத்துச் சிவபூசை செய்ய விரும்பிச் சிவத்தியான பராயணர்களாயிருந்து பூசைக்காரம்பித்து பஞ்சாமிர்த முதலியவைகளால் சதாசிவனை அபிஷேகித்துப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து சிரசில் கைகூப்பிச் சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தனர். பிறகு நவயவ்வனத்தோடு கூடிய அக்கன்னிகையும் சிவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வெண்பட்டணிந்து கேசத்தைவாரிப்பின்னலாரல்முடித்து விபூதிபூசி ருத்திராக்ஷந்தரித்து



நெற்றி முதலிய விடங்களில் முப்புண்டரமாய் விபூதியணிந்து பில்வ முதலிய சாதனங்களாலும் பஞ்சாமிர்தப் பிரவாகங்களாலும் சனி நீர்முதல் முதலிய பிரவாகங்களாலும் பாவன தீர்த்தங்களாலும் பரமேஸ்வரனுக்குத் திருப்திசெய்வித்துத் திவ்யவஸ்திரங்களையணிவித்துச் சந்தனக்காப்பிட்டுப் பில்வங்களாலும் பற்பலமலர்களாலும் அர்ச்சித்துத்தீபதூபங்களாலுபசரித்துத் திவ்யபக்குவான்ன பரமான்ன க்ஷீரசார பலாதி இரசியங்களை நிவேதனஞ் செய்து கர்ப்பூரக்குவியல்களால்நீராஜனஞ்செய்து ரத்னக்குடை துவஜம் சாமரம் கண்ணாடி முதலியவைகளா லுபசரித்துப் பிரதக்ஷிண நமஸ்கார நாட்டியம் முதலியவைகளையுஞ் செய்து தொழுதனள். அவள் நாட்டியஞ் செய்ய வாரம்பிக்கவே சகல தேவர்களும் அவளது அங்கலாகவத்தைப்பார்த்து அடையும் பேரானந்தத்தையும் சிவார்ப்பணஞ் செய்து சிவத்யான பராயணர்களா யிருந்தனர்கள். பின்னர் அப்பெண்இரவில் சதாசிவனைப் பூசித்துச் சிவநைவேத்யஞ்செய்த அன்னத்தை அளிக்க அவர்களும் பேரானந்த மெய்தி அப்பிரசாதங்களை வணக்கத்துடன் பெற்று அரசனைப்பார்த்து ஓ அரசரே! நீரே தன்யர். இக்கன்னிகையால் உமது குலம் பாவனமாயிற்று. நீர் சிவாசாரபரையாகிய இக்கன்னிகா சிரோமணியைப் பெற்ற பாக்யத்தை யாதென்று கூறுவோம். எவனது குமாரர்களாவது குமாரிகளாவது மனைவியாவது சிவாசாரபரர்களா யிருக்கின்றனரோ அவனது பாக்யம் பெரும் பாக்யமன்றோ? குடும்ப போஷணம் செய்தலே பெரும் புண்யம். அத்துடன் சாம்பவத் தன்மை பொருந்திய புத்திர தாராதிகளைப் போஷித்தல் அபார புண்ணியமன்றோ? அவரிடமே சம்புவும் பிரீதியுடையவராகின்றனர். தாரங்களும் குமாரர்களும் பரமசாம்பவர்களாயிருக்கப் பெறுதல் அபாரபுண்ணிய பரம்பரைகளின் பயனே. தவப்பயனும் அஃதே. இக்கன்னிகைக்குச் சிவாராதனத்துக்குரிய சாதனத்தை வேண்டுமளவுங் கொடுப்பீராக. யாவராயினுமொருவருக்குச் சிவபூசை செய்தற்குரிய சாதனங்களைக்கொடுத்தால் அபாரசிவமடையலாம். சாம்பவர்களுக் கொத்தாசை செய்வதில் எவனது பாக்யம் பயன்படுகின்றதோ அவனிலும் பாக்யவான் ஒருவருமில்லை யென்றுகூறி யத்தேவர்களு முனிவர்களும் அக்கன்னிகையை நமஸ்கரித்து உத்தரவு பெற்றுக்கொண்டு அரசனிடமும் சொல்லிவிட்டுப் புறப்பட்டனர்.

வசிட்டர்:- ஆதலால் ஓ அரசனே! நீரும் சிவலிங்கங்களைப் பூசித்து வாரும். சைவர்களுக்குபகாரம் செய்யும். சிவபூசை செய்

வதற்கென வோர்காலத்தை விரும்பித் தாமதிப்பது தகுதியல்ல. உமக்கோ வயது முதிர்ந்துவிட்டது. க்ஷணத்துக்குக் க்ஷணம் ஆயுள் குறைகின்றது. ஆதலால் ஓர் கணப்பொழுதும் தாமதிக்காமல் ஸ்ரீ மகாதேவனைப் பூசைசெய்யும். இன்று சரிப்படவில்லை நாளைய தினம் செய்வோமென்று காலத்தைப்போக்குவது தகுதியல்ல. அது வரையிலும் சரீரம் நிலைத்திருப்பதில் என்ன நிச்சயம்! இப்பொழுதோ அல்லது சிலநாழிகைகளிலோ அல்லது சில முகூர்த்தங்களிலோ அல்லது நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ அது வரையிலும் இச்சீவனிருக்குமென்று நிச்சயிப்பது யுக்தமல்ல. ஆதலால் சிறிதும் தாமதிக்காமல் சிவபூஜனையைச் செய்யும். எந்தத்தினத்தில் அல்லது எந்த முகூர்த்தத்தில் அல்லது எந்த க்ஷணத்தில் ஜீவதசையில் நிச்சயமுளதோ அத்தின முகூர்த்த க்ஷணங்களிலேயே சிவனைப் பூசிக்கவேண்டும். தவறிவிட்டால் சீவனம் அவலமாய்விடும். சிவனை ஓர் க்ஷணமாவது அரைக்ஷணமாவது பக்தியுடன் பூசிக்க எவனது ஜீவனம் பரிபாகம் பெற்றுளதோ அவனது ஜீவனமே பயனுடையதாம். அங்ஙனமல்லாதது அவலமெனக்கூறுவது சிறிது மையமற்றது. மகாபாக்கியவான்களின் ஜீவனமே தினந்தோறும் சங்கர பூஜை செய்வதிலும் அதற்குரிய சாதனங்களைச் சேகரிப்பதிலும் செலவழிந்துவரும். எவனுக்கு எப்பொழுதும் ஈசபூஜை செய்வதில் காலஞ்செல்லுகிறதோ அவனே தன்யனிலும் தன்யன். ஈசபஜனம் துர்லபமே. அவனது பக்தி துர்லபமே. அவனைப் பூசித்தலும் துர்லபமே. அவனது பாதாரவிந்தத்தில் மனம் நிற்பதுந் துர்லபமே. அஃதே தவத்தின் பயன். ஓர் க்ஷணமாவது பக்தியுடன் சிவனை ஸ்மரிப்பவனுக்கு யமபயமில்லையென்பது வேதங்களின் துணிபு. சௌபாக்கியத்தைத் தந்தருள்வது ஈச்வர பூஜையே.

ஒவ்வொரு நிமைப்பொழுதும் சிறிதுசிறிதாய் ஆயுள்குறைந்து வருகின்றது. கோரனாகிய காலனும் வாட்டிவதைப்பான் என்னும் பயமுண்டாகின்றது. இப்படியிருக்க அஞ்ஞையால் பயமுறுகிருக்கும் வண்ணம் தக்கவுபாயம் யாதுந் தேடிக்கொள்ளாமல் வீணே வழிந்துபோகின்றான். அந்தோ எவனது மனம் பர்க்கனைப்பஜிக்க விரும்புகிறதோ அவனைச் சகல தேவகணங்களும் நமஸ்கரிக்கின்றனர். ஐஸ்வர்யங்களும் தான்யமும் தனமும் நஸ்வரங்களென்பது நிச்சயமே. தேகமும் அவ்விதமே. ஆதலால் சங்கரனைப்பூசித்து வழிபடும். இச்சம்சாரவாழ்விலுள்ள விருப்பத்தை விட்டுவிடும். தன் சுகத்தை விரும்பினால் மோக்ஷத்தையே விரும்பவேண்டும்.



உலகத்தில் அழிவற்ற சுகமதுவே. தாரங்களாலும் புதல்வர்களாலும் யாதுபயன்? தாரங்களிடத்தில் மயக்கங்கொள்வது அறியாமையாலன்றோ? அவர்கள் தத்தம் சுகத்தைவேண்டியே தத்தம் கணவரிடம் விருப்புறுகின்றனர். அஃதறியாது மிக்கதுச்சமாகிய சம்போகத்தை விரும்பி அவர்களிடம் அளவுகடந்த ஆவலைவைத்து மகாமயக்கங்கொண்டு அல்லற்படுவதுந்தகுதியா? நமது தனத்தைத் தாம் அடையப்போகிறோமென்ற வெண்ணத்தினால் தந்தை தந்தையெனக்கொண்டாடித்திரியும் புதல்வர்களாலும் நமக்கு என்ன சுகங்கிட்டும்? கோரமாகிய உருவத்துடன்வந்து பாசங்களாற் கட்டியிழுக்குங்காலனைக்கண்டு நடுங்கிக் கதறுஞ்சமயத்தில்இவைகளெல்லாம் வந்து நமக்குதவுமா? அவ்வாபத்துக்குட்படாமல் நம்மைக்காப்பாற்றுவது ஸ்ரீ காலகாலனது சரணவர்ச்சனையொன்றேயன்றோ? ஓ அரசனே! இதனால் ஆயுளின்பயன் விஸ்வேஸ்வர ஆராதனமொன்றே. கோபத்திலும் காமத்திலும் லோபத்திலும் மனஞ்செல்லவிடுத்துத் துச்சமாகிய சம்சாரத்தைப்பெரிதென்று நினைத்து மயங்குவதைவிட்டுவிடும். ஸ்ரீகாலகாலனை யுபாசனைசெய்து வருவீராக. விபூதிபூசி ருத்திராக்ஷந்தரித்துச் சுத்தமுடையோனாய்நின்று நிர்மலனாகிய பரமசிவத்தைப் பஜித்து வருவீரானால் உமக்குப் பவபயம் வாராது. பிராணனைப்போல் நினைத்துமயங்கும் பாரியை பாலன் தனம் முதலியவைகளைத் துச்சமாய்த் தள்ளிவிடும். மரணம் இப்பொழுதோ அல்லது இதற்கடுத்த யாமத்திலோ யாமறியோம். ஒவ்வொரு க்ஷணத்தையும் ஈதே மரணகாலமென நினைத்துக்கொள்வீராக. இதிற் சிறிதும் ஐயமுண்டோ? உலகத்தில் காலவசமெய்தாதவன் எவனாவதுண்டோ? அந்தோ! காலவசமாகுஞ் சனங்களைக்கணந்தோறும் பார்த்துக்கொண்டிருந்தும் இத்தனம் எனது, இம்மனை எனது, இத்தானியம் எனது, இம்மங்கை புத்திரன் மித்திரன் முதலியவைகளுமென்னுடையன, இத்தேகமெனது என்று பற்பலவிதமாய் மயங்கியுளறுகின்றார்களே! அந்தோ! அக்கதி தனக்கும் வருமென்று எண்ணுவதில்லையே. அவனும் இறக்குமளவும் இவ்வாறு தனதான்னியாதிகளில் மயங்கியுழன்றவனே. அவன் போகும்போது யாதுங்கொண்டுபோகவில்லையே. அவன் பாவம் செய்தவனாயின் அவனைப்பாபி என்றும் புண்ணியஞ்செய்திருப்பானால் புண்ணியவானென்றும் உலகினர் போற்றுகின்றனர். இதனைச்சற்று ஆராய்ந்தால் அவனது பாபபுண்ணியங்களே கூடச்செல்கின்றனவென்று நிச்சயிக்கப்படுகின்றமையால் இதுபோலவே நாம்போகும்போதும் நமது பாபபுண்ணியங்களே நம்மோடு

கூட வருவனவென்று தீர்மானிக்கவேண்டிய தவசியமன்றோ? அப்படித்தீர்மானித்திருப்பானானால் அவன் ஸ்ரீகாலகாலனை பஜியாதிருப்பனோ? அந்தோ! உண்மை யிவ்விதமிருக்க இதனைச்சற்றும்யோசியாத மூடன் வாழ்நாளை அவமாய்க்கழித்துக் காலபாசத்தாற் கட்டுண்டு மஹாகோரவாதி நரகங்களில்வீழ்ந்து தவிக்கின்றனன். எவ்வளவோகோடிப் பிறவிகளில் செய்துள்ள பாபங்களெல்லாம் ஸ்ரீம்ருத்யுஞ்சயரும் நீலகண்டருமாகிய இறைவரது கருணை சிறிதுபாலிக்கப்பெறின் பஞ்சப்பொதியில் நெருப்பிட்டாற்போல் பஸ்மமாய்ப்போய்விடுமன்றோ? தனது ஹ்ருதயகமலத்தில் மங்கையோர்பாதியாய் விளங்கும் மஹேஸ்வரனையுபாசிப்பதில்லையே. அவனது உபாசனை ஒன்றே யன்றோ இம்மனித ஜன்மத்தினாலான பயன்? அதனைவிடுத்துத்துஸ்ஸங்கஞ்செய்துகொண்டிருப்பவனுக்கு அடிக்கடிபங்கமும் ஜன்மஜரா ரோகம் முதலிய துக்கங்களும் தலையின்மீது யமனுடைய காலும் அடையப்பெற்று மஹாதுக்க சமுத்திரத்தில் மூழ்கிக்கரையேறும் வழியின்றிக் கலங்குவதுந் தகுதியோ? அனங்கனது கர்வத்தையகற்றிய இறைவனது சரணாரவிந்தத்தை அர்ச்சித்து மகிழ்வோன் ஆனந்தவமிர்தத்தைப் புசித்து விளங்குவானென்பதே யுண்மை.

நாற்பத்தொராம் அத்தியாயம்

முற்றிற்று.

---

உ

க்ருபாளவேகம:

## நாற்பத்திரண்டாம் அத்தியாயம்.

### நந்திதேவர் சாம்பவரை அறிவித்தது.

இங்ஙனம் வசிட்டர் கூறியதைக்கேட்டு அவ்வரசன் அகமகிழ்ந்து சம்சார சுகத்தைத் துச்சமென்றுதள்ளிச் சிவபூசையில் விருப்புற்றவனாய் ராஜ்யபாலன மதற் கிடையூறாகுமென்று கண்டு தனது மூத்தபுதல்வனுக்கு ராஜ்ய பாரத்தைக்கொடுத்து அவனைச் சிவார்ச்சனையை விடாமற் செய்துவரும்படிப்போதித்து வானமாய்த்தனத்தைச் சிவனுக்குதவிச் சாம்பவர்களையு மாராதித்து விபூதி ருத்திராக்ஷதாரணங்களில் ஓர் கணமேனும் வழுவாதிருந்து சாம்பவதீக்ஷைபெற்றுச் சிவபூசை செய்து சிவத்யான பாராயணனாய்க் காலங்கழித்து நற்கதியடைந்தான். அப்படியே நீரும் சிவபூஜாபராரா யிருந்து சாம்பவர்க



ளோடு சகவாசஞ் செய்து சிவலிங்கத்தைப் பூசித்துக்கொண்டிரும். சிவபூசை செய்யாமல் மஹாஐஸ்வர்யத்தை யுடைந்து சுகித்தவர் யாருமில்லை. சங்கரானுக்கிரகத்தினாலேயே சகல பாக்யங்களும் பெறப்படுவனவாம். சிவபூஜையின்றிப் பாக்ய மெங்ஙனம்வரும்? இனி அச்சிவபூஜைக்கு வேண்டிய சௌகரியமும் மஹா பாக்யவான்களுக்கே கிடைக்கும். சிவார்ச்சனைக்குபயோகப்படாத பாக்யங்களைத் துர்ப்பாக்கியங்களென்றே யறியவேண்டும். பாக்ய மிருந்தால் வாணாள் முழுதும் சிவார்ச்சனையில் வழுவா திருக்கப் பெறலாகும். அவனது ஆயுளே சபலமாகும். இப்போது சாம்பவர்களைச் சிரத்தையுடன் பூசித்தாதரிப்பின் சம்புவினருளுக்காளாகலாமென்று நாரதர் கூறியருள அதனைக்கேட்டு மிக்க மகிழ்ந்து சாம்பவ முனிவர்களைப் பூசித்துக்கொண்டு சிவார்ச்சனபரரானாரென்று நந்திகேஸ்வரர்கூற மஹா புண்யமாகிய அச்சரிதத்தைப் பிரம்மாமுதலிய சகலருங்கேட்டுச் சந்தோஷத்தால் மயிர் சிலிர்த்துப்பரவசராய்நின்று நந்திபெம்பெருமானைவணங்கி ஒஸ்வாமி! இப்போதுநாங்கள் இங்குசெய்யவேண்டிய காரியமென்ன? அந்த ரகஸ்யத்தைக்கூறியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அப்போது நந்தீஸ்வரர் பிரம்மாதிகளைப்பார்த்துக் கூறியதாவது. ஓ தேவர்களே! எவரெவர் பரமசாம்பவர்களாயெப்போதுஞ் சிவார்ச்சனைசெய்வதிலேயே பேராவலுடையோரா யிருக்கின்றனரோ மிக்க கோரமாகிய கலியுகத்தில் சித்த சுத்தத்துடன் எவர் சிவசரணாரவிந்தத்தை விட்டகலாத மனமுடையோராய்ச்சிவோபாசனைசெய்துவருகின்றனரோ அவர்களை நீங்கள்சென்று பூஜிக்கவேண்டும். இதுவே பரமரகஸ்யம். "ஸ்ரீநீலகண்டமதனாந்தக சந்திரமௌளே ஸ்ரீ பாலலோசன யமாந்தக விஸ்வமூர்த்தே." அடியேனைரக்ஷியுங்களென்று எவர் ஓர் தடவையாவது பக்தியுடன் கூறுகின்றனரோ அவர்களும் உங்களுக்குப் பூஜ்யராவார். இப் பரமரகஸ்யம்.

"உற்பத்தி பாலனவிநாசனஹேது பூதபூதேசபூதிவஹார்ச்சித பாதபத்ம" "கல்யாணபுண்யகுணசாகரமேருதல்யநீ"

என்றனைக்காத்தருளுங்களென்று யார்கூறுகின்றனரோ அவர் பூஜிக்கத்தக்கவராகின்றனர். ஈதே பரமரகஸ்யம்.

"கௌரீ குசோருகிரிசேகரசாருஹார காஸ்மீரஸாரரஸாரஞ்சித பாதபத்மபாஹி"என்று கூறுவோர் உங்களுக்கும்பூஜ்யராவார்.

"ஆபாதகப்ரணததேவகிரீடகோடி ரத்னப்ரபாபரிஷ்க்ருதாங்க்ரிஸரோஜராஜ பாஹி." என்றும்,

"ஸம்ஸாரஸாகர நிவாரகாலகால லீலாவிசேஷபரிகல்பித கல்
ஜால பாஹி." என்றும்

"ரத்னாங்கதாங்கமணிகங்கணகிங்கிணீகௌரீமனோஹரஸுந்தரபு
வாலிதாங்க்ரே பாஹி" என்றும்,

"மந்தாரகுந்தமகரந்தரஸாபிஷிக்த பாதாரவிந்தபரமாதரஹா
வீர பாஹி" என்றும்,

"கர்ப்பூர கௌரஹார ஸுந்தர தாரதார தாராமனோஹர
விஹார விஹார ஹார பாஹி" என்றும்,

"மாமீசமாமகதியா பரிபாலயாசு க்லேசாபஹாரசதுர
ப்ரவரப்ரவீர" என்றும்,

"ஸர்வாமரேஸ்வரமகேசஸுராரிவர்க்க நிர்வாபணப்ரவண
காருணிகப்ரவீண பாஹி" என்றும்,

"ஸ்ரீமன்மகேசகருணா தருணாம்புராசே
கௌரீமுகாம்புஜஸஹஸ்ரகராதரேண பாஹி" என்றும்,

"ம்ருத்யுஞ்ஜயாவ்யயபிநாககரா
மாராரிவீராந்தகா ஸுரநிவாரணகாரணசு பாஹி" என்று

"ஸ்ரீகாலகூடவிஷதோஷவிதோஷகாசாபாசப்ராணசக
விதாரவிநோதமோத பாஹி" என்றும்,

"ஸௌவர்ணவர்ணஸ ஹிரண்யஹிரண்யபாஹோ
சம்போஹிரண்யத ஹிரண்ய பதேஸ்மரரே பாஹி" என்று

"அன்யஸ்தவாஸ்தி சிவசங்கரபாலனீயோமத்தோபிக:
கலுஷாசகராதிதீர: பாஹி" என்றும்,

"சோராபராதவிதிசோஷகாமசத்ரோசித்ர
த்ரிணேத்ரகருணாரஸபாத்ரமாத்ரம் பாஹி" என்றும்,

"பஸ்மாவகுண்டனவிகஷ்டமஹாகசோடி
பக்தப்ரபூதகருணாகாரவிந்தோ பாஹி" என்றும்,

"ஸ்ரீபில்வமூலசிவலிங்கஸமர்ச்சனேன
நிர்த்தூதபாதககுலாசல பீசசீலம் பாஹி" என்றும்

"சம்போத்வதங்க்ரிகமலம் கலயாமிகாலேகாலே
நம்லலமதிலேலமனோதலேலம் பாஹி" என்றும்,

"நித்யம்மகேசசரணஸ்மரணப்ரவீணம்
ப்ரக்ஷீணம் பாபகாணம் கருணார்ணவேச பாஹி" என்று



"ஸ்ரீகாலகாலகருணாகரதீன பந்தோ
ருத்ராக்ஷபூஷணபதாஷணமந்தகாரே பாஹி என்றும், எவன் தினந்தோறும் பக்தியுடன் பிரார்த்திக்கின்றானோ அவனை வந்தனை செய்யவேண்டும். ஓவ்வாயு! அசாம்பவரோடுபழகுவதில் பிரீதியுறல் தாவ யசலத்திற்குவடவாக்கினியாயும்சைவாபகாரமெனுமரத்துக்குக்கோடரியாயும் லிங்கார்ச்சனையைத்தூஷிப்போராகிய இரிக்கு இடியாயுமுள்ள அடியேனைக்காத்தருளுங்கள் என்று கூறுபவரை வணங்கவேண்டும். ஓ தேவர்களே! எவர் சூலபாணியின் சரணத்தை ஸ்மரணஞ்செய்வதில் ப்ரவீணர்களாயிருப்பவரோ அவர்களுக்கு அந்தகபயமில்லை. "ஹேகாசிகாபுரபதேத்ரிபுராந்தகாரே விஸ்வேஸ்வர த்ரிதசவந்திய பதாரவிந்தமாம்ரக்ஷரக்ஷவிஷமேக்ஷணவீக்ஷணேன ப்ரக்ஷீணபாபம்" என்றுவேதவித்துக்கள் கூறுகின்றனர். ஹேசந்த்ரகலாபரணா! உனக்கு அடியேனிடம் தயவுசெய்வதும்பெரிதோ! உமது கருணாரசப்பெருக்குடன்கூடியகடாக்ஷம் அடியேனைச்சற்று ஆட்கொள்ளட்டுமென்று கூறும் பாக்யவான்கள் சகல பூஜ்யரென்பது பரமரகஸ்யம். ஓ மன்மதமரவனத்தீயே! ஓ விஸ்வநாதா! கருணாநிதே! தேவரீர் அடியேனிடம் அருள்புரியுங்கள். எண்ணிறந்தபாபங்களைச் செய்துழன்று யாதுமறியாமல் எதற்குஞ்சக்தியின்றி மிக்கதீனர்களாய்த் தவித்துத் திரியும் எங்களைத் தீனசரண்யராகிய பகவானே! காத்தருளுங்கள் என்று பிரார்த்திக்கும் மஹான்களை நீங்கள் வணங்குவீர்களாக. ஓ தேவர்களே! லிங்கார்ச்சனையை விரதமாய்க்கொண்டொழுகும் மனிதரே மகா புண்யராசியாய் விளங்குவோரென்று வேதங்கள்கோஷிக்கின்றன. சிவார்ச்சனைசெய்பவரிலும் பெரியோர்யாருமில்லையென்ற புத்தியானது மகா பாக்யவான்களுக்கே யுண்டாகும். சாம்பவர் அரிது என்றுமகான்களதுவாக்கியமுலசெங்கும்கேட்கப்படுகின்றது. பிராணிகளுள் எச்சீவனாயினும் ஸ்ரீகாலகாலனைப் பஜிக்கத்தலைப்படுமாயின் அச்சீவனது பாதாரவிந்த தூளியையும் யான்வணங்குவேன். அவரது பாதாரவிந்தத்தைத் தனது சிரமேற்கொண்டு கூத்தாடும் பரம்பாக்யவான் மஹாபுண்யவான், அவனே சிவப்பிரியனாவன். உலகில் சாம்பவர்கிடைப்பதரிதென்று அறிந்து அப்படிக் கிடைத்தால் அவர்களை அடிக்கடி பூஜிக்கவேண்டும். அறியாதுங்கூட அவர்கள் பூஜையை விடக்கூடாது. அப்படிவிடுவானாயின் அவனும் அவனது தாய்தந்தையரும் மகாதுர்ப்பாக்கியவான்களாவரென்பதைத்திண்ணமாயறியத்தக்கது. சம்புவானவர் சாம்பவரது நாவினால் நைவேத்தியாதியன்னத்தைப் புசிக்கின்றனரென்று அறிந்து சாம்பவசிரேஷ்

டர்களின்பொருட்டு அன்னாதிகளை யளித்து உபசரிக்கவேண்டும். அப்படியாராதித்தால் சம்பு திருப்தியடைந்து அன்னதனதான்யாதிகளை அவனுக்கு வேண்டுமளவு மளித்து இறுதியில் முத்தியெனும் கன்னிகையையுந் தந்தருளுகின்றனர்.

உபநிடதங்களை விசாரிப்பதினாலும் தீர்த்தயாத்திரை செய்வதினாலும் சிவஸ்தலங்களில் வசிப்பதாலும் யாகங்களாலும்யோகங்களாலும் யாதுபயன்! சாம்பவ பாதாரவிந்தத்தைப்பூசிப்பதுடன் கூடினாலன்றி இவைகள் பயன்படா. சாம்பவ பாதாரவிந்த பூஜையொன்றே சகல சுகங்களையுந் தருவது. பூர்வம் எண்ணிறந்தபிறவிகளிற் செய்த புண்ணிய வசத்தால் சம்புவே இறைவனென்று அறிகின்றேன். அவரைப் பக்தியுடன் பூசித்து வருவோனுக்குப் பிரளயத்திலும் அழிவில்லை. இறைவன் அவனைப் பிரம்மானந்தம் அநுபவிக்கச் செய்கின்றனர். சம்புவை யர்ச்சிக்க எப்படி மகா பாக்யம் வேண்டுமென்றோமோ அப்படியே சாம்பவரை அர்ச்சிப்பதினுமாம். சாம்பவர்கள் திருப்தியடைந்தால் சம்பு திருப்தி யடைந்தவராகின்றனர். ஏனெனில் சம்புவுக்கு அவர் தேகம்போன்றவர்; தேகம்புஷ்டியானால் ஆன்மாசுகிப்பதுபோல சாம்ப வாத்மாவாகிய பரமேஸ்வரன் திருப்தியடைகின்றார். சாம்பவரினும் பெரியோர் உலகில் யாருமில்லை. அவரைக்கண்டுய்வதற்கு மகா புண்யஞ் செய்திருக்கவேண்டும், சித்தர்களும் முனீந்திரர்களும் அவர்களை நமஸ்கரிக்கின்றனர். எவர் சம்புவைப் பூசித்துவருகின்றனரோ அவர் மனிதராயினும் தேவராயினும் முனிவராயினும் கின்னர கந்தர்வர்களாயினும் அசுரராயினும் கல்பதருசிந்தாமணி அமிர்தம் காமதேனு சமுத்திரம்மாமேரு இவைகளினும் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாசாம்பவரென்பதே யுண்மை. யாரொருவன் ம்ருத்யுஞ்சயனை யர்ச்சித்து ஸ்தோத்திரஞ் செய்து நமஸ்கரித்துப் பிரதோஷாதிகளில் தரிசித்து முபாசித்தும் சந்தோஷமடைந்து காலங்கழிப்பதில்லையோ அவனே யமதூதர்களுக்கு விஷயமாவான். அங்ஙனமல்லாதுபாசிப்போனிடம் யமபடர்கள் செல்லக்கூடாது. அவர்செல்லும் மார்க்கத்தின் பக்கமும் அவர்கள் குலத்தினிடமும் அறியாதும் போகக்கூடாது. பாவலிங்கபூஜை செய்வோரது ஆலயத்திலாவது அவர்கள் செல்லுமிடத்திலாவது யமன் செல்லக்கூடாது. ஓ யமனே! உனக்கு ஜீவந்தி சிச்சை இருக்குமாயின் இவ்வாக்கைக் குட்பட வேண்டும். ஸ்ரீ [illegible] வந்து பாவனலிங்கார்ச்சனை செய்பவரை மிக்க விநயத்துடன் வணங்கித்துதிக்கவேண்டும். பஸ்ம ருத்திராக்ஷந்தரித்துப் பக்தியுடன் சிவபூஜை,



செய்வோர்களினில்லத்தைப்பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து ஓவிஸ்வேஸ்வரா! மஹாதேவா என்பதாதி நாமாமிர்தத்தை எவன் புசித்துக்கொண்டும் ஏனையோர்களைப் புசிக்கச்செய்து மிருக்கின்றானோ அவனது பாதாரவிந்த தூளியைச் சிரோபூஷணமாய்க்கொள்ளவேண்டும். ஹே கைலாச நிவாஸ! பசுபதயே! ஹே கௌரி! ஹே கௌரிபதே! ஹே அருணாசலபதே! ஸ்ரீசைலபதே! பசுபதே! சைலகன்யாபதே! காமாந்தகா! புராந்தகா! காசீபுரநாயகா! சிவாசாரபாலகா! மேருசராசனா! ம்ருத்யுஞ்சயா! சதாசிவா! சிவாவாமாங்கா! வாமாங்கசங்கர! சம்போ! வ்ருஷபத்வஜா! விஸ்வாதிகா! பாலலோசனா! பர்க்கா! திரிணயனா! ஸ்ரீநீலகண்டா! உனது பாதாரவிந்தத்தைப்பூசிப்பதேயன்றி மற்றொன்றையும் நானறியேன். எனது சிவகர்நீரே! ஸ்வாமி! என்னைக்காப்பாற்றும். துக்கமென்னுங் கடலில்மூழ்கிய எனக்குத் தேவரீருக்கன்னியமாய் ரக்ஷகர்யாவருமில்லையென்று எவன் துதிக்கின்றானோ அவனைப்பக்தியுடன் வணங்கித்துதிப்பாயாக. ஸ்ரீகாசியில் தூய்மைபொருந்திய விபூதியால்முப்புண்டரமணிந்து ருத்திராக்ஷாபரணந்தரித்து ஸ்ரீ விஸ்வேசனைப்பக்தியோடு பூசிக்கின்றவர் எவரோ அவரிடமும் சிவமஹாமந்திரத்தை ஜபித்துக்கொண்டு அவ்விடம் உயிர்துறப்பவனெவனோ அவனிடமும் இச்சம்சாரவாழ்க்கையானது மிக்க துச்சமானது. ஆதலால் இதனைத் தொலைப்பதற்குத் தேவரீரால் அருளப்படும் சிவஞானமேஹேது. அஞ் ஞானமும் சகலவித்தியா நாதரான தங்களருளன்றிக் கிட்டாது. ஆதலால் அவ்வருளுக் கேதுவாகிய இக்காசியில் மரிப்பதை யுண்மையாகிய நம்பிக்கையுடன் விரும்புகின்றேனென்று கூறி அங்குமரிக்கின்றானோ அவனை மனதினாலும் வேறு விதமாயெண்ணக்கூடாது. எப்பொழுதும் பக்தி பூர்வகமாக சிவஹரபவ சம்போ! பர்க்க! பீம! ஸ்மராரே! த்ரிபுரஹர யமாரே! இச்சம்சாரமென்னும் மகாந்த காரத்தில் கிடந்துழலும் என்னைக்காப்பாற்றுங்கள். கமலம் பில்வம் முதலியவைகளால் பாவலிங்கத்தை எவன் பூசிக்கின்றானோ அவனையும் வணங்கி விநயத்துடன் துதிக்கவேண்டும். சகல பாபங்களையுந் தொலைப்பது பாவனலிங்கத்தைப் புதிதாயும் குற்றமில்லாததுமாகிய பில்வங்களைத் தானே யெடுத்து வந்து பிரதோஷ காலத்தில் அர்ச்சிப்பதைத் தவிர எனது மனம் மற்றெதையும் விரும்பவில்லை. மலர்ந்த தாமரை மலர்களை யெடுத்து அர்ச்சித்தால் கமலையாகிய லக்ஷ்மிக்கு இருப்பிடமாகச் செய்யும். இப்பாவனலிங்கத்தை ஒரு தடவை பூசித்தாலும் சகல மனோபீஷ்டங்களையுஞ் சாதித்துக்கொடு

க்கு மென்பது எனக்குறுதியாய்த் தோன்றுகின்றது. சம்சாரக்கடலை வற்றச்செய்வதின் பொருட்டும் பற்பல பாவக்கூட்டங்களைத் தொலைப்பதற்கும் விபத்துக் கூட்டங்களாகிய அக்னிக்கு மஹாப்பிரவாகமுமாகிய ஓ சங்கரரே! பாவலிங்க நிலயரே! பிரமாணாதீதரே! சம்போ! பர்க்க! தேவரீருக்கு நமஸ்காரம். ஆசாபாசங்களை விநாசனஞ் செய்வதின் பொருட்டு விளங்குபவர் பாவலிங்க நிலையாகிய தேவரீரன்றோ? ம்ருத்யுஞ்சயனும் வேதங்களாலும் சூழப்பெற்றவனும் நித்யானந்தமயனும் நிராமயனுமாகிய தேவரீரது பாதாரவிந்தத்தை யான் மோகத்தைவிடுத்து வணங்குகின்றேன். எப்பொழுதும் சகல சுருதிக் கூட்டங்களாலும் போற்றப்பெற்ற பாவலிங்கார்ச்சனமொன்றே சகல பயங்களையு நீக்குவதாம். மற்றவை யெல்லாம் பயஹேதுவே. பாவனாலிங்கார்ச்சனமே சகல சித்திகளையுஞ் சாதித்துத்தருவதாம்.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்
முற்றிற்று.

உ

பக்தவத்ஸலாயநம:

## நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்.

### யாக்ஞவல்கிய ஜனக ஸம்வாதம்.

வியாசர் கூறுகின்றார். ஸ்ரீ நந்திகேஸ்வரருடைய இனிய வார்த்தையைக்கேட்டு ரிஷிகளெல்லோரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கிக்களித்த மனமுடையோர்களாய் மீண்டும் நந்திதேவரைப்பார்த்துச் சிவபூஜாப் பிரபாவத்தைக்கூறவேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டனர். அதாவது:-ஓ நந்திகேஸ்வரரே! தேவரீர் இதுகாறுங் கூறிய திவ்ய சரிதமானது இத்துக்கமாகிய சம்சாரமெனும் விருக்ஷ மூலத்துக்குக் கோடரிபோன்றது. இன்னமும் அத்தகைய அற்புத சரித்திரத்தைக்கேட்க விரும்புகின்றோம். தேவரீரது பாதாரவிந்த தூளியால் எங்களது சிரசு பாவனமாகட்டும். ஓ அபாரகருணாநிதியே! அருள்புரியுங்களென்று பிரார்த்தித்தனர். நந்திகேஸ்வரர் தேவர்களை நோக்கிக் கூறியதாவது:-ஓ தேவர்களே! மகாபுண்ய ராசிகளைச்செய்த பலருள் யாவராயினுமொருவனே சிவார்ச்சகனாயிருப்பான். அவனது சரணாரவிந்தத்தை ஸ்மரிப்பதினாலா



மங்களமுண்டாகும். சிவபூசை யென்னும் புண்ணியத்தால் கிடைக்கும் பயன் எண்ணிறந்த ஏனைய எப்புண்யங்களாலுங் கிடைக்காது. ஜனகனென்று ஓ ராசன் மஹா தர்மபரனாயிருந்தனன். அவன் சகலசம்பத்துகளுடனும் சௌர்யம் விநயம் இவைகளுடனுங் கூடிப் பூலோகத்தைப் பரிபாலனஞ் செய்து வருங்காலத்தில் உலகின் செழிப்பை இன்னதென்று கூறுவதற்கு முடியாது. அவனுக்குச் சத்துருக்களென்பதே உலகிலில்லை. சகலரும் தர்மமேபரமாய்க்கொண்டவர். ரத்ன மயமாகிய கட்டடங்களை யெல்லாம் சிவாலயமென்றே யறியலாகும். இங்கு சிவாலயம் கட்டவேண்டும். இங்கோர் மஹாலிங்கத்தைத்தாபிக்கவேண்டும். இங்கோர்நாட்டிய மண்டபமும்இங்கு வில்வவனமும் இங்கோர் பெரியதடாகமும் இங்கு சிற்றருவியும் சாம்பவர் ஸ்நானபானஞ்செய்வதற்குத் தகுதியாகிய திவ்யசரசுகளும் செய்யவேண்டும். சகல மலர் வகைகளுள்ள உத்யானவனமும் பிரதிஷ்டை செய்யவேண்டும். வனமத்தியிலும் மஹா சிவாலயங்களைத் தாபித்துச் சகல புஷ்பராசிகளாலும் பூசித்து வசந்தகாலத்தில் விசேஷமாய்ப் பூஜிக்கவேண்டும். இங்கும் திவ்ய சரசுகளை நிர்மாணஞ் செய்யவேண்டும். நிர்மலமும் புண்யமுமாகிய அவ்வனத்திலிருந்து இறைவனைப் பூஜிக்கவேண்டும். அபாரபக்தியுடன் சிவபூசை செய்தால் கிரிஜாபதியாகிய அவ்விறைவன் ப்ரீதியடைந்து மோக்ஷலக்ஷ்மியைத் தந்தருளுவார். திடபக்தியுடன் சிவபெருமானைச் சிவலிங்கத்தில் பூஜிப்பவனால் சகல பூவுலகும் ஜயிக்கப்பட்டதாகும். சிவபக்தி எவனுக்குறுதியாயுளதோ அவனைச் சகல முனிவர்களும் தேவர்களும் சித்தர்களும் தூரத்தில் கண்டவுடனே சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றனர். மஹாதேவனிடத்தில் திடபக்தியுள்ளவரிடம் மாரியுமணுகாது. அவரிருக்குமிடங்களில் யமகிங்கரர்கள் விபூதி ருத்திராக்ஷந் தரித்து விளங்கும் மேனியைப் பார்த்தோட்டம் பிடிக்கின்றனர்; எவனது நெற்றியில் வைதிக விபூதியானது ஓர் சிறிதாவது அணியப்பட்டுளதோ அவனைக் காலனாலேவப்பட்ட வேதாளமாயினும் கண்டோட்டம் பிடிக்கின்றது. எவனது அங்கத்தில் சிவமந்திரத்தால் மந்திரிக்கப்பெற்ற சுத்தமான விபூதி காணப்படுகின்றதோ அவனைக் கண்டு கொடிய பிசாசங்களும் நசிக்கின்றன. எப்பொழுது எவனது இல்லத்தில் வேதாள சஞ்சாரமுளதோ அப்பொழுது அவனது இல்லத்தில் சிவமந்திரத்தால் ஜபித்த விபூதி யிருந்தால் அஃது பிசாசங்களை யெல்லாம் சின்னாபின்னஞ் செய்கின்றது. விபூதி தூளியின் ஓர் அணுவைக்கண்டாலும் பிசாசமெனு மரங்களெல்லாம் நடுங்கி வேர்

றந்து விழுகின்றன. மஹாரோகங்களால் பிடிக்கப் பெற்றவருக்கும் விபூதி பூசுதலே மஹௌஷதமாகும். விபூதி தரிப்பதினாலேயே குஷ்டமுதலிய வியாதிகளுந் தொலைகின்றன. எங்கு சிவமந்திரஞ் ஜபிக்கப்படுகின்றதோ அங்கு பிரம்மராக்ஷஸ வேதாள பிசாச முதலிய சகல கிரகங்களில் ஒன்றும் வருவதில்லை. விபூதியைப்பூசி ருத்திராத்தியாயத்தை யெங்கு படிக்கின்றனரோ அவ்விடத்தில் சாகினி டாகினிகள் வாரா. ம்ருடனை நினைப்பதனாலேயே சகல சாகினி டாகினிகளு மிறந்து வீழ்கின்றன. பஸ்மத்தைத் தரித்துப் பக்தியுடன் சைவமந்திரத்தை ஜபிக்கின்றவனை நினைப்பதினாலேயே கிரகபீடைகள் நசிக்கின்றன. இவ்வனத்தில் விபூதி பூசிய தேகமுடைய நாமிருப்போமானால் பிசாசங்களெப்படி வரும்? எங்கு நர்மதை லிங்கங்கள் விளங்குகின்றனவோ அங்கு பிசாசவசனத்துக்கு மிடமில்லை. நாமே தன்யர். சிவார்ச்சனையில் பிரீதியும் தர்லபமன்றோ? நாம் பூர்வஞ் செய்த புண்ணியத்தினாலேயே புத்ர மித்ர தாரதனங்களில் நமக்குச் சிறிதும் இச்சைவாராமல் சிவபூஜையிலேயே விருப்பம் வந்திருக்கின்றது. இது புண்யமானகாலமே. எப்பொழுது மகா தேவார்ச்சனத்தில் விருப்பம் வருகின்றதோ அதுவே புண்யகாலம். இத்தகைய புத்தி நமக்குப் பூர்வம் வரவில்லை. இப்பொழுதோ சிவபூஜையில் பேராவல் வந்திருக்கிறது. எப்படியாவது மஹா தேவார்ச்சனத்தில் பிரீதிவந்து விட்டால் ம்ருத்யுவிடங்கூடப் பயப்படவேண்டியதில்லை. இங்கு நிர்மலமாகிய தீர்த்தமும் பில்வதளங்களு மிருக்கின்றன. இதனால் மகாதேவனைப் பூசித்தால் அவர் மிக்க பிரீதியடைவர். இத்தகைய பக்தியானது சங்கரானுக்கிரகத்தி னாலேயே யுண்டாயிருக்கின்றது. அஃதிருந்தால் அரிதாகிய பொருள் யாது? சிவபக்தி என்னும் அமுத தாரையே முக்தி யென்பதாகும். சிவபக்தி யென்னும் அமுதத் தண்ணீர்ப்பந்தர் சங்கரரால் சிருட்டிக்கப்பட்டுளது. சம்சாரமெனும் தாகத்தால் பீடையுற்று வருந்தி அதை நீக்குமிடம் இவ்விடமே யென்றறிந்து வருவோர்களுக்கு அவ்வமுதம் சுலபமே யன்றோ? சிவபக்தியாகிய சுதாமிர்தத்தை யருந்தாதவனது பிறவி வீணே! அவனைப் பெற்றதாய் மலடியென்பது தகும். மகாதேவ பக்தியில்லாத புத்திரனைப் பெற்றதனால் அது புத்திரனைப்பெற்ற தென்பதுண்மையாகுமா? பூபாரத்தின் பொருட்டு ஓர் சுமையைப் பெற்றதே யாகும். மலைகளையும் வனங்களையும் கடல்களையும் சுமப்பது பூமிக்குப் பாரமல்ல. சிவபக்தி யில்லாதவனைச் சுமப்பதே பெரும்பாரமாம். அப்படிப்பட்ட அதமன் எப்பொழுதிறப்பானோ





என்று பூமிதேவியும் அவன் நசிப்பையே யெதிர்பார்க்கின்றாள். ஓ சிவபக்தி யற்றவனே! உனது ஜீவனத்தைச் சுடுக. சுடுக. சுடுக. அடே பாபி! எனக்கு மலைகளைச் சுமப்பதனாலும் சிறிதுஞ் சிரமமில்லை. உன்னைத்தாங்குவதே மிக்க சிரமமாயிருக்கின்றது என்று பூமிதேவி நிந்திக்கின்றனள். பரமசிவனிடம் பக்தியானது மஹா பாக்யவான்களுக்கே யுதிக்கின்றது. அவராலேயே சகல மங்களங்களும் கல்யாணங்களும் பெறப்படுகின்றன. அந்தோ! சிவபக்தியற்று ஏழையவர்கள் பூபாரமாகிய பாமரராயினரே. அடா அசாம்பவா! ஏ துராசாரா! ஏ சிவத்தியான விரோதியே! அதமனாகிய உனது தலை பூமியில் வீழ்ந்து சிதறுக. பூபாரத்தின் பொருட்டேயுள்ள உன் தேகத்தைச் சுடவேண்டும். சாம்பவர்களே ஓங்குக. அவர்களாலேயே யான் ஜீவிக்கின்றேன். அவர்களது பாததூளியே எனக்கு விபூதி போன்றது. அவரது தேகத்தோடு சம்பந்தித்து வருங்காற்றே எனக்குச் சீவனமென்றெண்ணுகின்றேன். புண்ய தீர்த்தங்களாலும் மலர்ந்த தாமரைமலர்களாலும் அழகிய பில்வதளங்களாலும் கனிகளாலும் பில்வமூல சிவலிங்கத்தைப் பூசிக்கும் சாம்பவரே எனக்குப் பேரானந்தம் விளைவிப்போரும் சிவகருணைக்காளாவோருமா யுள்ளவரென்றறிக.

ஹ்ருதய கமலத்தில் உமாசஹாயனாகிய பரமேஸ்வரனைத் தியானித்தும் சிவபஞ்சாக்ஷரத்தை ஜபித்தும் பக்தியுடன் சிவப்பிரீதிகரமான பொருளையுபகரித்தும் காலங்கழித்து வரும் பெரியோர்கள் சிவனையே யறிகின்றனர். சிவாசாரத்தில் விருப்பமுடையோர்களும் சிவபூஜைநிமித்தம் தனத்தைச் செலவிடுவோர்களும் சிவபக்தித்வேஷத்தை நீங்கச்செய்வோர்களும் சிவசாஸ்திரங் கற்றவர்களைப் பரீக்ஷித்துப் பொருளுதவுவோர்களும் தேவர்களுக்குள் சிவனே உத்தமன் என்பவர்களும் எங்குஞ் சிவபக்திரசத்தைப் பரவச்செய்பவர்களும் சுருதிகூறியபடி விபூதியைச்சம்பாதித்துத் தரிப்பவர்களும் உருத்திராக்ஷாபரணம் பூண்டவர்களும் சிவநாம அமுதத்தை யருந்துவோர்களும் சிவமந்திரத்தில் வசித்துக் காலங்கழிப்பவரும் சிவக்ஷேத்திரத்தில் வசிப்பவர்களும் சிவகதையைப் பரிசீலனஞ் செய்வோர்களும் சிவகைங்கர்யஞ் செய்பவர்களும் சிவமூர்த்தியையே தரிசித்துக்கொண்டிருப்பவருமானபெரியோர்சிவனையேயெய்துகின்றனரென்று இவ்வாறு பற்பலவாறாய்ச் சொல்லிக் கொண்டு மிதிலையில் வசிக்குஞ் ஜனங்களெல்லோரும் எப்போதும் மனோவாக்கு காயங்களென்னும் முக்கரணங்களாலும் சிவசேவை செய்வதினா

னும் சிவார்ச்சனை செய்வதினாலும் காலத்தைக் கழித்துக்கொண்டிருப்பவர்கள். அவர்களுக்கு யாக்ஞவல்கியரெனும் ஓர் மஹா சாம்பவர் குலகுருவாயிருந்தனர். அம்முனிவர் ஓர்சமயம் தாமே சனகனென்னும் அரசனிடம்வர ஜனகனும்விபூதிபூசித்திரிபுண்டரம் அணிந்து உருத்திராக்ஷமாலையைத் தரித்தவரும் சிவமந்திரத்தை ஜபிப்பவரும் சிவத்தியான அமிர்தத்தினாலேயே பூரித்தமேனியுடையோரும் கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்பப்பெற்றவரும் உருத்திராத்தியாயத்தின் அரியபொருளை யாவருக்கும் விளங்க நன்குரைப்போருமாகிய அம்முனிவரைக் கண்டதும் மஹா சந்தோஷங் கொண்டு மிக்க விநயத்துடன் ஓ ஸ்வாமி! யானே கிருதகிருத்தியனாகின்றேன். தேவரீர் இங்கு வரப்பெற்றமையால் தன்யனாகின்றேன். தேவரீர் எங்கிருந்து வருகின்றீர்கள். தாங்கள் வரப்பெற்ற இக்காலமானது மஹா புண்ணியகாலம். சாம்பவர்களைத் தரிசிக்கப்பெற்றால் கிட்டாத பாக்யம் யாது? ஓ ஸ்வாமி! தேவரீர் யான் நமஸ்கரித்துப் பலகாலம் வேண்டிக்கொண்டதென்பது மில்லாமல் வலியவே எனதில்லம் வந்தது ஓர் பெரிய நல்லகாலத்தின் குறியன்றோ? மேகமில்லாமலே மழைபோலும் மழையில்லாமலே பயிர் வளர்வதுபோலும் இதுவும் ஆச்சரியமே. பயிரில்லாமல் தானியராசி கிடைத்தால் எவ்வளவு சந்தோஷமுண்டாகுமோ கர்ப்பமின்றி புத்திரசமூகம் பிறந்தால் எவ்வளவு சந்தோஷமுண்டாகுமோ அதுபோல எனதில்லத்தில் சாம்பவ பாதாரவிந்ததூளி பரவப்பெற்றதும் மகா சந்தோஷத்தை விளைவிக்கின்றது. குருவினிடஞ் செல்லாமல் சகல வித்தைகளும் கிடைக்கப்பெற்றாற்போலும் இயமநியமாதி அஷ்டாங்கயோகமின்றி உடனே சகல சித்திகளுங் கிடைத்தாற்போலும் யாத்திரையென்பதில்லாமல் விஸ்வேச லிங்கத்தைத் தரிசித்தாற் போலும் எண்ணிறந்த மகா தர்மங்களில்லாமலே மோக்ஷானந்தங் கிடைத்தாற்போலும் சமையல் முதலிய செய்கையாதுமின்றி அறுவகையான அன்னபானாதிகளின் சித்திபோலும் சூரிய சந்திர அக்னிகளின்றியே பிரகாசம்போலும் ஆவினின்றுங் கறப்பதின்றி அற்புதமாகிய க்ஷீர வருஷங் கிடைக்கப்பெற்றதுபோலும் திவ்யாஞ்சனமின்றியே மண்ணில் புதைந்துள்ள பெரும்புதையல்களைக் காணக்கிடைத்தது போலும் அபாரமகிமை பொருந்திய சாம்பவசிரோமணியின் பாதாரவிந்த தூளியானது என்னில்லத்தில் யானங் கிடைக்கப்பெற்றமையால் எனக்குண்டாயிருக்கும் ஆனந்தத்தைக் கூற வொண்ணாது. இனி அபாரபாக்ய பரம்பரைகள் எனதில்லத்திற் சித்தித்தோங்கு



மென்பது நன்குவிளங்குகின்றது. நிமிச்சக்கிரவர்த்தி குலம் இன்றுதான் சத்குலமாயிற்று. இனிநான் தேவர்கட்கும் பூஜ்யனாகின்றேன். பாதகமெனு மொழியும் காலனுடைய கந்தமும் தூரத்தில் தொலைந்தன. இனி யான் பசுபதியின் கருணைக்காளாயினேன் என்று சனகன் யாக்ஞவல்கியரைத் துதித்தனன்.

நாற்பத்துமூன்றாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

உ

உமாஸஹாயாய நம:

## நாற்பத்துநான்காம் அத்தியாயம்.

### ஜனகன் முத்திஸாதனம் வினாவியது.

சனகன் இவ்வாறு துதித்துப் பின்னர் வியாக்ராசனத்தி லுட்கார்ந்து சிவத்யான பராயணராயுள்ள அம்முனிவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மீண்டும் கேட்டதாவது:-ஓ சாம்பவசிரேஷ்டரே! ஸ்வாமி! முக்தி எதனால் கிடைக்கும்? அதனை அடியேனுக்கு நன்குரைக்கவேண்டும். யான் தீர்த்தயாத்திரை ஸத்ஜன தரிசனம் கோதானம் பூதானம் துலாதானம் சுனிமலர்தானம் கன்னியாதானம் அன்னதானம் இல்லதானம் கஜதானம்முதலிய எண்ணிறந்த தானதருமங்களை யெல்லாம் செய்வதனாலேயே காலங்கழித்தேன். ஆயினும் இச்சம்சார மொழியவில்லை. இதற்கு மூலம் யாது? இச்சரீரம் எதனால் வந்தது? அதனிடம் யானெனுமபிமான மெதனா லுண்டாயிற்று? யான் வெண்ணிறத்தோன் சுந்தரமுடையோன் என்பது முதலிய விவகாரங்களால் இது நன்கு விளங்குகின்றதன்றோ? இங்ஙனம் தேகத்தில் யானென்ற பாவனையும் தவிர இச் செல்வமென்னுடையது எனது பாரியை எனது குமாரன் என்னும் விவகாரத்தால் எனது என்னும் பாவனையும் நன்கு புலப்படுகின்றதன்றோ? இனிச் சற்றாராய்ந்து பார்க்குங்கால் புதல்வன் சுகித்தால் தான்சுகிப்பதாயும் அவன் துக்கித்தால் தான் துக்கிக்கின்றதாயு மெண்ணுகின்றமையால் புத்திரன் முதலியவற்றிலும் ஆன்மபுத்தி காணப்படுகின்றது. இஃதெல்லாம் எதனாலுண்டாயிற்று? தத்வமுணர்ந்த முனிவரே! அடியேனுக்கு இதனை அருளவேண்டுமென்பதாம். இவ்வாறு வேண்டிக்கொள்ளும் சனகனைநோக்கி யாக்ஞவல்கியர் ஓ அரசனே! இச்சம்

சாரத்துக்கு மூலம் பாபங்களே யாம். பற்பலவிதமாகிய அப்பாவங்களே சம்சாரத்தை யுண்டாக்குகின்றன. பாபசாகரமே சம்சாரமென்பதாம். பாபங்களாலேயே யுண்டாவதும விருத்தியடைவதுமாம். நீரினலேயே சமுத்திரமுண்டாவதும் விருத்தியடைவதும் போலவே இதனை யறிக. மனத்திற்குப் பாபவிஷயத்தில் செல்லுவதே மிக்க சுலபமா யுள்ளது. சுலபமானது பள்ளத்திலேயே செல்வதுபோலவே மனமும் பாவத்திலேயே செல்கின்றது. பள்ளத்திற் செல்லும் நீர் நிற்காததுபோல் பாவத்திற் செல்லும் மனமும் அறியத்தக்கது. எண்ணிறந்தபாவங்களை ஆயாசமின்றிச் செய்தும் மீண்டு மீண்டும் பாவங்களையே செய்கின்றான். அப்பாபங்கள் சித்திப்பதற்குவேண்டிய சாதனங்களைச் சம்பாதிக்க எத்தனிக்கின்றார்களேயன்றி அதனைத்தடுத்துப் புண்ணியத்தைச்செய்வதில் புத்தியுதிப்பதில்லை. அந்தோ! பிறனது திரவியத்திலும் பிறன் மனைவியிடத்தும் எவ்வாறு மனஞ் செல்லுகின்றதோ அது போல நல்ல விஷயத்தில் சிறிதுஞ்செல்வதில்லை. இப்படிச்செய்யும் பாபத்தினலேயே மீண்டும் மீண்டும் பாபச்செயல்களிலேயே மனஞ்செல்லுகின்றது. அந்தோ! இப்படியே பாவங்கள் வளருகின்றன. இதனலேயே சம்சாரமும் வளர்கின்றது. இச்சம்சாரத்தைத் தொலைப்பதற்கு உபாயம் யாதும் காணப்படவில்லை. சம்சாரிகளுக்கு எப்பொழுதும் புத்தி பாபத்திலேயே செல்லுவதும் ஆச்சரியமா? விதை யெவ்வணமோ அங்ஙனமே மரமுமாகும். உலகில் விதையொன்று போட அதனின்றும் வேறுவகையான மரமுண்டாவதுண்டோ? இச்சம்சாரம் பாபமெனும் விதைக்கு அநுகுணமாகவே வளர்ந்திருக்கின்றது. ஆகையால் இச்சம்சாரம் பாபரூபமே. இச்சம்சாரம் ஓர்காலத்திலு மொழியாது. ஆனல் அதற்கோருபாயமுண்டு. அது மிகச்சுளுவானதென்று பாக்யவான்களுக்கே தோன்றும். அவ்வுபாயமிருந்தால் அபாரமாய் வளர்ந்தோங்கிய இச்சம்சாரம் ஓர் நொடியில் மறைந்து நசித்துப்போகும். அதனைக் கூறுகின்றேன். அவ்வுபாயமானது சிவார்ச்சனையேயாம். மலைபோல் குவிந்திருக்கும் பஞ்சு ஓர் சிறு நெருப்பால் ஒரு நொடிப்போதில் வெந்து சாம்பராய் மறைவதுபோல் சிவார்ச்சனையால் இச்சம்சாரம் தொலைந்துவிடுகின்றது. அது மிகச் சுலபமாயினும் அதனிற் புத்தியுதிப்பதற்குக் காரணம் புண்ணியகோடிகளேயாம். சாஸ்திரங்களில் தத்தம் வருணாச்சிரமத்துக்குத் தக்கபடி விதிக்கப்பட்டிருக்குங் கருமங்களைச் சிறிதும் வழுவாது பல ஜன்மங்களிலனுட்டித்திருந்தால் பிறகு சிவார்ச்சனையில் புத்தி யுதிக்-



கின்றது. அங்ஙனம் விதிக்கப்பட்டிருக்கும் புண்ணியங்களையும் பயன் விருப்பின்றிச் சிவார்ப்பண புத்தியாகவே செய்தால் அவன் சிவாநுக்கிரகத்திற்கு ஆளாகின்றான். அவ்வநுக்கிரகத்தினலேயே சங்கரபூஜையில் மதியுண்டாகிறது. உக்ரமான புண்ணியங்களாலேயே உக்ரனது லிங்கத்தை யர்ச்சிப்பதில் மஹா பக்தியுண்டாகின்றது. இனி உக்ரனென்பதற்குப் பயங்கரனென்று பொருள். எனின் அவனையுபாசிப்பதினல் யாது பயனெனின்; கேட்க. உக்ரமாகிய மகா பாதகங்களைச் செய்தவருக்கு அவர் உக்ரரே! பெரும் புண்ணியங்களைச் சிவார்ப்பணபுத்தி மாத்திரத்தால் செய்வோருக்கு அவர் அநுக்கிரகரே. அநுக்கிரகர் எனின் நித்யமங்களகரர் என்பது பொருள். எவன் சிவார்ச்சனையைவிடுத்து ஏனையதேவர்களைப் பூசிக்க விரும்புகின்றானே அவன் வ்ராத்திய னெனப்படுவான். அவனைக் கோரமாகிய நரகத்திலும் எண்ணிறந்த பிறவிகளிலு முட்படுத்தி வாட்டுகின்றார். அந்தோ! நரகதுக்கங் கூறவொண்ணாதது. கர்ப்பதுக்கமுங் கூறவொண்ணாதோ வெனின் அதைக்கூறுவதற்கு லச்சை யுண்டாகின்றதாயினும் அதனை யறிந்தால் மோகம் நசிக்குமாகையால் சிறிது கூறுகின்றேன். காமமெனும் அந்தகாரத்தால் விவேகமற்று யௌவனமெனும் உன்மாதத்தால் மதித்து அறிவிழந்தவனுக்கே மங்கையரிடம் அவாவுண்டாகும். மங்கையரென்போர் மத்யத்திற்குச் சமானமானவர். மத்யத்தைக் (கள்ளை) குடித்தபின்னரே மயக்கமுண்டாகும். மங்கையர்களையோவெனின் பார்த்த மாத்திரத்தினலேயே மயக்கமுண்டாகின்றது. கட்குடித்தவனுக்குப்போலவே மங்கையிடம் விருப்புற்றவனுக்கு மெண்ணிறந்த கஷ்டம் வருகின்றது. கட்குடித்தவனுக்கு விவேகமிராததுபோலவே மங்கையரிடம் அவாவுடையோனுக்கும் விவேகமில்லை. கட்குடித்து அறிவிழந்து மயக்கங்கொண்டவனுக்கு சுபஹேதுவாகிய ஔஷதமெளிதில் கிடைக்கும். அவ்வௌஷதமானது அவனது மயக்கத்தை யோர்நொடிப்போதில் நீக்குகின்றது. இத்தருணியினிடம் விருப்புற்றால் அது மரணஹேதுவாகிய துக்கத்தையுங் கொடுக்கின்றது. அந்தோ! இதனல் மயக்குண்டவனுக்கு எளிதாகிய ஔஷதங் காணப்படவில்லை. அம்மங்கை மரித்தாலிவனுக்கும் மரணஹேதுவாகிய துக்கமுண்டாகின்றது. மத்யமானது தொலைந்தால் அதன் பின்னர் அதனை நினைப்பதினலேயே மயங்கினவருமுண்டோ? இங்ஙனம் மஹா கஷ்டத்துக்கு ஹேதுவாயுள்ளது மங்கையென்றறிந்து அவ்விருப்பத்தை விட்டு மங்கையைத் துச்சமென்று மனத்தால் தூரத்தேதள்ளுவதே

அறிவுடையார்க்கழகு. விஷமானது மங்கையின் முகரூபமாயிருக்கின்றது. அதனைத் தற்செயலாய்ப் பார்த்தாலும் மரணஹேதுவாகின்றது. அந்தோ! மங்கையின் முகம் விஷத்திலுங் கொடிதென்றே கூறவேண்டும். விஷம் புசித்தாலன்றி மரணஹேதுவாகாது. மங்கை முகம் பார்த்ததினலேயே உடனே மரணஹேதுவாகின்றது. உலகில் மரணஹேதுக்கள் பலவிருப்பினும் தருணனுக்கு விசேடமாய்த் தருணியெனும் பரமாணுக்களே மரணஹேதுவாகின்றது. தருணியின் பிரிவாலேயே உலகில் தருணர் பலர் மரிக்கின்றனர். தருணரெல்லோரும் காமமேலிட்டுக் காமகாரியத்தையே செய்கின்றனர். பூர்வம் செய்தபுண்ணியம் சிறிது பக்குவமாயின் ஓர் உபாயங்கிட்டும். அந்தோ! காமமேலிட்டால் தனக்கென அநுபவிக்கும் மங்கையின்சுகத்தை ஓ சிவனே! இச்சுகத்தை உமக்குச் சமர்ப்பிக்கின்றேன் என்று சிவார்ப்பணபுத்தியுடன் அனுபவித்தால் அக்கர்ப்பத்திற்றோன்றும் சிசு மஹா சாம்பவசிரேஷ்டனு யுதிக்கும். இனி மங்கைசுகம் மங்கைசுகம் என்று தோன்றுகின்றதே. சுகதுக்கமானது யாருக்கு? சீவன் நித்யமாயும் ஆகாயத்துக்குச் சமானமானவனுயு மிருப்பவன். அவனுக்குற்பத்தியில்லை. உற்பத்தி யென்பது தேகத்துக்கேயுள்ளது. இனி நாசமும் தேகத்திற்கே. சீவன் பிறக்கின்றான் சீவன் நசிக்கின்றானென்று கூறுகின்றதற்குக் கதி யாதெனின் அது தேகத்தினில் சீவபாவனையால் நிகழ்ந்ததேயென்க. தேகத்தைச் சீவனெனக்கொண்டு தேகத்துக்குள்ள ஜன்மநாசங்களைச் சீவனிடமேற்றி மயக்கத்தால் கூறுவதேயாம். ஓ ஜனகரே! சற்று கேட்பீராக. இனித் தேகமானது பலவேற்றுமையுடையது என்பதையும் கூறுகின்றேன் கேட்பீராக. தேகம் ஸ்தூலதேகம் சூட்சுமதேகமென்று இரண்டுளது. சூக்குமதேகமே லிங்கசரீரமெனப்படும். முத்தனுக்கு இவ்விரு சரீரங்களும் நசிக்கின்றன. இனி ஸ்தூலதேகம் நசித்தால் சீவன் சூக்குமதேகத்தோடிருப்பன். இத்தூலதேகமும் பார்த்திபமெனவும் அபார்த்திபமெனவு மிருவகைப்படுமாம். சிலர் இதனைப் பஞ்சபூதமயமென்றுங் கூறுவர். பார்த்திபமெனுஞ் சரீரம் மனிதர் முதலியோருக்கேயுளது. இதர பூதங்களது சம்பந்த மிருப்பதுபற்றிப் பாஞ்சபூதகமென்று கூறுகின்றனர். இதர பூதங்களின் குணமும் குணியும் நசித்துக் கந்தமெனுமோர் குணமாத்திரமிருப்பதனுலும் அத்தகைய கந்தமெனுங் குணத்தால் தேகத்தில் பார்த்திபத்வமானது அநுமானத்தாலறியப்படுகின்றது. நம்மைப்போன்றவராது சரீரமே பார்த்திவமெனப்படும். இத்தேகமுண்டாவதற்குமுதற்காரணம்சுக்லமும்சோணிதமுமாம்.

47



அவ்விரண்டும் கலந்தால் கர்ப்பமுண்டாகின்றது. சுக்லத்தைக்காட்டிலும் சோணித மிகுதியாயின் ஸ்திரி கர்ப்பமும் சுக்லம் மிகுதியானல் புருஷகர்ப்பமும் ஏற்படுகின்றது. மங்கையின் யோனிக்குளிருக்குஞ் சோணிதமே கர்ப்பத்துக்குச் சாதனமாம். இவ்விரண்டுங் கூடிக் கலில முண்டாகின்றது. அக்கலிலமென்பது சுக்லசோணிதங்கள் கலந்துப் பதினைந்தாளில் உண்டாவதாம். பின்னர் ஓர் மாதங்கழிந்து அது குமிழி (புற்புதம்) போலாகின்றது. இரண்டாவது மாதம் சிறிது பருக்கின்றது. மூன்றுமாதத்தில் மாம்சபிண்டம்போலாகின்றது. அப்பரமேசுர இச்சையால் அம்சத்தோற்ற முண்டாகின்றது. நாலாவது மாதத்தில் அவயவங்களோடுங் கூடுகின்றது. [illegible]த்தில் சகல அவயவங்களோடுகூடி யிருக்கும். ஆறாவதில் மச்சை எலும்புகளுடன்கூடியதாகும். ஏழில் பிராணனேடுங்கூடும். தனது அதிர்ஷ்ட விசேஷத்தால் சீவன் பிராணனேடுகூடி உயிர் பெற்றவ[illegible]றான். இங்ஙனம் தூலதேகத்தை விடுத்து அங்குள்ள ஏனைய [illegible] மாத்திரம் கவனிக்குங் கால் சூக்குமசரீரமெனப்படும். அச்சூக்கும சரீரத்திற்கு நாசமில்லை. மிக்க புண்யவானுகிய சாம்பவனுக்குப் போகத்தில் விருப்பம்வந்தால் ஜன்மமெடுக்கக் கர்ப்பத்தை யடைவான். ஆயினும் அக்கர்ப்பவாசமும் அவனுக்குத் துன்பந்தாராது. மகா பாபியாயிருந்து அப்பாவங்களின் பயனை யனுபவிக்கும் நிமித்தம் ஜன்மமெடுப்போனுல் அவனுக்குக் கர்ப்பவாசமானது மிக்க கோரமாகிய நரகயாதனையை விளைவிக்கும். அந்த யாதனையால் அச்சீவன் மரணத்துக்கு நிகராகிய துன்பத்தை யநுபவிக்கவேண்டிவரும். கர்ப்பத்தில் வசிக்குங் காலமளவும் சீவனுக்குத் தான் முன்செய்த கர்மம் (புண்ணியபாவம்) இன்னவையென்று நன்கு விளங்கும். புண்ணியவாசனையுள்ள சீவனுயின் அந்தோ! அரியதாகிய இந்த மாநுடப் பிறவிக்காளாயிருக்கின்றோம். இனி யாம் புண்ணியங்களையே செய்யவேண்டுமென் றெண்ணுவான். பாபம் செய்தவனுயின் அவனுக்குப் பாபகர்மத்திலேயே விருப்புண்டாகும். ஏழு எட்டு மாதங்களில் அங்கங்களெல்லாம் பருத்தும் ஒன்பதாவது மாதத்தில் அவயவங்களிலுள்ள சுகதுக்கங்களை யறியவும் நிகழும். பத்தாவது மாதத்தில் கர்ப்பத்தினின்றும் வெளிவருகின்றான். வெளிவந்ததும் வெளிக்காற்றின் சம்பந்தத்தால் அறிவு மந்தமாகின்றது. ஏதோ ஓர் புண்ணியவானுக்கே அறிவு குன்றுதிருக்கும். இப்படிப்பட்ட கர்ப்பவாச துக்கங்களைப் பலகோடி முறை அநுபவித்துக் கொண்டிருப்போர் பாவஞ் செய்தவர்களே. சாம்ப

வர்களது சரீரம் புண்ணியரூபமேயாம். புண்ணியவான்கள் ஜன்ம மெடுத்தால் மீண்டும் புண்ணியத்தையே புரிவார்கள். புண்ணியஞ் செய்வதினிமித்தமே சிலர் தேகமெடுப்பார். ஆயினும் அத்தேகமும் புண்யஞ்செய்வதற்கு மாத்திரம் ஹேதுவாகும். புண்ணியமென்பது தேகசாதனமின்றிச் செய்யவியலாததாகலான் தேக மெடுக்கின்றனர். புண்ணியத்திலும் இணையற்ற புண்ணியம் சிவலிங்கார்ச்சனமே. அவ்வர்ச்சனை செய்வதற்கே சில புண்யவான்கள் தமதிச்சையினாலேயே பிறக்கின்றனர். அத்தகைய அபாரபுண்ணிய வைபவத்தால் சாம்பவர் இப்பூவுலகில் பிறப்பதால் பூமாதேவி மஹாசந்தோஷ மடைகின்றனள். அப்பூதேவியும் ஆச்சரியம்! நாம் இப்புண்ணியவான் தோன்றிவருதற்கிடமாயினேம். இச்சம்பந்தத்தால் நம்மினும் புண்ணியமுடையோர் யாவர்? நமது புண்ணியமே புண்ணியம். இத்தகைய புண்ணியவானின் தேகத்துக்கு ஓர் கெடுதியும் வாராதுயாம் பாதுகாக்கவேண்டுமென்று எண்ணுகின்றனள். இவ்வாறு பிறக்குஞ் சாம்பவராகிய ஆன்மாவுக்குப் பிறந்ததுமுதல் ஸ்ரீமஹா தேவபூஜையிலேயே விருப்பமுண்டாகும். அவன் பாலியத்திலேயே ஞான சம்பன்னனாய் மானசபூஜை செய்ய விரும்புவான். தத்வஞான முதித்து விஷயத்திலுள்ள விருப்பந் தொலைந்து சிவார்ச்சனையில் மிக்க சிரத்தையுடையோனாய் நாமே தன்யர் என்றெண்ணிக் கவலையற்று ஆனந்தபரவசனாகிய மனத்துடன் மஹேசனது நாமங்களையே பாலியத்திலும் உரத்துக்கூறுகின்றான். பின்னர்ச் சிவபூஜா சாமக்கிரிகைகளைச் சம்பாதித்துக்கொண்டு சிவலிங்கத்தைப்பூஜிக்கின்றான். பிறந்தது முதல் மஹா தேவனைப் பூஜிக்கவிரும்புவோனது புண்யத்திற்கு அந்தமேயில்லை. சிவகணங்களும் மனிததேகம்பெற்றுச் சிவபூஜா புண்யஞ் செய்யவிரும்புகின்றனர். உலகில் எண்ணிறந்த பல கோடி புண்யங்களிருக்கின்றனவாயினும் அவைகள் சிவபூஜா புண்யத்திற்கு உபகரணமேயன்றித் தத்பிரதானமாகிய புண்யங்களன்று. ஆதலால் சிவார்ச்சனையின் மஹிமை அபாரமாயுளது. சிவார்ச்சனமஹிமை கூறினும் முத்தி கிட்டுமானாலும் அதன் மஹிமையாரால் கூற முடியும்? சிவார்ச்சனையில் இவ்வளவுதான் இதற்குமேலில்லையென்று எவன் எல்லையிட்டுக் கூறுவானோ அவனே வேதபாஹ்யனாவான். சங்கரராலும் சிவார்ச்சனையின் பயனிவ்வளவென்று கூற முடியாது. அவ்வருச்சனையின் பயனிவ்வளவென்று முனிவர்களும் அறிந்திலர்கள். அநேக கோடி சன்மங்கள் புண்யம் புரிந்தவனுக்குச் சிவார்ச்சனையில் மனமுலாவுகின்றது. சிவார்ச்சனையே சிறப்பினும்



சிறப்புற்றது. மதுரத்திலும் மதுரமாகியது. அழகினும் அழகுபெற்றது என்றனர். மனிதர்களுக்கு ஜன்மசாபல்யமுண்டாவதற்கு அவ்வாறருள்புரிவோனும் புண்யஸ்வரூபனும் பவபஜனஞ் செய்வோரது தாபபாவங்களை யகற்றுவோனும் ஸ்ரீ மகாமேருவை வில்லாகவுடையவனுமாகிய அவ்விறைவனை நமஸ்கரிப்பாம்.

நாற்பத்து நான்காம் அத்தியாயம்
முற்றிற்று.

---

உ

ஶக்திதாயிநம:

## நாற்பத்தைந்தாம் அத்தியாயம்.

### ஜனகன் சிவோபாஸனை செய்யாமைக் கிரங்கல்.

வியாசர்:-ஓ முனிவர்களே! யாக்ஞவல்கியருடைய வாக்கென்னும் அமிர்த சாரத்தால் அகில தாபங்களும் தொலைந்துவிட்டன. தேவகங்காப் பிரவாகத்தின் அலைபோல விளங்கும் யாக்ஞவல்கிய முனிவரின் வாக்கானது மகா கோர பாபங்களையெல்லாம் ஓர் நொடிப்போதில் தொலையச் செய்வதாகையால் அதைக் கேட்ட சனகன் யாம் செய்த பாவங்களெல்லாம் தொலைந்து பரிசுத்தமானேம். எத்தனைகோடிச் சன்மமெடுப்பினும் எக்கதி வந்தாலும் சிறிதும் பயமில்லை. இப்போது சாம்பவசகவாசம் நேர்ந்தமையால் புண்யம் கடல்போல் பொங்குகின்றது. எனது ஜீவனம் தன்யத்திலும் தன்யமாகின்றது. இதனை விட்டு அன்னம் அன்னம் என்று புலம்பிக்கொண்டு திரியும் ஜீவனத்தாலென்னபயன்? இப்போது சிவபூஜை செய்வதில் நமக்கோர் பேருறுதிவந்துவிட்டது. இனி அப்பூசையினாலேயே பொழுதைக் கழிக்கவேண்டும். அவ்வர்ச்சனையின் பயனையும் நன்கு கேட்டோம். நமது சந்நிதானமும் இனி அபயத்தின் பொருட்டாம். இது மிக்க ஆச்சரியமே. பாபராசிமலைக்கு வச்சிராயுதமாயுள்ளது நமக்குக்கிடைத்துவிட்டது. ஓ சங்கரா! ஸ்மராஹரா! உம்மைச் சேர்ந்தவனாகிய அடியேனைக் காப்பாற்றும். அடியேனை விட்டுவிட்டுத் தேவரீர் மந்தரகிரியில் வசிக்கவிரும்புவதுந் தகுதியோ? சிவலிங்கார்ச்சனையில் விருப்பமெனும் புண்ய தீர்த்தத்தால் எனது சித்தத்தைச் சுத்திசெய்தருளுங்கள். எனக்குச் சிவபூஜாசிரத்தையானது உறுதியாயிருந்தால் அஃதே சகலதுக்கங்களை

யுந் தொலையச்செய்வதாகும். இப்போதெனக்குள்ள தனமெல்லாவற்றையும் சிவபூஜா வுபயோகமாகவே செய்யவேண்டும். அப்படிச் செய்தால் என்ஜன்மம் பயன் பெற்றதே. செயலாலும் மனத்தாலும் வாக்காலும் எப்போதும் மஹேஸ்வரபூசைக் கன்னியமாய் எதையும் நினைக்கக்கூடாது. இஃதே எனது பிரார்த்தனை. மங்கையின் தேகமே சிறந்தது என்று மயங்கிச் செய்யும் சங்கமங்களாலும் குமாரனே சகலமுமென நினைத்து அவனை விட்டுச் சிறிதும் விலகச் சம்மதியாது செய்யும் சம்பாஷணங்களாலும் யானை குதிரை பசு முதலியவைகளை மேன்மேலுஞ் சம்பாதித்துப் போஷிப்பதே புருஷார்த்தமென்ற வெண்ணத்தாலும் யாது பயன்? எப்போதும் சங்கரார்ச்சனையன்றோ முக்யம்? அந்தோ! கொடிய யமன் செய்யும் யாதனைகட்குட்பட வேண்டிவருமே. அது மகா துக்கமன்றோ? அதனை எதனால் தொலைப்பது? சங்கரார்ச்சனையினாலேயே தொலையக்கூடியதன்றோ? இஃதுண்மையாயிருக்க யாம் செய்யவேண்டிய காரியம் சிவபூசையே. சங்கரனே எமக்குக் கதியாயுள்ளவர். சங்கரனை விடுத்து விரும்பத்தகுந்த தொன்றுண்டோ? மோக்ஷத்தை யளிப்பவன் அச்சிவனே. அவனையே யாம் ஸ்மரிக்கவேண்டும். மங்களபதியின் பாதாரவிந்தார்ச்சனை சகல மங்களச்சிறப்பிற்கும் சாதனமாயுள்ளது. இறைவன் அவனது சரணாரவிந்தத்தைத் தியானிப்பதற்கன்றோ மனத்தைச் சாதனமாயமைத்திருக்கின்றனர்? இனி நமது மனம் அஃதொழிந்த ஏனைய காரியங்களில் உதாசீனமாகுக. மிக்க ஜீரணமடைந்தும் நாம் சங்கரார்ச்சனையை விரும்பாவிடில் இச்சீவனம் வீணே. இஃது முனிவர் மொழியால் நன்கு புலப்படுகின்றது. அந்தோ! எத்தனையோ எண்ணிறந்த பிறவிகளைப் பெற்றனம். புண்யத்தைச் செய்திலம். இறைவனை நினைந்திலம். சாம்பவர்களைச் சேவித்திலம். இச்சீவனம் முழுதும் வீணாய் மடிந்ததே! சாம்பவர்களோடு சங்கஞ் செய்தாலன்றோ சிவலிங்க பூசையில் விருப்புண்டாகும். ஆஹா! நமது துரதிர்ஷ்டம் இவ்வளவு வலியுடைத்தா? வயதுசென்று நரையடைந்து சரீரம் தளர்ந்தபின்னர்ச் சங்கரார்ச்சனை செய்யவிருப்பம் வந்ததனால் யாதும் பயனில்லையே? தேகந்தளர்வாலுள்ள துக்கத்தையே யனுபவிக்கவேண்டியிருக்கின்றது. இப்போது சாம்பவர் கூறும் மொழியைக் கேட்டல்மாத்திரமேயன்றி அதன்படி நடப்பதற்கில்லையே. சங்கரனை யர்ச்சிக்காமல் கர்ப்பவாசங்களில் கூறவொண்ணாத் துக்கத்தை யனுபவித்தனமே! அப்படித் துக்கத்தை யனுபவித்தபோது சங்கரபூசை செய்ய இயலுமா? மலமூத்தி



ரங்களாலும் புழுக்களாலும் பலவா பீடையை யநுபவிக்குங்காலத்தில் சிவத்தியானங் கிட்டுவதெங்ஙனம்? அந்தோ! எத்தனைகோடி தடவை ரேதஸ்ஸுகளிற்புகுந்து சுரோணிதங்களோடு கலந்தனம். எவ்வளவு இழிவாகிய யோனிகளில் பிறந்தனம். பன்றிமுதலிய பற்பல இழிய யோனிகளிற் புகுந்திருந்து அந்தந்தக் கர்ப்பவாசத்திலுள்ள துக்கங்களை யனுபவித்துத் தபித்தனம். அந்தந்த சரீரத்துக்குள்ள மலமூத்திராதிகளால் சூழப்பட்டு மிகக் கொடியதுக்கங்களையெல்லாம் விஷத்தைப் புசிப்பதுபோல் புசித்தனம். அந்தோ! கர்ப்பவாசத்திற்குட்பட்டவர்க்குத் துக்க நிவாரணஞ்செய்வது யாது? புழுக்களாய்ப் பலகோடி காலம் பிறந்துழன்றனம். அப்பொழுது இப்படி யுழலுகின்றோமே இதற்குக் காரணம் யாது என்று நினைத்தோமா? அப்படி நினைத்தாலும் எப்படிப் புலப்படும்? எந்தப் பிறவியாயிருப்பினும் ஓர் கணப்போது இறைவனை நினைந்தால் பிறவியென்னும் விபத்து நீங்குமென வுபநிடதங்கள் கூறுகின்றனவே. மோகாந்தகாரத்தினால் மயங்கி நமது மனம் அதனைச் சிறிது மறிந்திலம். அதற்குக் காரணம் பாபகர்ம பரிபாகமே. சாம்பவரோடு சம்பாஷணஞ் செய்வது சகல பாபங்களையும் நசிக்கச் செய்கின்றது. யமயாதனைகள் தொலைகின்றனவென்பது பாபான்மாவுக்குத் தோன்றுவதில்லை. இதற்கு முன் எண்ணிறந்த மாநுடப் பிறவியைப் பெற்றனம். செல்வமும் ஏராளமாய்க் கிடைக்கப்பெற்றனம். அவைகளால் ஒருகணப்போதில் தொலையும் இத்துச்சமாகிய தேஹ சுகத்தையே கருதி மனைவாசல் முதலியவைகளில் உபயோகப்படுத்தினோம். மரித்தபின் அதன் பயனைச் சிறிதுங் கண்டிலம். அந்தோ! கிடைத்த பொருளைக்கொண்டு சிரத்தையுடன் சிவமந்திரத்தின் பொருட்டு உதவினோமா? பொக்கிஷம் வளரவேண்டுமென்பதையே யன்றோ மிகச் சிரத்தையுடன் வெகு துக்கத்தை யநுபவித்துக்கொண்டு மேன்மேலும் சம்பாதிக்க முயன்றனம்? அதனைக்கொண்டு சிவார்ச்சனை செய்திலமே. பாபத்தில் கிடந்துழலும் இப்பாழுந் தேகத்துக்கு விலையுயர்ந்த பட்டு முதலிய வஸ்திரங்களைச் சம்பாதித்து அணிந்து பார்த்தனமே. அவைகளில் ஒன்றையாவது சாம்பவர்களுக்குதவினமா? எண்ணிறந்த ஆனிரைகளுக்கு இறைவனாயிருந்தோமே. அவைகளைப்பக்தியுடன் சாம்பவர்களுக் குதவினமா? நமக்கெனவும் நமது மனைவிமக்களாதியர்க்கெனவும் பசுவின்பாலை அபாரமாயுபயோகப்படுத்திக்கொண்டோமே. சாம்பவர்க்களித்தோமா? சம்புவுக்கும் அபிஷேகஞ் செய்திலமே. ஆவின் நெய்முதலியவைகளைச் சம்புவுக்கு

அர்ப்பணஞ்செய்திலமே. கம்பளி முதலியவைகளால் சம்புவை அலங்கரித்திலமே. ததிப்பிரவாகத்தையும் சர்க்கரைக் குவியலையும் சிவனுக்கு நிவேதனஞ் செய்திலமே. பரிமளமிகுந்த தீர்த்தங்களாலும் புஷ்பம் குங்குமம் கனி இவைகளாலும் பூசிக்கவில்லையே. தீபமாலவரிசைகளால் சிவோபசாரஞ் செய்திலமே. தூபம் உதவவில்லையே. சங்கரார்ச்சனையை யுபதேசித்த சாம்பவ குருவை அர்ச்சிக்கவில்லையே. பூதிபுண்டரமணிந்து ருத்திரனை நமஸ்கரித்தோமா? சிரசு நெற்றி கை கண்டம் முதலியவற்றை விபூதியால் பூஷித்துக்கொண்டோமா? மனத்துக்குத் தோன்றிய ஆபரணங்களைத் தரித்துக் காமவேதனைக்குச் சாதனங்களாகிய வண்டு குயில் முதலியவைகளால் பிரமித்து மங்கையின் சுவர்ன கங்கணங்களின் துவனியையே செவிக் காபரணமாய்ச் செய்வித்துக் காமினியின் கண்களைக் கமலமென நினைத்து யௌவனத்தால் உன்மாதங்கொண் டுழன்றோமே. சிவபாதாரவிந்த பூசையின்றிச் சன்மத்தை வீணாக்கிக்கொண்டோமே. ஆனந்தபரவசனாய்ப் பக்திரச மொழுகக் கண்களாற் சிவனைத் தரிசித்திலமே. காமனது இல்லத்தைக் காண்பதே சிறந்ததென்னக் கருதிப் பற்பல பாதகங்களைச் செய்தோமே. மங்கையின் அங்கங்களிலும் சங்கமுடையமனத்தோடு செய்யத்தகுந்தவை இவையெனும் பகுத்தறிவின்றிச்செய்யத்தகாத பலகாரியங்களைச் செய்தோமே. சுருதிகூறியபடி விபூதி யெடுத்துத் தேகமுழுதும் பூசிச் சம்புலிங்கத்தைப் பூசித்தோமா! சந்தனாதிகளைக் காமசுகசாதனமாக நினைத்துப் பூசிக் கண்டபடி பாபங்களைச் செய்துழன்று இழிந்த பன்றி முதலிய யோனிகளிற் சென்று பலகோடி ஜன்மங்களைப் பெற்றனம். லிங்கபூஜா சாதனமாகிய பில்வபத்திரத்தை யெடுத்தோமா? அழகிய பில்வபத்திரங்களாலும் தாமரை மலர்களாலும் தருணேந்து சேகரனைப் பூசித்தோமா? சிவார்ச்சனையின் அங்கமாகிய தூபங்களின் புகையாலும் சங்கர நிவேதனங்களின் பரிமள வாசனையாலும் இல்லத்தைப் பாவனஞ் செய்திலமே. நிர்மலமாகிய சீதள தீர்த்தத்தால் சிவாலயத்தைச் சுத்திசெய்திலமே. சிலேஷ்ம வுருவமாகிய இழிந்த தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டோமே யன்றிச் சங்கரனையுபசரிக்கவில்லையே. சுவர்ணத்தால் ஜ்வலிக்கும் அழகிய குடையால் சிவ சிரசை அலங்கரித்தோமா? அழகிய சாமரைக்காற்றால் மஹேஸ்வரரை உபசரித்தோமா? சிவாலயமண்டபத்தில் சிவத்யானஞ் செய்து கொண்டு நடனஞ் செய்திலமே. சிவலிங்கத்தை யபிஷேகித்துத் தீர்த்தத்தைச் சிரசால் தரித்தோமா? மகா பாதகங்களை நசிப்பிக்



கும் நிர்மாலியத்தை யருந்திலமே. சங்கரனுக்கு நிவேதித்த பலப் பிரசாத தீர்த்தங்களைப் பக்தியுடன் புசித்திலமே. சாம்பவர்களை இல்லத்திலழைத் துபசரித்திலமே. அஷ்டமூர்த்தியினருளால் இஷ்டசித்திபெற விரும்பிச் சாம்பவர்களைப் பூசை செய்திலமே. சங்கரார்ச்சனையால் கிடைக்கப்படாத பொருளொன்று மில்லையே. சங்கரனது சரித்திராமுதப்பெருக்கால் காதுகளில் நிறம்பச்செய்தேனும் மகா புண்யத்தைச் செய்திலமே. சிவபூசை செய்வதலடைந்த நமது மகிமையைச் சாரணர்களும் தோத்திரஞ்செய்யப் பெற்றிலன்றோ நாம் தன்யராவோம்? நமது குணகணங்களைச் சங்கரரும் வர்ணிக்கப் பெற்றிருக்கலாமே. அவ்விறைவன் நம்முடையவன் இவன் என்று நினைத்தால் பிறகு நமக்கும் பிறவிப் பிணிபிறவுண்டாகும் பயத்திற்கு ஆளாய்விடுவோமா? மகா பாதகராசிகளை மலைமலையாய்ச் சம்பாதித்திருப்பினும் சங்கரனது சரணாரவிந்தத்தில் மனத்தைச் செலுத்தியிருந்தோமானால் அப்பாதகக் கூட்டங்களெல்லாம் நசிக்குமென்பதில் ஐயமில்லையே. ஸ்ரீ காலகாலனைப் பஜித்திருந்தோமானால் யமனிடம் பயப்படவேண்டியதுண்டா? இதுகாறும் யமகாலபயத்துக்குட்பட்டிருந்தோம். ஸ்ரீ கால காலனைப் பஜிப்பதில் இப்போது ஆவலுண்டாகிருக்கின்றது. இனிநமக்குக் காலபயமேது? இது நமக்கோர் நல்லபாக்யம். காலகாலனது நாமத்தையே யர்ச்சிக்கும் பெரியோராகிய ஸ்ரீ யாக்ஞவல்கிய மாமுனிவர் நமது இல்லம் வந்ததனால் மகா பாக்யம் பெற்றனம். சாம்பவர்கள் சிவனுக்கு ஆலயமன்றோ? இன்றே நமதில்லம் சிவசங்கம் பெற்றது. தீனரிடம் கருணையுடையோராகிய அச்சங்கரரே சாம்பவராகிய யாக்ஞவல்கியரென்னு முருவத்துடன் நமதில்லம் வந்தனர். நாம் செய்திருந்த சகல பாபங்களும் தொலைந்தவென்பதில் இனியென்ன சந்தேகம்? இத்தினமே சுதினமாகியது. சிவத்தியானத்தில் மனமின்றே சம்பந்தப்பட்டது. இதுகாறும் இப்பாக்கியம் பெற்றிலேம். இன்றுதான் நமக்குச் சொந்தமென்று நினைத்திருந்த தனதானிய பசுக்குதிரை ஆரண்மனை மற்றுமுள்ள பாக்யங்களை யெல்லாம் சிவனுக்கு நிவேதனஞ்செய்தோம். அப்படிச் செய்ததினால் இனி அவ்வொன்றும் கோடிபங்கதிகமாய் வளரும். சாம்பவர்களது கைகளே தானத்திற்குப் பாத்திரமென் றறிந்து பொருளெல்லா வற்றையும் அவர் கையில் இன்றுதா னுதவப்பெற்றனம். சங்கரரிடம் தனமுதவப் பெற்றால் காமதேனு கிடைத்ததுபோலாகும். காமதேனு பாலைக்கொடுப்பதற்கு வழியில் வருவதுபோல சாம்பவராகிய இம்

முனிவர் வந்திருக்கின்றார். பசுவுக்குப் பசையற்ற யவசமும் வைக்கோலுங் கொடுத்தாலும் அதனைப் புசித்து அஃது அற்புதமாகிய க்ஷீரத்தையே கொடுப்பதுபோலச் சாம்பவரிடம் அற்ப பொருளாவது உதவுவோமாயின் அவர்கள் நமக்கு மகா பாக்யங்களையெல்லாம் அருளுகின்றனர். சாம்பவர்கள் கிடைக்கப்பெற்றோனுக்குக் காமதேனுவாலாக வேண்டுவது யாது? அவரது பாதாரவிந்தத்தை யனுசரித்துக்கொண்டு சகல சித்திகளும் வருகின்றன. விபூதிபூசி ருத்திராக்ஷமணிந்திருப்பவனுக்கு விரும்பிய தெல்லாஞ் சித்திக்குமன்றோ? எவன் வழுவின்றிச் சிரத்தையுடன் சாம்பவர்களை அர்ச்சிக்கவிரும்புகின்றானோ அவனே புண்யவான். பர்க்கபீம பவசங்கர நீலகண்ட சிவ சர்வ காலகால கிரீச என்று கூறிக்கொண்டு ஓ சித்தமே! சிவனையே யடைவாயாக. சிருட்டி திதி லய காரணனும் பரமசுந்தரனும் விபூதி பூசிய மேனியனும் ஆகிய சிவனையே நினைப்பாயாக. கிரிராஜனது கன்னிகையோடு சிருங்காரவிலாசஞ் செய்யு மிறைவனைச் சிந்திப்பாயாக. ஓ அம்பிகாரமணா! என்னைக் காப்பாற்றுங்கள். ஓ இறைவனே! யான் கற்பகோடி காலங்களிற் செய்த பாபங்களையெல்லாம் தொலையச்செய்யுங்கள். நம்மவனாகிய இவனைக் காப்பாற்றுங்கள் என்று நினைத்து வேண்டுவாயாக. ஓ மனமே! பிறவிதோறும் யான் விபூதி பூஷிதனாகியிருந்து பக்தியுடன் சகல சாதனங்களாலும் சிவனைப் பூசிக்கவேண்டுமென்ற வெண்ணத்தைச் சிறிதும் வழுவவிடாதை. ஓ ஈசனே! தேவரீருக்கு அழகிய ஆலயங்களிருந்தாலும் என்னையும் ஓராலயமா யெண்ணிக்கொண்டு என்னிடம் வசிப்பீராகவென்று ஓ மனமே! நீ பிரார்த்திப்பாயாக. ஏனைய ஆலயங்கள் சுண்ணம்புமுதலியவை பூசப்பெற்று விளங்குகின்றன போல என்மனமெனு மாலயமும் பக்தியமுதம் பூசப்பெற்று விளங்குகின்றது. நர்மதையிற்றோன்றியதும் மிக்ககடினமாகியது மான லிங்கத்தில் சுகமாய்வசிக்கும் உமக்கு மிருதுவாகிய எனதுமனத்தில் வசிப்பது மிக்க சுகமேயன்றோ? நினைப்பது என்று உமக்கோர் பிரசித்தியிருக்கின்றதே அதனை யடியேனிடத்தில் அவசியமாய்ச் செய்து கொள்ளற்க. பசுபதியினுடைய கருணைபெற்றனம் அவர் நம்மை கருணாப்பிரவாகத்தோடுகூடிய கடாக்ஷத்தால் நோக்குகின்றாரென்று ஓமனமே! நீபாவனைசெய்வாயாக. ஓ சித்தமே! சிவனே யான் என்று எண்ணுதலாகிய சோஹம்பாவனையால் சகல கல்யாண ராசிகட்கும் நிதியாகிய மஹா தேவனை யெப்போதும் பாவனைசெய். விபூதிருத்திராக்ஷந் தரிசிப்பதிலும் சிவபுரியில் வசிப்பதிலும் சிவாராதனஞ்செய்வ



திலும் சிவமந்திர ஜபத்திலும் சிவத்தியானத்திலும் கற்பகோடி காலம் நிலைபெற்றிருக்கும்படி அருள்புரியவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்பாயாக.

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

முற்றிற்று.

உ

குமாராயநம:

## நாற்பத்தாறும் அத்தியாயம்.

### யாக்ஞவல்கியர் சிவஞான ஹேது கூறியது.

வியாசர். இவ்வாறு சனகர் கூறியவார்த்தையையும் மனோபாவத்தையும் அறிந்து யாக்ஞவல்கியர் ஆனந்த பரவசராயிருந்து மகாதேவனது பாதாரவிந்தத்தை நினைத்து மௌனம் வகித்திருந்தனர். ஸ்ரீ மஹாதேவனது அநுக்கிரகமும் அவரிடம் பக்தியுமுடையவனாயினோ அவனுக்கு ஆனந்தபரவசத் தன்மையுண்டாமென்பதற்கு யாது சந்தேகம்? இவ்வாறு அவ்வநுபவம் பெற்ற அம்முனிவர் சனகனைப்பார்த்து மீண்டுங் கூறியதாவது:-ஓ சனகனே! எங்களுக்குச் சகலபாக்யங்களும் சந்திர மௌளியின் தியானத்தினாலேயே கிடைத்தன. சின்மயனும் ஆனந்தவுருவனு மாகிய இறைவனை ஸ்மரித்தால் அவன் மகானந்தமளிக்கின்றான். ஓ சனகனே! எமக்கு அநாதியாயிருந்த அவிதத்தை இலயமடைந்தது. அவித்தை தொலைந்ததனால் மிஞ்சுவது சிவரூபமொன்றேயன்றோ? அவித்தையின் காரியமே மனமும். ஜடமாகிய மனமும் சுவயம்பிரகாசமாகிய அச்சிவத்திற்கெதிரில் எங்ஙனம்விளங்கும். சூரியன் சந்திரன் அக்னி நக்ஷத்திரம் மின்னல் இவைகளும் அவனுக்கெதிரில் விளங்குவனவல்லவே. மனோவிருத்தியுருவமாகிய அவித்தையும் அதனெதிரில் விளங்காது. இவ்வாறு சுயஞ்சோதியாய் விளங்கும் அச்சிவத்தைச் சிலர் ஓங்காரமென்கின்றனர். அவனே இயற்கையாய் விளங்குகின்றவன். அவனை விளக்கிவைப்பது யாதொன்றுமில்லை யென்பதாம். அதனைக்கேட்டு சனகன் மிக்க விநயத்துடன் யாக்ஞவல்கியரை வணங்கி, ஓ ஸ்வாமி! சிவஞானம் எதனாலுதிக்கும்? அதனை யருளவேண்டுமென்று பிரார்த்திக்க முனிவர் கூறுகின்றார். ஓ அரசனே! நன்கு வினவினீர். இவ்வுண்மையைக் கூறுகின்றேன். சிவனே பரப்பிரமமென்றறிந்திடு

அவனை சிவயோகமனிப்போன். இந்த மகாதேவனைச் சிவலிங்கத்தில் ஆராதிப்பது இறை உரியதாகும். ஸ்ரீ மகாதேவனே பரப்பிரமமானவனும் அவர் பக்தர்களுக்காக நித்தியம் லிங்கத்தில் நிலைபெற்றிருக்கின்றனர். அவரிடம் பக்தியோடு லிங்கார்ச்சனை செய்தால் பக்தியுறுதியாகும். ஸ்ரீ காமதேனுப் பிரீதியின் பொருட்டுக் கன்னிகாதானம் முதலியவைகளால் காமபலன்களை எவன் அடிக்கடி சந்தோஷிக்கச் செய்திருக்கின்றனனோ அவனுக்கே உறுதியாகிய பக்தியுண்டாயிருப்பதாம். எவன் சாமபலன்களை யானை குதிரை கோக்கள் வெண்பட்டு இரத்தினம் முதலிய தானங்களால் சந்தோஷிக்கச்செய்து அவ்வாறு சம்பூரணமும் புரிந்திருக்கின்றனனோ அவனுக்கே உறுதியாகிய பக்தி புரிந்திருக்கும். எவன் ஏதோத்சவம் முதலியவைகளாலும் சிவனைத் திருப்தியடையச் செய்திருக்கின்றனனோ அவனுக்கே உறுதியாகிய பக்தியுதிக்கும். சிவபூஜையுடன் கூடிய மற்ற கர்மங்களெல்லாம் பயன்படுமேயன்றிச் சிவபூஜையை விடுத்துச்செய்யும் ஏனைய கர்மங்களுக்கு யாதொரு பயனுமில்லை. அங்கத்துடன் கூடிய கிரியையே பயன்படுமாதலால் லிங்கார்ச்சனத்துடன் கூடச்செய்யுங் கர்மமெல்லாம் பயனுடையன. இனி அவ்வர்ச்சனையின் பயன் யாதெனின் சகலத்துக்கும் அசைவிருத்தலாம். ஒவ்வொரு கர்மத்தின் பயனை முதலில் நிச்சயித்துக்கொண்டால் அதன் பின்னர் அவ்வக்கர்மத்தைச் செய்தலியலும். உலகில் பயனை விரும்பாது ஒருவனும் எக்காரியத்தையுஞ் செய்யான். லிங்கார்ச்சனையால் பற்பல பயன்களும் பெறக்கூடியன. சக்தி லிங்கார்ச்சனையால் என்று மூன்றும் வேற்றுமைப் படுத்திக் கூறியதால் அச்சொல்லுக்குப் பலபல பயன்களைக்கொடுக்கச் சக்தியுளதென்று சாமர்த்திய மெனும்பொருள் கொள்க. சந்தேகமேனும் அபைப்படும். காரணமானது அறியப்படின் அதன் பின்னர் எப்படியென்று ஓர் ஆகாங்க்ஷை (கேள்வி விருப்பம்) பிறக்கின்றது. அதாவது உலகில் பயனை விரும்பிய ஓர்காரியத்தில் ஒருவன் பிரவர்த்திக்கின்றான். இனிப்பயனை யறிந்ததின் பின்னர் அதன் சாதனம் யாது என்று சாதனவிருப்பமுண்டாகின்றது. அதன்பின் அதை எப்படிச்செய்கிறதென்று ஓர் விருப்பமுண்டாகின்றது. இனி அதன் அங்கங்கள் யாவை என்று விருப்பமும் உதிக்க அதனை விதிப்பதாகிய அங்கவிதிகளு முக்கியவிதியி லடங்கி விடுகின்றன. இனி அதனங்கத்தின் விதியும் முதலாவது அங்கவிதியிலடங்கும். ஒவ்வொரு கர்மமும் செய்தவுடன் காணுமற்போகிறபடியால் அக்கருமத்திற்கு அதற்குரிய பயனை அளிப்பது எங்ஙனமெனவு மெனின் இஃதறிக. அக்கர்மம்



முடிந்துவிட்டாலும் அதன் பயன் காலாந்தரத்தில் பெறப்படலாம். அப்பயனுக்கும் அக்கர்மத்திற்கும் ஓர் சம்பந்தம் தொடர்பாயுளது. கர்மம் முடியும்போதே அதனைத்தொட்டுக் கொண்டு பின்னர்ப்பயன் தரும்வரையில் அபூர்வமென்று ஒன்று கூறப்படுவதுயாதோ அஃதே அச்சம்பந்தமுளதாம். இஃது முக்கிய கர்மத்துக்குத்தானேயுளது. இதற்கு அங்கங்களென சில கூறப்பட்டனவே அவற்றிற்கும் முற்கூறியபயனுக்கும் இருக்குந்தொடர்புற்ற சம்பந்தமுளதோ? அங்ஙனமாயின் அதுயாதெனின், அஃது அவாந்தர அபூர்வமெனப்படுவதாம். அதாவது அங்கங்கள் அவாந்தர அபூர்வமுடையனவாம். அவ்வவாந்தர அபூர்வமும் முக்கிய அபூர்வம் சித்தித்தற்கேதுவாம். இங்ஙனம் பயனுக்கேதுவாகும் கர்மத்தைச் செய்தற்கு முக்ய காரணம் பயனின் விருப்பமே. அஃதிருந்தாலொழிய கர்த்திருத்துவம் சித்தியாது. பலேச்சை யிராதவனுக்குக் கர்மத்தில் முயற்சியில்லை. கர்மத்தை விட்டுவிட்டால் விதி அவமாகின்றது. இனி விதிக்கப்பட்ட கர்மத்தை விட்டுவிடுவதால் வருவது யாதெனின் நரகமே வருமென்பதில் சந்தேகமேயில்லை. தேகத்தையே ஆன்மாவென்று கூறுஞ் சிலர் விதிக்கப்பட்ட கர்மத்தைச் செய்யாமல் நரகவாசம் பெற்றுத் தவிக்கின்றனராதலால் விதிக்கப்பட்ட கர்மங்களிற்சிரத்தையின்றி அதனைச்செய்யாதிருக்கின்றனர். சிரத்தையாவது யாதெனின் இக்கர்மமானது விதிக்கப்பட்டிருக்கின்றமையால் இதை நாம் செய்தால் நமக்கு நன்மையுண்டு என்கிற நம்பிக்கையே. அது சிரத்தை யெனவும் விஸ்வாசமெனவும்படும். இஃதுடையவனே கர்மத்துக்கதிகாரி யென்றறிக. இது குன்றியவன் மஹா துர்ப்பாக்கியவான். சிவார்ச்சனையால் விரும்பிய பயன் நமக்குச் சித்திக்குமென்பதில் சந்தேகமேயில்லை யென்ற நம்பிக்கையுடைய பாக்யவானே அக்கர்மத்தின் பயனைப்பெறுவான். கர்மங்கள் சாமானியமாய் ஒன்றாயினும் நித்தியம் நைமித்திகம் காம்யமென மூவகைப்படும். இவைகளுள் காம்யமொன்றுக்கே பயனுண்டு, நித்ய நைமித்திகங்களுக்குப் பலனில்லை யெனக்கூறுவாரும் சிலருண்டு. அவர்கள் பாவனை யென்பதின் மனத்தையும் மூவராதவரென்பதிற் சந்தேகம் யாதுமில்லை. விதியென்பது அதாவது விதியினுருவமின்னதென்று அறியாதவரே அப்படிக்கூறுகின்றனர். விதிக்கு மூன்றம்சங்களுள. அவைகளில் முதலாவதம்சம் பலன். இரண்டாவது அம்சம் சாதனம். மூன்றாவதம்சம் அதனங்கம் என்றறிக. இவைகளுள் முதலாவதம்சமாகிய பயனை இல்லையென்று புலம்பினுல் விதியுருவஞ் சித்திய

மல் விதி அவலமாய் விடும். விதித்திலவெனின் அதனில் யாருக்குப் பிரவர்த்தியுண்டாகும்? இனிச் சிலவிதிகளில் பயன் கூறப்படக்கண்டிலமே எனின் அங்கும் பயனைக் கற்பித்துக்கொள்வதே அவசியமென்க. விதியானது முதலில் பயனைப்பற்றியே நடைபெறுகின்றது. இங்ஙனம் நடைபெறுதல் சகல கர்மங்களுக்கு முளதாதலால் விதித்தன்மைக்கு முக்யஹேதுவாகிய பயனெனும் அம்சத்தை நித்ய நைமித்திக கர்மங்களுக்கில்லையெனின் அக்கர்மங்களுக்கு விதிக்கப்படுந்தன்மையில்லாது. ஆதலால் நித்யமாய் விதிக்கப்பட்ட விபூதி உத்தூளன முதலிய சிலகன்மங்களுக்கும் அபாரமாகிய பயனுளதென்று மந்திர லிங்கங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு கன்மங்களுக்கும் பயனுளதென்பது நிச்சயமே. சில கர்மங்களுக்குப் பிரதான வாக்கியங்களில் பயன் காணாவிடினும் அங்க வாக்யங்களாற் கூறப்பட்ட பயனையே அங்கும் கொள்ளவேண்டும். இனிச் சில விதிகளுக்கு அங்க வாக்கியங்களினும் பயன் கூறப்படாவிடின் அதற்கு யாதுகதி யெனின், ராத்திரி சத்திரமெனும் யாகவிதி நியாயமாய் யங்கும் பயனைக் கற்பித்துக்கொள்ளல் வேண்டும். இங்ஙனமே நைமித்திக கர்மங்களினும் அதனதற்குரிய பயனைக் கற்பித்துக்கொள்ளவேண்டியதேயாம். ஆதலால் பயனற்ற கர்மம் எங்கும் கூறப்பட்டிலது. ஆருத்திரா முதலியவையோடு கூடிய தினம் ஓர் நிமித்தத்தோடு கூடியது. அந்நக்ஷத்திர சம்பந்தமே சிவபூஜைக்கு நிமித்தமாகுமாதலால் அன்று பூசிப்பது நைமித்திகமாம். இஷ்ட சாதனத்வஞானம் (விரும்புவதைப்பெறுதற்குச் சாதனமான ஞானம்) யாண்டும் பிரவர்த்தகமென்று கூறப்பட்டுளது. அங்ஙனமிருக்க அதனைத் தடுப்பதற்கு எவரால் முடியும்? இதுகாறுங் கூறியதனால் சகல கர்மங்களுக்கும் பயனுளது என்பது பெறப்பட்டது. இனிப்பலம் வ்யோகத்தைத் தவிர வேறுபாதுமில்லை யென்று கூறுவாருமுளர். அவரை இங்ஙனம் வினவவேண்டும். வ்யோக பலமென்றது அசத்துப்பொருளா? அல்லது சத்துப்பொருளா? என்று வினவ அவர் பதில் கூறவேண்டும். ஒன்றுங் கூறுவிடில் உத்தரம் சபலமாய் விடும். ஆண்டு விடை பயனுடையதென்பதாம். அசத்தெனில் வஸ்து யாதுமில்லாதாய் விடும். சத்தெனின் வ்யோகம் பலமென்றுலகில் கூறுவாரில்லை. ஆதலால் சகல கர்மங்களும் பயனுடையனவேயென்று சுருதி கூறுகின்றது. ஆயினும் சிவபூஜை ஓர் சிறப்புற்ற வைதிக கர்மமே. அதற்குப் பயனும் மிகவுளது. அதற்கங்கங்களும் பலவுள. அவ்வங்கங்களோடு கூடிச் சகல பலத்தையளிப்பதாகும். முதலில் பயன் விருப்பமே முக்ய



மாகும். அப்பல விருப்பமும் முக்ய கர்மத்தில் நிகழ்வதே (பிரதானத்திலுளதே) யன்றி அங்கங்களைக்கொண்டே கர்மத்தில் பிரவர்த்தியில்லை. ஆதலால் முக்ய கர்மமே பலத்தைக் கொடுப்பதாயினும் அம்முக்யமும் அதனங்கத்துடன் கூடியே பலன் தருகின்றது. அங்கங்கூடாவிடில் முக்ய கர்மத்தினுற்பத்தியே இயலாதாதலால் அங்கங்களும் அவ்வங்காங்கங்களு முறையே கூறப்பட்டுள்ளன. லிங்கார்ச்சனத்தினால் ஆயுளைச் சம்பாதிக்கலா மென்பதாதி வாக்யங்களால் லிங்கார்ச்சனம் காரணமென்றும் ஆயுள் பலனென்றும் விளங்குகின்றது. அங்கு அவ்லிங்கார்ச்சன மெதனாலெனின் நிகழ பில்வபத்திர முதலிய சாதனங்களால் என்பது அறிக. பில்வபத்திர முதலிய சாதனங்களில் வைராக்யம் வந்துவிட்டால் அதன் காரணமே நிகழாது. தூபதீப முதலியவும் பொருளைக்கொண்டு நிகழவேண்டியதாதலால் தனத்தில் வைராக்யமுங்கூடாது. ஆதலின் சம்பாதித்த திரவியங்களை யெல்லாம் சிறிதும் அநாதரவு செய்யாது சிவபூசையில் செலவு செய்யவேண்டும். அதனால் பயன் கிட்டும். பஞ்சாமிர்த அபிஷேகங்களுக்கு வேண்டிய பால் தயிர் தேன் நெய் முதலியவை தனமிலாவிடின் கிடைக்காவாகலான் தனத்தினாலேயே சிவபூஜையினங்கம் சாத்தியமாகும். அன்றியும் பக்குவமாகிய கனிரசங்களால் லிங்கத்தை ஸ்நானஞ் செய்விப்பதும் நைவேத்யத்திற்கு வேண்டிய பாமான்ன முதலியவைகளும் சிவனுக்கருகமாகிய சுவர்ணபாண முதலியவைகளும் பொருளிராவிடில் நடவா ஆகையால் தனம் வேண்டியதவசியமே. இனி பாரியை யிடத்தில் பற்றில்லாமல் வைராக்யம் வேண்டும். இஃது சிவபூஜைக்கு அங்கம் என்பதும் யுக்தமல்ல. ஏனெனின் சிவநைவேத்ய அன்னபாகஞ் செய்வதற்குப் பாரியையில்லாமல் முடியாது. அஃதும் யுக்தமேயாம். சிவார்ச்சனையின் பொருட்டு உபயோகப் படுவதெல்லாம் ஆதரிக்கவேண்டிய தவசியமே. பாரியையிடம் வைராக்யம் கொள்வது தகுதியல்ல. இதனால் வைராக்யமென்னுஞ் சொல் ஏதோ பரிபாஷையாய்க் கூறும் ஓர் சொல்லென்றறிக. சிவார்ச்சனையி லுபயோகப்படும் சாதனங்களுக்கும் தனம் வேண்டிய தவசியமாதலாலும் அங்ஙனம் தனத்தைத் துச்சமாய் நினைத்துச் சம்பாதிக்காமல் சும்மாயிருப்பதே வைராக்யம் என்பது தகுதியல்ல. மற்றியாதெனின் சம்பாதிக்கும் பொருளையெலாம் சிவபூஜையி னிமித்தம் செலவழிப்பதே வைராக்ய மெனப்படும்.

பூர்வம் சுதானந்தனென்று பிரசித்திபெற்ற ஓரரசனிருந்தனன் அவன் மகா தார்மிகன்; குணவான், மிக்கபராக்கிரம முள்ளவன் சிவபூசையையே பெரிதாகக்கொண்டவன். சிவபூசை முதலிய தருமங்களையே மேன்மேலு மோங்கும்படிப் பரிபாலனஞ் செய்துவருவோன். அவன் எப்பொழுதும் ஸ்ரீ மஹா தேவனை எங்கெங்கு பூசிப்போம் எந்தெந்த முறையுடன் பூசிப்போம் என்பதாகச் சிந்தனையே செய்வோன். சாம்பவர்களிடம் அபார சிரத்தையுடையவன் அவர்களைப் போஷிப்பதையே பெரிதாக நினைப்பவன். சத்தியமாய்ப் பேசுகின்றவன். சகலமுமறிந்தவன். நீதிசாஸ்திரங்களி னுண்மையை நன்றாயறிந்தவன். பிரஜைகளைப் பரிபாலிப்பதிலும் துஷ்ட நிக்ரஹஞ் செய்வதிலும் மிக்க திறமைபெற்றவன். கீர்த்தியுடையவன். வைராக்யமுடையோன். அசூயையற்றவன்; யுத்தத்தில் தேவர்களையும் நடுங்கச்செய்வோன்; சகல லக்ஷணங்களு முடையோன். இப்படிச் சகல குணங்களும் பொருந்திய அவ்வரசனிடம் ஓர் சமயம் ஆதிசேஷனும் குருவும் வந்தடைந்தனர். அப்படி வருதலைக்கண்ட அரசன் எதிர் சென்றோடி சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துப் பூசித்தான். பின்னர் அவர்கள் ஒருவரோடொருவர் குசலவினா செய்து பேசிக்கொண்டிருந்தனர். அப்போது அரசன் குருவைப்பார்த்து குருமூர்த்தியே! ஓ ஸ்வாமி! தர்மங்களுக்குள் சிறந்தது யாது? சகலமுமறிந்த தேவரீரே தர்மரகசியமுமறிந்தவர். சகல தேவர்களினுஞ் சிறந்தவர் யார் என்று சுருதி கூறுகின்றது? என்று கேட்க, அப்போது குரு ஓ அரசனே! சகல தர்மங்களிலும் சிவதருமமே சிறந்தது. அதனாலேயே சகல காமங்களும் பயன் படும். சிவபாதாரவிந்தத்தைப் பூசிப்பதனால் கிடைக்கும் பயன் உக்ரமாகிய தவத்தாலும் பெறல் அரிது. எண்ணிறந்த கோடி யாகங்களைச் செய்வதாலும் அவ்வண்ணமே. ஸ்ரீ மஹா தேவனருளொன்றினாலேயே அடையப்படுவதாகும். ஸ்ரீ மஹா தேவனிடம் உறுதியாகிய பக்தி அனந்தகோடி புண்ணியங்களாலேயே யுண்டாகவேண்டியது. ஓர் க்ஷண காலம் அவனை ஸ்மரித்தாலும் சகல பாதகங்களினின்றும் விடுபடுகின்றான். எவனைப் பூசிப்பதும் மகாதேவ பாதாரவிந்தத்தைப் பூசிப்பதாகும். மகா பாதகமெனும் பஞ்சப்பொதியானது சிவநாமமெனும் அக்னியின் லேசத்தால் ஓர் க்ஷணப்போதில் பஸ்மமாய் விடும். எவனுக்குச் சாம்பவர்களைப் பூசிப்பதில் மிக்க விஸ்வாச முளதோ அவனுக்கே மகா பாதகமெனும் சமுத்திரம் வற்றி வறண்டு போவதாம். சிவபூஜா மஹிமையானது சகல சுருதிகளாலும் கொண்டா



டப் படுகின்றமையால் அது என்னாலும் இச்சேஷனாலும் அல்லது யமனாலும் மற்றெவனாலுங் கூறமுடியாது. பூர்வம் சிவதருமத்தை யறிவதின் பொருட்டு இச்சேடன் பதினாயிரம் யுகம் தவஞ்செய்தும் அதன் மஹிமை யறிய முடியவில்லை. சிவனொருவராலேயே அறிதற்கியலும். சிவனே தர்மக்ஞான சிரோமணி என்று முழங்குகின்றமையால் அவரே அதன் தத்வத்தையறிவார். பலகோடி காலம் தவம் செய்தும் காணக்கூடாத அத்தருமமானது சிவனுக்கும் அம்பிகைக்கும் குமாரருக்கும் நந்திகேசர் முதலியவர்க்கும் விளங்கும். என்போன்றவரும் ஒருவாறறிவார். ஆனாலும் அதனை முழுதுமறிதற்கு ஒருவராலு மியலாது. ஆனால் சம்பு தர்மத்தைச் சாம்பவரே யறிவார். அது நம்போன்றவர்க் கெட்டாது என்பது நிச்சயம். இனிச் சிவபூசையை விதிக்கும் விதிகள் பற்பல விருக்கின்றன. அவைகளையும் நாமறிதற்கில்லை. சிவனே சிவதர்மங்களை ரகசியமாயிருக்கச் செய்திருக்கின்றனர். ஆதலால் மற்றவர்களுக்கும் நமக்கும் அது விளங்காதன்றோ? அப்படிப்பட்ட தர்ம ரகசியத்தை அவனது பேரருளாலறிந்திருக்கும் பெரியோர் பரம சாம்பவராவர். அவர்களை அவ்விறைவனாகவே நினைக்கின்றேன். அப்படிப்பட்ட மகா சாம்பவரது பாதத்தை நமஸ்கரிக்கின்றேன். வேதாந்தங்களாலும் முகுந்தராலும் தேவர்களாலும் வணங்கப்படுகின்றவர் அவரே. அவரைத் தரிசிப்பது பிறவி யெனும் பிணியை நீக்கச்செய்து முக்தியைத் தரும். சாம்பவ தர்மமறிந்த சைவோத்தமரே தன்யர். அவரது பாதாரவிந்தத்தை யர்ச்சிப்போரும் தன்யர். அவரது பாததூளியைச் சிரசினால் தரிப்பவருக்குக் காலபயமு மில்லை. ஆதலால் நாம் சிவபூசை செய்வோரும் சிவாசார விரதமுடையோரும் சிவதர்மம் அறிந்தவருமாகிய பெரியோரைத் தியானித்தாலும் சகல பாபங்களைத்தொலைத்து யமயாதனையுங் காணாமல் முக்தியெனும் பேரானந்தமடையலாம்.

நாற்பத்தாறும் அத்தியாயம்

முற்றிற்று.

உ

கிரவுஞ்ச தாரணியகம:

## நாற்பத்தேழாம் அத்தியாயம்.

### குரு ஸதாநந்த ஸம்வாதம்.

வியாசர் கூறுகின்றார்:-இவ்வாறு பிரகஸ்பதி கூறியதைக்கேட்டுச் சதானந்தர் அளவிலடங்கா வானந்த முடையோராய் மீண்டும் பிரகஸ்பதி பகவானைப்பார்த்து ஓ ஸ்வாமி! சிவார்ச்சனை செய்ய விரும்புவோர் தினந்தோறும் செய்யவேண்டிய காரியம் யாது? அதனை முறையோடுரைத்தருளுங்க ளென்று பிரார்த்திக்க குரு கூறுகின்றார். ஓ அரசனே! அருணோதயத்துக்கு முன்னெழுந்து சௌச முதலியதை முடித்துச் சுத்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதிபூசித் திரிபுண்டரமணிந் துருத்திராக்ஷந்தரித்துச்சந்தியாவந்தனஞ்செய்து சிவாராதனைக்கு வேண்டிய சாமக்கிரியைகளால் சிவலிங்கத்தைப் பூசிக்க வேண்டும். ருத்திராத்தியாயத்தை அதனர்த்தத்தைச் சிந்திப்பதோடு கூடவே ஜபஞ்செய்து சிவனிடஞ் சென்ற சித்தத்தோடிருக்கவேண்டும். உட்காரவேண்டிய ஆசனமாவது குசம் அல்லது புலித்தோல் அல்லது சித்ராசனம் வெள்ளைக்கம்பளம் அல்லது நீலம்மஞ்சள் அல்லது கர்ப்பூரம்போல வெண்ணிறம் பொருந்திய ஆசனத்திலுட்கார்ந்து தனது ஹ்ருதய கமலத்தில் வீற்றிருப்போனாகிய இறைவனைத் தியானிக்கவேண்டும். உமையால் தழுவப்பெற்ற தேகத்தோடும் கர்ப்பூர மலைபோல் விளங்கும் வெண்பட்டணிந்தோனும் ரத்னாபரணங்கள் தரித்தோனும் முடிவற்ற (எல்லையற்ற) வைபவ முடையோனும் சைதன்னிய கனனும் அத்வைதனும் சகல தேவர்களாலும் பூஜிக்கப்படுகின்றவனும் முக்கண்ணனும் நீலகண்டனும் சூலமேந்தியவனும் இடக்கையில் மகாமேருவாகிய தனுசைப் பிடித்தவனும் சடாமுடிதடத்தில் சந்திரகலை தரித்தவனும் திரிபுண்டரமணிந்து ஜ்வலிக்கும் நெற்றியுடையோனும் சுவர்ண மேனியனும் அழகிய முகமுடையோனும் மலர்ந்த மந்தார மாலையணிந்தோனும் பில்வத்தளிரால் ஜ்வலிப்பவனும் சுவர்ணமயமாகிய கடகமணிந்தவனும் காலிலணிந்த நூபுரத்தின் ஒலியால் சேவிக்கப்பெற்றவனும் முனிவரது மனதாகிய வண்டுகள் சம்பந்திக்கப் பெற்ற பாதாரவிந்த முடையோனும் மான் வரதானமுத்திரை அபயதான முத்திரைகளைத் தரித்தகையனும் மன்மதனை யெரித்தவனும் கருணைப்பிரவாகம் ததும்பும் கடாக்ஷமுடையோனும் விரூபாக்ஷனும் விமலனும் விஸ்வேசனுமாகிய ஜகதீசனைத் தியானிக்கவேண்டும். பின்னர் அவ்விறைவனைச் சிவலிங்கத்தில் தியானித்துக் கமல முதலிய அமலமாகிய மலர்களாலும் பில்வபத்திரங்களாலும் அந்த லிங்கத்திலர்ச்சிக்கவேண்டும் அது சகல காமங்களையுந் தந்தருளுமென்று உபநிடதங்கள் கூறுகின்றன. இவ்வாறு பூசித்து இறுதியில் தன்னை இறைவனுக்கு நிவேதிக்கவேண்டும். இதுவே ஆத்மநிவேதனமெனப்படும். பூஜாநிவேதனஞ்செய்து பன்முறை நமஸ்கரித்து எழுந்து நின்று ஓ இறைவனே! தேவரீரது சரணாரவிந்த அர்ச்சனத்தின்பொருட்டெனது மனம் மலராகவும் எனதுசரீரம் தூபமாகவும் எனதுவாக்கு நிவேதனமாகவும் எனது கண்கள் தீபமாகவுமாக. அன்றியும் எனக்குள்ள ஏனைய பொருள்களும் உமது பாதாரவிந்தபூஜைக்கு யோக்கியமாகுக. ஓ முக்கண்ணனாகிய இறைவனே! எனது சரீரம் பவித்திரமாய்ச் சிவலிங்கார்ச்சனையின்பொருட்டு யோக்கியதையுடையதாகுக. பரமசாம்பவர்களாகப் பெற்ற பத்தினி புத்திரர்களோடு கூடச் சிறிதுமிடையூறின்றித் தேவரீரது பாதாரவிந்தத்தை அழகியமலர்களால் பூசிப்பதிலேயே காலஞ்செல்லவேண்டும். எனக்கு நூறுக்கணக்காயும் ஆயிரக்கணக்காயும் ஜன்மங்கள் வரட்டும். அவைகளால் எனக்கோர் குறையுமில்லை. திரிலோசனனாகிய தேவரீரது கருணைக்கு ஏதுவாகிய திடபக்தியொன்று மாத்திரம் எடுக்குஞ் ஜன்மங்களெல்லாஞ் சித்திக்குமாயின் அவைகளெல்லாம் தன்யங்களே யென்பது நிச்சயம். ஓ ஸ்வாமி! தேவரீரது பாதாரவிந்தத்தைப் பூசிப்பதொன்றே என்னால் விரும்பப்படுவது. தேவரீர் அதனை யருளவேண்டும். அஃதே சகல சித்தியுமடையச் செய்யும். பிறவிதோறும் பரசிவ பக்தியும் பொன்களில் விரக்தியும் சிவக்ஷேத்ர யாத்திரை செய்வதற்குச் சக்தியும் லிங்கார்ச்சனை செய்வதில் பிரியமும் உமாநாதரது கதைகளில் புத்தியும் (வார்த்தையும்) வேண்டுமென்பதே எனது வரம். இது முதல் பிரளயகாலம் வரையில் சிவநாமமே எனது நாவினில் நடனஞ்செய்யவேண்டும். ஸ்ரீ சூலபாணியின் சரணத்தையே எனது கைகள் பற்றவேண்டும். அநேக யாகங்களாலும் சகல யோகங்களாலும் தானதர்மங்களாலும் ஆகவேண்டியது யாதுமில்லை. ஓ கௌரிரமணா! தேவரீரது சரணத்தையே பஜிக்கவேண்டும். அபார செல்வங்களாலும் அளவிறந்த யானை குதிரை கோ கோடிகளாலும் எனக் காகவேண்டியது யாதுமில்லை. கர்ப்பத்தில் வாசஞ்செய்யும்போதும் விவேகசூனியனுய்த் தேவரீரது பாதாரவிந்தத்தை நினையாது உதாசீனனு

யிருக்கும்படி நேர்ந்தது. அது மீண்டும் வரக்கூடாது. பால்யத்தில் தேவரீரை மறந்து வயிற்றுக்காரியத்தையே பெரிதென நினைத்துக் கெட்டேன். பின்னர் யவ்வனபருவத்தில் அப்பருவமெனும் மகா வனத்திற்புகுந்து உன்மத்தனாய் யாதுந்தெரியாதவனா யுழன்றேன். தேவரீரைச் சிறிதும் ஆராதித்திலேன். மங்கையின் விலாசத்தால் வஞ்சிக்கப்பட்ட சித்தத்தோடு யாதுந்தெரியாமல் மயங்கினேன். மனைவியின் லீலா மயக்கமெனும்சிறைச்சாலையில் புகுந்து பரவசனாய் யாதுஞ்செய்தற்கியலாதவனாய்க் கலங்கினேன். இத்தகைய கேடுகள் இனி எக்காலத்தும் வாராதிருக்கப் பிரார்த்திக்கின்றேன். ஓ கௌரீரமணா ! மன்மதன்கணையா லடியுண்டு தருணியின் காலில் வீழ்வதாலேயே பலதினங்கழித்தேன். சம்சாரமெனும் படுகுழியில் வீழ்ந்தேன். சாம்பவர்களுக் குபகாரஞ்செய்வதில் என்மனஞ் சிறிதும் சென்றிலது. மந்தாரம் முல்லை பில்வதள முதலிய பூஜோபகரணங்களைச் சம்பாதிப்பதில் சிறிதும் யத்தனஞ் செய்திலேன். ஹரவிசாரம் சிறிதுமற்ற பிரதிதினமும் பிராயம்போல் ஜீவித்தேன். ஓ இறைவனே ! என்னை நம்மவனென்று தேவரீர் நினைத்தருளக்கூடாதா ? அப்படி நினைப்பதால் தேவரீருக்கு வந்த ஹானி யாது ? தேவரீர் தீனபந்து என்று சுருதிகூறுகின்றன. ஆதலால் யான் ஓ கௌரீமணாளா! உம்முடைய சரணாரவிந்தத்தைப் பஜிக்கின்றேன். என்றிங்ஙனம் மகாதேவனைப் பிரார்த்தித்துப் பன்முறை நமஸ்கரித்துப் பில்வ முதலியவைகளால் அருச்சித்து நிவேதனஞ் செய்யப்பட்டதனைப் புசிக்கவேண்டும். சிவநைவேத்ய சேஷத்தைப்புசித்தாலும் சங்கரர் சிவபதந்தருகின்றனர். அப்படிப்புசிக்கும்போது கவளந்தோறும் மஹா தேவனைச் சிந்தித்துக்கொண்டே புசிக்கவேண்டும். அப்படிப்புசித்தால் அவன் செய்த பாதகங்களெல்லாம் ஓர் கணப்போதில் நாசமாகும். சிவநிவேதன அன்னத்தை யெடுத்துச் சிவத்தியானஞ் செய்து புசிப்பவனு முக்தியடைகின்றான். சிவநிவேதனத்தைத் தரிசித்தாலும் சகல பாபங்களினின்றும் விடுபடுகின்றான். சிவநிவேதனஞ் செய்த சேஷத்தைக்கண்டவுடன் ஹர ஹர வென்று எவன் உரத்துக்கூவுகின்றானோ அவனிலும் உத்தமன் யாருமில்லை. அவன் வசிட்டாதி முனிவர்களினு முத்தமனாவான். சிவநைவேத்திய போஜனத்தில் பக்தியுதிப்பது அபார புண்ணியத்தினாலேயே யாம். சிவநிவேதனமான சேஷத்தைப் புசித்து ஆனந்தமடைந்திருக்கும்பெரியோரைத் தூரத்தினின்று தரிசித்தாலும் முக்திப் பேற்றுக்காளாகின்றான். சிவநைவேத்யத்தைப் புசித்து அதனால் சோகமற்றுப் பேரானந்த





மெய்திய பெரியோரைச் சரணமடைகின்றவரே தன்யர்கள். ஏனெனின் அவரது பாதாரவிந்தத்தை ஸ்ரீ மஹா விஷ்ணுவும் பூசிக்கின்றனர். அதனையே முனிவர்களும் எல்லாவற்றுக்கு மேலானதென்கின்றனர்! ஆதலால் அவ்வாகாரத்தைப் பரமபக்தியுடன் புசித்துச் சிவனைச் சிந்தித்துக்கொண்டும் சிவநாம கீர்த்தனஞ் செய்து கொண்டும், நடனஞ்செய்துகொண்டும் விளங்கும்பெரியோர்களே பெரியோர்களாவர். அவரது சமீபம் அந்தகனுஞ் செல்லானெனின் மற்றெதனிடம் அவர்களுக்குப் பயமுளது? அவர் மங்கையாதி பற்றின்றி ஒப்பற்றவராய் விளங்குவார். ஓ காதே ! சிவசரித்திரத்தைக் கேட்பாயாக. ஓ நாவே ! சிவநாமாமுதத்தைக் கூறு. ஓ கைகளே ! சிவார்ச்சனையையே செய்வாயாக. ஓ கண்களே ! சிவலிங்கத்தையே தரிசனஞ் செய், மஹேஸ்வரனை விடுத்து இதர தெய்வத்தினிடத்திற் சிறிதுஞ் செல்லற்க. ஓ சித்தமே ! சங்கரனையே யாஸ்ரயிப்பாயாக. அவரது வாசற்காப்போனது வாசலில் மகா ஆதரவோடு கூடி நிற்கும் விஷ்ணு முதலிய ஏனைய தேவர்களைத் தூரத்தில் தள்ளிவிடு. சுவப்பனத்திலும் நினையாதே. உனக்கு நலம் வேண்டுமானால் அம்பிகை பாகனாகிய சிவனைச் சேவிப்பாயாக. ஓ சித்தமே ! சங்கரனைத் தியானிப்பாய். ஓ கையே ! அழகிய பில்வ தளங்களால் சிவலிங்கத்தை யர்ச்சித்துச் சிரசில் அஞ்சலிசெய்து போற்றுவாயாக. உனது சொந்தநடனம் (அபிநயம்) விட்டுச் சிவநடனாபிநயஞ் செய்வாயாக. அடா ! மனமே ! சிறிதுந் தாமதிக்காமல் நான் சொல்லுகிறபடி செய்வாய். விஷ்ணு பிரம்ஹா முதலியோரது மனதில் விளங்கும் சாம்ப சிவ பாதாரவிந்தத்தையே பஜி. அந்தக (யம) னெனும் வேடனிடம் சிறிதும் பயப்படவேண்டாம். இதனைச் செய்தால் நிச்சயம் சுகம்பெறலாம். அடே சித்தமெனும் வண்டே ! என் வீணாக ரசமும் மணமுமற்ற சம்சாரமெனும் பெரும் பாலை வனத்தில் சுற்றுகின்றனை. மிகக் களைத்துவிட்டனை. இப்போதாவது பிரம்ஹானந்த மெனும் மலர்த்தேனையுடைய கௌரீசனது பாததாமரை மலரைப் பஜித்தால் மிக்க சுகமடையலாமே ? ஓ தலையே ! சிவாலயமண்டபத்திற் சென்று அடிக்கடி நமஸ்கரிப்பதினால் தன்யமாகக் கடவாய். அடா ! அவனது பாதாரவிந்த தூளியென்னும் ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் பொருந்துவாயாக. சம்சாரமெனும் ஓர் விஷ விருக்ஷத்துக்குப் பெருங்கோடரியாயுள்ளது சிவாராதனமொன்றே யென்பது நிச்சயம். சம்சாரமாகிய பெருங்கடலினின்றுந் தாண்டுவதற்கு ஈதே உபாயம். இதனையே செய்வாயாக

மென்று சகல காரணங்களையும் சிவபாதார விந்தத்திலே வைத்து இவ்வாறு துதித்து அடிக்கடி நமஸ்கரித்துப் பின்னர்ச் சாம்பவர்களோடுகூட சிவநிவேதனத்தைப் புசித்து அவர்களுடன் கூடவே வாசஞ்செய்வாயாக. அவர்களது பழக்கத்தைச் சிறிதும் விடாதே. ஓ அரசனே! சாம்பவர்களைப் பக்தியுடன் சிவநிவேதனங்களால் பரிபாலனஞ்செய்வாய். உனக்குச் சாம்பவர்களே சகாயர்களாக விருக்கட்டும். சிவார்ச்சனை செய்யுங்காலத்தில் அவர்களுக்கன்னியமாகிய மற்றெதனையும் பாராதே. சிவார்ச்சனை முதலிய சமயங்களில் சாம்பவருடன் கூடியிருப்பின் சிவார்ச்சனை பயன்படும். சிவமந்திரத்தி லதிகாரமும் சாம்பவர்களுக்கேயுளது. சிவமந்திர ஜபமும் சிவார்ச்சனைக்கு அங்கமாகும். சிவமந்திரத்தி னர்த்தத்தை யறிந்து சந்தோஷங்கொண்டு சாம்பவர்கள் அம்மந்திரங்களை உரத்துப் படிக்கின்றனர். இவ்வாறு சாம்பவ உத்தமரால் கூறப்பட்ட சிவக்கதையைக்கேட்டு அதனால் சாயங்காலம் வரையில் காலங்கழித்துப்பின்னர் உமாகாந்தரை மீண்டும் பூசிக்கவேண்டும். ஓர் யாமம் கழிந்தபின் சங்கரருக்குச் சயனமஞ்சத்தைச் சமர்ப்பித்துபசரிக்கவேண்டும். பரிமளமிகுந்த திரவியங்களையும் நறுமலர்களையும் சிவசயனமண்டபத்தில் அலங்கரித்து வழிபடுவோன் பூமண்டலத்துக் கதிபனவான். இங்ஙனம் சிவபுண்ணியமென்பதறிக. சிவபுண்ணியத்துக்குச் சமானமான புண்ணியம் யாதொன்றுமில்லை. இப்புண்ணியஞ் செய்வோனுக்கு உள்ளங்கையில் சகல சித்திகளுமிருக்கின்றன. பாபஞ்செய்த மனிதர்களுக்கு மஹாதேவனை யர்ச்சிப்பதில் விருப்பமுண்டாகின்றதில்லை. எவன் சதாசிவனைப் பூசிக்கின்றானோ அவனே உத்தமனாகின்றான். விஸ்வேஸ்வரனைப்பூசைசெய்து வீரேசனை யர்ச்சித்துக்கொண்டு காசியில் ஓர் பிராமணனிருந்தான். அவன் சகல சாஸ்திரங்களின் கரையறிந்தவன். அவன் பிரதிதினமும் சங்கரனை யர்ச்சித்துக்கொண்டும் வீரேசாலயத்தில் திருமெழுகிட்டும் தாசனாகித் தம் சிவ கைங்கரியத்திலேயே காலம் போக்கினன். இப்படியிருக்கு நாளில் ஓர் நாளிரவில் மகாதேவனைப் பூசித்து அவனது பாதாரவிந்தம் சென்றமனமுடையோனாய் நித்திரையடைந்தான். உடனே ஸ்ரீ மகாதேவன் உமையுடன் கூடினவராய்த் தரிசனந்தந்தனர். அவன் அவ்வற்புதத்தைக் கண்டதும் அஞ்சலிசெய்து ஆனந்தபரவசனாய் நிற்க அவனைக்கண்டு ஸ்ரீ மஹாதேவன் அப்பா! உன்களாசாரம் யாது? உனக்கு என்னிடம் விசுவாசமுளது என்று கேட்டனர். உடனே அவ்வந்தணர் அஞ்சலிசெய்து,



ஸத் பஸ்மகாங்காதி விலேபயாமோ ருத்ராக்ஷ மாலாத்ரைஸ்ச விபூஷயாமஃ|
பஞ்சாக்ஷரம்பாபஹரம் ஜபாமோ வாராணஸீநாதகிமாசராமஃ ||
குந்தைரமந்தைஸ்ச சிவமர்ச்சயாமோப்ருந்தார ப்ருந்தாச்ரயமாச்ரயாமஃ|
கௌரீஸமேதம் ஸததம் பஜாமோவாராணஸீநாதகிமாசராமஃ ||
அஹர்நிசம்ஸாதரமிந்திராதி ப்ருந்தாரநாரீக பரீவிருத்தம் |
கௌரீபதாம் போஜயுகம் ஸ்மராமோ வாராணஸீநாதகிமாசராமஃ ||
காசீ புரீவீதிஷு ஸஞ்சராமோ ஸைவாநிகாயானி ஸதாவதாமஃ|
ஸ்ரீ பாலமூர்த்திம் பஹுதாகமாமோவாராணஸீநாதகிமாசராமஃ ||
பராத்பரம் யந்மஹதோமஹாந்தம் யதேக மவ்யக்தமநந்தரூபம் |
தத்ரூபமேதத் ஹ்ருதி சிந்தயாமோ வாராணஸீநாதகிமாசராமஃ ||
ஆராத்யமேகம் சிவரூபமேவ விச்வம்புராணம் தமஸஃ பரஸ்தாத் |
அனந்தகோட்யர்க்க ஸமப்பஜாமோ வாராணஸீநாதகிமாசராமஃ ||
ஆனந்தகல்லோல குலாதிலோல லீலாவிலாஸாலய சூலிபாலம் |
த்வாம்காலகாலம்ச விலோகயாமோ வாராணஸீநாதகிமாசராமஃ ||
கங்காம்பஸா கும்ப ஸமர்விதேந நீதேந நீதேந ஸமர்சிதேந |
விரேச்வரத்வாமபிஷிஞ்ச யாமோ வாராணஸீநாதகிமாசராமஃ || [ச
ஜலாமலைஃகோமளபில்வபல்லவைச்சௌரேதேசுத்தோஜ்வலபஸ்மநா
வீரேசலிங்கானிஸமர்ச்சயாமோ வாராணஸீநாதகிமாசராமஃ ||

என்று இவ்வாறு வீரேஸ்வரரைப்பார்த்துக் கூறிச் சாஷ்டாங்கமாய்நமஸ்கரித்துத் துதிக்கலாயினர். சம்போ! காசிநாதர் காசிபுரம் என்னும் இவைகளுடைய மஹிமையைக் கேட்பதிலேயே எனது சித்தம் விரும்புகின்றது. அது அம்மஹிமையை வர்ணிப்பதில் சிறிதுஞ் சக்தியுடையதாயில்லை. ஓ அபார கருணைக்கடலே! யான் செய்த பிழையெலாம் பொறுத்துக் கருணைகூர்ந் தருளவேண்டும். புண்யமாகிய ஆரண்யத்தில் வில்வவிருக்ஷத்தினடியில் கங்கையின் தீர்த்தம் எப்போதும் சம்பந்திக்கப்பெற்று விளங்குஞ் சிவலிங்கத்தைப் பூசித்தேனில்லை. தரிசித்ததுமில்லை. எனது பிழையைப் பொறுத்து அருளவேண்டும். பிரமநாளத்தில் ஸ்நானஞ்செய்து வெண்மைநிறம் பொருந்த விபூதிபூசித் திரிபுண்டரமணிந்து ருத்திராக்ஷந்தரித்தவனாய்க் கங்கையில் நியமங்களைமுடித்து ருத்திராத்தியாயத்தை ஜபித்துச் சிவபெருமானைப் பாவனைசெய்யும் மகா பாக்யத்தையான் செய்திலேன். அப்பிழையைப் பொறுத்தருளவேண்டும். சம்சாரமெனும் கோரமாகிய புதருக்குப் பிரவாகமாயிருக்கும் தேவரீர் அடியேனது அறியாத்தன்மையை நீக்கி ஓர் துக்கமுமில்லாமல் போனந்து

மனமயச்செய்கின்றவர் என்பதைச் சிறிது மறியாமல் மயங்கிவிட்டேன். எனது பிழையைப் பொறுத்தருளவேண்டும் என்று வீரேச்வரரைப் பலவாறாகத் துதித்து அவரது ஆக்ஞையால் காசியில் வசித்துக்கொண்டு பூசித்திருந்தனர். இங்ஙனம் நீரும் புத்திரன் பாரியை முதலியோரிடமுள்ள மோகத்தைவிடுத்துச் சிவபெருமானிடம் அபார பக்தியுடன் சிவதரும சிவதத்வ விசாரங்களிலேயே சித்தத்தைச் செலுத்திவந்தால் இறைவனருளைப் பெறலாம்.

நாற்பத்தேழாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

௨

ஸோநான்யோகம:

## நாற்பத்தெட்டாம் அத்தியாயம்.

### சூரசேன சரித்திரம்.

யாக்ஞவல்கியர்:-இப்படிக் கூறிய சரித்திரத்தைக் கேட்டதும் சதானந்தர் சங்கரரிடம் மிக்க சிரத்தையுடையவரானார். எவர் சங்கரத்தியானத்தில் விருப்புற்றவரோ அவர்களுக்கு மங்கைமுதலியவர்களிடமுள்ள பற்றுமுண்டோ? ஜகதீச்வரனாகிய இறைவனது பாதாரவிந்தத்தில் அபாரபக்தியுடையவர்களாய் எப்போதும் சிவபாதாரவிந்தத்திலே மனஞ்சென்றவர்களாய்ப் பிறப்பிறப் பென்னும் பிணிநீங்கிச் சுகிப்பார்கள். முகுந்தன் முதலிய தேவர்களால் போற்றப்படும் அவ்விறைவனது கருணையினும் பெரிதொன்றுண்டோ? அவனது திவ்ய சரித்திராமுதங்களைப் பானம் பண்ணின பிறகும் பாதக சம்பந்தமான சரீரசம்பந்தமெப்படி. ஸ்ரீமஹேச்வரரது அபாரமாகிய கதையெனு மமுதம் ஓர் லவமாவது கிடைக்குமாயின் அவனே முக்தனாகின்றான். ஓ அரசனே! சிவார்ச்சனையின் மஹிமையைக் கூறமுடியுமா? அது ஓர் மஹாசமுத்திரம்போன்றது. அங்குள்ள ரத்னங்களெல்லாம் விலைமதிக்கத் தக்கவல்ல. சாம்பவர்களோ அத்தகைய ரத்னங்களாம். அவ்விரத்தினங்களது ஒளியாலேயே இருளீங்குகின்றது. அக்ஞானமெனு மிருளை நாசஞ்செய்வதற்காகவே இறைவன் சாம்பவரெனும் ரத்னங்களைச் சிருட்டித்தார். அவர்களின்றி அநேககோடிசூரியர்களிருப்பினும் இவ்விருளீங்காது. உலோகோபகாரத்தின்பொருட்டு அவர்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றார்க



ளாதலால் அபாரபுண்ணியத்தினாலேயே அவர்களை யடையக்கூடும். அவர்களது பாதாரவிந்த தூளியே உலகிற்குச் சிவனுதாரம். அவர்களிடம் பேசுவதும் அவர்களைத் தரிசிப்பதும் மூவுலகையும் பாவனமாகச் செய்யும். அவர்களது தேகசம்பந்தமான காற்றின் சம்பந்தத்தாலும் சகல பாபங்களும் நாசமடையும். மனோவாக்குக் காயமென்னு முக்கரணங்களால் எவர் சம்புலிங்கார்ச்சனை செய்வதில் ஆவலுடையவரோ அவரே சாம்பவரெனப்படுவார். அவர்களைத் தொட்டாலுந் தரிசித்தாலும் பேசினாலும் சகல பாபங்களுந் தொலையும். பூர்வம் திராவிட நாட்டில் மணிமுத்தாநதி தீரத்தில் விருத்தாசல க்ஷேத்திரத்தில் சூரசேனனென்ன ஓரரசனிருந்தான். அவனு மிக்க புண்யவான். அவன் அந்நதிக்கரையில் ரத்னமயமான சிவாலயங்களை நிர்மித்து ரத்னமயமான சிவலிங்கங்களைத் தாபித்து விருத்தாசலேச்வரரது ஆலய மண்டபத்தில் ரத்ன தீப நிரைகள் சமர்ப்பணஞ் செய்து வந்தான். அருணோதய காலமுதல் தினமீறாக அவனுக்கு சிவாராதனையிலேயே பொழுது போவதன்றி இல்லற வாழ்க்கைக்குரிய சிற்றின்பத்தில் ஓர்கணப்போதும் விருப்புற்றவனல்லன். ஜாமந்தோறும் அவன் அபாரமான பூஜாத்திரவியங்களைச் சேகரித்துக்கொண்டு பூசித்து வருதல்வழக்கம். அவனுக்கு ஐச்வர்ய மளவிலடங்காதோங்கியது. நற்குணங்களும் அங்ஙனமே வளர்ந்தோங்கின. அவன் சிவநாமமெனும் அமுதப்பெருக்கையருந்தி மிக்கசந்தோஷமெய்தியிருந்தான். அவனோர் சமயமாவது லௌகீகமாகிய மொழியை மொழிந்ததேயில்லை. தனது வேலைக்காரரெல்லோர்க்கும் சிவநாமங்களையே பெயரிட்டனன். வேலைக்காரர் ஒவ்வொருவரும் அரசனிடம் பெயரை வழங்கிக்கொண்டே தீர்த்தம் தீபம் தூபம் விசிறி குடை முதலியவைகளை யுதவிக்கொண்டிருந்தனர். அவனிடம் பழகும் சகலரும் சாம்பவராயினர். அவன் தினந்தோறும் ஏராளமான அன்னத்தைச் சுவாமிக்கு நிவேதித்துப் பின்னர் சகலத்தையும் சாம்பவர்க்குத் தானஞ் செய்தல் வழக்கம். அதனால் அவனுக்கு அன்னபதியெனும் பெயர் வந்தது. வனபதி என்றொருவனுக்குப் பெயரிட்டு அவனால் புஷ்பவனத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கச் செய்தான். விருக்ஷபதி யென்றொருவனுக்குப் பெயரிட்டிருப்பானாயின் அவன் செய்யவேண்டியகாரியம் வில்வமுதலிய விருக்ஷங்களைப் போஷணஞ் செய்யவேண்டியதேயாம். கக்ஷபதி என்றால் அவன் புஷ்பவாடிகைகளைப் பாதுகாத்துச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்வான். பத்திபதி எனின் அவன் சைனியங்களோடு கூடத் தன்றொழிலைக் கவ

ளிக்கவேண்டும். அவனெப்பொழுது விஷங்கி என்பானே அப்
போது அம்பறுத்தூணியைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்.
அரண்யபதி என்றோர் சமயம் கூறுவான். அப்போது அவனுடைய
வேலைக்காரர்களெல்லாம் கானகம் புகுந்து பாலனஞ் செய்யவேண்
டும். ஹிரண்யபதி என்று கூறினால் சுவர்ணத்தைப்பற்றிச் செய்ய
வேண்டிய காரியத்தில் அவனது வேலைக்காரர் முயலவேண்டும்.
சரஸ்பன் என்று கூறும்போது வேலைக்காரர்கள் தடாகஞ்சென்று
அதன் சம்பந்தமான காரியத்தில் முயலவேண்டும். இப்படிச் சிவ நா
மங்களைக் குறிப்பாய் வைத்துக்கொண்டு சகல காரியங்களையும்
நடாத்திவந்தான். மஹான்மாவாகிய அவ்வரசன் பகலில் போஜ
னத்தை விரும்பான். சாயங்காலமும் அநேக சாம்பவர்களுடன்
கூடிச் சிவபூஜை செய்யவிரும்பிக் கால் முதல் தலையீறாகத் தேகமுற்
றும் விபூதிபூசி முப்புண்டரம் ருத்திராக்ஷமணிந்து ருத்திராக்ஷங்க
ளாலேயே கிரீடமமைத்து அவ்வாறு ஏனைய சாம்பவர்களையுந் தரிசிக்
கச்செய்து பசுவின்பால் சந்தனம் புஷ்பம் அக்ஷதை தீபம் தூபம்
அன்னராசிகள் முதலிய சகல சாதனங்களையு மேராளமாய்ச் சேக
ரித்துக்கொண்டு அபார பக்தியுடன் சிவபூஜை செய்வான். சிவபூ
ஜையினிறுதியிற் தூரிய முதலிய வாத்தியங்கள் முழங்க நடனஞ்
செய்து மஹேஸ்வரனைத் திருப்திசெய்விப்பான். சாம்பவர்களோடு
சேர்ந்து இறைவனைத் தோத்திரஞ்செய்வான். பின்னர்ச் சிவநிவே
தனஞ்செய்த அன்னத்தைச் சாம்பவர்களுக் களித்துத் தானும் புசிப்
பான். பிரதோஷகாலத்தில் அபாரமாகிய பூஜை புரிந்து உமா
மஹேஸ்வரர்களது பாதாரவிந்தத்தை விட்டகலாத மனமுடையோ
னவன். அக்காலத்தில் சகல சித்த கந்தர்வர்களும் அவ்வாறு பூசித்து
மகிழ்வார்கள். கந்தர்வ நகரத்தில் தேவகன்னியர்களும் ஆனந்த
பரவசர்களாய்க் கூத்தாடி மகிழ்வர். சாயங்காலத்தில் நான்முகன்
முதலியோரும் மந்தாரங் குந்த முதலிய மலர்களால் தேவதுந்துபி
நாதமுழங்கச் சிவலிங்கத்தை யர்ச்சிப்பார்கள். ரம்பை முதலிய தேவ
தாசிகளும் மஹேச பூஜா முடிவில் இறைவனது பிரீதியின்பொருட்டு
நடனஞ்செய்வார்கள். வேர்வையாலழிந்த புண்டர முடையோர்க
ளும் தேவகங்கையில் மூழ்கிப் பரிசுத்தமாய் மீண்டுந் திரிபுண்டர
மணிந்து சங்கராலயங்களில் நடனமாடுவார்கள். அவ்வரசனது பக்
திப்பெருக்கானது உலகிலுள்ளோரெல்லோரையும் பிரதோஷ கா
லத்தில் அபார சிவபக்தியுடன் சிவபூஜை செய்யும்படி ஏவலாயிற்று.
ஸ்திரீகளும் விபூதிமுப்புண்டரமணிந்து உருத்திராக்ஷமாலை தரித்துப்



பில்வ முதலிய மலர்களால் சிவலிங்கத்தைப் பூசிப்பார்கள். பிரதோ
ஷகாலத்தில் செய்யும் சிவபூஜையின் மஹிமை யாவரால் கூறமுடி
யும்? கர்ப்பூர தீபத்தின் காந்தி யெங்கும் பரவத் தூபங்களில் புகை
எத்திசையும்பரவி நறுமணங்கமழத் தேவசித்த முனிவர் திசைப்பால
கர் முதலிய சகலரும் சிவபூசை செய்யுஞ் சிறப்பை யென்னனங் கூறு
வாம்? ஸ்ரீ நாராயணர் ம்ருதங்க மெடுத்து வாசித்து வேர்வை தேக
முழுதும் பிரவாகமாயோட அதனைச் சிறிதுங் கருதாது சிவபூஜார்த்
தமாய் ம்ருதங்கம் வாசிக்கும் பாக்கியத்தை நாம் பெற்றோமேயென்
றுகருதி ஆனந்தபரவசராகின்றனர். இலக்குமியும் தேவகங்கா தீர்
த்தம் கஸ்தூரி அகரு சந்தனம் புஷ்பம் வில்வபத்திரமுதலிய சாத
னங்களால் பிரதோஷகாலத்தில் சிவபூஜையை முடித்துப் பின்னர்
தன்னோடொத்தமங்கையர்களோடு ருத்திர வீணையையெடுத்துச் சிவ
நாம விசேஷங்களை வாசித்துக் கானஞ்செய்து நடனஞ் செய்கின்
றனள். கங்கையும் பாவனமாகிய திவ்விய தீர்த்தப் பிரவாகத்தால்
சிவனை யபிஷேகித்துச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துப் பரமானந்த
முறுகின்றனள். பிரமதேவரும் சிவார்ச்சனையை முறைபிறழாது
பிரதோஷத்திற்செய்துப் பிரணவத்துடன் கூடிய பஞ்சாக்ஷரத்தை
ஜபித்து ஆனந்தபரவசமெய்துகின்றனர். சரஸ்வதியும் சங்கரபா
தாரவிந்தத்தைப் பூசித்துச் சுபகரமாகிய தோத்திரங்களால் தோத்தி
ரஞ்செய்து விபூதி பூசியமேனிவிளங்க நடனஞ்செய்கின்றனள். தேவர்
களும் அமிர்தத்தைப் பெரிதாய்மதிக்காது ஸ்ரீ காலகாலனது பூசை
யையேபரமெனக்கருதிப் பிரதோஷகாலத்தில் அப்பூசையினின்றுஞ்
சிறிதும் வழுவுவதில்லை. உலகில் சிவபூஜையினமுதத்தினின்றும் எவ
னுக்கொழிவுண்டாகும்? உலகில் கிடைப்பதற்கரிய பிராமணப்பிறப்
பையும்பெற்றுப் பிரதோஷகாலத்தில்சிவபூஜைசெய்வதை அநாதரவு
செய்வோனுமுண்டா? அப்படி அநாதரவுசெய்யும் மனிதர்களைச்
சண்டாளர்களும் மகாபாவங்களுக்கிடமானவர்களும் துர்முகர்களும்
துர்வீரியர்களும் துரதிர்ஷ்ட முடையோர்களும் விபசாரிக்குப்பிறந்
தவர்களும் புருஷாதமர்களும் மனிதக் கழுதைகளும் கட்குடியோ
னது குலத்திற் பிறந்தோர்களுமா மென்றே எண்ணுகின்றேன்.
எவன் பிரதோஷகாலத்தில் சிவலிங்கபூசையை விடுத்து வேறு காரி
யங்களில் செல்லுகின்றானோ அவனது சித்தம் பித்த முடையதென்
றும் அவனது தந்தை கொடியவனென்றும் அவனது தாய்விபசாரி
யென்றும் அவன் நாய்க்குப்பிறந்தவனென்று மறிக. பிரதோஷ
காலத்தில் பக்தியுடன் சிவபூஜைசெய்வோர் சகல உலகங்களையும்

பாவனமாக்குவோர். அவனது தந்தையே புண்யவான். அவனது தாய் மகாபதிவிரதா சிரோமணி. அவனது சந்ததி மேன்மேலும் வளர்ந்தோங்கும். அவனே சகலபாக்யங்களு நிறைந்தவன். அவனது சரணாரவிந்தத்தின்பொருட்டு நான் நமஸ்கரிக்கின்றேன். எவன் ஹரா! சங்கரா! ஸ்மரஹரா! என்னைக்காப்பாற்றுங்கள் என்று பிரார்த்திக்கின்றானோ அப்புண்ணியவானோடு எப்போதும் பழகுவதையே விரும்புகின்றேன். எவர் சாயங்காலத்தில் சிவார்ச்சனை செய்தும் விபூதி ருத்திராக்ஷந்தரித்தும் சிவநாமாமுதத்தைப் பாராயணஞ்செய்துகொண்டிருக்கின்றாரோ அவரது இல்லத்திலேயே யான் எப்போதும் வசிக்கவெண்ணுகின்றேன். பாதாளவுலகில் ஸ்ரீநாகராஜன் முதலியோரும் ஸ்ரீஆடகேசனைத் தினந்தோறும் சாயங்காலத்தில் தூப தீபாதி சகல சாமக்கிரியைகளாலும் பூசித்து மகிழ்கின்றனர். சாயங்காலத்திற்செய்யும் சிவார்ச்சனையின் மஹிமை எவராலுமறியப்பட்டிலது. சிலர் மோகத்தால் சிவாராதனத்தைவிடுத்துக் கும்பிபாகமுதலிய நரகிற் புகுந்து பல்லூழிகாலங்கஷ்டப்பட்டுக்கர்ப்பவாசாதிதுக்கங்களை யநுபவித்துச் சம்சாரமஹாசாகரத்தில்மூழ்கிக்கதறுகின்றனர். உலகில் சாயங்காலந்தோறும் சிவஆராதனமும் தியானமும் சாம்பவ சங்கமமே சகலராலுஞ் செய்யத்தக்கது. சாயங்காலத்தின் பாக்கியமீதே. இதனாலேயே நெற்றிக்கண்ணர் திருப்தியடைகின்றார். கற்பகோடி காலம் பற்பல தர்மகோடிகளைச்செய்து சிவபூஜையைச்செய்யாது வீணாகக் காலங்கழிப்பதனால் யாதுபயன்? சிவாராதனமென்பது பதிவிரதாதர்மத்துக்குச் சமானமானதர்மம். சாயங்காலத்தில் சிவபூஜையைச் செய்து பகவானுக்குத் திருப்திசெய்விப்பது மகா பாக்யவான்களுக்கே கிட்டும். அவ்வாறு பூசித்த புண்யவான் மாகபாக்யங்களையும் பெற்று முக்தியெனும் பெருஞ் செல்வத்தையு மடைகின்றான்.

நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

முற்றிற்று.



உ

அக்னிஜன்மபவேநம:

## நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்.

### பிரதோஷபூஜாமஹிமை.

யாக்ஞவல்கியர்:-ஓ ஜனகரே! சூரசேனனெனும் அவ்வரசன் சிவபூசைமுதலிய தர்மங்களினாலேயே இவ்வாறு காலங்கழித்து வருவோனாயினும் பிரதோஷ பூசையில் அபாரபக்தி சிரத்தையுடையவன். ஓ அரசனே! அதன் மகிமையை வேதங்கள் அபாரமாய்க் கூறுகின்றன. அதற்கீடாகிய புண்ணிய விரதம் வேறுயாதுமில்லை. சாயங்காலத்தின் பயனையும் அதனையியற்று முறையையுங் கூறுகின்றேன். காலையிலும் மத்யான்னத்திலும் சாயங்காலத்திலும் சிவபூசைசெய்து பின்னரே புசிக்கவேண்டும். சூரியாஸ்தமனத்துக்கு ஒரு முகூர்த்தத்திற்கு முன்னெழுந்து தேகசுத்தியைச் செய்துகொண்டு சிவதீர்த்தத்தினாலேயே ஆசமனஞ் செய்யவேண்டும். அப்படி ஆசமனஞ் செய்வதற்கு முன்னரும் விபூதி தரித்துக்கொண்டிருக்க வேண்டும். அதனைத்தரிக்காமல் ஆசமனமாவது அல்லது ஏனைய எக்கர்மமுமாவது செய்யக்கூடாது. ஆதலால் அந்தணன் விபூதி தரித்தால் சகல கர்மங்களுக்கும் அதிகாரியாகின்றான். விபூதி தரிக்காமல் சலபானஞ் செய்தால் கோதனைப்புசித்த பாவமுடையோனாவன். விபூதியின்றி எக்காரியமுஞ் செய்யக்கூடாதென்று சுருதியால் கூறப்பட்டுளது. எப்பொழுதும் எழுந்ததும் விபூதி தரித்த பின்னரே முகங்கழுவிப் பின்னர் ஸ்நானஞ் செய்யவேண்டும். ஸ்நானஞ் செய்வதனால் அழிந்துபோகாதிருக்கும் வண்ணம் விபூதியை நன்கு பூசிப்பின்னர் ஸ்நானஞ் செய்யவேண்டும். ஸ்நானகாலத்தில் பக்தியுடன் தீர்த்தத்தை ஈச்வரனுக்கு நிவேதனஞ் செய்தபின்னரே அத்தீர்த்தத்தையே ஆசமனஞ் செய்யவேண்டும். ஆசமனத்திற்கு மாத்திரம் இங்ஙனமென்பதல்ல. இவ்வாறே ஸ்நானமும் சிவநிவேதனஞ் செய்து அத்தீர்த்தத்தினாலேயே செய்யவேண்டும். மந்தமாகிய உஷ்ணமுடையதனால் அல்லது அபிஷேகதீர்த்தத்தாலாவது ஸ்நானஞ் செய்து உடனே விபூதியால் அபிமந்திரிக்கப்பட்ட தீர்த்தத்தால் பின்னும் ஆசமனஞ் செய்திடுக. அதன்பின் வஸ்திரந்தரித்துப் பின்னும் ஆசமனஞ்செய்து விபூதியைத் தேகமுழுதும்பூசி முப்புண்டரமணிய வேண்டும். பின்னர் ருத்திராக்ஷந்தரித்து விதிப்படிச் சந்தியாவந்தன

முடித்துச் சிவமந்திரஞ்செல்க. முன்னரே அவ்வாலயத்தைக் கழுவிச் சுத்திசெய்திருக்கவேண்டும். அங்குசென்று வடக்கு நோக்கியாவது கிழக்கு நோக்கியாவது உட்கார்ந்து கொள்ளவேண்டும். இவ்விரண்டிற்கும் சௌகரியமில்லையாயின் மேற்குமுகம் நோக்கி உட்காருக. பின் சிவலிங்கத்தில் சிவனைத்தியானஞ் செய்திடுக. அர்த்த சந்திரனும் ஜ்வலிக்கும் சடைமுடியோனும் முக்கண்ணனும் நீலகண்டனும் வரனளித்தல் அபயதானஞ் செய்தலெனும் இவ்விரண்டினையும் குறிக்கும் கைகளையுடையோனும் சகலாபரணங்களைத் தரித்தவனும் விலையுயர்ந்த வெண்பட்டாடை உடுத்தினவனும் ஆகிய திவ்ய திருமேனியைத் தியானித்து நமஸ்கரித்து அவருக்குப் பக்தியுடன் ஆசமனஞ் சமர்ப்பிக்கவேண்டும். பின்னர்ப் பஞ்சாமிர்தங்களால் அபிஷேகம் தனித்தனியுஞ் செய்து பின்னர் ருத்திரசூக்த முதலிய மந்திரங்களை ஜபித்துக்கொண்டு சுத்ததீர்த்தத்தால் இடையில் தாரை ஒய்வில்லாமலிருக்கும் வண்ணம் ஒரே தாரையாய்த் தீர்த்தம் விழும்படி அபிஷேகஞ்செய்யவேண்டும். பின்னர் ஆசமனங்கொடுத்துச் சிவமந்திரங்களால் மந்திரிக்கப்பெற்ற விபூதியைச் சமர்ப்பித்து அதன்பின் குங்கும கஸ்தூரி முதலிய பரிமளத்திரவியங்களுடன் கூடிய சந்தனத்தைச்சமர்ப்பித்து அதன் பின்னர்ச் சுத்ததீர்த்தத்தாலலம்பிய பில்வபத்திரங்களாலும் திலாக்ஷதைகளாலும் மந்தாரமல்லிகை முதலிய மலர்களாலும் அர்ச்சனைசெய்க. பின்னர்த் தூபதீபங்களால் உபசரித்து மதுரமாகிய திரவியங்கூடிய பரமான்ன முதலிய பல நிவேதனவகைகளும் கனிவகைகளும் இன்னும் ருசிகரமாகிய வகைகள் யாவையோ அவைகளும் கூடிய நைவேத்தியங்களை நிவேதித்துப் பிறகு கர்ப்பூரதீபங்களால் நீராஞ்சனஞ்செய்து, பின்னர்த்தீபமாலையால் ஆராதித்து அதன்பின்னர்ப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து லௌகிக வைதிக மந்திரங்களால் அவ்விறைவனைத் தியானித்துக்கொண்டே தோத்திரஞ் செய்க. தேவர் கோனே! சரணம். பிரமதகணநாதரே! சரணம். கிரிஜாநாதரே! சரணம். சடைமுடியிற்றரித்த சந்திராபரணனே! சரணம் சரணம். சம்சாரமெனும் சர்ப்பத்தால் கடிக்கப்பட்டு மிக்க கிலேசமுற்றவனும் உம்மைச் சேர்ந்தவனும் மிக்க தீனனுமாகிய என்னைத் தேவரீர் காப்பாற்றுங்கள். ஓ விஸ்வநாதரே! தேவரீரது பாதாரவிந்தத்தைப் பஜிப்பதற்காக எனது மனம் விரும்புகின்றது. அதனைத் தேவரீர் நிறைவேற்றி அருளவேண்டும். ஓ இறைவனே! எனது சித்தம் தேவரீரது சரணத்தை ஸ்மரிப்பதிலேயும் எனது நா உம்முடைய திவ்ய கதையைக் கூறுவதி



லும் காது அவ்வாறு கேட்பதிலும் கைகள் தேவரீரை அர்ச்சிப்பதிலும் பிரவர்த்தித்திருக்கின்றன. யானே தன்யன். யான் பூர்வம் அபாரபுண்யங்கள் செய்திருக்கின்றேன். ஆதலால் இப்பாக்யத்தைப் பெற்றேன். ஓ ஈஸ்வரரே! தேவரீரது சரணாரவிந்தத்தைப் பூசிப்பதற்குக் கற்பகோடிகளிற் செய்த புண்ணியமேயன்றோ காரணமாகும்? ஓ சங்கரா! ஸ்மரஹர! அமரவீர! தீர! கௌரிமனோஹர! அஞ்ஞானமெனும் மகாசமுத்திரத்தில் முழுகிச் சம்சாரமெனும் கோரசர்ப்பத்தின் வாயில் அகப்பட்டுக்கொண்டவனாகிய என்னைக் கரையேற்றுவித்தருளவேண்டும். கருணைக்கடலே! காசிபதே! தேவரீர் தீனசரண்யரென்று சுருதிகளில் கோஷித்திருக்கின்றன. ஓ சூலபாணே! தேவரீர் உதாசீனராயிருந்தால் அடியேனுக்கு எக்கதியுளது? தேவரீர் எனது சஞ்சித பாதகங்களையெலாமொழித்துக் கர்ப்ப வாசத்திற்கேதுவாகிய துர் அதிர்ஷ்டத்தைத் தொலையச் செய்யுங்கள். யோனிமார்க்கத்தில் அகப்பட்டுக்கொண்டு அல்லற்படுதற்கு ஹேதுவாயும் மலமூத்திரங்களுடைய துர்நாற்றத்தால் மகா கஷ்டஹேதுவாயுமுள்ள சம்சார துக்கத்தைத் தொலையச்செயயவேண்டும். விஸ்வேசனது நாமாமுதத்தைப் பானஞ்செய்தும் அவரது திவ்ய சரணாரவிந்தத்தைத் தியானஞ்செய்தும் ஆனந்தபரவசனாயிருக்கும்படி அடியேனுக்கருளவேண்டும். ஓ காமாந்தகரே! எனது காமனையைத் தந்தருளும். இறைவனே! தேவரீரது சரணாரவிந்த பக்தி ஒன்றையே விரும்புகின்றேனேயன்றி மற்றியாதையும் விரும்புவதில்லை. ஆதலால் அதனையே தேவரீர் தந்தருளவேண்டும். லிங்கார்ச்சனமும் சிவலிங்க நைவேத்யபோஜனமும் ஆகிய இவைகளில் விருப்புற்றிருக்கின்றனனேயன்றிப் பிரமலோகம் வைகுண்ட முதலிய உலகவாசம் யாதும் வேண்டியதில்லை. பிரதோஷ சமயத்தில் சகல சாதனங்களுடன் சிவபூஜை செய்வதையே எனது மனம் விரும்புகின்றதேயன்றிச் சுவர்க்க லோகாதிபத்தியத்தையும் விரும்புவதல்ல. மரணாந்த காலத்திலும் யான் சிவபூஜை செய்துகொண்டிருக்கவே யான் வேண்டுகின்றேன். ஓ ஜகதீஸ்வரனே! தேவரீரைப் பில்வ முதலியவைகளால் பூசிப்பதாலும் கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களால் அபிஷேகிப்பதாலும் அடையப்படாத பயன் யாதுளது? அது காமதேனுவன்றோ? இங்ஙனம் பூசிப்பதற்கு மறுமையில் பயனுளதன்றி இம்மையில் பயனில்லையென்று கூறுவது பிரமத்தினாலேயேயாம். சகல காமனைகளையும் வேண்டும்போதே கொடுத்தருளும் இயல்புடையது என்பதேயுண்மை. ஆதலால் இம்மை மறுமைப் பயனை யளிப்பது ஈத

ன்றே? யான் பாபஞ் செய்திருப்பது பற்றித்தேவரீர் அருள்புரியாதிருப்பீராயின் அது உசிதமா? ஓ தீனபந்தோ! இதுகாறும் யான் இவ்வாறு புலம்பியது தேவரீருக்குக் கோபத்தை யுண்டாக்கியதோ? அகில சராசரங்களுக்கும் தேவரீரே தந்தையன்றோ? குழந்தை கடூரமாய் மொழிந்தால் தந்தை கோபித்து ரக்ஷிக்காமலிருக்கின்றாரா? ஓ இறைவனே! ஏதோ யான் புலம்புகின்றேனென் றெண்ணாமல் தேவரீர் எனக்கு இச்சம்சார துக்கம் சிறிதுமில்லாமல் செய்து சுபமுந்தந்து அருளவேண்டுமென்று இவ்வாறு கவுரீசனைப் பிரார்த்தித்து அவ்விறைவனெதிரில் சிவநாமத்தை யுச்சரித்துக்கொண்டிருக்கவேண்டும். இவ்வாறே தினமும் பூஜிக்கவேண்டும். பிறகு ஹோமம் வைஸ்வதேவ முதலியவைகளை அக்னியில் சிவநைவேத்யசேஷத்தால் செய்யவேண்டும். பவதேவ என்பதாதி மந்திரங்களால் சுவா: என்று கூறி ஹோமஞ்செய்யவேண்டும். பிறகு பத்தி என்னுஞ் சப்தத்தைப் பின்னரமைத்து சுவா: என்பதைக் கூறி ஹோமஞ் செய்யவேண்டும். பிறகு பிதர்ப்ய அவத அஸ்து என்று தர்ப்பணஞ் செய்துப் பிறகு சாம்பவர்களோடு கூடப் புசிக்கவேண்டும். பிறகு சிவகதாவசனங்களால் இரவைப் போக்கவேண்டும். இஃதே தினந்தோறும் பூசைசெய்முறை. சாயங்காலத்தில் செய்யும் சிவபூஜையின் புண்யத்தைப் பிரமனாலுங் கூற முடியாது. இவ்விரதம் சாம்பவராகிய பிராமணர்களுக்கு முக்யமாயுளது. இதற்குச் சமானமாகிய விரதம் கேட்டதில்லை.

உலகில் பிரம்மாவர்த்தகம் என்னு மிடத்தில் பூர்வம் இராஜேந்திரனென்று ஓரரசனிருந்தான். அவனது ஐஸ்வர்யத்துக்கு அளவில்லை. அவனைச்சிவபக்திச்சிறப்பினால் சகலரும் வணங்குவார். அப்படிப்பட்ட அம்மகா பக்தனை ஓர் சமயம் வியாசர் பார்க்கவிரும்பி வந்தனர். அப்படிவரும் வியாசரை அரசனும் விதிப்படிப் பூஜித்து வணங்கி நின்று ஓ ஸ்வாமி! தத்வக்யானிகளுக்கெல்லாம் சிரோமணியாயும் சம்சார கிலேசத்தை நாசஞ்செய்வோராயும் ஞான சமுத்திரமாயுமுள்ள ஓ பகவானே! வேதமயமாகிய தேவரீர் அடியேனுக்குப் பிறவிப்பயம் நீங்கும்படி அருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே வியாசர் ஓ அரசனே! நன்கு வினவினாய். உனக்கு அபார தர்மவாசனையுளது. தர்மவாசனையுடையோருக்கே வைராக்யமுதிக்கும். தர்மவாசனையே யரிது. வைராக்யமில்லாதவனுக்குத் தர்மங்களில் வாசனையிருப்பினும் அல்லது தர்மவாசனையில்லாதவனுக்கு வைராக்ய முதித்தாலும் அது நிலைத்திராது. ஓர்



நொடிப்போதில் தொலைந்துபோமன்றோ? ஓ அரசனே! தர்மாதர்மங்களை யறிதல் மிக்க வரிது. எப்போதும் தர்மத்திலேயே புத்தியுடையோர் சம்சாரத்தினின்றும் விடுபடுவார். தர்மங்களு மூலகிற் பலவுள. ஆயினும் தர்மங்களுக்கும் தர்மமாயுள்ளது ஒன்றிருக்கின்றது. அஃது தர்ம தர்மமெனப்படும். அஃதின்றி ஏனைய தர்மங்கள் பயன்படா. தர்மதர்மம் இன்னதென அறிவது மிக்க வரிது. அதனையறிவதில் யாவருக்கும் முயற்சியுண்டாவதில்லை யென்றார். அதனைக்கேட்டதும் அரசன் முனிவரை நோக்கி ஓ ஸ்வாமி! தாங்கள் கூறியது மிக்க ஆச்சரியமாயிருக்கின்றது. யான் இதுகாறும் எச்சாத்திரத்திலுங் காணாத தர்மதர்மம் என்னுமொரு சொல்லை இன்று சொல்லக்கேட்டேன். ஓ ஸ்வாமி! அது எங்குளது? அது யாது? அதனைத்தேவரீர் உரைத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு வியாசமஹாமுனிவரும் சந்தோஷங்கொண்டவராய் அரசனை நோக்கி ஓ அரசனே! தர்மதர்மமின்னதென்பதைச் சங்கரரொருவரே யறிவர். மற்றவரறியார். தர்ம தர்மமென்பது சிவபூஜையேயாம். சகல தேவர்களினும் தேவதேவனாகிய மகாதேவரே சிறந்தவரென்பதுபோலச் சகலதர்மங்களினும் சிறந்ததாயுள்ளது சிவபூஜையே! ஆதலால் அதனைத் தர்ம தர்மமென்பதாம். தேவர்களிற் சிறந்திருப்பது பற்றித் தேவதேவ எனும் விவகாரம்போலத் தர்மங்களுட்சிறந்திருப்பது பற்றித் தர்ம தர்ம மென்பதாம். அது சிவார்ச்சனையே. அனந்தகோடி ஜன்மங்களில் யாகாதி புண்யங்களால் பரிசுத்தமடைந்த மனமுடையோருக்கே சிவார்ச்சனையில் பிரவர்த்தியுண்டாகின்றது. அவர்களுக்கே பக்தியும் முக்தியும் சித்திப்பதாம். பக்தியுடன் சிவார்ச்சனை செய்யின் முக்தியடையலாம். காலை மத்யான்னம் இக்காலங்களில் ஈசனை யர்ச்சிக்கவேண்டும். ஆயினும் மத்யான்னத்தில் விசேஷமாய்ப் பூசிக்கவேண்டுமென்று கூறினார். அரசன் மீண்டும் வியாசரைநோக்கி ஓ ஸ்வாமி! சந்ததபூசையின்முறையாது? அதனால் வரும்பயன்யாது? உரைத்தருளவேண்டுமென்று வேண்டினான். வியாசரும் ஓ அரசனே! சந்ததபூசையின் மஹிமையையும் அதன் முறைமையையும் கேட்டமாத்திரத்தினால் அபாரபுண்யமாம். மனோகரமாகிய சிவலிங்கத்தில் சுத்ததீர்த்தத்தை இடைவிடாது தாரையாய்விழும்படி அபிஷேகித்தலே சந்தத பூசையெனப்படும். சந்ததபூசையினால் சகலபாபங்களுந்தொலைகின்றன. இடைவிடாது செய்துள்ள பாபங்களெல்லாம் இடைவிடா தபிஷேகிக்கும் தாரையால் நசிக்கின்றன.

ஆதலால் அதனைச் செய்யவேண்டும். பரிமளத்திரவியத்துடனும் பத்திரபுஷ்பபலங்களுடனும் அறுகுகளோடுகூடிய சுத்தமான நீரோடும் சகல முனிவர்களும் சந்ததபூசை செய்கின்றனர். அதன்பயனை யெவனால் கூறமுடியும்? சகல காமங்களும் முக்தியும் அப்பூசையினாலேயே பெறப்படுவதாகும்? சங்கரர் அபார கருணாநிதியன்றோ? அவருக்கு யாம் சமர்ப்பிக்கும் தீர்த்தம் பத்திரம் புஷ்பம் பழம் முதலியவைகளாலேயே ஆகவேண்டிய சுகமுளதென்பதுந்தகுமோ? சகல காமசம்பூர்ணரும் நித்தியானந்தருமாகிய அவ்விறைவனுக்கு இவை யெற்றுக்கு? அங்ஙனமாயினும் யாம் நற்கதியடைவதற்கெனவே சகல பூஜைகளும். ஆதலால் யாம் காய்ந்ததாயினும் பில்வபத்திரங்களைப் பக்தியுடன் சமர்ப்பிப்போமாயின் நம்மை யனுக்கிரகிப்பதற்காகவே ஈஸ்வரன் அதனைக் கிரகிக்கின்றனர். பக்தனுக்குச் சகல பாக்கியங்களையுமளிக்கின்றனர். கருணைக்கடலாகிய சிவனது மஹிமை அபாரமன்றோ? அவனைத் தீர்த்தம் பத்திரம் முதலியவைகளால் அர்ச்சிக்காதவர் சம்சாரசாகரத்தைத்தாண்டுவதில்லை. விபூதிபூசிப் பக்தியுடன்செய்யும் பூசையைப்பெற்று பவானிபதியாகிய இறைவன் பாக்கியங்களையெல்லாந் தந்தருள்வானென்பதில்சிறிதும் சந்தேகமில்லை என்றனர்.

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்
முற்றிற்று.

---

உ

சிவாயநம:

## ஐம்பதாம் அத்தியாயம்.

---

### தர்மதர்மங் கூறியது.

யாக்ஞவல்கியர் கூறுகின்றார். இவ்வாறுகூறிய வியாசரது வசனத்தைக்கேட்டு அவ்வரசனானவன் வியாசரைப்பற்பலவாகத் துதித்துமீண்டும் ஓ பகவானே! தர்மதர்மத்தின் அதிகாரத்தையும் தர்மதர்மத்திற்கு அதிகாரியையும் அதன்பயனையும் அதற்குள்ள அங்கங்களையும் விரிவாய்க்கூறியருளுங்கள் என்று வேண்டினன். அரசனை நோக்கி வியாசரும் ஓ அரசனே! தர்மதர்மத்தில் பிராம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் ஸங்கரர் ஆகிய இவர்களெல்லோரும் அதிகாரிகளே. ஆயினும் இங்கு அங்கபேதம்சிறிதுளது. இருபிறப்பாளர்கள்



வேதத்திற்கூறிய மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு பூசிக்கவேண்டும். மற்றவர்கள் லௌகிகங்களாகிய மந்திரங்களால் பூஜிக்கவேண்டும். ஸ்திரீகளும் சிவலிங்கபூசை செய்யவேண்டியதவசியமே. யாவரும் சிவலிங்கபூசையை விட்டிருத்தல் கூடாது. சிவலிங்கார்ச்சனையை விட்டுத்தீர்த்தத்தைப் புசித்தாலுங்கூட ரேதசையுண்டவனாவான். யாதொருவன் லிங்கார்ச்சனத்தை விடுத்துப் போஜனஞ் செய்வானோ அவன் மலத்தைத்தின்ற பாபத்தைப்பெறுவான். பூர்வம் சாத்தகி என்னுமரசனிருந்தான். அவன் ராஜ்ய பரிபாலனத்திலும் அவ்வளவாகவிருப்பின்றி மங்கையேபெரிதெனநினைத்து அவளுடன்கூடி ஏகாந்தமாயிருப்பதிலேயே இரவும் பகலுங்கழித்துவந்தான். அவனுக்கு எப்போதும் யௌவன முடையோர்களாகிய மங்கையர்களிடத்திலேயே மிக்க மயக்கம். அவன் நித்திராகாலத்திலும் அவர்களைவிட்டிரான், இப்படிக் காலங்கழித்து வரும்போது அவனது அழகிய எண்ணிறந்த ஸ்திரீகளுள் ஒருத்தி ஓர் சமயம் உத்யானவனஞ்சென்று அங்கு ஓர் சிவலிங்கத்தைத் தரிசித்து அன்றியும் அதனருகில் மேனிமுழுதும் ருத்திராக்ஷந்தரித்து சிவபூஜை செய்ய விரும்பிநிற்கும் ஓர் மஹா சாம்பவரையுங் கண்டு அம்மங்கை ஓ ஐயா! நீர் யார்! எங்கிருந்து வந்தீர்? உம்முடைய குலம் யாது! உம்பிதாவின் பெயர் யாது? உனது தாய் யார்? உமக்கு மனைவியுண்டோ? என்று வினவினள். அதனைக்கேட்டு அவ்வரசன் மிக்க அழகினளாகிய அம்மங்கையைப் பார்த்துச் சிறிது தலைகுனிந்து விநயத்துடன் ஓ பெண்ணே! அங்கராஜகுலத்தில் என்தாய் பிறந்தவள். என் தகப்பன் வீரேசன மஹாராஜன். என் மனைவி கமலலோசனை எனும் பெயரினள். இரதகஜதுரகமுதலிய எண்ணிறந்த சைனியங்களுடன் பின்னும் பற்பலபாக்கியங்களுடன் பசுக்கள் எண்ணிறந்தகோடிக் கணக்காயிருக்கின்றன. ரத்னங்களும் சுவர்ணங்களும் கணக்கு வழக்கில்லாமலிருக்கின்றன. எமது இல்லங்களின் உயர்வையும் சிறப்பையுங் கூறுதற்கு எவராலு மியலாது என்றனன். அதனைக்கேட்ட அந்தச் சுந்தரி ஐயா! இங்ஙனமாயின் நீவிர் தனியாயேனிங்குற்றீர்? தனது பந்து ஜனங்களெல்லோரையும் விட்டுத் தனியாய்வந்து ஏவல்வேலை கேட்பதற்கு யாருமின்றித் தவஞ்செய்கிறவர்போல் வந்திருக்கின்றீரன்றோ? மஹா ஐஸ்வர்யமுதலிய பாக்கியங்களுடன்கூடிச் சுகபோகங்களைப் புசிப்பதைவிட்டு இவ்வாறு வைராக்கியமடைவதற்கு யாதுகாரணம்? ஓ அரசே! சீக்கிரமாய்ச்சென்று உமது மங்கையுடன் கூடிச் சுகமாயிருப்பீராக. யௌவனமானது நிலையற்றதன்றோ? அங்

தோ! நீவிர் விருத்தாப்பியத் தன்மையடைந்தால் அப்போது தருண மங்கையுடன் கூடிச் சுகிப்பதற்குத்தகுமோ! இவ்வளவு அழகையும் பெற்று மன்மதனைப்போல் விளங்கும் நீவிர் சகல சுகத்தையும்வெறுத்து இவ்வனம் இருப்பது தகுமோ? ஓ சுந்தரரே! உம்மை மன்மதனென நினைக்கின்றேன். இல்லாவிடின் இவ்வழகும் இக்காந்தியும் இருப்பதற்குக்காரணமில்லை. நும்சௌந்தர்யமும் யௌவனமும் காந்தியுமாகிய ஒவ்வொன்றும் பார்ப்பவர்களை உன்மாதங்கொள்ளச் செய்யுமாயின் இம்மூன்றுங்கூடியிருப்பது சகலலோகங்களையும் வசியஞ்செய்து மயக்குறுவிப்பதில் சிறிதுஞ் சந்தேகமில்லை. எவனோ உம்முடன்பழகி உமதுபுத்திமயங்கும்படி வஞ்சித்துவிட்டான் என்பது நிச்சயம். அங்ஙனம் வஞ்சித்தவன்யாவன்? அல்லது தந்தையிடம் யாதேனும் விரோதமுளதா? தாயினிடம் மனஸ்தாபமுளதா? மனைவியோடு கலகஞ்செய்துகோபித்துக்கொண்டு வந்தீரோ? அங்ஙனம் யாதேனுங்கலகம் இருக்குமானால் அவர்களை விட்டுவிடுவது உசிதந்தான். அதற்கு இவ்வாறு வைராக்கியங்கொண்டிருப்பதும் தகுமோ? என்னோடுகூடச் சுகமாயிங்கு வசிப்பதில்யாதேனுந் தடையுளதோ? என்னோடு வசிப்பதனால் நீவிர் மகா பாக்கியவானாவீர். எனது பெயர் நாரீரத்னமென வழங்கும். என்னோடு கூடிச்சுகமாயிருப்பதால் காலத்தை இங்கு கழிக்கலாமே. இவ்விராச்சியமுழுவதும் உம்முடையதாகும். அதுவும் இப்போதேயன்றிக் காலாந்தரத்திலல்ல. ஓ பிரத்தியக்ஷமன்மதனான அரசனே! யானும் எனது கணவனை விடுத்துவந்திருக்கின்றேன். இனி நீ என்னுடனிருப்பதில் விசேஷசுகம் பெறலாம். விரைவில் சென்று தந்திரமாய் விஷங்கொடுத்து என்கணவனைக் கொன்றுவிடுகின்றேன். பிறகு இவ்விராச்சியாதிபத்யமும் உம்முடையதே. எனது லீலாவிலாச மாளிகைகள் ரத்னமயமாய்ச் சுவலிக்கின்றன பாரும். அதன்மேல் விலையுயர்ந்த நவரத்னங்களிழைத்துச் சுவலிக்கும் ஓர் மாளிகை காணப்படுகின்றது. சந்திரமண்டலமோ எனத்தோன்றும் சயனமஞ்சங்களிருக்கின்றன. அங்குயாம் சுகமாயிருப்போமாயின் நமது பாக்யத்துக் கீடான பாக்யமுமுண்டோ? தாசிதாச ஜனங்களின் மிகுதியையும் அங்குள்ள கஸ்தூரி முதலிய பரிமளத் திரவியங்களின் வாசனையையும் யாது யாது விரும்பப்படுமோ அவ்வப்பொருளின் சிறப்பையும் கூறவியலாது. நமக்குள்ள உத்யானவனத்தின் சிறப்பும் அவ்வாறே. வஸ்திரமண்டபங்களும் உப்பரிகைகளும் ஓரிடம் வெண்பட்டு மெத்தையடுக்கு மஞ்சமும் ஓரிடம் மரகதக்கு மெத்தையும் மற்றுமோரிடம் திவ்ய ரத்னமயமாய்ச் சுவலிக்கும் வஸ்திரமெத்தையும் பின்னும் இவைபோற் கூற வொண்ணாத பற்பல விசித்திரமாகிய சயன ஆசனமண்டபங்களுமிருக்கின்றன. என்னுடன் கூட வருவதில் உமக்குச் சிறிதும் அச்சம் வேண்டுவதில்லை. இனித்தாமதிப்பதுந் தகுதியல்ல. அவ்வுத்தியான வனமும் சமீபத்திலுளது. அங்கு புருஷர்கள் செல்லக்கூடாது. வேலைக்கார ஸ்திரீகள் மாத்திரம் அதனுள் பிரவேசிக்கலாம். ரம்பைக்கு நிகராகிய தாசிவர்க்கங்கள் கோடிக்கணக்காயிருக்கின்றனர். அவர்களும் அவ்வச்சமயங்களிற் செய்யவேண்டிய காரியங்களை விடுத்து மற்ற விஷயத்தில் சிறிதும் மனத்தைச் செலுத்தக்கூடாது. ஓ ராஜநாதரே! என்னைச்சற்று ஆதரவுடனோக்குங்கள். என்னுடன் கூடிச் சிருங்கார ரசிக ராகுங்கள். எனது சவுந்தரியத்தைக் கண்டு களிப்பதற்கு இந்த்ர ரம்பை முதலிய தேவ மாதருடன் கூட அடிக்கடி வந்து போகின்றனள். தேவர்களுக்கும் என்னிடத்திலேயே போாவலுளது. என்னைப்பார்த்த பிறகு எனக்காதீன மாகாத புருஷர்களுமுண்டோ? மங்கை மாத்திரத்தினாலேயே புருஷர்களுக்கு மகா மயக்க முளதென்பது நிச்சயம். மங்கை ரத்னமாகிய என்னிடம் அவ்வாவல் ஏனுண்டாகாது? யௌவனத்தினால் புஷ்டியுடன் கூடிய எனது தேகம் உம்மால் பார்க்கப்பட்ட பொழுதே யானும் உம்மைப் பார்த்தேன். யான் எப்பொழுது வெளிப்படுவேன், என்னைப்பார்க்குங் காலமெது வென்று தேவர்கள் எப்போதும் ஆவலுடனெதிர்பார்த்திருக்கின்றனர். என்னைப் பார்த்த மாத்திரத்தில் நபும்ஸகனும் புருஷத்தன்மை யடைவான் என்பது நிச்சயம். அரசனே! எனது தேகத்தினழகைப்பார். சௌந்தர்ய நிதியாயுள்ள உமக்குத் தகுதியான மங்கை என்னைத் தவிர வேறுயாரிருக்கின்றனர்? எனது சௌந்தர்ய மென்னுந் தன்மையானது உம்மைக்கண்ட மாத்திரத்தில் உமது வசமாய்விட்டது. இதுபோல உம்முடைய சௌந்தர்ய மென்னும் பொருளும் என்வசமாக வேண்டியதன்றோ? ஓ அரசனே! உம்மிடமுள்ள சௌந்தர்ய மெனும் நிதியை யானனுபவிக்காது விடேன். அழகற்றவனும் குரூபனுமாகிய புருஷனிடத்திலும் மங்கையர்கள் பண நிமித்தம் செல்கின்றனர். மஹா சௌந்தர்ய வானாகிய உம்மைப்பார்த்து அழகுற்ற எனக்கு ஏன் விருப்பமுண்டாகாது? ஓ அரசனே! யான் ஐஸ்வர்யத்தை விரும்பி இவ்வாறு கூறுகின்றவளல்லள். எனக்கு இருக்கும் ஸ்வர்ணபொக்கிஷங்கள் கோடிக்கணக்கிலு மடங்கா. சுவர்ணங்களிலும் ரத்னங்களிலும், விருப்பற்றவ ளாயினும் தனத்திற்குத் தனமும் ரத்னங்களுக்கு ரத்ன

முமாகிய உமது சௌந்தர்யத்திலேயே பேராவலுற்றேன். உம்முகத்தைத் தூரத்தில் பார்த்த மாத்திரத்தில் மயங்கி விட்டேன். பிறகு மன்மத (காம) பரவசையாய் உம்மருகில் வந்தேன். இனி நான் உம்மை விடுவேனோ? நீவிர் எங்கெங்கு செல்கின்றீரோ அங்கங்கு யானுங் கூட வருவேன். உம்மைவிட்டிரேன் என்றனள்.

இப்படி அவள் கூறியதைக்கேட்டதும் அவ்வரசன் பயமும் லச்சையுமீறித் தலைகுனிந்து மனத்தினில்மகேஸ்வரனைத் திடமாய்த் தியானித்துக்கொண்டு பின்னர் அவளைப்பார்த்து ஓ அம்மா! ரதிகேளிக்குச் சிறிதும் தகுதியற்ற தேகமுடையோனும் சம்சார தாபத்தால் மிக்க வருந்தியவனும் இச்சம்சார பாசத்தைத்தொலைக்குங் காலங் கிட்டவில்லையே யென்று நினைத்துத் துக்கித்துக்கொண்டிருக்கும் என்னிடமும் சிருங்கார கேளியை விரும்புவதுசிதமோ? எனதில்லத்தில் எனக்கெனச் சௌந்தர்ய வாரிதிகளாயும்யௌவனத்தால் விம்மி மதன பரவசைகளாயும் என்னோடு எப்போதும் கூடியிருப்பதையே விரும்புமின்றவர்களுமாகிய மங்கை மணிகள் கணக்கிலடங்காதிருக்கின்றனர். அவர்களையுந் துச்சமென்று நினைத்துத் தன்னிஐஸ்வர்ய மெல்லாம் நஸ்வர மென்னக்கண்டு வைராக்யத்துடனிங்குவந்தேன். இச்சரீரம் நிலையாததன்மையுடையதன்றோ? அதனைவிரும்புவதுசிதமோ? ஓர் கணப்போதில் நசிக்கும் தேகத்தினில் நிச்சயபுத்திகொள்வது தகுதியல்லவே. அந்தோ! இச்சரீரத்தினுஞ் சிலகாலமின்றி இந்திர ஜாலம்போல் மறைவதாகிய யௌவனத்தினும் பயன் யாது? மிக்க சௌந்தர்ய நிதியாயுள்ளதென்று மயங்குதற் கேதுவாயுள்ள சரீரத்தைச் சற்றாராய்ந்து பார்த்தால் மாம்சமாயும் எலும்பாயும் மச்சையாயு மன்றோ விளங்குகின்றது? அந்தோ! மாம்சத்திலும் எலும்பிலும் மச்சையிலும் சௌந்தர்யமுண்டோ? அவைகளும் விநாஸ்வரமே. அதனிடம்பிரீதி வைப்பது தகுதியோ? நிலைத்துள்ள பொருளை விரும்புவதே உசிதமாகும். ஓர் கணப்பொழுது கூட இருப்பதில் நிச்சயமற்ற பொருளை விரும்புவது துக்கத்துக்கே ஹேதுவாகும். ஏனெனின் அவை நசித்துவிடுமாயின் அந்தோ! நிச்சயமாய் நினைத்து விருப்பம் வைத்திருந்தோமே யென்று துக்கமுண்டாவதிற் சந்தேகமுளதோ? பாக்ய மற்றவர்களுக்கே சரீரத்தில் விருப்பமுண்டாகின்றது. அதனால் இம்மையில் மாத்திரம் துன்பமென்பதல்ல. மறுமையினும் மிக்க அக்ஞானபலங்களுக் கேதுவாகும். சரீரம் சௌந்தர்ய நிதியென மயங்கினையே, ஓ பெண்ணே! இச்சரீரத்தைச் சற்றாலோசித்துப் பார்ப்போம். மல மூத்திரங்களா



லும் ரேதஸ்ஸுகளாலும் புழுக்களாலும் துர்க்கந்தமான வாயுவினாலும் நிறைந்துளதே? அழகிய வயிறு இடை எனப்படுவதும், அன்றியும் முகமென்பதும் விசாரித்துப் பார்க்குங்கால் சிலேஷ்மத்திற்கிருப்பிடமாயும் லாலாஜலத்தினாலும்பரிபூரணமாயுள்ளன. அன்றியும் மூக்கு காது கண்களெனும் சளி குறும்பை பூளைமுதலியவை நிறைந்த மூன்று பாத்திரங்களுக் காதாரமாயுள்ளது. இனி மற்றுமுள்ள அவயவங்களைக் கவனிப்பின் மாம்சம் உதிரம் மஜ்ஜை ரேதஸ்ஸு அஸ்தி எனும் இவைகளாயும் மலபாத்திரமாயுங் காணப்படுகின்றது. மலம் நிறைந்த பாத்திரத்தில் விருப்பங்கொள்வதுந் தகுமோ? ஓ பெண்ணே! அழகிற்சிறந்ததெனக் கூறினையே. மலபாத்திரத்துக்கும் அழகுண்டோ? உளதெனின் மலத்துக்கும் அழகுளதென்று கூறலாகும். அந்தோ! இதென்ன விந்தை! மலத்தைப் பார்த்து இது மிக்க அழகியது என்று கூறுவாருமுண்டோ? அமேத்ய மத்தியிலுண்டாகும் கிருமியை அழகெனக் கூறலாமா? அமேத்யத்தோடு கூடவே தோன்றி அத்துடன் கூடவே வளர்ந்து அத்துடனே வெளியிலேயும் வந்து அது நிறைந்த பாத்திரமாகவே யிருந்து நசிக்கும் சரீரம் அழகுக் கெவ்வண மிடமாகும்? அமேத்யத்துடன் கூடக் கர்ப்பத்தில் வசித்துக் கோரமாகிய பற்பல துக்கங்களைப் புசித்துக்கொண்டிருந்ததே இச்சரீர மென்பதிலைய முண்டோ? அங்ஙனங் கர்ப்பத்தில் வசிக்குங்கால் கிருமிகளால் சூழப்பட்டிருந்ததும் யோனிக்குட் சென்ற ரேதஸால் தோன்றியதுமாகிய இச்சரீரத்துக் கழகுமுண்டோ? அந்தோ! யோனிவாய்ப் பட்டுள்ளதும் மலமூத்திர புழுக்களாற் சூழப்பட்டதுமாகிய ஓர் ரேதஸின் விகாரத்தை யழகுடையதெனின் வேப்பஞ் செடியைப் பாரிசாதச் செடியெனலாம். இவ்வணம் கூறுவதுசிதமோ? ஆதலால் சரீரத்தைச்சவுந்தர்ய முடையதென்று கூறுவதுசிதமல்ல. உலகில் சவுந்தர்ய வான்களாகிய பலர் மரிப்பதற்குச் சமீபித்தவர்களாயிருக்கின்றனர். மரித்தால் அச்சவுந்தர்யமும் அத்தாருண்யமும் எங்குற்றவெனலாம். அந்தோ! இதினும் சிறந்த கஷ்டம் யாதுளது? அறிவுடையோர்க்கும் மாம்சவிகாரமாகிய சரீரத்தில் அழகெனும் புத்தியுண்டாகின்றது! இஃதின்னமிருக்க இத்தகைய அசுசி பாண்டமாகிய ஸ்திரீ சரீரத்தோடு போகிக்க விரும்புவதிலும் துர்ப்பாக்யமொன்றுண்டோ? சரீரத்துக்குள்ள துச்சமாகிய தன்மையைச் சிறிது மறிகின்றிலை. மலம் மாம்சம் அஸ்தி மஜ்ஜை இவைகளில் பிரியமுண்டாகுமாகில் அவைகளின் விகாரமாகிய சரீரத்திலும் பிரியமுண்டாகலாம். ஓ பெண்

ணே! இனியாவது பாதகமதியை விடுத்து இவ்விடம் விட்டு வீ செல்வாயாக. நீ யமலோகபயத்தைக் கேட்டிலையோ? அன்னி மங்கையோடு அல்லது அன்னிய புருஷனோடு சம்மந்தித்தவர்களுக்குக் கும்பி பாகமெனும் நரகம் விதிக்கப்பட்டிருக்கின்றதே. பிறன் மனைவியின் முகத்தை விருப்பங்கொண் டோர்தடவை நோக்கினோ அவனுக்குக் கோரமான நரக யாதனையினின்றுங் கற்பாந்தத்திலும் விடுதலையில்லை. தாரசாரர்களாயும் பாபிகளாயு முள்ள மனிதர் ளே பரஸ்திரீகளோடு ரமிக்கின்றீர்! அந்தோ! பன்றியின் யோனி போல் சகல ஸ்திரீகளுக்கும் யோனி காணப்படுதலே யன்றி எந் மங்கைக் காவது வேறு விதமாய்க் காணப்படுவதில்லை. இப்படிப் ட்ட யோனியில் விருப்பம் கொள்வதைக் காட்டிலும் மடமைய தேனு முளதோ?

இதனால் பன்றிக்கும் மனிதஸ்திரீகளுக்கும் பேதமில்லை யென்றேற்படுகின்றதேயெனின் கூறுவாம். சகலமும் சமமாயினும் ஒ விசேஷமுளது. பன்றிமுதலியதேகங்கள் உட்பார்வையிலும் வெளிப்பார்வையிலும் அசுத்தமாய்க்காணப்படுகின்றன. மானுடதேமானது உட்பார்வையில் அசுத்தமாய்க்காணப்படினும் வெளிப்பார்வையில் சுத்தமாய்க்காணப்படுகின்றது. மானுடதேகத்திலும் இருபிறப்பாளன்தேகம் மிக்க சுசியாயுள்ளது. அவற்றிலும் பிராம்மணதேகம் சுசியாயுளது. அதிலும் சாம்பவர்தேகம் மஹாபரிசுத்தமாயுள்ளது. ஆதலால் அஃது அரிதினுமரிது. சாம்பவராகிய அந்தணதேகம் விபூதியாலும் முப்புண்டரத்தாலும் ருத்திராக்ஷ தாரணங்களாலும் பரமபரிசுத்தமாயுளது. மஹாபுண்யமகிமையால் பிராமணப்பிறவிகிடைக்கும். அதனிலும் அபாரபுண்ணியஞ்செய்தவரே சாம்பவராய்ப்பிறப்பார். சாம்பவப்பிராமணருடைய தேகசம்பந்தம் மகாமங்கள ஹேதுவாயுளது. யான் சகல ராஜ்யசுகத்தையும் மற்றுமுள்ள சுகத்தையுந் துச்சமென்றுதள்ளிச் சம்சாரம் துக்கமென நினைத்து அதனைத்தொலைக்க இங்ஙனம் வந்தும் சாம்பவர்களது சங்கத்தினாலேயே கிடைத்தது. இறந்தால் ராஜ்யம் மங்கை முதலியன கூடவருவதில்லை. சிவதருமமொன்றே சகாயமாய்க்கூடவந்து பகரிக்கின்றது. தான்பெற்றீன்ற கன்று பசுவைப் பின்றொடர்ந்து வருவதுபோல் செய்த சிவதர்மமே சிவனைப் பின்பற்றிவரும். சம்பத்திருக்கும்போது புத்திரர் மித்திரர் பௌத்திரர் முதலியவர்கள் தன்னைவிட்டகலாமல் கூடியிருப்பதுபோல் தர்மமும் எப்போதும் கூடியிருக்கிறது. மரித்துவிட்டால் மனைவி புத்திரர் பௌத்திரர்



மித்திரர் பந்து செல்வம் ரதகஜதுரக பதாதிகளாகிய சகலமும் பின்பற்றிவராமல் நின்றுவிடுகின்றன. அன்றியும் பிராணன் போகுங்காலத்தில் களத்திர பௌத்திர புத்திராதிகள் அருகில்வந்து எந்தனே! அப்பா! தாதா! இதுகாறும் சம்பாதித்த பணத்தை எங்கு வைத்திருக்கிறீர்? பேசமுடியாவிடினும் கொஞ்சம் கஷ்டப்பட்டாவது சொல்லும். அதற்குள் மரணாவிடில் ஜாடையாவது காட்டுமென்று கேட்பார்களேயன்றி ஐயா! உம்மோடு யாங்களும் மரித்துவிடுகிறோமென்று கூறுவாரும் அவ்வாறே செய்வாருங் காண்பதில்லை. புத்திரன் சற்று ஆண்மையுள்ளவனானால் தந்தையிறக்கட்டும் அவனிறந்தால் சகலபொருள்களின் சுதந்தரம் நமக்குவருமென மனமகிழ்வான். வெளிக்கு வருந்துவதுபோல் காட்டுவான். கணவனிறப்பின் மனைவி யானினியாரோடு சுகிப்பேன்? எனக்குயார்கதி? என்னைரக்ஷிப்பவர்யாவருமில்லையே என்றழுவாளேயன்றி நாதன்போய்விட்டாரே, அவர் பரலோகத்தில் எக்கதியடைவாரோ என்றும் யாம் இறந்தபின் எக்கதியடைவோமோ என்றும் நினைத்தழுவாளில்லை. சிசுக்களும் வேலைக்காரர்களும் மற்றுமுள்ள பந்துவர்க்கங்களும் தங்களை யாதரிப்பாரில்லை யென்று கதறுகின்றார்களே யன்றி இறந்தவரின்பரலோகசாதனமான காரியம்யாதுஞ்செய்கின்றதில்லை. எத்தனைகோடி பாக்கியங்களிருந்தாலும் யமனுக்கெதிரில் அவைகளொன்றும் நின்று நமக்குதவுவதில்லை. யமனிடம் நின்று காப்பாற்றுவோன் உலகினில் யமாந்தகனுக்கு அன்னியமாய் யாரிருக்கின்றார்? அக்காலத்திலுதவுவது காலகாலனது கயிலாசநாதனது கருணையேயன்றோ? அவனது கருணைக்காளாகவேண்டுமானால் அவனைப் பூசிப்பதவசியமன்றோ? காலகாலனும் கலாதரனுமாகிய அவ்விறைவனை எக்காலத்துமுதவும்பந்துவும் தயாசிந்துவுமாவர். அவனை நினைப்பினும் காலபயமில்லை. மல்வனத்தினுள்மாதங் கொண்டு மஹேஸ்வரனை ஸ்மரிக்காமலும் அர்ச்சிக்காமலும் தரிசிக்காமலும் பாராட்டாமலுமிருப்பவர்களே மகாபாபிகள். மனிதர்கள் மரணகாலத்திலாவது அச்சூலபாணியை நினைப்பாராயின் யமயாதனையின்றிப் பரமானந்த சுகமாகிய மோக்ஷத்தையும் பெறலாமன்றோ? அதனைவிடுத்து ஒரு க்ஷணத்திலோ இருக்ஷணங்களிலோ மரித்துப்போவோம் என்பது நிர்மாணமாயிருந்தும் மங்கையைப் பார்த்து ஐயோ! இவளைவிட்டுப் போகின்றனமே யென்று நினைக்கின்றனரே யன்றி மஹேஸ்வரனை நினைக்கின்றாரில்லை. பில்வ பத்திரங்களாலர்ச்சிக்கப்பட்ட சிவலிங்கத்தை அந்த க்ஷணத்திலாவது தரிசித்தால் முக்தி

யெனும் கன்னிகையின் கையைப்பற்றலாம்.பிராணன் நீங்கும்வேளை யிலாவது சிவநாமத் தொனிகேட்கப்படுவதில்லை. கிலேசத்தை விளை விப்பதாகிய ஜீவ ஹிம்சையாலேயே காலம் வீணே செல்கின்றது. அவனது சுற்றத்தாரும் உயிர் நீங்கும்போதாவது அவனது பர லோக சுகத்தில் முயலலாம். ஆனால் அதனைச்செய்யாது எல்லோரு மொருங்குகூடி முகத்திலும் மார்பிலும் வயிற்றிலுமடித்துக் கொள் ளுகிறார்கள்.இதனால் அவனது பரலோகத்துக்கு யாதாயினும் சாதக மாமோ? சாதகமானது சிவகதையைச் சிரவணஞ் செய்விப்பதாலும் விபூதியைத் தரிசிக்கச் செய்வதாலும் நிர்மால்ய பில்வ பத்திரத்தைச் சிரசில் தரிப்பதனாலும் சிவாபிஷேக தீர்த்தத்தை முகத்தில் சம் பந்திக்கச் செய்வதாலும் இவை முதலிய மற்றுமுள்ள சிவபுண்யங் களைச்செய்வித்தால் இறப்பவனுக்கு மறுமையில் சாதனமாகும். அந் தோ! அக்காலத்தில் சுற்றத்தார் இதனைச் செய்து உதவுகின்றனரா? விபூதி ருத்திராக்ஷங்களைத்தரித்து மரணகாலத்தில் சிவனுக்கும் ரிஷ பத்துக்கும் நடுவிலிருந்து மரித்தால் சிவன் அப்படி மரித்தவனைக் கைலாயம் வரவழைத்துத் தனது மடிமீது வைத்துக்கொண்டு அம்பி கையும் தானும் அவனது குணங்களைச் சிலாகிக்கின்றனர். யான் யா தேனும் விரும்பேன்,இப்பூமண்டலமெல்லாம் பரிபாலிக்கப் பெற்ற சக்கரவர்த்தித் தன்மையையும் யௌவனமங்கையர்களையும் ரத்ன சந்தனாதிகளையும் சிறிதும் விரும்பவில்லை. வாழ்நாள் முழுதும் சிவலிங்கார்ச்சனை செய்திருந்து பிராணன் போங்காலத்தில் சிவ சிவ ஹா போ ! ஸ்ரீ மஹாதேவ சம்போ ! விஸ்வேசா ! மகேசா! மகா தேவா ! சம்[illegible]த்ரா! ஸ்ரீ கண்டா! அம்பாசகாய ! திரி புரஹர! [illegible] தர கங்காதர! என்று கூறிக்கொண் டிருக்க[illegible]ம். அது தா[illegible] பிரார்த்தனை. இதனையே சகல ரும் [illegible]க்கவேண்டும். இது[illegible] மறுமையில் காப்பாற்றுவது என்[illegible]ன்றனர்.

ஐம்பதாம் அத்தியாயம்

முற்றிற்று.

---

மூன்றாம் அம்ச பூர்வபாகம்

முற்றிற்று.

---